www.pustaka.co.in

# உயிரே உனக்காக...



இன்பா அலோசியஸ்


www.pustaka.co.in
உயிரே
உனக்காக...
இன்பா
அலோசியஸ்

http://www.pustaka.co.in

# உயிரே உனக்காக...

# Uyirey Unakkaga...

Author:

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

# பகுதி – 1.

என் வாழ்வும்

என் வழியும்

என் ஊனும்

என் உயிரும்

என் உணர்வும்

உயிரே உனக்காக.............

கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தான் யுவராஜ் என்ற யுவா, நம் கதையின் நாயகன். தன் இடக் கையால், அவனது முகத்தை புதிதாக உணர்பவன்போல் வருடினான்.

யுவா ஆறடிக்குக் குறையாத உயரம். மாநிறம், கொஞ்சம் நீண்ட முகம். அலையலையான கேசம், மிகவும் அடர்த்தியான புருவம், மீசை. கூர்மையான கண்கள். கொஞ்சம் உருண்டை நாசி, அழுத்தமான உதடுகள். பார்த்தவுடன் லட்சணமானவன் என்று அனைவருமே சான்றிதழ் வழங்குவார்கள்.

கண்ணாடியில் தெரிந்த பிம்பம் என்னவோ மிகுந்த அமைதியாக இருந்தது. ஆனால் அவன் மனமோ குழம்பித் தவித்து, தத்தளித்துக் கொண்டிருந்தது. மூளையோ ‘இல்லை.., இல்லை..., இது நான் இல்லை’, இதையே மனனம் செய்து கொண்டிருந்தது.

மூளையின் கூக்குரலில், எங்கே பயித்தியமே பிடித்துவிடுமோ என்று காதைத் தன் இரு கரங்களால் பொத்திக் கொண்டான். அத்தோடு கண்களையும் இறுக மூடிக் கொள்ளவே அந்த கூக்குரல் குறைவது போன்ற பிரம்மை.

அந்த கூக்குரல் அடங்கவே மெதுவாகக் கரங்களை காதில் இருந்து விலக்கிக் கொண்டான். கண்களை நிதானமாகத் திறந்தவனின் பார்வையோ, மறுபடியும் கண்ணாடியில் தெரிந்த, தன் உருவத்தை ஆராய்ந்தது.

கண்கள் கோபத்தில் சிவக்க, கை முஷ்டி இறுகி, தன் விரல்கள் அனைத்தையும் சேர்த்து மடக்கி, கண்ணாடியை நொறுக்கிவிடும் வேகத்தில் அதை ஓங்கிக் குத்தத் துவங்கினான்.

ஆனால் அந்த கண்ணாடி பெல்ஜியம் மேக் என்பதால், அவனது வேகத்தை தாங்கிக் கொண்டு அசையாமல் இருந்தது. தன்

முயற்சியில் தோல்வியுற்றவன், தன் கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு, இயலாமையால் குமுறினான்.

தன் கரங்களால், முகத்தை கீறிக், கிழித்துக் கொள்ளவேண்டும் போல் இருந்தது. அந்த ஆவேசத்தை அடக்க முடியாமல், தன் கரங்களால் முகத்தை கீறிக் கொண்டான். முகம் முழுக்க எரியத் துவங்கவே, அவனது செய்கையை நிறுத்தினான்.

ஆனாலும் மனதுக்குள் இருந்த எரிச்சலின் முன்னால் இந்த எரிச்சல் சாதாரணமாகவே இருந்தது. மூளையோ, 'நிறுத்தாதே..., நிறுத்தாதே..., இந்த முகத்தை மாற்றும்வரை விடாதே', என சாத்தான் வேதம் ஓதுவதுபோல் ஓதியது.

இன்னும் அவன் முகத்தை காயப்படுத்த ஏதாவது கிடைக்குமா...? என்று அவன் அவசரமாக பார்வையைச் சுழலவிட்டான். அவன் தேடலில் அவ்வளவு அவசரம்.......

எப்படியாவது இந்த அவனது முகத்தை மாற்றியமைத்துவிடும் வேகம்....., ஆனால் அந்த நவீன பாத்ரூமில், அவனை காயப்படுத்தும் அளவு எந்தப் பொருளும் இருக்கவில்லை. தான் தேடிய பொருள் கிடைக்கவில்லையே என்ற ஆத்திரம்......

தனக்கு ஒட்டாத முகம், முகத்தை ஏற்க முடியாத மனம், மனதை மாற்றியமைக்கத் தூண்டும் மூளை, எவற்றிடமிருந்தும் தப்பிக்க முடியாமல், தன்மீதே, ஆத்திரம், கோபம், ஆங்காரம், தன்னிரக்கம் என போட்டி போட, அங்கே இருந்த பேஸ்ட் பரெஷ் இருந்த ஸ்டாண்ட், தன் எலக்ட்ரிக் சேவிங் ரேசர், சோப்பு என அனைத்தையும் தூக்கி விசிறியடித்தான்.

இவ்வளவு செய்தும் அவனது கோபம் அடங்காமல்...., "ஆ...ஆ..ஆ...", என ஆங்காரமாகக் கத்தி தன் அதிருப்தியை வெளிப்படுத்தினான். அவனது குரல் பாத்ரூமில் இருந்து கேட்கவே,

"யுவா...., தம்பி...., கண்ணு..., என்னடா ஆச்சு...., கதவைத் திறடா...., யுவா...", பதட்டமாக அழைத்து, தவிப்பும் துடிப்புமாகக் கதவைத் தட்டினார் யுவாவின் தாய் கங்கா.

அவரது குரலுக்கெல்லாம் அசையும் நிலையில் அவன் இருக்கவில்லை. உள்ளே மக், பக்கெட், பைப் என அனைத்தும் உடையும் சத்தமே கேட்டது. பைப் உடைந்து நீரின் சலசலப்பும்,

அத்தோடு, அந்த வெஸ்டர்ன் டாய்லெட்டை உடைக்க எடுக்கும் முயற்சியும் துல்லியமாகக் கேட்டது.

“ஐயோ...., யுவா...., என்னப்பா செய்யிற...., முதல்ல கதவைத் திற...., இந்த அம்மா சொல்லுவதை கேளு ராஜா.....”, கங்காவின் குரல் அழுகைக்கு மாறியிருந்தது.

தாயின் கண்ணீர் யுவாவை கொஞ்சம் அசைத்தது. ஆனாலும் அவன் இருந்த மனநிலையில், அந்த கட்டிடத்தையே இடித்து, தரைமட்டம் ஆக்கும் முயற்சியில் இருந்தான் அவன். எனவே அவனால் தாயின் கோரிக்கையை ஏற்க முடியவில்லை.

“இங்கே இருந்து போய்டுங்க....”, அவன் கத்திய கத்தலில் அந்த கட்டிடமே ஒரு முறை குலுங்கியது.

ஆனால் அவனது கூக்குரல் கங்காவை அசைக்கவே இல்லை. அவருக்கோ எப்படியாவது மகனைக் கண்ணால் கண்டுவிட வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருந்தது.

“நான் போறேன்...., அதுக்கு முன்னாடி உன்னைப் பாத்துட்டு போய்டுறேன். எதுவா இருந்தாலும் இந்த அம்மாகிட்டே சொல்லுடா. முதல்ல வெளியே வா யுவா....., நீ தனியாக் குளிக்கிறேன்னு சொன்னதால தானே, அம்மா உன்னை நம்பி, தனியா அனுப்பினேன்.

“நீ உள்ளே போய் ஒருமணி நேரமாகுது. அங்கே எல்லாத்தையும் போட்டு ஏன் உடைக்கிற...? பெத்த வயிறு துடிக்குதுடா..... உன்னை முழுசா பாக்கவே எனக்கு மூணு மாசம் ஆச்சுடா.

“இப்போ இப்படி செய்யிறியே....., வந்துடுடா....”, தன் வயதையும் மீறி கதவை ஓங்கித் தட்டியவாறு, அழுது கரைந்தார்.

யுவாவின் குரலும், கங்காவின் குரலும் அழுகையோடு ஒலிக்கவே, கங்காவின் கணவர் பரமேஷ்வரன் பதட்டமாக, யுவாவின் அறைக்கு விரைந்தார்.

அவர்கள் வீட்டு தோட்டக்காரனும், டிரைவரும் கூட ரூமுக்கு வெளியே வந்து நின்றார்கள்.

“என்னாச்சு கங்கா...., எதுக்கு இப்படி அழுதுட்டு இருக்க...? யுவா ஏன் இப்படிக் கத்துறான்....? அவனைத் தனியா விடாதேன்னு எத்தனை தரம் உன்கிட்டே சொன்னேன்....”, கோபமாகத்

துவங்கியவர், மனைவியின் கலங்கிய முகத்தைப் பார்த்துப் பாதியிலேயே நிறுத்தினார்.

அத்தோடு நில்லாமல், சட்டென அந்தக் கதவைத் தன் கைகளால் திறக்க முயன்றார். உள்ளே தாளிட்டிருக்கவே, பலம் கொண்டமட்டும் கதவை உடைக்கப் பார்த்தார். அவரது முதுமையின் காரணத்தால் அவரால் அது முடியவில்லை.

“ஏண்டா இப்படி மரம் மாதிரி வெளியவே நிக்கிறீங்க. முதல்ல இந்தக் கதவை உடைங்கடா..”, தங்கள் இயலாமையை மறைக்க அவர்களிடம் சாடினார்.

அவரது அனுமதிக்காகவே காத்துக் கொண்டிருந்தவர்கள் போல்...., இருவரும் நொடியில் அறைக்குள் புகுந்து, தங்கள் பலம் அனைத்தையும் திரட்டி கதவில் ஓங்கி மிதிக்க, நான்கு மிதிகளுக்குப் பிறகு கொஞ்சம், கொஞ்சம் அசைந்தது.

அவர்களின் அடுத்தடுத்த முயற்சியில், கதவு படீரென பிளந்துகொள்ள, அவர்களையெல்லாம் தள்ளிவிட்டு, உள்ளே பாய்ந்தார் கங்கா. உள்ளே அவசரமாகப் பார்வையை சுழலவிட, பாத்ரூமின் தரையில், கால்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தான் யுவா.

உடைந்த ஷவரில் இருந்து வழிந்த தண்ணீர் அவன் தலையில் விழுந்துகொண்டிருந்தது.

“யுவா...”, கதறியவர் தானும் அவன் அருகில் அமர்ந்தார்.

“நீங்க போங்கடா..... அப்படியே அந்த ப்ளம்பரை வர சொல்லுங்க”, பரமேஷ்வரன் வேலைக்காரர்களை விரட்டினார். தனது ஒரே செல்வ மகனின் நிலைமை, அவர்கள் பார்வையில் கீழிறங்குவதை அவர் விரும்பவில்லை என்பதை அவரது செய்கை நிரூபித்தது.

“யுவா..., என்னடா இது....? எதுக்கு இப்படி பாத்ரூம் தரையில் உக்காந்து இருக்க....? எம்புட்டு சுத்தம் பாப்ப...., இப்போ இப்படி மாறிட்டியேடா....”, அவன் செய்கையை சகிக்க முடியாத தன்மை, அவரது பேச்சில் தெரிந்தது.

“இப்போ என்ன நடந்துச்சுன்னு இப்படி ஒப்பாரி வைக்கிற....? முதல்ல அவனை குளிக்க வச்சு வெளியே கூட்டி வா.... டேய் யுவா எழுந்திரிடா...”, மனைவியைக் கடிந்தவர், மகனை அதட்டினார்.

தாய் தந்தை இருவரின் பேச்சும் அவனிடம் எடுபடவில்லை. அவன் அசையாமல் இருக்கவே...., கங்காவே அவனை கரம் பிடித்து எழுப்பினார். முரண்டு பிடிக்காமல் அவரது இழுப்பிற்குச் சென்றான்.

அவன் முகத்தைப் பார்த்த இருவரும் திகைத்தார்கள். கங்காவின் கண்கள் மீண்டும் உடைப்பெடுக்க, கணவனின் கண்டிக்கும் பார்வையில் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டவர், யுவாவை குளிக்க வைத்தார்.

தாய் அவன் சோப்பைத் தேடி எடுத்து, அவனுக்கு போட, அந்த அக்ஸ் சோப்பின் மணம் அவனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. முகத்தைச் சுளித்தவன், “இந்த சோப்பை போடாதீங்க....”, அவர் கையில் இருந்து அதைப் பிடுங்கி எறிந்தான்.

கங்கா அவனைக் கெஞ்சும் பார்வை பார்க்க, பரமேஷ்வரனோ, “என்னடா நினைச்சுட்டு இருக்க....., மார்க்கெட்டில் இருக்கும் எல்லா சோப்பையும் இந்த மூணு மாசத்தில் மாத்தியாச்சு. எதுவும் பிடிக்கலன்னா என்னதாண்டா செய்யட்டும்.

“ஒழுங்கு மரியாதையா இப்போ குளிச்சுட்டு வாறியா இல்ல....”, இந்த மூன்று மாதமாக அவன் படுத்தும் பாடு அவரை இப்படிப் பேச வைத்தது.

“ஐயோ...., நீங்க ஏன் இப்படி கோபமா பேசுறீங்க....? நீங்க போங்க...., நான் பாத்துக்கறேன்....”, அவரிடம் கெஞ்சினார்.

“எல்லாம் நீ கொடுக்குற இடம்...., நாலு அறை விட்டால் எல்லாம் சரியாயிடும். நானும் எவ்வளவு நாள்தான் பொறுமையா இருக்குறது. அவனவன் என்னைப் பாத்து கேக்கத் தொடங்கிட்டான்...., என்ன சார்.... உங்கப் பையனுக்கு....”,

“என்னங்க.....”, கங்காவின் கோபக் குரல் அவரது ஆவேசப் பேச்சுக்குத் தடை விதித்தது.

இவர்களின் பேச்சு யாருக்கு வந்த விருந்தோ என்பது போன்ற பாவனையில், தன் மேனியில் இருந்த சோப்பு நுரையைக் கழுவிக் களைந்து கொண்டிருந்தான் யுவா.

“அங்கே பாரு...., நாம ரெண்டு பேரும் இங்கே அவனைப் பற்றித்தான் பேசுறோம்...., ஆனால் எப்படி நிக்கிறான் பாரு....”,

தலையிலடிக்காத குறையாக, தன் ஆதங்கத்தைக் கொட்டினார் ஈஸ்வர்.

“எல்லாம் நான் பாத்துக்கறேன் நீங்க போங்க....”, கங்கா அழுத்திச் சொல்லவே, அரை மனதாக அங்கிருந்து அகன்றார்.

அவர் சென்றவுடன் மகன் பக்கம் திரும்பியவர், “யுவா....”, கெஞ்சலாக அழைத்தார்.

அவரது அந்த அழைப்பு, அவன் உயிர் வரைத் தீண்ட, “நீங்க வெளியே இருங்க, நான் குளிச்சுட்டு வாரேன்....”, தாயின் முகம் பார்க்காமலே சொன்னான்.

“ஏன் யுவா..., அம்மாவை அம்மான்னு கூட கூப்பிடப் பிடிக்கலையா...? ஏம்பா இப்படி இருக்க...? உன் மனசுக்குள் என்னதான் இருக்கு...? சொன்னாத்தானே புரியும்.....”, அவன் முகத்தை பாசமாக வருடிக் கேட்டார்.

அவரது செய்கையில் நெகிழ்ந்தவன், “அப்படில்லாம் எதுவும் இல்லம்மா...”, இந்த வார்த்தையைச் சொல்லும்பொழுதே எதுவோ ஒட்டாத தன்மை அவனை ஆட்க்கொண்டது. அதை அப்படியே தனக்குள் புதைத்தவன், விட்ட குளியலைத் தொடர்ந்தான்.

“ஆமா பாத்ரூமில் வச்சு கேக்க வேண்டிய விஷயம்தான்...., இப்போ வெளியே வரப்போறீங்களா இல்லையா....?”, ஈஸ்வர் பொறுமையற்று கத்தினார்.

யுவா குளித்து முடிக்கவே, அவனது டவ்வலை எடுத்துக் கொடுக்க, அதை வாங்கி முகம் துடைத்தவன், சட்டென அதை முகத்திலிருந்து விலக்கியவன், தாயைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அவனது பார்வையை புரிந்து கொண்டவர், “பிடிக்கலன்னா விட்டுடு யுவா...., நான் துவட்டி விடுறேன்....”, சொன்னவர், யுவாவை அழைத்துவந்து படுக்கையில் அமர வைத்தவர், தன் சேலை முந்தானையால் அவன் தலையைத் துவட்டினார்.

“இதென்ன புதுப் பழக்கமெல்லாம்......, அவன் ஒண்ணும் சின்னப் பிள்ளை இல்லை....”, ஈஸ்வர் பொறுமையை இழுத்துப் பிடித்தவாறு கேட்டார்.

“உங்களை யார் இங்கே கூப்பிட்டது...? முதல்ல நீங்க ரூமுக்குப் போங்க. என் பிள்ளையைப் பாத்துக்க எனக்குத் தெரியும்....”,

யுவாவுக்குத் தலையைத் துவட்டியவாறே, அவரிடம் கத்தினார். மகனை நினைத்து மருகும் தன் மனதை, திடப்படுத்தியவாறே தன் வேலையைத் தொடர்ந்தார்.

அதைவிட மரணத்தின் விளிம்புவரைச் சென்று திரும்பி வந்திருக்கும் மகனின் நிலை உணர்ந்து, அவனுக்கு பக்கபலமாக இருக்கவேண்டும் என்று மட்டுமே அந்த தாயுள்ளம் விரும்பியது.

அதைவிடத் தனது ஒரே மகன், தன்னருகில் இருப்பது மட்டுமே போதும், தன் கைகளுக்குள் அவனை வைத்து பார்த்துக் கொள்வேன் என்று அவர் துடித்தார். எனவே மகனின் மாறுதல்களால், தன் கணவன் அவன்மேல் கொள்ளும் கோபத்தை அவர் அறவே வெறுத்தார்.

ஆனாலும் கணவனின் மனதும் அவருக்குத் தெரியாமல் இல்லை. தாலிக்கொடியின் பந்தத்தை விட, தொப்புள் கொடி உறவே, இப்பொழுது பெரிதாகத் தெரிந்தது கங்காவிற்கு.

“என்னவோ பண்ணித் தொலைங்க...., ஆனா எனக்கு எதுவுமே சரியாத் தோணலை... அவ்வளவுதான் சொல்லுவேன்....”, மனைவியை உறுத்துப் பார்த்தவர், சலித்துப் போனவராக அங்கிருந்து வெளியேறினார்.

கணவன் வெளியேறியதும், யுவாவிற்கு அணிய ஆடையை எடுத்துக் கொடுத்தவர், இண்டர்காமில் அழைத்து, பாலும், டிப்பனும் கொண்டுவரச் சொன்னார்.

இதில் எதிலுமே ஒட்டாமல் தன் எண்ணத்திலேயே மூழ்கியிருந்தான் யுவா. மகனது மரத்த நிலையைப் பார்த்த கங்காவின் அடிவயிறு துடித்தது. மூன்று மாதத்துக்கு முந்தைய தன் மகனோடு, இன்றைய மகனை ஒப்பிட்டு பார்த்து கலங்கினார்.

முன்பெல்லாம் தாய் எடுத்துக் கொடுக்கும் துணி, அவனது ரசனைக்கு இல்லை என்று அதை அணிய மறுத்துவிடுவான். அதேபோல் வேளைக்கு ஒரு வாசனைத் திரவியம் உபயோகிப்பான். அவன் செய்கைகளில் அவ்வளவு நாசூக்கு இருக்கும்.

பார்வையிலும், பேச்சிலும் நடத்தையிலும் ஒரு மேல்தட்டு ஆண்மகனின் நளினமும், கம்பீரமும், ஆடம்பரமும் இருக்கும். ஆனால் இன்றைய யுவாவோ, தலையைச் சீவாமல், வாசனைத்

திரவியம் போடாமல், தான் அணிந்திருப்பது என்ன உடை என்ற சாமானிய யோசனை கூட இல்லாமல்,

விட்டத்தையே வெறித்தவாறு, சதா ஏதோ யோசனையோடே இருப்பது அவருக்குப் புரிந்தது. இந்த மூன்று மாதங்களில் எவ்வளவோ முறை, என்ன யோசிக்கிறான் என்று கேட்டும், அவனிடமிருந்து ஒற்றை வார்த்தை பதிலைக் கூட, அவரால் பெற முடியவில்லை.

வழக்கம்போல் அதை விடுத்தவர், வேலைக்காரன் கொண்டுவந்த, யுவாவுக்குப் பிடித்த சப்பாத்தியைப் பிட்டு, குருமாவில் தோய்த்து அவனுக்குக் கொடுத்தார்.

அதை ஒரு விள்ளல் வாங்கியவன், சாப்பிட முடியாமல் மிகுந்த கஷ்டப் படுபவன்போல் முகத்தை வைத்துக் கொண்டு, நிதானமாகக் கடித்து விழுங்கினான். அந்த உணவு என்னவோ மிகுந்த பிரத்தியத்தனத்துக்குப் பிறகே, அவன் தொண்டைக் குழியை விட்டு இறங்கியது.

அடுத்தவாய் உணவை உண்ண முடியாமல், “போதும்மா…”, தன் இடக்கையால் தாய் கொடுத்த உணவை மறுத்தான்.

“என்னப்பா இது….? சாப்பிடுற மருந்துக்காகவாவது கொஞ்சபோல சாப்பிடுப்பா. நானும் ஒவ்வொரு டிபனா செஞ்சுத் தாறேன். எதுவுமே உனக்குப் பிடிக்கலன்னா எப்படிப்பா…?”, வாஞ்சையாக அவன் தலைக் கோதினார்.

‘ஐயோ…., ஏம்மா என்னை இப்படி வதைக்கிறீங்க. நானே நாந்தனான்னு குழம்பிப் போயிருக்கேன். இதில் நீங்களும் ஏன் இப்படி என்மேல் பாசத்தைப் பொழிந்து என்னை குற்ற உணர்வில் தவிக்க விடுறீங்க? உங்களோட இந்தப் பாசம் தான் என்னை, என் வாயைக் கட்டி வச்சு இருக்கு.

‘அப்படி மட்டும் இல்லன்னா……’, யோசித்தவனின் உடலும் தாடையும் இறுக, எதுவுமே செய்ய இயலாத தன் சூழ்நிலையை அறவே வெறுத்தவன், தன் கண்களை மூடி படுக்கையில் விழுந்தான்.

“என்னப்பா தூக்கம் வருதா…? அம்மா மடியில் படுத்துக்கறியா..?”, கேட்டவர், அவன் தலையை தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டு, அவன் தலையை வருடினார்.

‘இல்ல..., இல்ல...., இது நான் இருக்க வேண்டிய இடம் இல்லை. நீங்க என் அம்மா இல்லை....’, அவன் மனம்தான் அரற்றியது.

பத்துமாதம் தன் கருவில் சுமந்து ஈன்றெடுத்த தன் மகன், தன்னை அவனது தாயில்லை என்று எண்ணுவதை அந்த தாயுள்ளம் அறிந்தால்....?

# பகுதி – 2.

நான் சுவாசிக்கும் மூச்சையும்

உனக்காய்க் கடன் தருவேன்

உயிரே உனக்காக...........

“ஏய் மாரி....., உம் மருமவ பிரசவ வலியில துடிச்சுகிட்டு கிடக்கா...., நீ என்ன இங்கன நாத்து நடவு நட்டுகிட்டு இருக்கிறவ.... நீ எட்டு பயலுவள பெத்து வச்சுருக்கங்குற மப்பா....., அவ மருமவதானேன்னு உனக்கு இளப்பம் இல்ல....”, வரப்பில் இருந்து ராக்காயி குரல் கொடுக்க,

“ஆத்தி...., அவளுக்கு இன்னும் நாளு கிடக்குன்னு தானே நான் இங்கன சோலிக்கு வந்தேன்...., எஞ்சாமி...., எங் குலத்த காப்பாத்துய்யா....”, கையில் இருந்த நாற்றை அப்படியே போட்டுவிட்டு, அந்த சேற்று வயலில் ஓட முயன்றாள் மாரி.

“மாரி பாத்துப் போ...., உம் மருமவளுக்கு ஒண்ணும் ஆயிடாது.... பொறவு நீ விழுந்து வச்சா...., யாரு உம் மருமவள பாப்பா....”, தன் முதுகுக்குப் பின்னால் ஒலித்த அக்கறையான குரல்களைக் கேட்டாலும், அவர்களுக்கு நின்று பதில் சொல்ல நேரமில்லாமல் விரைந்தார்.

“யக்கோவ்...., மாரியோட பிள்ள வரிசை முடிஞ்சுடுமா இல்ல நீளுமா....?”, ஒருத்தி கேட்க,

“அவ ஒரு டசன் பெக்காமல் நிறுத்த மாட்டா....”, மற்றொருத்தி இசைப்பாட்டு பாட,

“ஒரு டசனோட நிறுத்துவான்னு நினைக்கிற...?”, மற்றவள் எடுத்துக் கொடுக்க, அங்கே பெருத்த சிரிப்பொலி எழுந்தது.

இவர்களின் பேச்சுக்கு நடுவிலும் வேலையும் நடந்துகொண்டுதான் இருந்தது. மாரியோ இவர்களது கேலி

எல்லாம் கண்டு கொள்ளாமல், தனது மூன்று வயது மகன் செம்புராஜையும், ஆறு வயது பேரன் சரவணனையும் அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி விரைந்தாள்.

அவர்களின் கேலிக்கும் காரணம் இருந்தது. மாரி, ஐயனார் இருவருக்கும் எட்டு மகவு. எட்டுபேருமே ஆண் வாரிசுகள். தங்களுக்கு ஒரு பெண் குழந்தை வேண்டும் என்ற ஆசையில், பெண் குழந்தை பெற்றுக் கொள்வது வரை நிறுத்துவதில்லை என்ற முடிவுடன் குழந்தை பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

இடையில் இரண்டு மூன்று குழந்தைகள் வேறு இறந்து விட்டன. இல்லையென்றால் இப்பொழுது பதினொன்று குழந்தைகள் இருந்திருப்பார்கள். மாரியின் மூத்த மகன் வேலப்பனின் மனைவி, வடிவுக்குதான் பிரசவ வலி கண்டுள்ளது.

மாரியின் கடைசி மகனுக்கு வயது மூன்றுதான். அந்த சிறிய பாலகனே சித்தப்பா ஆகப் போகிறான். அந்த கிராமத்தில் இதுவொன்றும் புதிது கிடையாது. மாமியாரும் மருமகளும் ஒரே நேரம் குழந்தை பெற்றுக் கொள்வது, அவர்கள் கிராமத்தில் சாதாரணம் தான்.

என்ன, கிராமத்துக்கே உரிய கேலியும், கிண்டலும், நையாண்டியும் கொஞ்சம் தூக்கலாக இருக்கும்.

மாரி செல்லும் வழியில், தான் வேலை பார்த்த வயலுக்கு சொந்தக்காரி, பெரியவீட்டம்மாவைப் பார்த்துவிட, “ஆத்தா....”, அவசரமாகக் குரல் கொடுத்தாள்.

பெரியவீட்டம்மா என்று எல்லோராலும் அழைக்கப்படும் லட்சுமியம்மா நிதானமாகத் திரும்பினாள். “என்ன மாரி....., வேலைய விட்டுபுட்டு இங்கன நிக்கிற....?”, கேள்வியாக நிறுத்தினாள்.

“ஆத்தா...., எம் மருமவளுக்கு நோவெடுத்துருச்சாம்...., அதான் வீட்டுக்கு கிளம்பிட்டு இருக்கேன்...., ஒரு வார்த்தை சொல்லிட்டு.....”, தன் சேறு படிந்த கரங்களால்...., போகவேண்டும் என்று அனுமதி வேண்டியவளின் பேச்சில், மலையளவு தயக்கமும் இருந்தது.

அதைப் புரிந்தவர் போல்...., “வெரசா போ மாரி....”, சொன்ன லட்சுமியம்மா, அப்பொழுதுதான் நினைவு வந்தவராக, “இன்னைக்கு கூலியையும் கையோட வாங்கிட்டு போ...., எல்லாம்

பொறவு பேசிக்கலாம்...", என்று சொல்லி, கணக்குப் பிள்ளையைப் பார்க்க, அவர் வேகமாக பணம் கொடுத்தார்.

"நீங்க நல்லா இருக்கணும் தாயி....", மனதார வாழ்த்திய மாரி, நொடியும் தாமதிக்காமல் குடிசைக்கு விரைந்தாள்.

"மாரி..., கொஞ்சம் கையைக் காலை அந்த பம்பு செட்டில் கழுவிட்டு போ....", லட்சுமியம்மா குரல் கொடுக்க, அவ்வளவு அவசரத்திலும், அவர் பேச்சுக்கு மதிப்பு கொடுத்து, பம்பு செட்டுக்கு விரைந்தார்.

தாயின் அவசரத்தை செம்புராஜ் புரியாமல் பார்க்க, சரவணனோ..., "ஏன் ஆயா இன்னைக்கு விரசா வூட்டுக்கு போறோம்....?", தன் சந்தேகத்தைக் கேட்டான். அவர்களின் கேள்விக்கு பதில் சொல்லாமல், "கேள்வி கேக்காம விரசா வாங்கடா....", அவர்களை கிட்டத்தட்ட இழுத்துக் கொண்டு சென்றாள்.

வாசலிலேயே அவரது மூத்த மகன் கையைப் பிசைந்துகொண்டு நிற்க, வடிவின் கூச்சல் குடிசைக்கு வெளியே கேட்டது.

"ஆத்தா.....", தவிப்பாய் கேட்ட மகனை தவிர்த்துவிட்டு, நொடியில் குடிசைக்குள் நுழைந்தார். வடிவு பாயில் படுத்திருக்க, அருகில் இரண்டு பெண்கள் அவளுக்குத் துணையாக இருந்தார்கள்.

"ராக்கு கொஞ்சம் சுடுதண்ணி வச்சுக் கொண்டா...", அவளை விரட்டியவர், "வடிவு செத்த பொறுத்துக்கத்தா...., இப்போ முடிஞ்சுடும்...., அதான் நாளு கிடக்குல்ல...", மருமகளை சமாதானப் படுத்தியவாறே அவள் வயிற்றை ஆராய்ந்தார்.

"மாரி..., புள்ள தலை திரும்பிடுச்சு..., நானும் பாத்தேன்...", அருகில் இருந்தவள் சொல்ல, அதையே மாரியும் தலை அசைத்து ஆமோதித்தார்.

"வடிவு இதோ இப்போ முடிஞ்சுடும்...., கூச்ச போடாதத்தா...., பொண்ணாப் பொறந்தா எல்லாத்தையும் பொறுத்துக்கத்தான் வேணும்...., செத்த பொறுத்துக்கோ....", ஆதரவாக வடிவின் கரங்களை அழுத்தினார்.

வடிவின் வயிற்றில் இருந்த பிள்ளையோ, இந்த மண்ணுலகைக் காணும் ஆவலில் அவள் அடிவயிற்றில் முட்டி தன் வரவை தெரிவித்தது. வடிவு உதட்டைக் கடித்து வலியைத் தாங்கிக் கொள்ள, வெளியே வேலப்பனோ, மனைவிக்குக் குறையாத மன வலியுடனும், தவிப்புடனும் வாசலில் உலாத்தினான்.

ஐயனாரும் கூட கொஞ்சம் பதட்டமாகத்தான் இருந்தார். தன் மனைவி பத்து பிள்ளை பெற்ற பொழுது கூட இவ்வளவு அவர் தவித்ததில்லை. ஆனால் தனக்கு பேரப்பிள்ளை பிறக்கப் போகும் ஆர்வம் அவரிடம் அதிகமாக இருந்தது.

“ஏண்டா செம்பு...., அத்த உள்ள அழுவுறாங்க..., உன் அப்பாரும் அண்ணனும் இங்கனவே நிக்காங்களேடா...., நாம வேண்ணா உள்ளார போய் பாப்பமா....”, சரவணன், தன் அத்தையின் அழுகுரல் கேட்டுத் தாங்க முடியாமல் கேட்டான்.

அத்தோடு நில்லாமல் குடிசைக்குள் உள்ளே நுழையவும் பார்த்தான். அதே நேரம் அவனது தாய்..., ருக்கு வரவே...., “ஆத்தா...., உள்ளே அத்த அழுவுது...., இந்த மாமாரு அத்தைய பாக்காம..., இங்கனையே நிக்காரு..., என்னையும் உள்ளார விட மாட்டிக்காரு...., நீ போய் பாராத்தா....”, தாயை விரட்டினான்.

“சரவணா...., நீ இங்கனையே இரு..., ஆத்தா இப்போ வாரேன்....”, சொன்னவள், மகனை விலக்கிவிட்டு, குடிசைக்குள் தானும் நுழைந்தாள்.

அவள் உள்ளே வரவே...., “எம் பேரனுக்கு பொண்டாட்டியைப் பாக்க எம்புட்டு ஆர்வம் பாத்தியா....”, சொன்ன மாரி, வடிவைக் கவனிப்பதில் மும்முரமானாள்.

“ஆத்தா...., பேத்தின்னு முடிவே பண்ணிட்டியா....?”, ஆச்சரியமாக வினவினாள் ருக்கு.

“ருக்கு... உன் ஆத்தாவுக்கு தெரியாததா....? அவ சூலு கொள்ளும் போதே என்ன புள்ளன்னு சொல்லுவா....? இப்போ குழந்தையே பொறக்க போவுது...., அவளுக்குத் தெரியாததா....?”, அருகில் இருந்தவள் மாரியின் அனுபவத்தைச் சொல்ல,

“அதுவும் சரிதான்....”, என்று கேட்டுக் கொண்டாள் ருக்கு.

இறுதியில் அனைவரையும் அதிக நேரம் காத்திருக்க வைக்காமல், வடிவின் மகள் செல்லச் சிணுங்கலுடன் இந்த பூமிக்கு வந்தாள்.

“ஆத்தா மகமாயி...., என் வம்சத்துக்கு ஒரு மகாலஷ்மியைக் கொடுத்தியே உனக்கு இந்த ஆடி மாசம் கூழு ஊத்துறேன் ஆத்தா.... எங் குலத்துக்கு ஒரு மகாலஷ்மியைக் கொடுத்துட்டியே ஆத்தா.....”, வாய்விட்டு சொன்னவள் மருமகளுக்கும், பேத்திக்கும்

நெட்டி முறித்தாள். பின்னர் குழந்தையைக் குளிப்பாட்ட ருக்குவிடம் கொடுத்துவிட்டு, வடிவைக் கவனித்தாள்.

ருக்குவோ கலங்கிய கண்களோடு குழந்தையை வாங்கிக் கொண்டு குளிக்க வைக்கச் சென்றாள். ருக்கு, மாரியின் வளர்ப்புப் பெண். ருக்குவின் தாய் தந்தை யார் என்பதே அந்த கிராமத்தில் இருந்த யாருக்கும் தெரியாது.

ஒரு விடியக்காலையில் தன் குடிசைக்கு வெளியே ஒரு சிறுமியின் அழுகுரல் கேட்டு வெளியே வந்த மாரி கண்டது மூன்று வயது மதிக்கத்தக்க ருக்குவையே. ஊர்காரர்கள் அனைவரும் கேட்டும், அவள் எப்படி இங்கே வந்தாள் என்பது அவளுக்குச் சொல்லத் தெரியவில்லை. இறுதியில் யாரும் அந்த பெண் குழந்தையின் பொறுப்பை ஏற்கத் தயாராக இல்லாமல் போகவே,

மாரி, தனக்கு பெண் குழந்தை இல்லை என்ற குறையைப் போக்கிக் கொள்ள, அவளைத் தன் மகளாக வளர்க்கத் துவங்கினாள். ருக்கு குழந்தையாக இருந்த பொழுதே தான் ஒரு அநாதை என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது.

ஆனாலும் அவ்வளவு வறுமையிலும் தன்னை வளர்த்து ஆளாக்கி, தன் மகளாக பாவித்து, தனக்குத் திருமணம் செய்து வைத்த மாரியின்மேல் அவள் அளவுகடந்த பாசம் வைத்திருந்தாள். அதைவிட அநாதையான தன்மேல் இவ்வளவு பிரியம் காட்டும் மாரியின் அன்புக்குத் தான் என்ன கைமாறு செய்ய முடியும் என்ற எண்ணம் அவளுக்கு எப்பொழுதும் உண்டு.

இந்தக் காலத்தில் பெற்ற பெண்ணையே பாரமாக நினைக்கும் மக்கள் இருக்க, எங்கிருந்தோ அனாதையாக வந்த அவளை, தன் வறுமையிலும் பாரமாகக் கருதாமல், வயிற்றுக்கு உணவளித்து, தங்க இடம் கொடுத்து, பத்து பவுன் போட்டு திருமணமும் செய்து வைத்த, மாரியின் மாசு மறுவற்ற தாய்மை உணர்வில் நெக்குருகிப் போனாள்.

தன்னை வளர்த்த கடனையே எப்படி அடைக்கவென்று தெரியாமல் திணறும் வேளையில், தன் பேத்தியை, அவளது மகனுக்கு ஜோடி போட்டு பேசியதிலும், பிறந்த குழந்தையை விகல்பம் பாராமல், தன் கையில் தூக்கிக் கொடுத்ததையும் பார்த்து நெக்குருகிப் போனாள்.

குழந்தையைக் கவனமாகக் குளிப்பாட்டிக் கொண்டு வந்தவள், “ஆத்தா...., உன் பேத்தி....”, தயக்கமாக இழுத்தாள்.

அதற்குள் வடிவிற்கு கொஞ்சம் சூடாக நீராகாரம் கொண்டுவரச் சொன்னவள், அதை அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புகட்டி முடித்தாள்.

“அதென்ன என் பேத்தி..., ஏன்... உம் மருமவன்னு சொன்னால் உன் கிரீடம் விழுந்துடுமாக்கும்...? இப்போவே இப்படி மாமியார் பவுசை காட்டக் கூடாது..”, அவளிடம் சடைத்தவர், அவள் கையில் இருந்து பேத்தியை வாங்கிக் கொண்டு வெளியேறினார்.

“எலேய்..., மகாலஷ்மி பொறந்துருக்கா....” சொன்னவர் பேத்தியைத் தன் மகன் கையில் கொடுத்தார்.

வேலப்பன் நடுங்கும் கரங்களால் தன் மகளை வாங்கியவன், அவளை உச்சி முகர்ந்தான். ஐந்து வருடம் கழித்துப் பிறந்த செல்வ மகளின் அழகில் லயித்திருந்தான்.

அதே நேரம் சரவணனும் ஓடிவந்து...., “மாமா பாப்பாவை காட்டுங்க....”, அவன் வேட்டியைப் பிடித்து இழுக்க,

மாரியோ...., “எலேய் சரவணா...., என்ன பாப்பான்னு சொல்லுத..., பொண்டாட்டின்னு சொல்லுவே...., இவதான் உன் பொண்டாட்டி சரியா....”, சொன்னவர், மகனின் கையில் இருந்து பேத்தியை வாங்கியவள், அவளைச் சரவணனிடம் காட்டினாள்.

அவள் கீழே அமர்ந்து காட்டவே, மாநிறத்தில், அடர்ந்த முடியுடன், சிப்பி இமையுடன், உருண்டை நாசி, ரோஜா இதழ்களுடன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அந்தக் குழந்தையைப் புதுவித உணர்வு தோன்ற ஆர்வமாகப் பார்த்தான் சரவணன்.

அவன் பார்ப்பதை உணர்ந்தோ என்னவோ, மாரியின் கரங்களில் மென்மையாக நெளிந்தாள் அந்த கிராமத்து தேவதை. அந்தக் குழந்தையின் அசைவும், அப்படி அசையும்போழுது சுழித்த இமைகளும், அழுகையின் பிதுங்கிய இதழ்களையும் இமைக்க மறந்து பார்த்தான் சரவணன்.

மாரியின் பேச்சை அங்கிருந்த யாருமே ஆட்சேபிக்கவில்லை. அவர்களின் அமைதியே மாரியின் பேச்சு அவர்களுக்கும் சம்மதமே என்பதை உணர்த்தியது.

ஆனாலும் ருக்குவால் அமைதியாக இருக்க முடியவில்லை. “ஆத்தா...., அண்ணா அண்ணிகிட்டே ஒரு வார்த்தை கேட்காமல்....”, தன் மனதை அரித்த விஷயத்தைக் கேட்டுவிட்டாள்.

அதற்கு மாரி பதில் சொல்லும் முன்னர், வேலப்பன் பதில் சொன்னான்.

“எந்தங்கச்சி வீட்டுக்கு என் மவ போவதை யாரு தடுக்க முடியும்...? அவ உம் மருமவதான்..., என்ன மருமவனே...., என் பொண்ணை புடிச்சிருக்கா..? இனிமேல் அவளை நீதான் பாத்துக்கணும்..., அவளுக்கு நீதான் எல்லாம் புரியுதா...?”, வேலப்பன் மீசையை முறுக்கியவாறு கேட்டான்.

“என் பொண்டாட்டி மகாலஷ்மியை எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு...”, சரவணன் வேகமாகப் பதில் சொன்னான். சொன்னதோடு மட்டுமல்லாமல், குழந்தையின் பிஞ்சுக் கால்களை ஒரு விரலால் வருடினான்.

சுற்றியிருந்த அனைவரும் வெடித்துச் சிரித்தார்கள். “எலேய் போக்கிரி..., அவளுக்கு பேரும் வச்சுட்டியா...?” வேலப்பன் கேட்க,

“ஆயா தானே சொன்னாங்க..., மகாலஷ்மி பொறந்துருக்கான்னு...”, அவர்கள் சிரிப்பது பிடிக்காமல், கொஞ்சம் ரோசமாகவே கேட்டான்.

“ஒரு பேச்சுக்குச் சொன்னால் நீ அதையே புடிச்சு தொங்குவியா...? எம் பொண்ணுக்கு இந்த ஊரிலேயே இல்லாத பேரா வைப்பேண்டா...”, வேலப்பனின் குரலில் தந்தையின் கர்வம் தெரிந்தது. அதைவிட, பெண்ணில்லாத வீடு என்ற அவப்பெயரைத் தகர்த்தெறிந்த கர்வமும் தெறித்தது.

அந்த நொடிமுதல் சரவணனுக்கு அவள் உயிராகிப் போனாள். குழந்தைக்கு என்ன பெயர் என்று யாருக்குமே தெரியாத அளவு, அவளை தாயி என்றும்...., ஆத்தா...., என்றும், பாப்பா என்றும்...., மட்டுமே அவளை அழைத்துக் கொண்டாடினார்கள்.

அவள் பெயரைச் சொல்லி யாருமே அவளை அழைத்ததில்லை. அவளது கடைசி சித்தப்பா...., அவளை விட மூன்று வயது பெரியவன், செம்பு, தப்பித் தவறி அவளை பெயர் சொல்லி அழைத்தால் அவ்வளவுதான்..... நீ எப்படி அவளை பெயர் சொல்லிக் கூப்பிடலாம் என்று பெரிய சண்டையே வந்துவிடும்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தேவி வளர, அவள் எழுந்து அமர்ந்து, மெதுவாக நடை பழகி, அன்னநடையிடும் வேளையில் அவள் கைப்பிடித்து நடந்தான், நடத்தினான் சரவணன்.

தேவியைச் சுற்றி எப்பொழுதும் அவளது சின்ன சித்தப்பா செம்புவும், சரவணனும் நிழல் போல் இருந்தார்கள். சரவணன் தேவியை விட ஆறு வயது பெரியவன். அவளுக்கு இரண்டு வயது முடிந்த பொழுது, சரவணனுக்கு எட்டு வயது முடிந்திருந்தது.

அவர்கள் கிராமத்தில் இருந்த உயர்நிலைப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு முடித்துவிட்டான். பள்ளிக்குச் செல்லும் நேரம் தவிர மற்ற நேரங்களில் தேவியுடனே கழித்தான். அவர்கள் வீட்டில் இருந்தவர்களும் அதை ஆதரித்தார்கள்.

தேவிக்கும் இரண்டு வயதிலேயே சரவணனை அவ்வளவு பிடிக்கும். அவள் பேசிய முதல் பேச்சே...., சரவணனை “மாமா....”, என்று அழைத்ததுதான். அன்று முழுவதும் சரவணன் அதை அந்த ஊர் முழுவதும் சொல்லிக்கொண்டு அலைந்தான்.

சரவணனின் சந்தோசம் கண்டு, அவனது தாய் ருக்கு அவனை அழைத்து, “சரவணா...., உனக்கு தேவியை ரொம்ப பிடிக்குமா....?”, கண்களில் ஆர்வமாகக் கேட்டாள்.

“என்னாத்தா இப்படி கேட்டுபுட்ட..., எனக்கு தேவின்னா உசுரு....”, என்னவோ பெரிய மனிதன் தோரணையில் பதில் சொன்னான்.

“அப்படின்னா..., தேவியை நீ ஒரு குறையும் தெரியாமல் பாத்துக்கணும்...”, எதையோ சுற்றி வளைத்து சொல்ல முயன்றாள்.

“இப்போமட்டும் தேவிக்கு என்னாத்தா குற....? அதெல்லாம் நான் பாத்துக்கறேன்....”, எழுந்து விளையாடப் போகப் போனான்.

“இந்த ஆத்தா சொல்லுறதை கேளு ராசா...., உன்ற அய்யன், ஆத்தா, மாமனுங்க...., ஆயா எல்லாரும் கூலிக்கு மாரடிக்கிறோம். இந்த வருமானத்தில் தான் நம்ம வண்டி ஓடுது. இப்போ தேவியோட சித்தப்பனுங்க எல்லாம் சேர்ந்து அவளை கவனிக்கிறதால் அவளுக்கு ஒரு குறையும் இல்லை.

“ஆனா அவ சித்தப்பனுங்களுக்கு கண்ணாலம் ஆவும், அவங்களுக்கும் குழந்தை பொறக்கும் அப்போ தேவிக்கு, அவ ஆசைப்பட்டதெல்லாம் கிடைக்காது. அவளுக்கு நீ மட்டும் தான் இருப்ப. நீ மட்டும் அவளுக்கு செய்யணும்னா....

“நீ நல்லா சம்பாதிக்கணும்...., அதுக்கு முதல்ல இந்த நிலத்தை நம்பி இருக்குறதை விட்டுட்டு, நல்லா படிக்கணும்...., பெரிய

வேலைக்குப் போகணும்.... செய்வியா ராசா.

“இந்த ஆத்தா அந்த குடும்பத்துக்கு அவ்வளவு கடன் பட்டிருக்கேன். இந்த கடன் எல்லாம் அடைக்கணுன்னா...., அது தேவியை நாம நல்லபடியா பாத்துக்கிறதில் தான் இருக்கு. என்ன செய்வியா....? இந்த ஆத்தாவுக்கு செய்வேன்னு வாக்கு கொடு”.

தன் நன்றிக்கடனை, செஞ்சோற்றுக் கடனை அடைக்கும் விதம் எதுவென்று சரியாக அறிந்த ருக்கு, அதைத் தன் மகனுக்கு உணர்த்த முயன்றாள். பிஞ்சு மனதில் பதியும் விஷயங்கள் காலத்துக்கும் அழியாத ஒன்று என்பதை அறிந்து செய்தாளா? இல்லையா? என்பது அவளுக்குத் தெரியாது.

ஆனால் தன் மகன் எந்த விதத்திலும் தன் கடமையில் தவறிவிடக் கூடாது. அதே நேரம் தன் மகன் தகுதியான ஒருவனாக, பொறுப்புள்ளவனாக, பாசமானவனாக, பண்பானவனாக, தேவியை கண்ணுக்குள் வைத்து காப்பவனாக இருக்க வேண்டும் என்றும் எண்ணினாள்.

அதையே வார்த்தையாக வடித்து, “உன் உசுரைப் போல அவளைப் பாத்துக்குவ இல்ல”, தன் கையை அவன் பக்கம் சத்தியம் வாங்க நீட்டினாள். இந்த வாக்குதான் அவன் தலையெழுத்தையே மாற்றியமைக்கப் போகிறது என்பதை அந்தத்தாய் அறியவே இல்லை.

“என் உசுரைக் கூட அவளுக்காக கொடுப்பேன் ஆத்தா.... அவதான் எனக்கு எல்லாமே.., அவ ஆசைப்பட்டது எல்லாம் நான் ஒருத்தனே செய்வேன்...”, இப்படி மழலையில் வாக்குக் கொடுத்த அவனும் உணரவில்லை.

உணர்ந்த பொழுது........

# பகுதி – 3.

இந்த உடலைவிட்டு

உயிர் பிரிய ஆசை கொண்டேன்

உயிரே உனக்காக........

ஜன்னல் கம்பிகளைப் பிடித்தவாறு, இலக்கின்றி பார்வையைச் செலுத்தியவாறு நின்றிருந்தாள் வானதி.

வானத்தில் இருந்த பிறை நிலவு, இருளின் கருமையை விரட்டப் போராடி, ஓராளவு வெற்றியும் கண்டது.

நிலவின் பால் ஒளியில் வீதியை வேடிக்கை பார்த்தவாறு நின்றிருந்தாள். தூரத்தில் சாலைகளில் செல்லும் வாகனங்களின் வெளிச்சம், புள்ளியாகத் தெரிந்து, வெளிச்சமாகி ஒளிர்ந்து, புள்ளியாக மறைவதுவரை பார்த்துக் கொண்டே இருந்தாள்.

இமைக்க கூட மறந்தவள்போல், வெறித்த பார்வையாக நின்றவளின் கவனம், அந்த வாகனங்களிலும் இருக்கவில்லை. மனம் எதையுமே நினைக்க மறந்ததுபோல் வெற்றிடமாக இருந்தது.

ஆனால்....., அந்த வெற்றிடமான மனதைத் தாங்க முடியாதவள் போல், மனம் பாரமாகக் கனக்க, அந்தக் கனத்தைத் தாள முடியாமல், கால்கள் துவள, அருகில் இருந்த கட்டிலில் சுருண்டு விழுந்தாள்.

மனம் குழம்பித் தவித்தாலும் சரி, வெற்றிடமாக இருந்தாலும் சரி ஒருவித அழுத்தம் மனதை ஆக்கிரமிக்கும். அதே உணர்வை அனுபவித்தாள் வானதி.

தான் விழுந்ததைக் கூட உணராமல், தன் வலக் கரத்தால், இடதுபக்க மார்பில் வைத்து அழுத்திக் கொண்டாள். இதயம் துடிப்பதை அவள் கரங்கள் உணர்ந்தது.

‘இன்னுமா இந்த இதயம் துடிக்குது....? இது ஏன் இன்னும் நிக்கலை...? இதற்குமேல் நான் ஏன் உயிரோட இருக்கணும்...?’, கேள்விகள் மூளையை வண்டாகக் குடைய, அந்த கனங்களை, கேள்விகளை அசைபோட்டவாறே இமைகளை மூடிக் கொண்டாள்.

மூடிய இமைகளைத் தாண்டி, கண்ணீர் கோடாக வழிந்தது. ‘உன்னால் எப்படி முடிந்தது.....? என்னை விட்டுப் பிரிய உனக்கு எப்படி மனசு வந்துது...? இப்படி என்னை உயிரோடு வதைக்கத்தான், என்மேல் உயிரையே வைத்திருந்தாயா...?’, கேள்விகளின் ஊர்வலம் இப்பொழுதும் நிற்கவில்லை.

எதையுமே நினைக்கக் கூடாது என்று எண்ணினாலும், மறக்கவே முடியாத ஒரு விஷயத்தை எப்படி மறக்க முடியும்? அதிலும் வாழ்க்கை முழுவதற்கும் துணையாக வரும் என்று நினைத்த உறவு, பாதியிலேயே பிரிந்த துயரம்........

அதுவும் வாழ்வே அவன்தான் என்று எண்ணியிருக்க, வாழ்வையே வெறுக்க வைத்த துன்பம்... அவன் இல்லை என்ற உண்மையை, தன் மனதுக்கு உணர்த்த, தன்னையே சமாதானம் செய்ய ஆன நாட்கள்...., ஆனாலும் அவன் இல்லை என்ற உண்மையை ஏற்க முடியவில்லை அவளால்.

வாய்விட்டுக் கதறவேண்டும் போல் இருந்தது. இருக்கும் சூழல் அதைத் தடுக்க, படுக்கையில் முகம் குப்புற விழுந்து அழுகையில் குலுங்கினாள். 'எனக்குமட்டும் ஏன் இப்படியெல்லாம்....?', தன்னிரக்கம் போட்டி போட்டது.

காதலின் இனிமையையும், காதலின் அரவணைப்பையும், ஆதரவையும், நேசத்தையும் மட்டுமே உணர்ந்திருந்தவள், காதலின் பிரிவையும், அதன் வலியையும், வேதனையையும் இப்பொழுது அணுவணுவாக அனுபவித்தாள்.

காதல்செய்தால் இப்படி வலிக்குமா...? காதலைப் பிரிந்தால் உயிரையே வெறுக்கும் உணர்வு எழுமா...? உயிரையே விடத் தோன்றுமா....? சில நாட்களுக்கு முன்னரோ, சில மாதங்களுக்கு முன்னரோ அவளிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் சிரித்திருப்பாள்.

ஆனால் இன்று ஒவ்வொரு நொடியும் அதன் தகிப்பை உணரும் பொழுது, இந்தக் கேள்விகளெல்லாம் தூசு என்றும், காதல் அதைவிடக் கொடியது என்றும் தோன்றியது.

'என்னால் முடியலையே...., அணுஅணுவா செத்துட்டு இருக்கேனே...., உனக்கு அது தெரியவே இல்லையா...? வந்துடுங்க..., என்கிட்டே வந்துடுங்க....', மனம் விடாமல் அரற்றியது.

'அணுவணுவாக சாவதற்கு முடிவெடுத்தபின், காதல் ஒரு சிறந்த வழிதான்', அன்று இந்தக் கவிதையைப் படித்துச் சிரித்ததும், இன்று அதன் உயிர்வலியை அனுபவிக்கும் பொழுது, தன்னைப்போலவே துன்பப்பட்ட யாரோ எழுதிய வரிகள் அவை என்பது சரியாகப் புரிந்தது.

அது புரிந்ததற்காக சந்தோசப் பட முடியவில்லை. மாறாக..., துடிக்கும் இதயத்தை வெளியே வெட்டியெறிந்து, இந்த வேதனையில் இருந்து விடுபட வேண்டுமென்று தோன்றியது.

ஆனால் அதை செயல்படுத்த முடியாமல், தன்னைச் சுற்றியிருப்பவர் -களுக்காகவும், தன்மேல் உயிரையே வைத்திருப்பவர்களுக்காகவும், போலியாக ஒரு வாழ்க்கையை வாழவேண்டிய கட்டாயத்தில் இருப்பதை அறவே வெறுத்தாள்.

இப்படியே ஜன்னலைத் திறந்து வெளியே குதித்துவிடுவோமா...? எண்ணத்தை செயல்படுத்தும் வேகம் கிளம்பும் வேளையில், அவள் அறைக்கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

அவள் அனுமதியை எதிர்பார்க்காமலே, அவள் அறைக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள் ப்ரவீணா. சாந்தம் தவழும் முகம். கல்லூரிக்குச் செல்லுகிறாள் என்று சொல்லும் உடல் வாகு.

அவள் கல்லூரிப் படிப்பை முடித்து, ஒரு கார்மென்ட் இண்டஸ்ட்ரியில் ஆடை வடிவமைப்பு பிரிவில் வேலை செய்கிறாள் என்று சொன்னால், நம்புவதற்குக் கொஞ்சம் கடினமாகத்தான் இருக்கும்.

ஆனால் அதுதான் உண்மை...., அறைக்குள் வந்த ப்ரவீணாவோ, “என்ன வானதி...., இன்னைக்கு எப்படித் தற்கொலை செஞ்சுக்கலாம்னு யோசிச்சுட்டு இருக்குறியா? இந்த பிரவீணா இருக்கும் வரைக்கும் உன்னால் அது முடியவே முடியாது.

“அது சரி...., டின்னர் சாப்பிட வரவே இல்லை. பட்டினி கிடக்கக் கூடாதுன்னு உன்கிட்டே எத்தனை தரம் சொல்லி இருக்கேன். இந்தா இந்த பாலைக் குடி....”, தான் கொண்டுவந்த பாலை, வானதியிடம் கொடுத்தாள்.

“ம்ச்...”, தன் இடக்கையால் அதைத் தள்ளிவிட்டாள்.

“அட..., இப்படிச் சொன்னால் விட்டுடுவனா...? இன்னைக்கு உன்னை இதை குடிக்க வைக்காமல் விட மாட்டேன்....”, சொன்னவள், அனாயசமாக வானதியைப் படுக்கையில் இருந்து எழுப்பி, வலுக்கட்டாயமாக அந்தப் பாலைப் புகட்டினாள்.

அவளது கட்டாயத்துக்கு வணங்கி, அந்தப் பால் முழுவதையும் மூச்சுகூட விடாமல், ஒரே மூச்சில் குடித்தாள்.

“இவ்வளவு பசியை வச்சுட்டு நீ வேண்டாம்னு சொன்னியா...?”, வானதியைப் போலியாக மிரட்டினாள்.

‘எனக்குப் பசியா...?’, வானதியின் பார்வை அவளிடம் கேள்வி கேட்க, அதைக் கண்டுகொள்ளாமல்,

“என்னமோ தூக்கம் வருதுன்னு அம்மாட்ட சொல்லிட்டு வந்தியாம்..., அப்போ இன்னும் ஏன் முழிச்சுட்டு இருக்க...? முதல்ல கண்ணை மூடித் தூங்கு. நாளைக்கு என்னோட ஆபீஸ் வாற..., அது தெரியும் இல்ல...”, வானதியை மேலே எதுவும் சிந்திக்க விடாமல், அடுக்கடுக்காகப் பேசினாள்.

“மேம்....”, முதல் முறையாக வாய் திறந்தாள் வானதி.

“என்னது மேடமா....? வானதி..., உனக்கே இது கொஞ்சம் ஓவரா இல்ல. நான் உன்னை விட நாலு வயசுதான் பெரியவ..., அதுக்குன்னு என்னை இப்படியா தொண்டு கிழவி ஆக்குவ. முதல்ல என்னை பேர் சொல்லிக் கூப்பிடு.

“பிறகு சொல்லு...., நீ என்ன சொல்ல வந்தன்னு.....”, அவள் படுக்கையின் அருகில் அமர்ந்து, ஆதரவாக அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

“மேட..., மே...., ப்ர...., ம்க்கும்...., நான் வேலைக்கு...., வேண்டாம்....”, அவளை மேடம் என்று அழைக்கவும் முடியாமல், பெயர் சொல்லவும் முடியாமல், தான் சொல்ல வந்ததையும் சரியாகச் சொல்ல முடியாமல், பாதியிலேயே பேச்சை நிறுத்தினாள்.

“சரி வேலைக்கு வரலை...., அப்போ வேற என்னதான் செய்யப் போற...”, அவளையே கூர்மையாகப் பார்த்துக் கேட்டாள்.

‘தெரியலை....’, என்பதுபோல் அப்பாவியாக ஒரு பார்வை பார்க்க, ப்ரவீணாவுக்கு அப்படியே உருகிற்று. ஆனால், தான் இளகியதை அவளிடம் காட்டினால், இன்னும் தன் கூட்டுக்குள் முடங்கிவிடுவாள் என்பதை உணர்ந்து,

“இங்கே பார் வானதி..., இப்போதைக்கு நீ எதையுமே யோசிக்காதே. இதுவும் கடந்து போகும்...., கொஞ்ச நாள் நான் சொல்ற மாதிரி செய். எல்லாம் தானாக சரியா போகும்...”, அவளுக்கு தைரியம் சொல்ல முயன்றாள்.

‘போகாது..., இது கடந்து போகாது...’, மனதுக்குள்ளேயே கதறியவளின் தலை தானாக, இடம் வலமாக ஆடியது.

“இங்கே பார், வாழ்க்கை, இந்த இருபது வயசிலேயே முடிஞ்சு போறது கிடையாது. உனக்கு வாழ்க்கை இனிமேல்தான் இருக்கு…”,

“என் வாழ்க்கை அவரோடவே முடிஞ்சு போச்சு…”, வெடித்தாள் வானதி. சொன்னவள் ப்ரவீணாவின் முன்பே வெடித்து அழுதாள்.

இங்கே வந்த பிறகு, இன்றுதான் முதல் முறையாக வானதி தன் உணர்வுகளை வெளிக்காட்டுவதைப் பார்க்கிறாள் பிரவீணா. வந்த அன்றுமுதல் வெறித்த பார்வையும், ஒருவித இறுக்கத்துடனேயே இருந்தாள்.

வானதி, இப்பொழுது இருப்பது ப்ரவீணாவின் வீடுதான். ஆனால் அது வீடு என்று சொல்ல முடியாத அளவு, பெரிய பங்களா. அங்கே வானதியைபோல் இன்னும் சில பெண்களும் தங்கி இருந்தார்கள்.

ப்ரவீணாவின் தந்தை தவசி செல்வாக்கோடு வாழ்ந்தவர். ஒரு இக்கட்டில் அனைத்தையும் இழந்து நொடியில் மாண்டு போனார். அவர் வாங்கி வைத்திருந்த கடன்கள் கழுத்தை நெரிக்க, தொழிலை விற்று கடன்களை அடைத்தார் அவளது தாய் பத்மா.

இறுதியில் வீடு மட்டுமே மிஞ்ச, வானதியின் யோசனைப்படி அவர்களது வீட்டை, பெண்களுக்கான, விடுதிபோல் மாற்றினார்கள். ஆனாலும் அங்கே நம்பிக்கையானவர்கள், நெருங்கியவர்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

அதைவிட ஆதரவற்று, உழைத்து வாழ்க்கை நடத்தும் பெண்களுக்கு அங்கே முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. வானதியின் அழுகையை சலனமே இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ப்ரவீணா. வானதி, தானாகவே அழுது ஓயவே,

“வாழ்க்கை முடிஞ்சு போச்சுன்னு நீயே எப்படி முடிவெடுக்க முடியும்..? வாழ்க்கை அது பாட்டுக்குப் போகட்டும்…, முதல்ல நாளைக்கு நாம வேலைக்குப் போவதைப் பற்றி யோசி…., அங்கே வந்து இப்படி உம்முன்னு இருந்தால் வேலைக்கு ஆகாது.

“எல்லோரும் உன் தலையில் மொளகா அரச்சுடுவாங்க. நீ அங்கே சூப்ரவைசர். அதுக்குரிய மிடுக்கு உனக்கு இருக்கணும். அதை விட்டுட்டு இப்படி மூலையில் உக்காந்து அழுதுட்டுதான் இருப்பன்னா…, நீ இப்போவே உன் வீட்டுக்குக் கிளம்பு…”, ப்ரவீணாவின் குரலில் அப்படி ஒரு இறுக்கம்.

இங்கே வந்த நாள் முதல், ப்ரவீணாவின் கனிவான முகத்தை மட்டுமே கண்டு வந்தவள், இப்படி அவள் கண்டிப்பைக் காட்டவே, மிரண்டு விழித்தாள்.

ப்ரவீணாவின் கெஞ்சலை விட, கண்டிப்புக்கு மதிப்பிருந்தது அவளிடம். “நா..., நான் வாரேன்...”, அழுகையினூடே மூக்கை உறிஞ்சியவாறு சொல்லிவிட்டாள்.

“வந்தால் மட்டும் போதாது...., எல்லாரையும் மிரட்டி வேலை வாங்கணும் புரியுதா...?”, ப்ரவீணா சொல்ல, வேகமாக மிரண்டு மண்டையை உருட்டினாள் வானதி.

“இது அழகு..., சரி படுத்துக்கோ...., நானும் இன்னைக்கு இங்கதான் படுத்துக்கப் போறேன்”, சொன்னவள், அருகில் இருந்த மற்ற கட்டிலில் ஏறி படுத்துக் கொண்டாள்.

வானதி மிரண்டு அப்படியே அமர்ந்திருப்பதைக் கண்டவள், “காலையில் சீக்கிரம் எழுந்திரிக்கணும் நீ இப்படியே உக்காந்து இருந்தால்..., படு...”, போலியாக மிரட்டவே, அதில் இருந்த போலித்தனத்தைக் கண்டுகொள்ள முடியாமல், சட்டென படுத்துக் கொண்டாள்.

ப்ரவீணாவுக்கு முதுகுக் காட்டிப் படுத்தவளின் உள்ளமோ..., ‘நீங்க இருந்திருந்தால் எனக்கு இப்படி ஒரு நிலை வந்து இருக்குமா...?’, எனத் தீவிரமாகச் சுழன்றது.

தன்னவன் தன்னை விட்டுப் பிரிந்து மாதங்கள் கடந்தாலும், இழப்பின் வலி குறையாமல் இருப்பதைத் திகைப்பாய் உணர்ந்தாள். ‘என்னங்க..., நான் வேலைக்குப் போறேன்...., நான் சொல்லுறது உங்களுக்குக் கேக்குதா...?’, காற்றில் கலந்துவிட்ட தன்னவனிடம் சொன்னாள்.

ஏதேதோ யோசனையில் இருந்தவளை, நொடியில் உறக்கம் வந்துத் தழுவியது. வானதி உறங்கிவிட்டதை அவளது சீராக எழுந்து இறங்கிய மூச்சு தெரிவிக்கவே, தன் படுக்கையில் இருந்து எழுது, அவளைப் பார்த்தாள் ப்ரவீணா.

எழுந்து சென்று, வானதியின் கண்ணீர்த் தடங்களைத் தன் கரங்களால் துடைத்தவள், “எல்லாம் சரியாயிடும்....”, அவளுக்கு மட்டுமல்ல தனக்கும் சொல்லிக் கொண்டாள்.

சிறிது நேரம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள், "வீணா…", என்ற தாயின் அழைப்பில் கலைந்தாள்.

"என்னம்மா என்னைத் தேடியா வந்தீங்க…? அதான் இன்னைக்கு வானதியோடவே படுத்துக்கறேன்னு சொல்லிட்டு தானே வந்தேன்….", கேள்வியாக நிறுத்தினாள்.

"இல்ல, வானதி தூங்கிட்டாளான்னு பாக்க வந்தேன். இங்கே வந்து பார்த்தால்…, நான் நினைத்ததற்கு மாறா…., நீ முழிச்சுட்டு இருக்க அதான் கூப்பிட்டேன்….", மெல்லிய சிரிப்பினூடே சொன்னார்.

"இல்லம்மா அவ இருந்த மனநிலைக்கு இன்னைக்கு தூங்கியே இருக்க மாட்டா. நான்தான் பால்ல ஒரு தூக்க மாத்திரையைப் போட்டு அவளைத் தூங்க வச்சேன்", வானதியைப் பார்த்தவாறே தாயிடம் சொன்னாள்.

"இந்த வயசிலேயே ஆண்டவன் அவளுக்கு இவ்வளவு பெரிய சோதனையைக் கொடுத்திருக்க வேண்டாம். பாவம் சின்னப் பொண்ணு…. வெகுளி….", ஒரு தாய்க்குரிய கரிசனை அவரிடம்.

"நீங்க சொல்லுறது சரிதாம்மா…., அதுக்குன்னு அவளை இப்படியே விட முடியுமா….? எப்பவுமே நாம ஒரே இடத்தில் தேங்க முடியாதும்மா….., வாழ்க்கையில் அடுத்து என்னன்னு ஓடிட்டே இருக்கணும். இல்லன்னா…, நாம நின்ன இடத்திலேயே சமாதியாயிடுவோம்.

"இல்லையா நம்மை சமாதி ஆக்கிடுவாங்க. வாழ்க்கையில் யாருக்குதாம்மா பிரச்சனை இல்லை…., எல்லோருக்கும் அவங்க அவங்களுக்குத் தக்கன, பிரச்சனை இருக்கத்தான் செய்யுது. பிரச்சனையைக் கண்டு நாம ஒதுங்கக் கூடாது. அதை எதிர்த்துப் போராடணும்", நீளமாகப் பேசிவிட்டு தாயின் முகம் பார்த்தாள்.

பத்மாவோ வீணாவை பெருமை பொங்க பார்த்துக் கொண்டிருந்தார். "உனக்கு மட்டும் எப்படி இவ்வளவு சின்ன வயசிலேயே இவ்வளவு பெரிய ஞானம் வீணும்மா…. நீ மட்டும் இல்லன்ன, இந்த அம்மாவும் என்னைக்கோ இல்லாமலே போயிருப்பேன்", அவர் குரல் நெகிழ்ந்திருந்தது.

"அப்படியெல்லாம் எதுவும் ஆகாதும்மா…., நாம வாழ்ந்துதான் ஆகணும்னு கடவுள் முடிவு செய்ததை மாற்ற நாம யாரு…? அப்போ நான் இப்படி ஒரு முடிவு எடுக்கலன்னா…, நீங்களே வேற ஏதாவது

செஞ்சு இருப்பீங்க. இப்போ எதுக்கு அதெல்லாம், முதல்ல போய் தூங்குங்க...”, தாயை அவர் அறைக்கு அனுப்பினாள்.

பத்மாவும் மேலே எதுவும் சொல்லாமல், வானதியை ஒரு பார்வை பார்த்துவிட்டு அறைக்குத் திரும்பினார்.

தாயை அனுப்பிவிட்டு, தானும் படுக்கையில் விழுந்தாள் வீணா.

****யுவா இரவு உணவை முடித்தவன், தன் அறையின் பால்க்கனியில் சென்று நின்றுகொண்டான். அவன் அறைக்குள் நுழைந்த அடுத்த நிமிடம் கங்கா அவன் அறையில் இருந்தார்.

“தூங்கலையாப்பா....”, கனிவாகக் கேட்டார்.

“நான் தூங்கிக்கறேன்..., நீங்க போங்க...”, தாயின் முகம் பாராமல் பதில் சொன்னான்.

“எதுக்கு இப்போ என்னை விரட்டுற...? நான் போனதும் அந்த போர்வையைத் தரையில் விரிச்சு படுத்துக்கத்தானே என்னை விரட்டுற...? இந்த மாளிகைக்கே நீதாண்டா அரசன். ஆனால் நீ..., நம்ம வீட்டு வேலைக் காரங்களுக்குக் கூட, கட்டில் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

“அவங்களுக்கு எல்லாம் முதலாளி நீ...., இப்படி கட்டாந்தரையில் படுக்குறியே. இந்த அம்மாவோட மனசு என்ன பாடுபடும். ஏம்ப்பா இப்படியெல்லாம் நடந்துக்கற...”, கங்காவின் குரலில் அவ்வளவு வலி.

அவரது வலியை உணர்ந்தாலும், அதை கண்டுகொள்ளாமல், தாய் கட்டாந்தரை என்று சொன்ன அறையின் மார்பிள் தரையை, நிலைத்த பார்வையுடன் பார்த்தான்.

அந்த நேரம் உள்ளே வந்தார் ஈஸ்வர். “என்ன உன் பையன்ட்ட சொல்லிட்டியா?”, நேராக விஷயத்துக்கு வந்தார்.

“இப்போ எதுக்குங்க...... அது....?”, மகனைப் பற்றிய நினைவில் தயங்கினார்.

“இப்படியே சொல்லிச் சொல்லி நாள் தான் போயிட்டே இருக்கு. நானும் இவ்வளவுநாள் பொறுத்துட்டேன். இதுக்குமேல என்னால் முடியாது. கார்மெண்ட் பழைய நிலைக்கு மாறணும்னா அது இவன் பொறுப்பெடுத்துகிட்டால் தான் முடியும்.

“இப்போ இருக்க பசங்களுக்கு என்ன பிடிக்கும், எப்படி இருந்தால் பிடிக்கும்னு, அவங்க நிலையில் இருக்க இவனுக்குத்தானே தெரியும். கார்மெண்ட் ஒரு நிலைக்கு வந்துட்டு இருக்கும்போது, இவனுக்கு இப்படி ஆச்சு.

நானும் இவ்வளவு நாள் சம்மாளிச்சுட்டேன். இதுக்கும் மேல அவன்தான் செய்யணும். அதான் இப்போ நார்மலா இருக்கான்னு டாக்டர் சொல்லிட்டாரே. இப்படியே அவனை உன் முந்தானையில் முடிஞ்சு வைக்கிறதை விட்டுட்டு, ஆம்பளையா லட்சணமா ஆபீஸ்க்கு வரச் சொல்லு”, மகன்மேல் இருக்கும் கோபத்தை கங்காவிடம் கொட்டினார்.

யுவாவோ அவர் சொல்வதை சலனமே இல்லாமல் கேட்டவன், தாயைத் தவிப்பாக ஒரு பார்வை பார்த்தான்.

மனமோ, ‘இவர் ஏதோ கார்மெண்ட் பேக்டரி அது இதுன்னு சொல்லுறாரே. எனக்கு இதைப் பற்றி எதுவுமே ஞாபகம் இல்லையே..., இதெல்லாம் என்ன...? நான் எங்கே இருக்கிறேன்...? என்னைச் சுற்றி இருக்கும் எதுவுமே எனக்கு நெருக்கமா இல்லையே ஏன்....?

‘இந்த வீடு, என் அறை, என் பொருட்கள்...., எனக்கு என்னதான் ஆச்சு...? இங்கே இருந்து எங்கேயாவது ஓடிப் போகணும் போல இருக்கே...., நான் எதில் இருந்து தப்பிக்கப் பார்க்கிறேன்...? என்னிடம் இருந்தேவா...?’, தனக்குத் தானே குழம்பியவனின் கண்கள் இருட்டி, அப்படியே மயங்கிச் சரிந்தான்.

# பகுதி – 4.

விழி மூடினாலும்

என் புலன்கள் அனைத்தும்

விழித்துக் கொள்வது உன்னிடமே

தேவிக்கு அன்று மூன்றாம் பிறந்தநாள். பொதுவாக அந்த கிராமத்தில் பிறந்தநாள் விழா என்ற ஒன்றே யாரும் கொண்டாடுவது இல்லை. அவ்வளவு ஏன், யாருடைய பிறந்தநாள் என்று என்பது அவர்களுக்கே கூடத் தெரியாது.

பிறந்தநாளை அவர்கள் குறித்து வைத்திருப்பதே ஜாதகம் என்ற ஒன்று எழுதுவதற்கும் தான். அப்படியிருந்த பொழுதும் தேவியின்

பிறந்தநாள் மட்டும் அவர்கள் வீட்டில் இருந்த யாருக்கும் மறக்கவே செய்யாது.

பெரிதாக எந்தக் கொண்டாட்டமும் இருக்காது, புதுத் துணியோ, கேக்கோ, அவ்வளவு ஏன் ஒரு மிட்டாய் கூட கிடையாது. ஆனால் மாரி மட்டும் அன்று வீட்டில் பாயாசம் மட்டும் செய்வாள். அதுவே அங்கே பெரிய விசேஷம் தான்.

ஆனாலும் அன்று பெரியவீட்டம்மாவின் மகள் தெய்வா இரண்டு நாட்களுக்கு முன்புதான் பிறந்தநாள் கொண்டாடினாள். அன்று கோவிலில் அன்னதானமும், மிட்டாயும் வழங்கினார்கள். அந்த நினைவு தேவியின் மனதில் பதிந்து விட்டது.

எனவே அன்று காலையில் எழுந்து தனக்கு மிட்டாய் வேண்டுமென்று ஒரே அடம். அவளது அழுகையைப் பொறுக்க முடியாத வேலப்பன், ஊரில் இருந்த கடைக்குச் சென்று இரண்டு மிட்டாய் வாங்கிக் கொடுத்தான்.

ஆனால் அவளோ தனக்கு இது வேண்டாம் என்றும், அன்று தெய்வா கொடுத்த மிட்டாய்தான் வேண்டும் என்று கேட்டு, அந்த மிட்டாயின் கவரையும் கொண்டுவந்து கொடுத்தாள்.

வேலப்பன் அவர்கள் ஊரில் இருந்த சிறு பெட்டிக் கடைகள் அனைத்திலும் கேட்ட பிறகும், அங்கே அவர் கேட்ட சாக்லேட் இல்லை. மாறாக அவர்கள் ஊரில் குடிசைத் தொழிலாக இருந்த, ஜவ்வு மிட்டாயும், ஆரெஞ்சு மிட்டாயும், கல்கோணாவும், எள்ளுருண்டையும் மட்டுமே இருந்தது.

காலையின் பள்ளிக்குக் கிளம்பிச் செல்லும்முன் தேவியைக் காண வந்த சரவணன், அவள் அழுவதைப் பார்த்து அதிர்ந்து போனான். ஏனென்றால் இதுவரை தேவி அழுது அவன் பார்த்ததே இல்லை.

தேவி எதையாவது ஆசைப்பட்டு கேட்கும் முன்பே அது அவளுக்குக் கிடைத்திருக்கும். அவளும் அவ்வளவு பெரிதாக எதையும் ஆசைப்பட மாட்டாள். எனவே அதை நிறைவேற்றுவது அவர்கள் வீட்டில் இருப்பவர்களுக்கு சிரமம் இருந்தது இல்லை.

அந்த கிராமத்து தேவதையின் ஆசைகள் எல்லாம் மிகவும் எளிமையானவையே. தென்னை ஓலையில் செய்த பெட்டி, பந்து, தென்னை ஓலையில் செய்யும் பாம்பு, பனையோலை விசிறி, இப்படி அனைத்தும் செலவில்லாத எளிமையானவை.

அதை செய்துகொடுக்க சரவணன் எப்பொழுதும் தயாராக இருந்தான். அதோடு அவளது விளையாட்டுத் தோழனாக, அவன் தோளின் மேல் அமர்ந்து சவாரி செய்யும் சுகத்துக்கு ஈடுஇணை எதுவும் இல்லையென்றே அந்த பிஞ்சு உள்ளத்துக்குத் தோன்றியது.

இன்றுதான் முதல் முறையாக காசு செலவு செய்து ஒரு பொருள் வேண்டும் என்று அவள் விரும்புகிறாள். அவள் கொடுத்த அந்த டெய்ரி மில்க் சாக்லேட்டையே அங்கே அவ்வளவாக யாரும் பார்த்தது இல்லை.

ஊர் பஞ்சாயத்தில் இருக்கும் டிவியில் வரும் விளம்பரத்தில் மட்டுமே அதைப் பார்த்திருக்கிறார்கள். அப்படியிருக்கையில் அந்த சாக்லேட் வேண்டும் என்று அவள் அடம் பிடித்தால் அவர்களும் எங்குதான் செல்வார்கள்?

அந்த சாக்லேட் கவரை சரவணனிடம் காட்டி, “மாமா எனக்கு இந்த முட்டாயி வேணு....”, கண்ணைக் கசக்கி அழுதவாறே அவள் கேட்க, சரவணனுக்கு உருகிற்று.

தாய் அவனிடம் சொன்ன சொற்கள் காதில் ஒலிக்க, அந்த மிட்டாயை அவளுக்கு எப்படியாவது வாங்கிக் கொடுத்துவிடுவது என்று முடிவெடுத்தான்.

அந்த சாக்லேட் என்ன விலை இருக்கும் என்பது கூட அவனுக்குத் தெரியாது. ஆனாலும் தன் தேவி விரும்பியதை அவளுக்குக் கொடுத்தே ஆகவேண்டும் என்று விரும்பினான்.

“நீ அழுவாதத்தா...., இன்னைக்கு உனக்கு இந்த முட்டாய் வாங்கியாராம மாமன் வூட்டுக்கு வர மாட்டேன்....”, புத்தகப் பையை அவள் அருகிலேயே விட்டுவிட்டு, அவளிடமிருந்த அந்த சாக்லேட் கவரையும் வாங்கிக் கொண்டு, அந்த கிராமத்து பெட்டிக்கடைக்கு விரைந்தான்.

அந்தக் கடையில் கூனல் விழுந்த ஒரு தாத்தா வியாபாரம் செய்துகொண்டிருந்தார். “அப்பச்சி...., இந்த முட்டாயி எங்க கிடைக்கும்...? எத்தன ரூவா....”, அவன் குரலில் அதை அறிந்தே ஆகவேண்டும் என்ற பிடிவாதம் தெரிந்தது.

அவன் கையில் இருந்து அந்த பேப்பரை வாங்கியவர், கண்களை இடுக்கிக் கொண்டு அதைப் பார்த்தார். “எலேய்..., நீ மாரி பேரன்

தானே. செத்தே நேரம் முன்னாடி உன்ற மாமன் கேட்டுட்டுப் போனானே... வூட்ல சொல்லலையா.

“இது டவுன்ல தான் கிடைக்கும். அஞ்சு பத்து ரூவா இருக்கும். ஏன் உன்ற மாமன் மவ இந்த முட்டாயிதான் திம்பாளோ..., பேசாம இங்கன இருக்க இந்த ஜவ்வு முட்டாய் வாங்கி கொண்டுபோய் கொடு. அது போதும் அவளுக்கு”, ஊரில் இல்லாத பொண்ணைப் பெற்று வைத்திருக்கிறார்கள் என்ற எரிச்சல் தெரிந்தது அவர் குரலில்.

“அப்பச்சி..., உம்மா சோலியப் பாரும்..., எம் பொண்டாட்டிய பாத்துக்க எனக்குத் தெரியும்...”, கோபமாகச் சொன்னவன், அவர் கையில் இருந்து வெடுக்கென அந்தக் கவரை பிடுங்கிக் கொண்டு சென்றான்.

அவர் சொன்ன பத்து ரூபாய் அவனை கொஞ்சம் கலவரமாக்கியதுதான். ஆனாலும் தேவி ஒன்றை ஆசைப்பட்டு, அவளுக்கு அதை கொடுக்காமல் இருப்பதா என்ற எண்ணமும் எழுந்தது.

தாயிடம் அந்தக் காசை கேட்க முடியாது. ஏனென்றால் வீட்டு நிலைமை அவனுக்குத் தெரியும். தினமும் வயலில் பாடுபட்டால் தான் அன்றைய பாட்டை அவர்கள் ஓட்ட முடியும். அப்படியிருக்கையில் முழுதாக பத்து ரூபாயை அவரிடம் கேட்க அவனுக்கு மனமில்லை.

எப்படியாவது அந்தப் பணத்தை சம்பாதித்துவிடவேண்டும் என்று முடிவெடுத்தான். அதே யோசனையில் நடக்கும் பொழுது, பெரியவீட்டம்மாவின் பனங்காட்டில் ஓலைகளை வெட்டிப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அங்கிருந்த கணக்கரிடம் வேகமாகச் சென்றவன், “ஐயா நான் அந்த ஒலைஎல்லாம் எடுத்துப் போடட்டுங்களா....? எனக்கு பத்து ரூபா தாறீங்களா...?”, எதிர்பார்ப்பும், ஏக்கமுமாகக் கேட்டான்.

“சரவணா..., இதென்ன தென்ன ஓலைன்னு நினைச்சியா...? பனையோலைலே...., கையைக் கிழிச்சுப்புடும். ஓடு...”, அவன் வயதை நினைத்து விரட்டினார்.

“ஐயா..., எனக்குத் தெரியாதுங்களா...., நான் பாத்து செய்யிறேன். எனக்கு காசு கொடுப்பீங்களா...?”, அவன் அதிலேயே இருந்தான்.

ஏற்கனவே சில நாள் எடுபிடி வேலை செய்ய அவன் வந்திருப்பதால் அரை மனதாக சம்மதித்தார். சரவணனோ நொடியில் வேலையில் இறங்கிவிட்டான்.

போட்டிருந்த சட்டையைக் கழட்டி வைத்தவன், ஒவ்வொரு ஓலையாக எடுத்து ஓரிடத்தில் கூட்டத் துவங்கினான். பழக்கமில்லாத வேலையால், அந்த மட்டையின் ஓரம் இருந்த அரங்கள்(முட்கள்) அவன் கரங்களைக் கிழித்தது.

முதுகிலும், நெஞ்சிலும் கூட சில கீறல்கள் விழுந்தன. அதையெல்லாம் பொருட்படுத்தாமல், டவுனுக்கும் செல்ல வேண்டும் என்பதால் அவசரமாகவே வேலை பார்த்தான். உச்சிப் பொழுதில் வேலை அனைத்தும் முடிய, களைத்துப் போனான்.

அவன் வேலை செய்த லாவகத்தில் திகைத்து, அவன் கேட்ட கூலியை விட அதிகமாகவே அவனுக்குக் கொடுத்தார். கொடுத்துவிட்டு, “எதுக்குலே உனக்கு இம்புட்டு காசு....”, சின்னப் பையனுக்கு எதுக்கு இவ்வளவு ரூபாய் என்பது அவருக்கு அறிந்தே ஆகவேண்டும்.

“உசந்த முட்டாய் வாங்கணுங்கையா. இன்னைக்கு தேவிக்கு பொறந்தநாள்..., நான் டவுனுக்கு போறேன்...”, அவர் கையில் இருந்து காசை பிடுங்காத குறையாக பறித்துக் கொண்டு ஓடினான்.

அவன் நேராக வந்து நின்றது அங்கிருந்த சைக்கிள் கடையில் தான். அவரோ சாப்பிடப் போயிருந்தார். அவர் வீட்டுக்குத் தேடிப்போய், ஒரு சைக்கிள் வேண்டுமென்று கேட்டான். அவனை ஏற இறங்கப் பார்த்தவர், “சரவணா...., உனக்கெதுக்குலே சைக்கிளு....”, ஆச்சரியமாகக் கேட்டார்.

“அண்ணே..., டவுணுக்கு போகணுண்ணே..”, அவன் அவசரத்தில் கெஞ்சினான்.

“என்னது டவுணுக்கா....., ஒத்தேலையா போற..... ஒரு மணி நேரத்துக்கு ஒரு ரூவா...., தெரியும்லா...”, கடைக்காரன் வியாபாரம் பேசினான்.

“அண்ணே..., டெய்லி வந்து உன் கடையில் பஞ்சர் ஒட்டுறேண்ணே...., இன்னைக்கு கொஞ்ச நேரத்துக்கு தாங்கண்ணே...”, விட்டால் அழுதுவிடுவான் போல் இருந்தான்.

“சரி சரி..., அழுவாத..., சைக்கிளை எடுத்துட்டு போ...., ஆனா..., டவுணுக்கு தனியாவா போற...., அப்பன் ஆத்தாட்ட சொல்லிட்டியா?”, அக்கறையாகக் கேட்டார்.

“அதெல்லாம் சொல்லிக்கறேன்....”, சொன்னவன் நொடியும் தாமதிக்காமல் சிக்கிளை எடுத்துக் கொண்டு சென்றான்.

கிட்டத்தட்ட மூன்று கிலோமீட்டர் தூரம் இருந்தது அந்த டவுண். ஒரு சின்ன சைக்கிளின் உதவியுடன், பசியுடன் அவ்வளவு தூரத்தைக் கடப்பது அவனுக்கு மிகுந்த சிரமமாகத்தான் இருந்தது. அதையெல்லாம் அவன் சட்டை செய்யவே இல்லை.

அவனது கவனமெல்லாம் தேவிக்கு சாக்லேட் வாங்கிக் கொண்டு செல்லவேண்டும் என்பதில் மட்டுமே இருந்தது. எப்படியோ ஒரு வழியாக, மேடு பள்ளம், குண்டு குழியான ரோடு, என அனைத்தையும் கடந்து அவன் டவுணுக்கு வந்தபொழுது நேரம் மாலை நான்கைக் கடந்திருந்தது.

வேகமாக அருகில் இருந்த கடைக்குச் சென்றவன், தன் கையில் இருந்த சாக்லேட் கவரைக் காட்டி, அதேபோல் சாக்லேட் வேண்டுமென்று கேட்க, கடைக்காரர் பத்துரூபாய் டெய்ரிமில்க் சாக்லேட்டைக் கொடுத்தார். அதைக் கைகளில் வாங்கியவனுக்கு, உலகையே வென்ற சந்தோசம்.

தன் அத்தை மகள் கேட்ட மிட்டாயை வாங்கிவிட்டோம் என்பதிலேயே அவனது களைப்பனைத்தும் ஓடிவிட்டது. அதை நொடியில் தேவியின் கைகளில் கொடுக்கவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. எனவே தன் களைப்பைப் போக்க, அங்கே இருந்த பைப்பில் தண்ணீர் பிடித்து குடித்துவிட்டு, சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

வந்தபொழுது இருந்த வேகத்தைவிட அசுரத்தனமாக சைக்கிளைச் செலுத்தினான். நேர்வழியாக சென்றால், அதிக நேரமெடுக்கும் என்பதால், குறுக்குவழியில் சென்றான். ஆனால் அந்து உடைமுள் காடு என்பதால், பாதி வழியிலேயே சைக்கிள் பஞ்சராகி விட்டது.

இருளும் கவிழத் துவங்கவே சைக்கிளை தள்ளிக்கொண்டு அந்த ஒற்றையடிப் பாதையில் நடக்கத் துவங்கினான்.

மனதுக்குள் பயம் கிளம்பியது. அதிலும் அவன் ஆயா சொல்லிக் கொடுத்த பேய்க் கதைகள் அனைத்தும் உயிர்கொண்டு உலாத்துவது போன்ற பிரம்மை, சைக்கிளோடு ஓடினான்.

ஓடிய வேகத்தில் நிலை தடுமாறி சைக்கிளோடு விழுந்தான். ஏற்கனவே கை, உடலில் பனையோலை அரம் கிழித்திருக்க, இப்பொழுது முள்ளும் சேர்ந்து குத்த, அந்த சிறுவனின் உடல் முழுவதும் காயங்கள். அவ்வளவு நிலை தடுமாற்றத்திலும், கையில் வைத்திருந்த சாக்லேட்டை மட்டும் கை நழுவ விடவே இல்லை.

ஒரு வழியாகத் தட்டுத் தடுமாறி, சைக்கிளையும் தேடி எடுத்துக் கொண்டு, வேகமாக ஓடினான். அங்கே அவனது வீட்டிலோ ருக்கு ஒப்பாரியே வைக்கத் துவங்கிவிட்டாள். மாரியும் ஐயனாரும் சேர்ந்து அவளை சமாதானம் செய்து கொண்டிருந்தார்கள்.

மாரியின் மகன்கள் அனைவருமே சரவணனைத் தேடி டவுனுக்குச் சென்றார்கள். ஆளுக்கொரு திசையில் அவனைத் தேடி அலைந்தார்கள். பெரியவீட்டம்மாவின் கணக்கரும், சைக்கிள் கடைக்காரனும் அவர்களுக்கு வேண்டிய தகவல் கொடுத்திருந்தார்கள்.

ஆனாலும் சிறுவனான அவன் தனியாக டவுனுக்குச் சென்றதை அவர்களால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. அதைவிட அவன் காசுக்காக வேலை செய்தான் என்பதையும், முள் அவன் கைகளைப் பதம் பார்த்திருந்தது என்ற செய்தியும் அவர்களைக் கலங்கடித்தது.

சின்னப் பையன் வழி மாறி சென்று விடுவானோ..., சைக்கிளை வேறு எடுத்துச் சென்றிருப்பதால் எதுவும் ஆகிடுமோ...., என்ற பயமே ருக்குவை அதிகம் ஆட்டி வைத்தது. மாலை வரை கொஞ்சம் தைரியமாக இருந்தவள், பள்ளி விட்டு வந்த பிறகும், அவனைக் காணவில்லை என்று தேடும் பொழுதுதான், அவன் பள்ளிக்குச் செல்லவில்லை என்ற செய்தியே அவளுக்குத் தெரிந்தது.

அது ஒரு சிறிய கிராமம் என்பதால் நொடியில் விஷயம் பரவியது. கணக்கரும் தகவல் சொல்லிவிட்டார். அவர் சொன்ன உடனேயே, சரவணனைத் தேடி அனைவரும் கிளம்பி விட்டார்கள்.

அவர்கள் அனைவரும் ஒரு வழியில் தேட, சிறுவன் என்பதால், காட்டுவழியில் வர பயப்படுவான் என்பதால் யாரும் அந்த வழியில் செல்லவில்லை. அதைவிட அவன் சிக்கிளில் சென்றிருப்பதால், காட்டுவழியில் வர முடியாது என்று எண்ணினார்கள்.

ஒரு வழியாக டவுனுக்கே சென்று விசாரித்துவிட்டார்கள். கடைக்காரரும், அவன் ஒருமணி நேரத்துக்கு முன்பே

கிளம்பிவிட்டான் என்று சொல்லிவிட்டார். அவர் அவ்வாறு சொல்லவே அனைவரையும் பயம் பிடித்துக் கொண்டது.

வேகமாக தேடலைத் துரிதப் படுத்தினார்கள். வேலப்பன் தன் அடுத்த சகோதரனோடு காட்டு வழியிலேயே வருவதாகச் சொல்லிக் கிளம்பிவிட்டார். காட்டு வழி முழுவதும், “சரவணா..., சரவணா...”, எனக் கூவியவாறே சென்றார்கள்.

இவர்கள் சரவணனை நெருங்கும் வேளையில், சாலை வழியாக வந்தவர்கள், வாகனத்தில் வந்ததால், அவர்களும் அந்த இடத்தை நெருங்கிவிட்டார்கள். காட்டு வழியிலிருந்து வெளியே சரவணன் வந்தபொழுது, அனைவரும் அவனை கண்டு கொண்டார்கள்.

“எலேய்..., என்ன காரியம் செஞ்ச...”, அவன் தந்தை அவனை அடிக்கப் பாய்ந்தார்.

பயத்தில் தன் மாமன் வேலப்பனின் பின்னால் ஒளிந்து கொண்டான் சரவணன்.

“உனக்கு கோட்டியால புடிச்சு இருக்கு...., எங்கள வெசனப்பட வச்சுட்ட...”, வேலப்பனின் தம்பியும் சாடினார்.

“எதுக்குல ஒத்தால டவுணுக்கு போன...., நீ அம்புட்டு வளந்துட்டியால..., வேலைக்குப் போனியாம்....”, சரவணனின் தந்தையால் தான் கேட்டவை அனைத்தையும் ஜீரணிக்க முடியவில்லை.

சரவணனோ மழையில் நனைந்த கோழிக் குஞ்சாக, வேலப்பனின் முதுகிலேயே ஒண்டிக் கொண்டான்.

அவன் பயம் உணர்ந்து வேலப்பனும் அவனை விலக்காமல் தன் கை அணைப்பிலேயே வைத்திருந்தார்.

“அதான் கண்டு புடிச்சுட்டோமே..., அவனே ஏற்கனவே பயந்து போய் இருக்கான். அவனை எதுக்கு இன்னும் பயம் காட்டுதிய. பாவம் எம்மருமவன்..., சாப்பிட்டானோ என்னவோ..., வூட்டுக்கு போய் பேசிக்கலாம்...”, அனைவரையும் அடக்கினார்.

வேலப்பன் சரவணனை அனாயசமாக தூக்கிக் கொண்டு நடந்தார். சரவணின் தந்தைக்கு கோபம் அதிகம் இருந்ததுதான். அதிலும் தன்னிடம் எதுவும் சொல்லாமல், வேலைக்குச் சென்று, காசு பெற்று, தனியாக டவுணுக்குச் சென்றுவிட்டானே, என்று.

அவனைக் காணும் வரை, அவர் உயிரே அவரிடம் இல்லை. எப்படியாவது அவனைக் கண்ணால் காணவேண்டும் என்பது மட்டுமே பெரிதாக இருந்தது. அவனுக்கு ஏதாவது ஆகி விடுமோ என்று தவித்தார் தான்.

அவனைக் கண்டவுடன் தவிப்பு மறைந்து, நிம்மதியும், கோபமும் ஒருங்கே எழுந்தது. எனவேதான் அவனிடம் சாடினார். இப்பொழுது வேலப்பனின் கரங்களில் இருக்கும் தன் மகனை வாங்கிக் கொள்ள கரங்கள் துடித்தது. ஆனாலும் அனைவரும் செல்லம் கொடுத்தால் சரிவராது என்பதால் இறுக்கமாகவே இருந்து கொண்டார்.

சரவணனோடு அவர்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்த பொழுது..., ஊரே அவர்கள் வீட்டின் முன்னால் கூடி இருந்தது.

சரவணனைக் கண்ட ருக்கு...., “என்னப் பெத்த ராசா....., எங்கடா போன...., இந்த ஆத்தாட்ட சொல்லாம எங்கேயும் போக மாட்டியேடா....”, சொன்னவர், அவனை இழுத்து அணைத்துக் கொண்டார். தலைமுதல் கால்வரைத் தடவிப் பார்த்தார்.

தெருவிளக்கின் ஒளியில் அவன் கைகளில் இருந்த காயத்தைப் பார்த்தவள், “என்னடா சரவணா இப்படி அடி பட்டுருக்கு....”, அவன் கரங்களைத் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டார். “அதான் பய வந்துட்டானே..., எல்லாம் வீட்டுக்குப் போங்கப்பா...”, பெரியவர் சொல்ல, அனைவரும் கலைந்தார்கள்.

அனைவரும் கலைந்து செல்லவே, மாரியும் அவனை அணைத்து, ஒரு ஒப்பாரிப் பாடலையே பாடி விட்டாள். ஆளாளுக்குப் பேசினாலும், அனைவருக்கும் சரவணனைக் கண்டது பெரிய நிம்மதியைக் கொடுத்தது.

“ஆத்தா..., போய் உலை வை....”, வடிவை விரட்டிய மாரி, “ருக்கு..., புள்ளைக்கு கொஞ்சம் சுடு தண்ணி வச்சு குளிக்க வையாத்தா....”, ருக்குவையும் விரட்டியவள், “ஏண்டா ராசா...., எதுக்குடா உனக்கு அம்புட்டு காசு..., எதுக்கு டவுனுக்கு போன...”, மாரி பக்குவமாக விசாரித்தாள்.

மாரி கேட்கவே சரவணனின் கண்கள் அவசரமாக சுழன்று தேவியைத் தேடின.

அவன் தேடலை உணர்ந்து, “யார தேடுற ராசா....”.

“ஆயா..., லஷ்மி.... எங்க....?”, அவன் கண்கள் அவளைத் தேடியது.

“அத ஏன் கேக்க..., உன்னைக் கேட்டு அழுதுட்டே இருந்து அதுக்கு காச்ச கண்டுடுச்சு. உள்ளாரதான் படுத்துகிடக்கு....”, மாரி சொல்லி வாயை மூடும் முன்னர்,

“மாமா....”, என்ற கூச்சலோடு ஓடி வந்து அவனைக் கட்டிக் கொண்டாள் அந்த தேவதை.

அவளை மடியில் அமர வைத்தவன், “ஏனாத்தா உனக்கு காச்ச வந்துச்சு..., இந்த மாமாவ தேடுனியா...? மாமாதான் காலையில் உனக்கு முட்டாய் வாங்கித் தாரேன்னு சொன்னேனே....”, சொன்னவன், தன் நடுங்கும் கரங்களால் அந்த மிட்டாயைப் பிரித்து அவளுக்குக் கொடுத்தான்.

“ஐ....”, ஆர்வமாகக் கூவி, வாயில் போட்டுக் கொண்டாள். பின்னர் சிறிது கடித்து அவனுக்கும் கொடுத்தாள். அவனும் வாங்கிக் கொண்டான். அவர்கள் தங்கள் உலகில் இருக்க, பெரியவர்களின் கண்களில் கண்ணீர். அனைவரின் மனமும் நெகிழ்ந்து, நிறைந்திருந்தது.

# பகுதி – 5.

என் நேசங்கள் மட்டுமல்ல

என் நேரங்களும்......

உயிரே உனக்காக.........

தந்தை பேசியதைக் கேட்ட யுவாவின் மூளை அதிவேகமாகச் சிந்திக்க, அவனுக்கு எதுவுமே நினைவுக்கு வராமல், இருக்கும் இடமும், தன் நிலையம் குழப்ப, என்ன நேர்கிறது என்று அறியும் முன்பே மயங்கிச் சரிந்தான்.

“யுவா......”, கங்கா நொடியில் அவனைத் தாங்க முயல, அவனது கனம் தாங்க முடியாமல், அப்படியே நிலத்தில் சரிந்தார். ஈஸ்வரன் ஓடிவந்து இருவரையும் தாங்கி நிறுத்தியவர், கங்காவை விலக்கிவிட்டு, யுவாவை படுக்கையில் கிடத்தினார்.

அவசரமாக படுக்கையின் அருகில் இருந்த தண்ணீரை எடுத்து யுவாவின் முகத்தில் தெளித்தார். மயக்கத்தில் இருந்து விழித்தவன் மலங்க மலங்க பார்த்தான்.

கங்காவோ தன் முந்தானையால் அவன் முகத்தைத் துடைத்தவர், “என் புள்ளை எனக்கு உயிரோட வேணுங்க...., அவன் இப்படியே இருந்துட்டு போகட்டும்...., அவன் என்னோடவே இருந்துட்டா எனக்கு அதுவே போதுங்க....”, இப்பொழுதெல்லாம் கண்ணீர் மட்டுமே அவர் துணையாக இருந்தது.

ஈஸ்வருக்குமே மகனை அப்படிப் பார்க்க கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் கம்பீரமாக வளைய வந்த மகனை, அதே கம்பீரத்தோடு பார்க்கவேண்டும் என்று அந்த தந்தை மனம் விரும்பியது.

ஆனால் கங்காவோ, தன் மகன் தன் அருகில் இருந்தாலே போதும் என்று ஆறுதல் அடைய முயன்றது. மகனின் நிலையம், கங்காவின் கண்ணீரும் அவரைக் கரைக்க மேலே எதுவும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்துவிட்டார்.

மீண்டும் நாட்கள் அதே ரீதியில் கடக்க, ஈஸ்வரால் கார்மெண்டை தனியாக நடத்த முடியாமலும், போட்டி நிறுவனங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமலும் தவித்தார். அன்றும் வீட்டில் பெரிய யுத்தமே நடக்க, யுவா பார்வையாளனாக மட்டுமே இருந்தான்.

அதைப் பார்த்து இன்னும் வெகுண்டார் ஈஸ்வர், “இவனுக்கு இதே வேலையா போச்சு. இப்போ என்ன ஆனாலும் சரி, அவன் நாளைக்கு கார்மெண்டுக்கு வாரான் அவ்வளவுதான்”, சிங்கமென கர்ஜித்துவிட்டு, அங்கிருந்து அகன்றார்.

வீராவேசமாகப் பேசிவிட்டாலும், மகனது நிலை அவரையும் நிறையவே கலவரப் படுத்தியது. தானும் கலங்கினால் குடும்பம் நிலை குலைந்துவிடும் என்பதை உணர்ந்தவர், மகனது தற்போதைய நிலையை மறந்துவிட்டு, அவனது எதிர்காலத்துக்காக என்று தன்னையே சமாதானம் செய்துகொண்டார்.

அத்தோடு நிறுத்தாமல், தங்கள் குடும்ப டாக்டருக்கு அழைத்தார். அந்தப்பக்கம் அழைப்பு எடுக்கப்பட்டு, “என்னடா இந்த நேரத்தில்...., யுவாவுக்கு ஏதாவது.....?”, கொஞ்சம் அவசரமாகக் கேட்டவர், பாதியிலேயே நிறுத்தினார்.

அப்பொழுதுதான் நேரத்தைப் பார்த்தார் ஈஸ்வர். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. “சாரிடா...., நான் டைம் பாக்கவே இல்லை. நீ தூங்கு, நாம காலையில் பேசிக்கலாம்...”, நேரத்தைப் பார்த்து, பேச்சை பாதியிலேயே முடிக்க முயன்றார்.

“அதான் போன் பண்ணிட்டியே, என்னன்னு சொல்லு....”, ரவிச்சந்திரன் ஊக்கினார்.

“என்னத்தடா சொல்லச் சொல்லுற...., முழுசா நாலு மாசம் ஓடிடுச்சு. வீட்டுக்கு வந்தே ஒரு மாசம் ஆச்சு. இந்த ரூமை விட்டு வெளியவே வர மாட்டேங்குறான்.

“ரொம்ப வற்புறுத்தினால், அந்தத் தோட்டம் வரைக்கும் போறான். பேசுறது..., அவன் அம்மாகிட்டே மட்டும்தான். அதுவும் அவ நூறு கேள்வி கேட்டால், ஒரு வார்த்தையில் பதில் சொல்லுறான். இதெல்லாம் என்னன்னு புரியவே இல்லடா...

“எப்படி இருந்தவன்..., அவனை இப்படிப் பார்க்க.....”, இதுவரை போட்டிருந்த கடுமையான முகமூடி பொய்த்துப் போக, குரல் தழுதழுத்து, அழுகையில் அவர் தேகம் குலுங்கியது.

“ஈஸ்வர்...., டேய்...., அழறியா....? இப்போ என்ன ஆயிடுச்சுன்னு இப்படி அழற....? எல்லாம் சரியாப் போய்டும். பத்து நாள் கோமாவில் இருந்து, மூளை செத்துப் போச்சுன்னு எல்லோரும் முடிவு செய்து, கைவிட்டுப் போக இருந்தவன் யுவா.

“அவன் நமக்குத் திரும்பக் கிடைத்ததே பெரிய விஷயம். அதை நினைச்சு சந்தோசப் படாமல்...., நான் என்ன நினைக்கிறேன்னா..., அந்த பத்து நாள் கோமாவில்தான், அவனோட நினைவுகளில் ஏதோ பாதிப்பு ஏற்பட்டிருக்கு.

“அதை சரி செய்ய ஒரு சைக்காலஜிஸ்ட்டை பார்க்கலாம்னு நான் சொன்னால், நீங்கதான் ஒத்துக்க மாட்டேன்னு சொல்லுறீங்க”, நண்பனைத் தேற்ற முயன்ற அதே நேரத்தில், அவர்களது தவறையும் சுட்டிக் காட்ட முயன்றார்.

“நீ சொல்லுறது எனக்குப் புரியாமல் இல்லை ரவி. ஆனால் ஏற்கனவே அவனுக்கு ஆக்சிடண்ட் ஆனப்போவே, பிசினஸ் வட்டாரத்தில், இனிமேல் நான் தலை நிமிர முடியாது, நான் அவ்வளவுதான் என்ற ரீதியில் பேசினாங்க.

“அப்படிப் பேசியவங்க எல்லாம், கொஞ்சம் அடங்கியதே, யுவா அதில் இருந்து மீண்டு வந்ததால் தான். அப்படியிருக்கும்போது, நீ சொல்லுற மாதிரி ஏதாவது சைக்காலஜிஸ்ட்டைப் பாத்தால், அவன் பயித்தியமாயிட்டான்னு முடிவே பண்ணிடுவாங்க.

“என்னால் அதைத் தாங்கவே முடியாது ரவி. என் பையன் அப்படி ஒரு பேர் கேக்குறதுக்கு, இப்படியே இருந்துட்டு போகட்டும்…”, ஒரு தந்தையாக, தன் மகனது எதிர்காலம் பெரிதாகத் தெரிந்தது அவருக்கு.

“இதுதாண்டா உங்ககிட்டே எல்லாம் பிரச்சனை. சைக்காலஜிஸ்ட்டைப் பாத்தால் பயித்தியமா…? உடம்புக்கு வியாதி வந்தால், டாக்டரைப் பாக்குற மாதிரி, மனசுக்கு வியாதி வந்தால் அதையும் பாக்கணும். அதை விட்டுட்டு…, இப்படி சாக்கு சொல்லக் கூடாது”, ஒரு பெருமூச்சை வெளியேற்றியவர்,

“சரி அதெல்லாம் விடு…., இப்போ எதுக்கு இந்த அர்த்த ராத்திரியில் போன் செய்த அதைச் சொல்லு…”, தற்போதைய பிரச்சனைக்குள் வந்தார்.

“யுவா மயக்கம் போட்டு விழுந்துட்டாண்டா….”, இதைச் சொல்லும்பொழுதே அவர் குரல் உடைந்தது.

“ஈஸ்வர்…, அவன் உடல்நிலைக்கு இந்த மயக்கம் எல்லாம் சாதாரணம். அதான் எப்போதும் அவனோடவே யாராவது இருங்கன்னு சொல்லி இருக்கேனே. அது சரி…, இப்போ எதுக்கு திடீர்ன்னு மயக்கம்….”, பிரச்சனைக்குரிய காரணத்தை அறிய முயன்றார்.

“அதில்லடா…., நாளைக்கு கார்மெண்டுக்கு வந்தே ஆகணும்னு சொன்னேன்…, கொஞ்ச நேரம் எதுவுமே சொல்லலை. திடீர்ன்னு…”, தான் கட்டாயப் படுத்தியதாலேயே இந்த மயக்கம் என்பதால், அவர் குரல் தேய்ந்து மறைந்தது.

ஈஸ்வரின் குரலின் தன்மையிலேயே அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்தவர், “என்னடா…, அவனை வந்தே ஆகணும்னு கட்டாயப் படுத்துனியா. நான் எவ்வளவுதான் சொன்னாலும் நீ கேக்க மாட்ட. சரி அதெயெல்லாம் விடு….

“அவனை கார்மெண்டுக்கு வரச் சொல்லுறியே…, அங்கே அவனுக்குத் துணைக்கு யாரை அனுப்பப் போற…?”, ஒரு மருத்துவராக அவன் உடல் நிலையிலேயே கவனமாக இருந்தார்.

“உன்கிட்டே நான் இவ்வளவு நேரம் என்ன சொல்லிட்டு இருக்கேன். அவன் தனியா இருந்து பழகவே வேண்டாமா? இப்போ வீட்டுக்குள்ளேயே, அவன் அம்மா காவல் இருக்குற மாதிரி,

வெளியேயும் ஒரு ஆளா..? வேற வினையே வேண்டாம்…”, தன் ஆட்சியபனையைத் தெரிவித்தார்.

“உன்கிட்டே இதுதான் எனக்கு பிடிக்காத விஷயம் ஈஸ்வர். அவனோட மனநிலைக்கு…., அவன் இப்போ பச்ச குழந்தை மாதிரி. எல்கேஜி போற பையனை, எம்பியே கிளாஸ்ல உக்கார வச்சால்.., அவனுக்கு என்ன தெரியும்?

“இப்பவும் சொல்லுறேன்…, அவனுக்கு எதுவுமே ஞாபகம் இருக்காது. சோ எ டு இசட் சொல்லிக் கொடுக்க, அவன் கூடவே ஒரு ஆள் இருக்கணும். அதே நேரம் அவங்க நம்பிக்கையானவங்களாகவும் இருக்கணும். அப்படி ஒரு ஆள் யாருன்னு நீதான் முடிவு செய்யணும்.

“என்னால் இப்போதைக்கு இவ்வளவுதான் சொல்ல முடியும். அதை விட்டுட்டு, தும்பை விட்டு வாலைப் பிடிக்கலாம்னு நினைக்காமல், எல்லாம் ஆராய்ந்து முடிவெடு. அவன் கௌரவம் எவ்வளவு முக்கியமோ.., அதை விட அவன் உயிர் நமக்கு முக்கியம்”, கண்டிப்பாகச் சொன்னவர், இதற்குமேல் முடிவு உன் கையில் என்பதுபோல் அலைபேசியை வைத்துவிட்டார்.

அலைபேசியை அணைத்த ஈஸ்வர், தன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடை பயின்றார். அவரது அவ்வளவு அலைச்சலில், அவர் நினைவுக்கு வந்தவள், அஷ்மிதா தான்.

அஷ்மிதா வேறு யாரும் இல்லை, யுவாவுக்கும் அவளுக்கும் திருமணம் செய்ய பெரியவர்கள் விரும்பி இருந்தார்கள். ஆம் விரும்பினார்கள், ஆனால் அது முடியாமலே போய்விட்டது. அஷ்மிதா, யுவாவுடன் நெருங்கிப் பழகினாள். ஆனால் யுவா அவளைத் திரும்பியும் பார்த்தது இல்லை. எனவே அவள் விலகிவிட்டாள்.

ஆனால் இப்பொழுது இருக்கும் யுவா, அவளை வெறுக்க மாட்டான் என்று எண்ணினார். எனவே அந்த இரவு வேளையிலும் தன் பிசினஸ் பார்ட்னர், நண்பன் ராகவனுக்கு போன் செய்தார்.

அகால வேளையில் ஒலித்த அலைபேசியை, அரை உறக்கத்தில் எழுந்து எடுத்தார் ராகவன். அதில் ஒளிர்ந்த எங்களைப் பார்த்தவர், யோசனையோடே அமர்ந்திருந்தார்.

அவர் அப்படி அமர்ந்திருக்கவே, “என்னங்க போன்பாட்டுக்கு அடிச்சுட்டு இருக்கு. அதை கையில் வச்சுட்டு என்ன தூங்கிட்டு

இருக்கீங்க?", கணவனை உலுக்கவே, யோசனையைக் கலைத்துவிட்டு அலைபேசியை ஆன் செய்து செவிமடுத்தார்.

"என்ன ஈஸ்வர்..., இந்த நேரம்....?", கொஞ்சம் பதட்டமாகவே கேட்டார்.

ராகவனின் பதட்டம் உணர்ந்து, "ராகவா..., எனக்கு கொஞ்சம் அவசரமா, அத்தியாவசியமா உன்கிட்டே பேச வேண்டி இருந்தது அதான்....", தயக்கமாகவே சொன்னார்.

"அப்படியா...?", கேட்டவர், மனைவியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, படுக்கையறையில் இருந்து வெளியேறினார்.

நண்பர்கள் இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வர முடியாமல், தன் மகள் அஷ்மியின் அறைக்கதவைத் தட்டினார்.

"எஸ் டாடி....", மகளின் தெளிவான குரலிலேயே, அவள் இன்னும் உறங்கவில்லை என்பதை உணர்ந்தவர், அறைக்கதவைத் தள்ளிக் கொண்டு அறைக்குள் நுழைந்தார்.

அஷ்மிதா...., ஒரு மாடர்ன் மங்கை. குட்டையாக வெட்டிய தலைமுடி. வில்லாக வளைந்த புருவம், கவர்ந்திழுக்கும் கண்கள். உருண்டை நாசி, எப்பொழுதும் ஈரத்தில் பளபளக்கும் இதழ்கள்...., பார்க்கும் ஆண்கள் அனைவரையும் வசீகரிக்கும் வல்லமை உள்ளவள்.

மகள் அந்த வேளையிலும் தன் மடிக் கணினியில் வேலை செய்வதைப் பார்த்தவர், "என்னம்மா...., தூங்கலையா...? அதெப்படி நான்தான் வந்திருக்கிறேன்னு சரியா சொன்ன..?", நண்பன் அவசரத்தில் இருக்கிறான் என்பதையும் மறந்து, மகளின் செய்கையில் பூரித்தவராய்க் கேட்டார்.

"இந்த நேரத்தில் என் அறைக் கதவைத் தட்டுவது உங்களைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாதுன்னு எனக்கு தெரியும் டேட்...., சரி சொல்லுங்க..., எனி திங் இம்போர்டன்ட்....?", படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவாறு கேட்டார்.

"வந்த விஷயத்தையே மறந்துட்டேன் பாத்தியா...? ஈஸ்வர் உன்கிட்டே பேசணும்னு சொன்னான். பேசும்மா...", சொன்னவர் அலைபேசியை அவள் கையில் கொடுத்தார்.

தந்தையைக் கூர்மையாகப் பார்த்தவள், மறுக்காமல் அலைபேசியை வாங்கிக் கொண்டாள்.

“ஹொவ் ஆர் யூ அங்கிள்...? ஹொவ் இஸ் யுவா? சொல்லுங்க...”, தன்மையாக அனைவரையும் நலம் விசாரித்த பிறகு, விஷயத்துக்கு வந்த சுஷ்மியின் செய்கையில் உருகியவர், இவளைப் போய் யுவா மறுக்கிறானே என்று இருந்தது அவருக்கு.

ஆனாலும் சுஷ்மியை மருமகளாக்க தனக்கு மற்றுமொரு வாய்ப்பு வந்திருப்பதால், உற்சாகமாகவே பேச்சைத் தொடர்ந்தார்.

“நாங்க எல்லோரும் நல்லா இருக்கோம்மா..., ஒரு சின்ன உதவி....”, கேட்டவர், தனக்கு என்ன உதவி அவளிடமிருந்து வேண்டும் என்பதையும் விளக்கினார்.

இங்கே அறையிலோ யுவா தாயின் மடியில் முகம் புதைத்து, குமுறும் தன் மனதை நிலைப்படுத்த போராடிக் கொண்டிருந்தான்.

தந்தை சொன்ன, ‘நாளைக்கு கார்மெண்ட் பேக்டரிக்கு வந்தே ஆகவேண்டும்’, என்ற வாசகம் அவனை வெகுவாகக் கலங்கடித்தது.

‘எனக்கு என்ன தெரியும்...? அங்கே போய் நான் என்ன செய்ய...? அங்கே என்ன வேலை இருக்கும்...? கார்மெண்ட் என்றால் துணி என்பது வரை மட்டுமே எனக்குப் புரிகின்றது. இந்த நிலையில்....’, கண்ணீர் விழவா..., என்று அவனை மிரட்ட,

‘ச்சே..., ஆம்பளை அழக் கூடாது....’, என்ற எண்ணம் தோன்றவே, அதை அடக்கினான்.

அவனது உள்ளக் குமுறல் உணர்ந்தவர்போல், “யுவா..., நாளைக்கு நீ சும்மா ஒரு எட்டு நம்ம கார்மெண்டுக்குப் போப்பா..., அங்கே நீ எதுவுமே செய்ய வேண்டாம். எல்லாத்தையும் அப்பா பாத்துப்பாங்க. நீ தனியா எதையுமே செய்ய வேண்டி இருக்காது.

“கொஞ்சம் கொஞ்சமா கத்துக்கோ...., உனக்குத் தெரியாததை அப்பாகிட்டே கேளு. உன்னால் கேக்க முடியலையா...? இந்த அம்மாகிட்டே சொல்லு. இல்லன்னா நாளைக்கு உனக்குத் துணைக்கு யாரையாவது அம்மா அனுப்பச் சொல்லுறேன்.

“இப்போ எதைப் பற்றியும் யோசிக்காமல் நிம்மதியா தூங்குப்பா....”, அவன் சிகைக்குள் கைவைத்து அலைத்தவாறே, அவனை உறங்கவைக்க முயன்றார்.

‘உறக்கமா..., வருமா....? இப்படி குழப்பமாக ஒரு வாழ்க்கை இருக்குமா..? இது என் வீடு, என் அம்மா, அப்பா...., என் ரூம்...., எதுவுமே என்னதாகத் தெரியவில்லையே....’, குழப்பம், குழப்பம், குழப்பம் மட்டுமே மிஞ்சியது.

இப்படியான யோசனையின் உச்சத்திலோ என்னவோ..., உறக்கமா.., மயக்கமா..., என்றுத் தெரியாத நிலைக்குத் தள்ளப் பட்டான் யுவா.

ஆழ்ந்த உறக்கத்துக்குச் செல்ல, ‘நான் கார்மெண்டுக்குப் போறேன்....’, ஏதோ ஒரு பெண் குரல்...., அட்ச்சரம் பிசகாமல் அவன் செவியில் விழ, அந்தக் குரலில் இருந்த ஏதோ ஒன்றில் அவன் கவரப்பட்டான்.

அந்தக் குரல் அவன் உயிர்வரைத் தாக்கியது. அந்தக் குரலை மீண்டும் மீண்டும் கேட்கவேண்டும் என்ற வேகம் பிறந்தது. தான் உறக்கத்திலேயே இருக்க வேண்டும்..., விழிக்கவே கூடாது என்று அவன் உள்மனம் துடித்தது.

ஆனால் அதற்கு மாறாக..., உடல் மொத்தமும் வியர்வையில் குளிக்க, உறக்கத்திலேயே அவன் கைகள் துழாவி..., யாரையோ அணைக்கப் போராடுபவன்போல்...,துடிதுடித்துக் கண் விழித்தான்.

அவன் தன் மடியிலேயே புழுவாகத் துடிப்பதைப் பார்த்த கங்கா..., அவன் முகத்தைப் பற்றி, “என்னப்பா செய்யுது....? யுவா..., யுவா...”, தரையில் விழுந்த மீனாக, கங்கா தவித்தார்.

அவரது தவிப்பு அவன் கண்ணில் பதிந்தாலும், கருத்தில் பதியவில்லை. “நா..., நா...ன் கார்மெண்டுக்குப் போறேன்.... நான் போய் ஆகணும்..., போறேன்...”, சொன்னதையே மறுபடியும் மறுபடியும் சொன்னான்.

மகன் கார்மெண்டுக்குப் போகிறேன் என்று சொன்னதில் சந்தோசப் படுவதா...? இப்படி வியர்வையில் குளித்து, துடித்து, தவித்துப் போவதில் கலங்குவதா என்றே தெரியாமல், தன் மன வேதனைகளை, அவனிடமிருந்து மறைத்துக் கொண்டார்.

“சரி..., சரி....ப்பா....., நாளைக்கு நீ கார்மெண்டுக்குப் போ..., நான் அப்பாகிட்டே சொல்லிடுறேன் சரியா...? இப்போ எதையுமே யோசிக்காமல் தூங்க முயற்சி பண்ணுப்பா....”, தன் மகனது மனதை அலைக்கும் விஷயத்தை கண்டுபிடிக்க முடியாத தன் நிலையை நொந்தவாறே, அவனைத் தூங்க வைக்க முயன்றார்.

அதே நேரம்..., “நான் கார்மெண்டுக்கு வாரேன் அங்கிள். நானே யுவாவையும் பாத்துக்கறேன்”, ஈஸ்வரிடம் உறுதி கொடுத்தாள் அஷ்மிதா.

“நீ வாரேன்னு சொன்னதே எனக்கு ரொம்ப சந்தோசம்மா. நாளைக்கு காலையில் வீட்டுக்கே வந்துடுறியா...? அப்படியே அவனை கார்மெண்டுக்கு அழைச்சுட்டு போய்டுறியா....?”, எதிர்பார்ப்போடு கேட்டார்.

தந்தையை ஒரு பார்வை பார்த்தவள், “ஓகே அங்கிள்...”, ஒப்புதல் அளித்துவிட்டு, அலைபேசியை அணைத்து, தந்தையிடம் கொடுத்தாள்.

“என்னம்மா இதெல்லாம்....”, புரியாமல் கேட்ட தந்தையை, “நான் முடிவு பண்ணிட்டேன் டாடி....”, அஷ்மியின் ஒற்றை வார்த்தை பதிலில், அவளிடம் மேலே எதையும் கேட்காமல் வெளியேறினார்.

செல்லும் முன்னர்..., “இது உன்னோட வாழ்க்கைம்மா...”, பொறுப்பான தந்தையாகச் சொல்லிச் செல்லவும் மறக்கவில்லை.

அஷ்மிதாவோ..., “யுவா....”, என்று சொல்லிப் பார்த்து சிரித்துக் கொண்டாள். அந்தச் சிரிப்பின் அர்த்தம் அவளுக்கு மட்டுமே தெரியும்........

ஈஸ்வர் நிம்மதியாக அலைபேசியை வைத்தவர், மகனது அறையை வந்து எட்டிப் பார்க்க, கங்காவின் மடியில் தலை வைத்து, யுவா உறங்கிக் கொண்டிருக்க, கங்கா கட்டிலில் சாய்ந்து அமர்ந்தவாறு தூங்கிக் கொண்டிருந்தார்.

மனைவி அப்படி அமர்ந்தவாறு உறங்குவது அவருக்குக் கஷ்டமாக இருக்க, மெதுவாக அவரை நெருங்கியவர், அவரை எழுப்பிச் சொல்ல, “நீங்க போங்க..., நான் பாத்துக்கறேன். நாளைக்கு கார்மெண்டுக்கு வரேன்னு சொல்லிட்டான். உங்களுக்கு இப்போ சந்தோசம் தானே...”, மகன் தூக்கம் கெட்டுவிடக் கூடாதே என்று குரலைத் தாழ்த்தி, கோபமாகச் சொன்னார்.

மனைவியின் பிடிவாதம் அறிந்து, “ரெண்டு தலையணையாவது முதுகுக்கு அணைவா வச்சுக்கோ....”, ஆதரவாகச் சொல்லிவிட்டு, மகனையும் ஒரு பார்வை பார்த்தவர் வெளியேறினார்.

அடுத்தநாள் முதல் வாழ்க்கை அவர்கள் அனைவரையும் எந்தப்பக்கம் இழுத்துச் செல்லும் என்று அறியாமலேயே

அனைவரும் அந்த இரவைக் கழித்தார்கள்.

# பகுதி – 6.

உனக்காக வாழ்கையில்

உலகமே அழகாய்.........

நீயின்றிப் போனால்

நிழல் கூடப் பகையாய்........

ஒன்பது வயதில் துவங்கிய தேவியின் மீதான, சரவணனின் அக்கறையும் கவனிப்பும், சிறுகச் சிறுக வளரத் துவங்கியது. ஒன்பது வயது காதல் வரும் பருவம் இல்லைதான். ஆனால் அந்த வயதிலேயே சரவணனுக்கு அக்கறை வந்திருந்தது.

அது தாய் சொன்ன வார்த்தையால் வந்ததா...? இல்லை ஆயா சொன்ன..., ‘இவ உன் பொண்டாட்டி’, என்ற வார்த்தையால் வந்ததா....? இல்லையென்றால்..., பூக்குவியலாக ஒரு குழந்தையைப் பார்த்து, அதன் மழலையிலும், இவள் எனக்கானவள் என்ற உரிமையில் வந்ததா..? என்பது அவனுக்கேத் தெரியாது.

ஆனால் தேவிதான் தனக்கு எல்லாமும் என்பதும், அவளுக்குத் தான் எல்லாமுமாக இருக்க வேண்டும் எனவும் விரும்பினான். அவளது தேவைக்காக, பத்து ரூபாய்க்கானத் தேடலில் துவங்கிய அவனது உழைப்பு, முன்னெச்சரிக்கையாக மாறிப் போனது.

சரவணன் படிப்பில் அவ்வளவு கெட்டி இல்லை. அந்த கிராமத்தில் வேலை வாய்ப்புகள் பெரிய அளவில் இருந்ததும் இல்லை. விவசாயத்தை மட்டுமே நம்பியிருந்த கிராமம் அது.

தேவியின் அம்மா, அப்பா, ஆயா, தாத்தா முதல், சித்தப்பாமார் அனைவருமே விவசாயக் கூலிகளாகத்தான் இருந்தார்கள். தேவி ஒரே பெண் வாரிசு என்பதால் மிகுந்த செல்லம். எவ்வளவு செல்லம் என்றாலும் தேவி சமத்தாகவே இருந்தாள்.

வீட்டு நிலை அறிந்தவள்போல், தேவையில்லாமல் எதற்கும் அடம் பிடிக்க மாட்டாள். அவளது சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே சரவணன் வேலைக்குச் செல்லத் துவங்கினான்.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் பொழுதே, சைக்கிள் கடையில் பஞ்சர் ஓட்டும் வேலைக்குச் சென்றான். அவர் கொடுக்கும் இரண்டு ரூபாய் கூலியும் அவனது உண்டியலிலேயே சேரும். அத்தோடு வார இறுதி நாட்களில், பெரிய வீட்டில் இருக்கும் எந்த வேலை என்றாலும் செய்வான்.

அவர்களுக்கு விறகு பொறுக்கிக் கொடுப்பது, அவர்கள் தோட்டத்தில் தேங்காய் வெட்டினால், அதை ஒரு இடத்தில் சேர்ப்பது, வயலில் களையெடுத்தால்...., அந்தக் களைகளைத் தூரமாகக் கொண்டுபோய் போடுவது, பண்ணையார் வயலில் இருந்தால், அவர்க்கு இடையிடையே காஃபி, சாப்பாடு கொண்டு செல்வது, என எந்த வேலையையும் சுணங்காமல் செய்தான்.

கிடைக்கும் காசு அனைத்தையுமே, தேவிக்காக என்றே எடுத்து வைத்துக் கொள்வான். தனக்காக அவன் எதையும் செய்வதே கிடையாது. ருக்கு அதை ஆதரிக்கவே செய்தார். அதைவிட மகன் இப்பொழுதே தேவியின் மேல் உயிராய் இருப்பதைக் கண்டு பெருமிதம் கொண்டார்.

அத்தோடு ஒரு பொறுப்பை அவன் இப்பொழுதே ஏற்றிருப்பது, உழைக்கத் தயங்காத அவனது தன்மை, என அனைத்தையும் கண்டு வியந்தார். தேவி ஒன்றாம் வகுப்பில் அடியெடுத்து வைத்த பொழுது செம்புராஜ் மூன்றாம் வகுப்பும், சரவணன் ஆறாம் வகுப்பும் படித்தார்கள்.

மூவரும் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். செம்புராஜ் தேவியிடம் கேட்டுக் கொண்ட விஷயம் ஒன்றே ஒன்றுதான். அவனைப் பள்ளியில் வைத்து சித்தப்பா என அழைக்கக் கூடாது என்பதுதான் அது. அதற்காக அவன் தேவிக்கு லஞ்சம் கொடுக்கக் கூட தயாராக இருந்தான்.

அது பெரிதாக ஒன்றுமில்லை, ஸ்லேட்டில் எழுதும் குச்சியோ, சாக்பீசோ.., என்றாவது ஒருநாள் ஜவ்வு மிட்டாய் என லஞ்சம் கொடுப்பான். அறியாத வயது என்பதால், தேவியும் அதை சந்தோசமாகவே வாங்கிக் கொண்டு, அவனை செம்பு என்று கூப்பிடவும் செய்வாள்.

வழக்கமாகவே அவள் அப்படிக் கூப்பிடுவதால், வீட்டில் இருப்பவர்களுக்கு சந்தேகம் எதுவும் வரவில்லை. ஆனால் அன்று பள்ளியில் வைத்து, செம்புராஜ் அவளுக்கு மிட்டாய் கொடுப்பதைப் பார்த்த சரவணன் அவளிடம் என்னவென்று கேட்க, தேவி அனைத்தையும் அவனிடம் சொல்லிவிட்டாள்.

சரவணனுக்கு மிகுந்த கோபம்...., அவள் கையில் இருந்து மிட்டாயை, வெறுப்பாய்ப் பார்த்தவன், “உனக்கு என்ன வேணும்னாலும் என்கிட்டே தானே கேக்க சொல்லி இருக்கேன். நீ எதுக்கு அவன் கொடுத்த மிட்டாயை சாப்பிட்ட, இப்போ உனக்கு நான் வேணுமா இல்ல இந்த மிட்டாய் வேணுமா...?”, கோபமாகக் கேட்டான்.

இதுவரை சரவணன் அவளிடம் அதிர்ந்து கூட பேசியது கிடையாது. எப்பொழுதும் அவளை தோளில் தூக்கிக் கொண்டே ஊர் சுற்றுபவன், இன்று கோபமாகப் பேசவே, தான் செம்புராஜிடமிருந்து மிட்டாய் வாங்கிச் சாப்பிட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்டாள்.

அத்தோடு நான் வேணுமா..., இல்லை மிட்டாய் வேணுமா என்று கேட்டவுடன்...., கொஞ்சம் கூட யோசிக்காமல் அவள் கையில் இருந்த மிட்டாயைத் தூக்கி கீழே போட்டாள்.

அவள் அப்படிச் செய்யவே..., சரவணனுக்கு அப்படி ஒரு கொண்டாட்டம். தேவி தன்னை விட்டுக் கொடுக்காமல் இருந்ததில் அவ்வளவு சந்தோசம். நொடியில் வீட்டுக்குச் சென்றவன், தன் உண்டியலில் இருந்து காசு எடுத்துவந்து, உடனடியாக இரண்டு மிட்டாய் வாங்கிக் கொடுத்தான்.

அத்தோடு நிறுத்தாமல், செம்புராஜிடம் இனிமேல் அவளுக்கு எதையும் வாங்கிக் கொடுக்கக் கூடாது என சண்டையும் போட்டுவிட்டான். செம்புவுக்கு எப்படியோ அவன் வேலை சுலபமானத்தில் பெருத்த சந்தோசமே. எனவே சரவணன் திட்டியதை பெரிதாகவே அவன் நினைக்கவில்லை.

நாட்கள் மாதங்களாகக் கடக்க, மாதங்கள் வருடங்களைக் கடந்தது. சரவணன் இப்பொழுது பத்தாம் வகுப்புக்குச் சென்று கொண்டிருந்தான். தேவி நான்காம் வகுப்பு. சரவணனுக்கு ஓரளவு விவரம் அனைத்தும் தெரியும் வயது. ஆனால் தேவி இன்னும் குழந்தை தான்.

தேவியை தன் சைக்கிளில் வைத்து பள்ளிக்கு அவன்தான் கூட்டிச் செல்வான். அவன் வகுப்புத் தோழர்கள் கிண்டல் செய்வதை அவன் பொருட்படுத்தவே மாட்டான்.

“என்னடா மாப்பிள...., பொண்டாட்டியை ஸ்கூலுக்கு கூட்டி போற போல...”, கேலி செய்யும் அவர்களை, ஒரே பார்வையில்

அடக்கிவிடுவான். அவன் யாருக்காகவும் எதற்காகவும் தன்னை மாற்றிக் கொள்ளவே இல்லை.

“மாமா..., எனக்கு மாங்கா வாங்கித் தாறியா...”, ஒரு நாள் தேவி அவனிடம் கேட்க,

“நீ கிளாசுக்குப் போ..., மாமா சாயங்காலம் உனக்கு மாங்கா வாங்கித் தாறேன்...”, சொன்னவன் அவளை அனுப்பிவிட்டு, பெரியவீட்டம்மாவிடம் நேராகச் சென்றான்.

“என்னலேய் சரவணா..., பள்ளிக் கூடத்துக்குப் போகாம இங்கன என்னவே செய்யிற...?”, லஷ்மியம்மா குரல் உயர்த்த,

“அம்மா ஏதாவது வேலை இருக்குங்களா...?”, தலையைச் சொறிந்தவாறே கேட்டான்.

“நான் என்ன கேக்கேன்..., நீ என்ன பதில் சொல்றவ...?”.

“அதோ..., அங்கன கிடக்க தொண்டு(தேங்காய் தொண்டு) எல்லாம் எடுத்து விறகு மேல அடுக்கட்டுமா...?”, அவர் கேள்விக்கு பதில் சொல்லாமல், காரியமே கண்ணாக இருந்தான்.

“ஓஹோ..., ஐயாவுக்கு இன்னைக்கு எம்புட்டு காசு வேணும்...? சேத்து வச்ச காசெல்லாம் அதுக்குள்ளையா செலவழிச்சுட்ட..?”, அவனை நம்பாத பார்வை பார்த்தார்.

“இன்னைக்கு காசு வேணாம்....”, சின்னக் குரலில் சொன்னான்.

“ஐயாவுக்கு வேற என்ன வேணும்...”, சிரிப்பாய்க் கேட்டார்.

“ரெண்டே ரெண்டு மாங்கா தாறீங்களா....?”, கண்களில் ஆர்வம் மின்னக் கேட்டான்.

“ரெண்டு மாங்கா தானே வேணும்..., அதை மரத்துல பறிச்சுக்கோ..., உன்னை யார் என்ன சொல்லப் போறா...? அதுக்கு எதுக்குலே இம்புட்டு தயக்கம்....? வேலை செய்ய வந்துட்டான்... இப்போ நீ பத்தாப்பு தானே...? ஒழுங்கா போய் படிக்கிற வேலையைப் பாரு போ...போ...”, அவன் கேட்டதைக் கொடுத்து அனுப்பினார்.

“நன்றிங்கம்மா...”, சொன்னவன், நொடியில் அருகில் இருந்த மரத்தில் ஏறி, இரண்டு மாங்கைகளைப் பறித்துவிட்டு, பள்ளிக்கு

ஓடினான். அது கிராமப் பள்ளி ஆதலால்..., அவ்வளவாக கண்டிப்பு கிடையாது. சொல்லப்போனால் பிள்ளைகள் வருவதே அவர்களுக்குப் பெரிது.

அங்கு பத்தாம் வகுப்புவரை இருந்தாலும், மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை நூற்றைம்பதுக்குள் அடக்கிவிடலாம். பள்ளிக்குச் சென்றவன், இடைவேளை வரைப் பொறுத்திருந்து, இடைவேளையில் தேவியிடம் மாங்கைகளைக் கொடுத்தான்.

“ஐ...., ரெண்டு மாங்காவா...?”, கண்களை அகட்டிக் கேட்டவள், அவன் கைகளில் இருந்து ஒன்றைப் பறித்து, அப்படியே கடித்துச் சாப்பிட்டாள். அவள் சாப்பிடுவதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் சரவணன்.

இப்படியாக அவளது சின்னத் தேவைகள் முதல், பெரியத் தேவைகள் வரை அனைத்தையும் சரவணன் நிறைவேற்றினான்.

கிராமத்தில் யாரும் அவ்வளவாக செருப்பு அணியும் பழக்கம் கிடையாது. அதற்கு ஒரே காரணம் தான், வயலிலோ, வரப்பிலோ நடக்கும் வேளையில் செருப்பணித்தால்..., வழுக்கும் என்பதாலேயே.

ஆனால் லஷ்மியம்மாவின் மகள் செருப்பணிந்திருந்ததைப் பார்த்த தேவி, அதை ஆர்வமாகப் பார்க்க, அதைப் பார்த்த சரவணன் அடுத்த வாரமே, நாற்பது ரூபாய் செலவழித்து, அவளுக்கு செருப்பு வாங்கிக் கொடுத்து, வீட்டிலிருந்த அனைவரின் கண்டனத்துக்கு ஆளானான்.

அப்பொழுது தேவி ஆறாம் வகுப்பும், சரவணன் பன்னிரண்டாம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தார்கள். சரவணன் அரும்பு மீசையும், குரலும் தான் ஒரு ஆண்மகன் ஆகிவிட்டோம் என்ற மாறுதலோடும் இருந்தது.

“என் பொண்டாடிக்கு நான் வாங்கித் தந்தேன்..., உங்களுக்கு என்ன...?”, பெரியவர்களை எதிர்த்துப் பேசுகிறோம் என்ற குற்ற உணர்வில், தலையைத் தாழ்த்திப் பேசினாலும், அதில் இருந்த பிடிவாதமும், இறுக்கமும் பெரியவர்களை மூக்கின்மேல் விரல் வைக்கச் செய்தது.

“ஏண்டா ராசா...., இப்போ இது தேவையா...? ஒத்தையா, ரெட்டையா..., முழுசா நாப்பது ரூவா.... அவள இப்படியே வளக்க முடியுமா...? நம்ம நிலைமை தெரிஞ்சு அவளும் நடக்கணும்....

இன்னைக்கு நாப்பது ரூபாயில் நிக்கிறது, நாளைக்கு நாநூறாகும், அது நாலாயிரம் ஆகும்..., யானை சாணி போடுதுன்னு...., ஆட்டுக்குட்டி அதுகிட்டே போட்டி போடக் கூடாது ராசா...., நாப்பது ரூபா..., உங்க வீட்டில் நாலு நாள் வெஞ்சனம் வைக்க, காய் வாங்க உதவியிருக்கும் இல்ல...”, தங்கள் வாழ்க்கை முறையை அவனுக்குப் புரிய வைக்க முயன்றார்.

“அதெல்லாம் என் அப்பன், ஆத்தா பாத்துப்பாங்க..., என் தேவியை நான்தானே பாத்துக்கணும்...”, பிள்ளையின் பிடிவாதம் அவனிடம்.

“கோட்டி கணக்கா பேசாதலே...., அவ என்ன பெரிய மவராணியா...? செருப்பு இல்லாமல் நடக்க மாட்டாளோ...? விரலுக்குத் தக்கன வீக்கம் வேணும் ஆமா....”, அந்த வீட்டின் நாலாவது மருமகள் பொறாமையில் பொரிந்தாள்.

அந்த வீட்டுக்கு இப்பொழுது ஐந்து மருமகள் வந்து விட்டார்கள். அனைவருக்குமே ஆண் குழந்தைகள் தான். எனவே தேவி அந்த வீட்டில் முடிசூடா ராணியாக இருப்பதில், இயற்கையான பொறாமை உணர்வு அந்த வீட்டு மருமகள்களுக்கு இருந்தது.

பிரச்சனை பெரிதாவதை உணர்ந்த மாரிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. சரவணன் வாங்கி வந்த செருப்போ, கேட்பாரற்று தனியாகக் கிடந்தது. தேவிக்கு அந்தச் செருப்பு பிடித்திருந்தாலும், அதனால் வீட்டில் ஒரு பிரச்சனை என்பதால் அமைதியாகவே இருந்துவிட்டாள்.

அந்தே நேரம் அங்கே வந்த ருக்குவோ...., “இப்போ என்ன..., என் மவன், அவன் பொண்டாட்டிக்கு எதுவும் வாங்கிக் கொடுக்கக் கூடாதா...? இவ்வளவு நாள் அவன் தானே அவளைப் பாத்துகிட்டான். இப்போ மட்டும் என்ன....?

“அண்ணே..., நீ சொல்லு..., எம் மவன் அவளுக்கு செய்யலாமா கூடாதா...?”, தன் உரிமையை நிலை நாட்டும் இடமாகக் கருதினாள் ருக்கு. எனவே அந்தப் பிரச்சனையை விடத் தயாராக இல்லை. அதைவிட அந்த வீட்டுக்கு வந்த மற்ற மருமகள்கள், புகைச்சலைக் கிளப்புவதிலேயே குறியாக இருந்தார்கள்.

எனவே முன்பு தேவி பிறந்த பொழுது, சரவனனுக்குத்தான் அவள் என்று பேசிய பேச்சு, இன்றும் அப்படித்தான் இருக்கிறதா... என்பதை அவளுக்கு அறிந்தே ஆகவேண்டும்.

வேலப்பனோ...., "அதான் அவ பொறந்த அன்னைக்கே உன்ற மருமகன்னு சொல்லிட்டனே..., இதை யாரும் மாத்த முடியாது...", சுற்றி இருந்த அனைவரையும் பார்த்து சொன்னவர்,

"தாயி..., செருப்பை எடுத்து வையாத்தா....", தேவியிடம் குரல் கொடுத்தார். மற்ற ஓரகத்திகள் மோவாயைத் தோளில் இடித்துவிட்டு நகர்ந்துவிட்டார்கள். ருக்கு சந்தோசப் பட்டதை விட, சரவணன் தான் அதிகமாக சந்தோசப் பட்டான்.

கூட்டம் அனைத்தும் கலைய, "நான் உங்க கிட்டே செருப்பு வேணும்னு கேக்கவே இல்லையே மாமா...", தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

"உனக்கு புடிச்சிருக்குல்ல....", அவன் குரலில் இருந்த இறுக்கத்தில், "ரொம்ப புடிச்சிருக்கு மாமா...", வேகமாகப் பதில் சொன்னாள்.

இப்படியாக உரிமைப் போராட்டங்களோடு நாட்கள் கடக்க, பன்னிரண்டாம் வகுப்பில் எண்ணூற்றி சில்லறை மதிப்பெண்களில் தேர்ச்சி பெற்றான் சரவணன். மேலே என்ன படிக்கவென்று தெரியாமல் விழி பிதுன்கினான்.

அதைவிட தனது படிப்பு, தன் வாழ்க்கைக்கு ஒளி விளக்காகவும், உபயோகமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினான். அத்தோடு அந்த கிராமத்தை விட்டு வெளியே எங்கேயும் செல்ல முடியாது என்பதிலும் உறுதியாக இருந்தான்.

அத்தோடு அவனுக்கு விவசாயத்தைத் தவிர எதுவும் வராது என்பதும் அவனுக்குத் தெரிந்தே இருந்தது. வழிகாட்ட யாரும் இல்லாமல் தவித்து நின்றான் சரவணன்.

"ஆத்தா..., நானும் இப்படி கூலியாளாவே இருந்துருவேனா....? அப்போ தேவியை எப்படி நான் நல்லா வச்சுக்க முடியும்....? அவளை வயல்ல இறக்க என்னால் முடியாது ஆத்தா...? அப்படி அவ வயல்ல இறங்கினால்...., நான் இருக்க மாட்டேன் ஆத்தா...", அவன் அடி மனதின் பயத்தை, தாக்கத்தை, தாயிடம் இறக்கி வைத்தான்.

ருக்கு மனம் வெதும்பினார்.... அவருக்குமே என்ன செய்வது என்று தெரியவில்லை. தன் கணவனிடம் சொல்லிப் புலம்பினார். சண்முகம் அமைதியாகக் கேட்டுக் கொண்டார். சண்முகம் மிகுந்த உழைப்பாளி. அதே நேரம் மிகுந்த பொறுப்பும் மிக்கவர்.

மனைவி, மகனின் வேதனையை அறிந்த பிறகு அவரால் அமைதியாக இருக்க முடியவில்லை. அந்த ஊரிலேயே அடைக்கலாமாகச் செல்லும் இடம் ஒன்றுதான்..., பெரியவீடு...., மகனையும், மனைவியையும் அழைத்துக் கொண்டு லஷ்மியம்மாவிடம் சென்றார்.

இவர்கள் அனைவரின் பேச்சைக் கேட்ட லஷ்மியம்மாவின் மகள், “அப்போ சரவணனை விவசாயமே படிக்க வைங்க...., பக்கத்து டவுன்ல தானே காலேஜ்..., தினமும் போயிட்டு வரலாம்...., குத்தகைக்கு ஏதாவது நிலம் பாத்து, நீங்களே விவசாயமும் பாருங்க....”, சுலபமாக வழி சொல்லிவிட்டாள்.

சரவணன் அதையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ருக்குவுக்குத்தான் மனம் கிடந்தது அடித்துக் கொண்டது. படிக்க வைக்கவும் பணம் வேண்டும், குத்தகைக்கு பிடிக்கவும் பணம் வேண்டும்..., என்ன செய்ய என்று கலங்கினார்.

வீட்டுக்கு வந்து தன் சேமிப்பு முழுவதையும் தந்தையின் கரத்தில் கொடுத்தான் சரவணன். அதில் பெரிதாக என்ன இருந்துவிடப் போகிறது என்று அவர்கள் நினைக்க, ஐந்தாயிரம் ரூபாய்க்கு அதிகமாக வைத்திருந்தான் சரவணன்.

லஷ்மியம்மாவே அவர்களது ஒதுக்குப்புறமான ஒரு இடத்தை குத்தகைக்குத் தர ஒத்துக் கொள்ள, அக்கம் பக்கம் புரட்டியும், மாரி, வேலப்பன், என அனைவரின் உதவியாலும், சரவணன் கல்லூரிக்கும், குத்தகைக்கு இடத்தையும் வாங்கிவிட்டார்கள்.

குத்தகைக்கு வாங்கிய இடத்தில், வாழை வைத்தார்கள். வெண்டை, கத்தரி, கீரை என ஊடுபயிர் போட்டு, சிறப்பாக விவசாயமும் நடக்கத் துவங்கியது.

சரவணன் முயன்று படித்தான். அவனுக்கு பிடிபடவே செய்யாத ஆங்கிலத்தைக் கூட, முடிந்த அளவு கற்றுக் கொண்டான். தங்கள் நிலத்தில் போடும் பயிருக்கு ஏற்ற உரம், இயற்கையாவே இருக்குமாறு பார்த்துக் கொண்டான்.

தங்கள் வகுப்பு ஆசிரியர்களிடம் எந்த சந்தேகம் என்றாலும் கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்டான். அவன் கல்லூரிக்குச் செல்லும் கட்டிளம் காளையாக மாற, தேவியோ இன்னும் மொட்டாகவே இருந்தாள்.

தேவி ஒன்பதாம் வகுப்புக்குச் செல்ல, சரவணன் கல்லூரியின் இறுதி ஆண்டில் இருந்தான். குழந்தையாக இருந்த பொழுது தேவியைத் தோளில் தூக்கிக் கொண்டு உலா வந்தான். கொஞ்சம் வளர்ந்த பிறகு, அவள் கை கோர்த்து நடந்தான்.

கல்லூரிக்குச் சென்ற பிறகு இளமைக்கே உரிய சில எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், என அனைத்தையும் உணரத் துவங்கினான். அதிலும் சிறு வயதுமுதல், தேவியை மனைவி என்று ஆழ்மனதுவரைப் பதித்து விட்டான்.

கல்லூரியில் சக மாணவர்கள் பெண்களை சைட் அடிக்கும்பொழுது, அவன் ஒதுங்கிச் சென்று விடுவான். ஆனால் வீட்டுக்கு வந்தால் அவன் பார்வை தேவியை நாடும். அவள் சின்னப் பெண் என்று மனதுக்குப் புரிந்தாலும் அவன் வயதுக்குப் புரியவில்லை.

இப்படியிருக்கும் வேளையில்தான் தேவி பத்தாம் வகுப்புக்குச் சென்ற பிறகும் பூப்படையாதது அவர்கள் குடும்பத்தில் பெரிய குறையாகவே இருந்தது. இதுவே அவர்கள் வீட்டின் சந்தோசத்தை, நிம்மதியைக் குலைத்தது.

# பகுதி – 7.

காற்றோடு கலந்துவிட்ட உன்னை

சுவாசிக்க முயல்கிறேன்

உயிரே உனக்காக..........

காலையில் கண் விழித்த வானதிக்குத் தான் இருக்கும் இடம் புரியவே சிறிது நேரம் தேவைப் பட்டது. கண்களைத் திறந்தாலே, அணை உடைக்கவா என கண்கள் கேள்வி கேட்டது.

இதில் இருந்து எப்படி வெளியேற என அவளுக்கு சத்தியமாகத் தெரியவில்லை. அதைவிட ஏன் வாழ்கிறோம் என்ற கேள்வியே பெரிதாக எழுந்து அவளை வதைத்தது.

“என்னால முடியலையே....?”, வாய்விட்டுக் கதறிய வானதியை, சட்டென தன் பக்கம் இழுத்து, தன்

வயிற்றோடு அணைத்துக் கொண்டாள் வீணா. “எனக்கு வாழ வேண்டாம்...., எதையாவது கொடுத்து என்னைக் கொன்னுடுங்களேன்.. என்னால் இந்த வலியைத் தாங்க முடியலை.

“நான் வேணும்னு சொன்னவர் ஏன் என்னை விட்டுட்டு போனார்... என்னையும் அவரோட கூட்டி போயிருக்கலாமே. அப்போ அவர் என்மேல் வைத்த காதல் அவ்வளவுதானா...? அவருக்கு எப்படி என்னை விட்டு போக மனசு வந்துது?”, சொன்னவள் இன்னும் கதறித் தீர்த்தாள்.

அவள் கண்களும் கலங்க முயன்றது. ஆனால் அதை மறைத்தவள், “உன்னால் முடியலை முடியலைன்னு சொல்லியே எல்லாம் முடியாமல் போயிட்டு இருக்கு. முதல்ல உன்னால் முடியும்னு நினை... எதையுமே யோசிக்காமல் குளிச்சுட்டு கிளம்புற வழியைப் பாரு.

“அவர் உன்னை விட்டு எங்கேயும் போயிருக்க மாட்டார். இப்போகூட உன் கிட்டே இருந்து, நீ அழுதுட்டு இருக்குறதை வேதனையா பாத்துட்டுதான் இருப்பார். உன்மேல் அவ்வளவு காதல் வைத்திருந்தவர், நீ சந்தோஷமா வாழ்வதைப் பார்க்காமல் எப்படி இருப்பார்.

“நீ இப்படி அழுதுட்டே இருந்தால் அவரோட ஆத்மா எப்படி சாந்தி அடையும்? ஒவ்வொருத்தரின் பிறப்புக்கும் ஏதாவது காரணம் இருக்கும். வந்த வேலையை முடிக்காமல் யாராலையும் இந்த உலகத்தை விட்டு போக முடியாது வானதி.

“எதார்த்தத்தை புரிஞ்சுக்க முயற்சி பண்ணு. நீ நடந்தது எல்லாத்தையும் மறக்க முயற்சி பண்ணுன்னு நான் சொல்லவே மாட்டேன். அதுக்கு பதிலா அதை ஏத்துக்க முயற்சி பண்ணு”, எப்படியாவது அவளைக் கொல்லும் இந்த நினைவுகளில் இருந்து அவளைத் திசை திருப்ப முயன்றாள்.

“அப்போ அவர் வந்த வேலை முடிஞ்சுடுச்சுன்னா சொல்லுறீங்க...? இல்லையே...., அவரோட பின்னிப் பிணைந்திருந்த என் வாழ்க்கையை, என்னோட வாழாமல்..., எப்படி அவர் வந்த வேலை முடியும்...?”, தன் உயிரைப் பிரிந்த வலியில் துடிக்கும் அவளை, கண்கொண்டு பார்க்க முடியாமல் தவித்தாள் வீணு.

வீணு எப்படிச் சொல்வாள்...., அவனுக்கு உன்னோடு வாழக் கொடுத்து வைக்கவில்லை என்று. அத்தோடு வானதியின் வாழ்க்கை வேறு ஒருவரோடு என்று இறைவன் முடிந்து வைத்திருந்தால், அதை யாரால் மாற்ற முடியும் என்று....

இதையெல்லாம் சொல்ல முடியாமல் அமைதியானவள்..., “வானதி.., இப்போ நான் கேட்பதுக்கு மட்டும் பதில் சொல்லு..., நீயும் இப்படியே இருந்து..., சாப்பிடாமல் கொள்ளாமல்..., உருக்குலைந்து..., இந்த உலகத்தை விட்டு போகத்தான் நினைக்கிறியா...?

“சரி அப்படியே நினைத்தாலும்...., உனக்காகவே உயிர் வாழும் உன் உறவுகளுக்கு என்ன மாற்று செய்யப் போறன்னு மட்டும் எனக்கு சொல்லிட்டு போ. உன்னோட பொறுப்பை நான் ஏற்கும்போது, உன்னை பழைய வானதியா இல்லன்னாலும்..., ஒரு சின்ன நம்பிக்கையையாவது கொடுத்து உங்ககிட்டே அனுப்புறேன்னு எல்லோருக்கும் வாக்கு கொடுத்தேன்.

“இப்போ என்னால் அந்த வாக்கை காப்பாற்ற முடியாது என்று நினைக்கிறேன். சோ...., நான் கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லு..., நான் என் வேலையைப் பாத்துட்டு அப்படியே கிளம்புறேன்”, அவளைவிட்டு விலகி, அவள் அருகில் இருந்த கட்டிலில் அமர்ந்துகொண்டாள்.

வானதியால் எதையுமே யோசிக்க முடியவில்லை. எனக்கு பதிலாக மாற்று உறவா...? அது எப்படி முடியும்....? ஏற்கனவே இழந்த இழப்புக்கே நொடித்துப் போனவர்கள்..., தானும் இல்லையென்றால், அவர்களும்

இந்த உலகில் இருக்க மாட்டார்கள் என்று தெளிவாய்ப் புரிந்தது.

தனக்காக வாழும் அவர்களுக்காகவாவது...., இந்த உயிரைக் காத்து ஆகவேண்டிய நிர்பந்தத்தில் இருந்தாள். தான் எழுந்து நடமாடினால் தான்..., நிலை குலைந்து போயிருக்கும் அவர்களைக் காக்க முடியும் என்ற உண்மையும் புரியவே...

மீதியிருக்கும் தன் வாழ்வை அவர்களுக்காகவாவது வாழ்வோம் என்ற எண்ணத்துக்கு வந்தாள். ஆனால் உயிரை வதைக்கும் இந்த வேதனையையும்...., உணர்வையும், உயிரையும் உருக்கும் இந்த வலியையும் சேர்ந்தே அனுபவிக்க வேண்டும் என்று எண்ணும்போது...., ஆயாசமாக வந்தது.

மூடிய இமைகளுக்குள் மீசையை முறுக்கியவாறு..., காதலாகச் சிரித்தான் அவளவன்.... அவன் இல்லை என்ற உண்மை புரிய..., கண்ணீரில் கரைக்க முயன்றாள் அந்த பிம்பத்தை.

ஆனால் அவன் பிம்பம் மறைவதற்குப் பதிலாக..., அவனோடு சேர்த்து மற்றவர்களின் பிம்பமும் தெரியவர...., அப்படி ஆகக் கூடாது என்ற வேகம் பிறக்க, கண்களைச் சட்டெனத் திறந்தாள்.

“நான் உங்களோட வாரேன்....”, கண்களில் கண்ணீர் வழிய, உதடு துடிக்க..., துடிக்கும் இதழ்களை பற்களால் அழுந்தப் பற்றியவாறு..., அழுகையை அடக்கப் போராடி அவள் சொன்ன நிலை....,

இவள் இப்படி இருப்பதற்கு..., இந்த வேதனையை அனுபவிப்பதற்கு..., ஒரேடியாக போய்விடலாம் என்ற எண்ணம் அனிச்சையாகவே வீணுவின் மனதில் தோன்றியது. சட்டென தலையை உதறி அதை விரட்டியவள்,

“இது நல்ல பிள்ளைக்கு அழகு..., சரி இப்போ போய் சமத்த குளிச்சுட்டு, பளிச்சுன்னு டிரஸ் பண்ணிட்டு வருவியாம். நாம கார்மெண்டுக்கு கிளம்பலாம்....”, வானதியின் முகத்தைத் தன் கரங்களால் அழுந்தத் துடைத்துவிட்டு, அவளை கைபிடித்து எழுப்பி, பாத்ரூமுக்கு அனுப்பி வைத்தாள்.

உயிரற்ற உடலாகத் தளர்ந்து செல்லும் அவளைக் காண்கையில் வீணுவின் நெஞ்சுக்கூடே காலியாகும் உணர்வு. ‘இப்படி இந்தப் பிள்ளையை வதைக்கத்தான், அப்படி இவள்மேல் உயிரையே வைத்திருந்தாயா...?’, மானசீகமாக வானதியின் காதலனிடம் கேள்வி கேட்டாள்.

வானதியின் சொந்தங்களால் அவள் அறிந்த விஷயங்களே அவளை இப்படி நினைக்கத் தூண்டியது. நேரமாவதை உணர்ந்து, தானும் கிளம்பச் சென்றாள்.

வீணு குளித்து தயாராகி வானதியின் அறைக்கு வர, மேக வண்ண காட்டன் சுடிதாரில் அன்று மலர்ந்த மலராக படுகையில் அமர்ந்திருந்தாள் வானதி. இப்பொழுது அவள் முகத்தில், நெஞ்சறுக்கும் வேதனைக்குப் பதிலாக, ஒருவித பதட்டமும் பயமும் குடி கொண்டிருந்தது.

வீணுவிற்கு ஒரு விதத்தில் அவளது பதட்டமும், பயமும் நிம்மதியைக் கொடுத்தது. மூளை ஒரே விஷயத்தைச் சிந்தித்து அதிலேயே உழலாமல்..., வேறு விஷயத்தை சிந்திக்கத் துவங்கினாலே வேதனையின் அளவு குறைந்துவிடும் என்பது அனுபவப் பூர்வமாக அவள் அறிந்த உண்மை ஆயிற்றே.

எனவேதான் வானதியை வேலைக்குச் செல்ல கட்டாயப் படுத்தி அழைத்தாள். அதனால் வந்த நிம்மதிதான் அது.

“வானதி..., இப்போதான் பளிச்சுன்னு இருக்க.., சரி வா டைனிங் டேபிள் போகலாம். இன்னைக்குதான் முதல் முறையா நீ அங்கே வார இல்ல. அங்கே இருக்கவங்க கிட்டே கொஞ்சம் பேச முயற்சி பண்ணு. இப்படி உம்முன்னு

இருக்கக் கூடாது இன்ன...", அவள் கைபிடித்து அழைத்துச் சென்றாள்.

"சரி மேடம்...", வானதி அனிச்சையாகச் சொன்னாள்.

"உன்னைத் திருத்தவே முடியாது....", வானதியை சாதாரணமாக பேச வைக்க முயன்றவாறே டைனிங் ஹால் வந்து சேர்ந்தார்கள்.

"குட் மோர்னிங் ஆல்..., இதுதான் வானதி...., நம்ம புது உறவு... வானதி சே ஹாய்....", காலை வணக்கத்தோடு வானதியை அறிமுகப் படுத்தியவள், வானதியையும் பேச ஊக்கினாள்.

"ஹாய் வானதி.." "ஹல்லோ...", "வெல்கம்...", இப்படி விதவிதமான அறிமுகக் குரலைக் கேட்டவள், "ஹாய்...", அங்கிருந்த அனைவரையும் தயக்கமாகப் பார்த்தவாறு, ஒரு ஹாய் மட்டும் உதிர்த்துவிட்டு வீணுவின் அருகில் அமர்ந்து கொண்டாள்.

"வாம்மா வானதி..., எப்படி இருக்க....? நல்லா தூங்குனியா...? முதல் நாள் வேலைக்குப் போவதால் பயம்மா இருக்கா...? எல்லாம் வீணு பாத்துப்பா. தைரியமா இருக்கணும் இன்ன...", தாயின் கனிவுடன் அக்கறையாகப் பேசினார் பத்மா.

"கு...குட் மோர்னிங் மேடம்... நா... நல்லா இருக்கேன்...", தட்டுத் தடுமாறி பேசினாள்.

"வானதி..., அதென்ன நானும் மேடம்..., என் அம்மாவும் மேடமா...? இது சரியா வரலையே...",

"இல்ல..., அப்படியில்ல..., அவங்க பெரிய மேடம்..., நீங்க சின்ன மேடம்...", வீணுவின் கேலி புரியாமல், படபடப்பாகச் சொன்னாள்.

"இந்த மேடத்தை எல்லாம் விட்டுட்டு, எல்லாரையும் மாதிரி அம்மா ன்னே கூப்பிடு. வீணுவை பேர் சொல்லி கூப்பிடு.

அங்கே போய் மேடம்னு சொன்னால் எல்லோரும் சிரிப்பாங்க", வாஞ்சையாக அவள் தலை கோதி சொன்னார்.

'சரி', என்பதுபோல் வேகமாகத் தலையாட்டினாள். ஒரு வழியாக ஒரே ஒரு தோசையை வலுக்கட்டாயமாக விழுங்கியவள், வீணுவோடு கிளம்பிவிட்டாள்.

அவர்கள் அனைவரும் கிளம்பி வெளியே வரவும், யுவராஜ் கார்மெண்ட்ஸ் என்ற பெயர் தாங்கிய வாகனம் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. அங்கிருந்த மூன்று நான்குபேர் அதில் ஏறிக் கொள்ள, வானதி அந்த வாகனத்தைப் புரியாமல் பார்த்தாள்.

அவள் கேள்வியை உணர்ந்து, "அது நம்ம கார்மெண்ட்ஸ்க்கு தான் போகுது.... சரி நீ வா...", வீணு தன் ஹோண்டா ஆக்டிவாவை எடுத்தவாறு அவளை அழைத்தாள்.

"அப்போ நானும் அதிலேயே போயிருப்பேனே....", சின்னக் குரலில் சொன்னாள்.

"அதெல்லாம் நான் ரொம்ப நல்லாவே வண்டியை ஓட்டுவேன்..., உன் பாதுகாப்புக்கு நான் கேரண்டி போதுமா. நீ... தைரியமா என் வண்டியில் ஏறலாம்...", வானதி சொல்ல வருவது புரிந்தும், புரியாதவள்போல் நடித்துப் பேச்சை மாற்றினாள் வீணு.

"ஐயோ அக்கா நான் அப்படிச் சொல்லலை....", பதட்டமாகக் குரல் கொடுத்தாள் வானதி.

"அட.., மேடத்தில் இருந்து அக்காவா ப்ரமோஷன் வாங்கிட்டேன் போல இருக்கு. இந்த அக்கா கூட வரதுக்கு எதுக்கு இவ்வளவு தயக்கம்..., வா நேரமாகுது....", அவளை அவசரப் படுத்தினாள்.

வானதி, வீணுவின் வண்டியில் ஒரே பக்கமாகக் கால் போட்டு அமர, "ரெண்டு பக்கமும் கால் போட்டு உக்காரு

வானதி...., அப்போதான் ட்ராபிக்ல எனக்கு ஓட்ட வசதியா இருக்கும்...", சாதாரணமாகச் சொன்னாள்.

"அக்கா..., நான்..., எனக்கு....", தனக்குப் பழக்கமில்லை என்பதைச் சொல்ல மிகுந்த தயக்கப் பட்டாள்.

"இதில் என்ன இருக்கு வானதி..., பழகிட்டா போச்சு. இல்லன்னா நான் போற வேகத்துக்கு நீ ரோட்டில் விழுந்தாலும் விழுந்துடுவ..", வீணு மிரட்ட அது வேலை செய்தது.

ஆனாலும் மிகுந்த தயக்கத்துக்குப் பிறகே அமர்ந்தாள். அவர்கள் வாகனம் கார்மெண்ட்சை நோக்கிச் சென்றது. பழக்கமில்லாத செய்கையில் வீணுவின் தோள்களை அழுந்தப் பற்றிக் கொண்டாள் வானதி.

வாழ்க்கைத் தன்னை எங்கே இழுத்துச் செல்கிறது என்பது தெரியாமலேயே கலக்கத்தோடு அமர்ந்திருந்தாள். அங்கே தன் தலையெழுத்தே மாறப்போவது அவளுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால்......

# பகுதி – 8.

என்னவளே நீயின்றி.....

என்னைவிட்டு எல்லாம்

அன்னியமாக......

"அம்மா..., இதைப் போட்டால் என்னமோ பபூன் மாதிரி இருக்கும்மா... இதைப் போட்டுட்டா நான் அங்கே போகணும்...? பேசாமல் நான் இந்த டையும் கோட்டும் இல்லாமல் போகட்டுமா...?", நூறாவது முறையாகத் தாயிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான் யுவா.

"ஏண்டா ராஜா...., இங்கே இருக்க கோட் எல்லாமே உன்னோடது தானே...., இதுக்கு முன்னாடி நீ இதைத்தானே போட்டுட்டு போன. இப்போ மட்டும் என்ன..?

நீ இப்படிப் போகலன்னாதான் எல்லோரும் வித்தியாசமா பாப்பாங்க.

“சும்மா வேண்ணா இந்த கோட்டைக் கழட்டி கையில் வச்சுக்கோ. ஆனால் இது இல்லாமல் போகக் கூடாதுடா…”, கிளிப் பிள்ளைக்குச் சொல்வதுபோல் சொல்லிக் கொண்டிருந்தார்.

“இதை எதுக்கு தண்டத்துக்கு கையில் வச்சுகிட்டு…? பேசாமல் கையிலேயே மாட்டிக்கிறேன்….”, சொன்னவன், அது கோட் என்ற நினைவே இல்லாதவன் போன்று, சாதாரண சட்டையை மாட்டுவதுபோல், அனாயசமாக மாட்டிக் கொண்டான்.

அவனது இந்த செய்கையே கங்காவின் அடி வயிற்றில் கலவரமூட்டியது. விபத்துக்கு முன்னர் இருந்த யுவா எவ்வளவு நாசூக்காக உடையைக் கையாள்வான் என்ற பிம்பமும், அதைப் போட்டுவிட்டு, கண்ணாடியில் தன்னை அழகு பார்க்கும் விதமும் வந்து போனது.

அந்த கோட்டைப் போட்டுக் கொண்டவனோ…, கண்ணாடியின் முன்னால் நின்று…, ஏதோ விசித்திரத்தைப் பார்ப்பதுபோலவும், அன்னியமாகத் தன் உருவத்தைப் பார்ப்பவன் போலவும் நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அத்தோடு இல்லாமல்…., தன் கைகளால் கோட்டை தடவித் தடவிப் பார்த்தான். மேலும் பொருந்தாத ஒன்றை போட்டிருப்பவன் போன்று, கோட்டின் கீழ் பாகத்தையும், கை பகுதியையும் இழுத்து விட்டுக் கொண்டான்.

புருவத்தைச் சுளித்துப் பார்த்தவன், “இந்த கோட் சின்னதாயிட்ட மாதிரி இருக்கு…., இது என்னோடது தானா…?” மீண்டும் முதலில் இருந்து துவங்க. சலித்துப் போனார் கங்கா.

“யுவா…., அம்மா இவ்வளவு சொல்லுறேன் இருந்தாலும் அதைக் கேக்காமல்….”, அவர் சலிப்பு குரலிலும்

வெளிப்பட, அமைதியானான் யுவா.

யுவா தன் தலையைக் கலைத்து, இடம் வலமாக முடியைக் கோத, அடுத்த இடியை மனதுக்குள் வாங்கினார் கங்கா.

“என்னப்பா இப்படி தலையை வாரிக்கிற…?”, அதிர்வு விலகாமல் கேட்க,

“போங்கம்மா…, இதுதான் சரியா இருக்க மாதிரி இருக்கு. அப்போ வேற யாரோ மாதிரி இருந்துது”, சாதாரணமாகச் சொன்னவன், தலையை வாரிக் கொண்டான்.

கங்கா வாசனைத் திரவியம் எடுத்து அவன் உடையில் தெளிக்க, “இதெல்லாம் குளிக்காதவனும், துணி துவைக்காதவனும் போட வேண்டியது. இதை எதுக்கு எனக்குப் போட்டு விடுறீங்க…?”, ஆத்திரமாகக் கேட்டு அதைப் பிடுங்கி வைத்தான்.

மகன் செய்யும் ஒவ்வொரு செயலும் கங்காவை மிகவும் பலவீனமாக்கியது. முன்பு இருந்த யுவாவுக்கும், இன்று இருக்கும் யுவாவுக்கும் ஏழு அல்ல…, எழுபது வித்தியாசங்களை அவரால் உணர முடிந்தது.

அவனது ரசனைகள், அவனது உடைத் தேர்வு, அவனது பேச்சு, அவனது நடத்தை, அவனது உணவுமுறை, அவ்வளவு ஏன் அவனது குணமே அடியோடு மாறிப் போயிருந்தது.

ஆடம்பர உடைப் பிரியனாக இருந்தவன், அடியோடு உடை விஷயத்தில் மாறிப் போனான். சாப்பாட்டை அளந்து சாப்பிடுபவன், இப்பொழுதோ அரிசி சாப்பாட்டில் அதிக நாட்டம் கொண்டான். நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுபவன், அடியோடு அதை விட்டுவிட்டான்.

எதற்கெடுத்தாலும் எரிந்து விழுபவனும், வேலை ஒன்றே குறிக்கோள் என்று நடந்து கொள்பவன், அமைதியே உருவாகவும், வேலை என்ற ஒன்றையே மறந்தவனாக மாறிப் போனான்.

யாரையுமே நெருங்க விடாமல், தாய் தந்தையைக் கூட ஒரு அளவுக்குமேல் சேர்க்காமல் இருந்தவன், இன்றோ...., தன் அருகில் மட்டுமே அமைதி அடைந்தான். தந்தை என்ன சொன்னாலும் அதை எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேச மறுத்தான்.

இதையெல்லாம் அந்தத் தாயின் உள்ளம் மனதில் இருத்திக் கொண்டது. மகனது மாற்றங்கள் ஒரு விதத்தில் பிடித்திருந்ததும் ஒரு காரணம். ஆனால் தொழிலைப் பற்றிய அவனது மாற்றம் அவருக்கு கவலையை அளித்தது.

முன்பு தொழில் மட்டுமே பிராதானம், ஊன் உறக்கம் எதுவும் இல்லாமல் பணத்தைத் துரத்திக் கொண்டு ஓடிய பொழுது எவ்வளவு தவித்தாரோ, அந்தத் தவிப்போடு ஒப்பிடுகையில் இந்தக் கவலைக் கம்மியாகவே இருந்தது.

ஒரு வழியாக யுவாவைக் கிளப்பிக் கொண்டு கீழே வரும்பொழுது, அங்கே டைனிங் ஹாலில் இருந்த அஷ்மிதாவைப் பார்த்து அவரது அகமும் முகமும் மலர்ந்து போனது.

அதே நேரம் இப்பொழுது அஷ்மிதாவை யுவா என்ன சொல்வானோ என்றக் கவலையும் எழுந்தது. அதே கவலையோடு யுவாவைப் பார்த்தவர், “யுவா ராஜா...., கொஞ்சம் அமைதியா இருப்பா..., இந்த அம்மாவுக்காக செய்வ தானே...”, அவனைக் கெஞ்சலாகப் பார்த்துக் கேட்டார்.

‘இதைவிட அமைதியாக என்னால் இருக்கவே முடியாது. ஏற்கனவே பலவித குழப்பத்தில் இருக்கேன்..., இதில் இவங்க வேற பூடகமா பேசுறாங்க...’, குழம்பத் துவங்கிய மனதை அடக்கியவன், தாயிடம் ‘சரி’, என்பதாகத் தலையை அசைத்தான்.

அவனது அந்த ஒப்புதலே அந்தத் தாய்க்குப் போதுமானதாக இருந்தது. மகனை விட்டுவிட்டு,

அஷ்மியிடம் நெருங்கியவர், “அஷ்மிதா..., எப்படிம்மா இருக்க...? இந்த அத்தையை மறந்துட்ட பாத்தியா...?

“இங்கே வந்து எவ்வளவு நான் ஆகுது. நீ இந்த வீட்டுக்கு மருமகளா வந்தாலும் இல்லன்னாலும்..., எப்பவும் நீ எனக்கு பொண்ணு மாதிரிதாண்டா. எது எப்படியோ...., இப்போவாவது இந்த அத்தையை பாக்கணும்னு தோணிச்சே...

“எனக்கு ரொம்ப சந்தோசம்...”, நீண்ட நாட்களுக்குப் பிறகு அஷ்மிதாவைப் பார்ப்பதால், தன் வயதையும் மீறி உற்சாகமாகப் பேசினார். அவளிடம் பேசினாலும் பார்வை என்னவோ மகனையே சுற்றி வந்தது.

ஆனால் யுவாவோ அஷ்மிதா என்ற ஒருத்தி அங்கே இருப்பதையே கண்டுகொள்ளாமல், நேராக ஹாலில் இருந்த சோபாவில் சென்று அமர்ந்துகொண்டான்.

அவனது செய்கையை திகைப்பாய்ப் பார்த்தாள் அஷ்மிதா. அவனது இந்தச் செய்கையை எதிர்பார்க்கவில்லை என்பதை அவளது முகம் அப்படியேக் காட்டியது. ஆனாலும் அதை நொடியில் சம்மாளித்தவள்,

“உங்களுக்குத் தெரியாதா ஆன்ட்டி..., நேத்து அங்கிள் தான் கால் பண்ணி கூப்பிட்டாங்க. யுவாவின் ஹெல்ப்க்கு...., ஆனால்....”, அவள் பார்வை யுவாவைத் தழுவி மீண்டது.

“ஓ..., அப்படியா...? என்கிட்டே அவர் சொல்லவே இல்லையே. அதென்னவோம்மா..., இந்த விபத்துக்குப் பிறகு யுவா ஆளே அடியோடு மாறிட்டான்... நீ எதுவும் தப்பா நினைக்காதம்மா”, மகனின் செய்கையை நியாயப்படுத்த முடியாத சங்கடம் அவர் குரலில் தெரிந்தது.

அதைப் புரிந்துகொண்டவள்போல்...., “விடுங்க ஆன்ட்டி...., எனக்கு யுவாவைப் பற்றித் தெரியாதா...?”, பேச்சு

அவரிடம் இருந்தாலும்..., பார்வை யுவாவையே ஆராய்ந்தது.

கங்கா சொன்னபொழுது தெரியாத மாற்றம்..., அவன் அமர்ந்திருக்கும் விதம் பார்த்துப் புரிந்தது.

யுவாவின் அமர்வில் எப்பொழுதும் ஒரு அலட்சியமும், செருக்கும், நிமிர்வும் கலந்திருக்கும். ஆனால் இப்பொழுதோ..., ஏதோ அடுத்த வீட்டில் அமர்ந்திருப்பவன் போல, சோபாவின் நுனியில் அமர்ந்து, ஷூவைப் போட்டுக் கொண்டிருந்தான்.

அவனைப் புதிதாகப் பார்ப்பதுபோல் வெறித்துப் பார்க்கவே, கங்கா பேசிய எந்தப் பேச்சுமே அவள் காதில் விழவில்லை.

அவள் நிலையைக் கண்ட கங்காவுக்கு கவலைத் தோன்றியது. ஏற்கனவே ஒரு முறை திருமணப் பேச்செடுத்த பொழுது, அஷ்மிதா தனது டேஸ்டுக்கு ஏற்றவள் இல்லை என்று வன்மையாக மறுத்துவிட்டான்.

அஷ்மிதாவோ அவனோடு நன்கு பழகவே முயன்றாள். ஆனால் என்ன காரணம் என்றே சொல்லாமல் அவன் அவளை விலக்கி நிறுத்தினான். அஷ்மிதாவும் அவனை விட்டு விலகிவிட்டாள். இப்பொழுது மீண்டும் அவள் வந்திருக்கிறாள்...., என்ன ஆகுமோ என்ற கவலை பிறந்தது.

முடிவு நன்றாக இருந்தால் அவருக்கு அதைவிட மகிழ்ச்சி தரும் விஷயம் வேறு எதுவும் இருக்கப் போவதில்லை. அதை விட்டு..., பழைய நிலையே தொடர்ந்தால்..., மீண்டும் ஒரு ஏமாற்றத்தை அவளுக்கு அளிக்க அவர் விரும்பவில்லை.

எனவே அவளைக் கலைக்கும் பொருட்டு...., அவள் தோளை மெதுவாகத் தட்டியவர், “யுவா இப்போ முன்னே மாதிரி இல்லை...”, தன் மகனைப் பற்றித் தானே எப்படிக் குறை சொல்வது என்று நிறுத்திவிட்டார்.

ஆனால் அதை உணர்ந்துகொள்ளாத அஷ்மிதாவோ..., "பாத்தாலே தெரியுது ஆன்ட்டி...", அவள் பார்வையின் பொருள் இன்னதென்று கங்காவுக்குப் புரியவில்லை.

நிலைமையை எப்படிச் சம்மாளிக்க என்றுத் தெரியாமல் கையைப் பிசையும் வேளை அங்கே வந்தார் ஈஸ்வர்.

"யுவா....", மகனை அழைக்க, அந்த அழைப்பு செவியிலே விழாதவன்போல், ஷூ போடுவதிலேயே கவனமாக இருந்தான்.

மறுபடியும் அழுத்தி அழைக்கவே நிமிர்ந்து பார்த்தவன், ஒட்டாத பார்வையோடு அவர்களை நெருங்கினான்.

"என்ன யுவா..., அஷ்மிதா வந்திருக்கா...., வான்னு ஒரு வார்த்தை சொல்லாமல் இருக்க...", அவனையே அழுத்தமாகப் பார்த்தவாறு கேட்டார்.

'நான் எதுக்கு அவளை வரவேற்கணும்...?', தந்தையைத் தயங்காமல் பார்க்க, அவருக்குத்தான் சங்கடமாக இருந்தது.

'வாயைத் தொறந்து பேசுறானா பாரு...., சின்னப் பையனா இருந்தால் நாலு அறை விடலாம். தோளுக்குமேல் வளந்து நிக்கும் இவனை என்னதான் செய்யிறது...? அவனுக்கு உதவி செய்யத்தான், இவளை வரச் சொல்லி இருக்கேன். அது புரியாமல் எப்படி நிக்கிறான் பாரு....', மனதுக்குள்ளேயே மகனை வசை பாடினார்.

கணவனின் கோபம் புரிந்தவர்போல்..., "யுவா..., அஷ்மிதா வந்திருக்கா..., அவளை நீ பாக்கலையா...?", கங்காவின் பார்வை மகனிடம் கெஞ்சியது.

'என்னதான் நடக்குது இங்கே...? இருக்குற பிரச்சனையில்...', மனதுக்குள் அலுத்தவன், தாயின் வார்த்தையும் பார்வையும் சொல்ல வருவது புரிய...

“வாங்க அஷ்மிதா...”, அவளை நேராகப் பார்த்து வரவேற்றான்.

அவனது வாங்க என்ற அழைப்பே அங்கிருந்த அனைவரையும், ஒவ்வொரு விதத்தில் தாக்கியது.

கங்கா திகைக்க, ஈஸ்வர் பல்லைக் கடிக்க, அஷ்மிதாவின் முகம் சுருங்கி விரிந்தது. அனைவரின் முக மாறுதல்களைப் பார்த்தவன், “என்னமா...?”, தாயிடம் கேள்வி கேட்டான்.

“பின்ன என்னப்பா..., அஷ்மியை வாங்கன்னு சொல்லுற...., எப்பவும் அவளைப் பேர் சொல்லித்தானே கூப்பிடுவ... அதான்....”, மகனுக்கு மறைமுகமாகச் சொன்னவர், மீதியை அவன் யூகத்துக்கே விட்டார்.

“ஓ..., அவ்வளவு தானா...., வா அஷ்மி....”, அவனது அழைப்பு ஒரு சம்பிரதாய அழைப்பாகவே இருந்தது. அதில் நன்குத் தெரிந்தவரை அழைக்கும் ஒரு உரிமை உணர்வு குறைவது, அங்கிருந்த அனைவருக்குமே தெரிந்தது.

ஈஸ்வருக்கு இதை இப்படியே விட மனமில்லாமல், தன் அழைப்புக்கு இணங்கி வந்திருக்கும் அஷ்மி அவமானப்படுவது பிடிக்காமல், “யுவா..., அஷ்மிதா தெரிஞ்சவ மட்டும் கிடையாது..., அத்தோடு....”,

“அங்கிள்....”, அஷ்மிதாவின் அழைப்பு அவரைத் தேக்கியது.

கங்காவோ அப்பொழுதுதான் இழுத்து வைத்திருந்த மூச்சை வெளியிட்டார்.

ஈஸ்வர் அவளைப் பார்க்க, அஷ்மிதாவோ அவரைப் பார்த்து சிரித்தாள். அவளது சிரிப்பில் அவரால் கலந்துகொள்ள முடியவில்லை. அவர்களது மௌன பாஷையை ஒரு பார்வையாளனாகப் பார்த்துக் கொண்டிருந்தான் யுவா.

தன் தந்தை எதையோ சொல்ல வந்ததும், அதை அஷ்மிதா தடுத்ததும் தெளிவாகத் தெரிந்தது. ‘ஆனால் அப்படி என்ன முக்கியமான உறவு அவள்.....’, அவன் மூளையைக் கசக்கி யோசித்தும் என்ன உறவு என்பது அவனுக்குப் புரியவே இல்லை.

“சரி சரி...., வாங்க சாப்பிடலாம்.....”, அவன் யோசனையைக் கலைத்தது கங்காவின் அழைப்பு.

சாப்பிட அமர்ந்த யுவாவின் தட்டில் இட்லி வைக்கப்பட, அதை ஆச்சரியமாகப் பார்த்தாள் அஷ்மிதா. பொதுவாக யுவா சப்பாத்தி, பிரட், ஓத்ஸ் இந்த மாதிரி உணவுகளைத்தான் அதிகம் விரும்பி அவள் பார்த்திருக்கிறாள்.

அதற்கு முக்கியக் காரணம் உடம்பை பிட்டாக வைத்திருக்க வேண்டும் என்ற அவன் நினைப்புதான். என்னவோ இன்றைய யுவா அவளுக்கு முற்றிலும் புதியவனாகத் தெரிந்தான்.

அவனது இந்த மாற்றமே சுவாரசியத்தைக் கொடுத்தது அவளுக்கு. ஒரு வழியாக சாப்பிட்டு முடித்தவுடன், இருவரும் சேர்ந்து அலுவலகம் கிளம்பினார்கள்.

“யுவா நானும் உங்க காரிலேயே வந்துடவா...?”, கேட்டவாறு அவளது கைப் பையை எடுத்துக் கொள்ள, யுவா அசையாமல் அங்கேயே இருந்தான்.

“நீ என்னோடவா...., எங்கே....?”, கேள்வி அவளிடம் கேட்டவாறு தாயைப் பார்க்க, அவரோ தனக்கு எதுவும் தெரியாது என்று தலையை அசைத்தார்.

கங்காவும் யுவாவும், ஈஷ்வரைப் பார்க்க, “யுவா..., அஷ்மிதா கொஞ்ச நாளைக்கு உனக்கு உதவி செய்ய உன்னோட இருந்தால் நல்லா இருக்கும்னு நான்தான் வரச் சொன்னேன். அவளும் ஒத்துகிட்டா..”, யுவாவுக்கு சுள்ளென்று கோபம் தலைகேறியது.

ஆனாலும் அஷ்மிதாவின் முன்னால் அதைக் காட்ட மனமில்லாமல், அடக்கிக் கொண்டு பேசாமல் நின்றான்.

கங்கா வந்து அவன் கையை அழுத்தி அவனைச் செல்லுமாறு செய்கை செய்ய, கொஞ்சம் கூட சலனமே இல்லாமல் அப்படியே நின்றான்.

அஷ்மிதா நிலைமை உணர்ந்து அங்கிருந்து வெளியேற, “என்னடா...?”, ஈஸ்வர் கர்ஜித்தார் அவனிடம்.

“ஒரு பொண்ணோட என்னை...., என்னால் முடியாது...”, உள்ளடக்கிய கோபத்தில் வந்து விழுந்தன வார்த்தைகள்.

“அவஒண்ணும் ஏதோ ஒரு பொண்ணு கிடையாது. ஏற்கனவே உனக்கு பாத்து வச்சிருக்க பொண்ணுதான்...”, அவர் வார்த்தையை விட, கோபத்தின் உச்சிக்கே சென்றான் யுவா.

“என்ன சொன்னீங்க..., எனக்கு பாத்து வச்சிருக்க பொண்ணா...?”, கடித்த பற்களுக்கிடையில் வார்த்தையைத் துப்பியவன், அவரை உறுத்து பார்த்துவிட்டு வெளியேறினான்.

வெளியேறியவன் அங்கே நின்றிருந்த அஷ்மியைப் பார்த்தவன், தன் கோபம் முழுமையையும் தனக்குள் அடக்கினான். ஆனாலும் அவன் முகமோ கோபத்தில் ஜொலித்தது. அதைப் பார்த்து ஒரு நிமிடம் அஷ்மி திகைத்தாள்.

“நானும் உங்களோட உங்க காரிலேயே வாரேன்....”, அவள் பதிலை எதிர் பாராமல், அவளது கார்க் கதவைத் திறந்து ஏறி அமர்ந்துகொண்டான். இது கனவா நினைவா என்று அறிய முடியாத திகைப்பில் காரைக் கிளப்பினாள் அஷ்மிதா.

# பகுதி – 9.

பருவம் வந்த பின்னால்

பார்க்கும் பார்வைகள்

அனைத்தும் புதுமையாய்

உணரும் உணர்வுகள்

அனைத்தும் உரிமையாய்......

சரவணனின் படிப்பும், விவசாய வேலையும் சுமுகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. அன்றாடங்காச்சிகள் என்ற நினையில் இருந்து, நடுத்தர வர்கத்துக்கு முன்னேறினர்.

தேவியை இப்பொழுது முழுவதுமாக சரவணன் தான் பார்த்துக் கொண்டான். அவளது தேவைகள் எதுவாக இருந்தாலும் அனைத்தையும் அவனே கவனித்தான்.

அவன் வாலிப முறுக்குடன் இருக்க, தேவி பத்தாம் வகுப்பில் அடியெடுத்து வைத்த பிறகும் மலராமல், மொட்டாகவே இருப்பது பெரிய விவாதத்துக்குரிய விஷயமாக இருந்தது.

வீட்டின் ஒரே பெண் வாரிசு...., ஆசையாகவும், ஆயிரம் கனவுகளோடும் சுமந்த மகள், மலராமல் இருப்பதில் மாரி, வடிவு, வேலாயுதம், ருக்கு என அனைவருமே மிகுந்த கவலை கொண்டார்கள்.

அது கிராமம் என்பதால்...., தேவியின் விஷயம் பெரிய விஷயமாகவே கிசுகிசுக்கப் பட்டது. விசேஷ வீடுகளுக்கு மாரி, வடிவு செல்லும்பொழுது, துக்கம் விசாரிப்பவர்கள் போல் கேட்டுச் சென்றார்கள்.

திருமணத்துக்குப் பிறகு, “உன் மகளுக்கு எதுவும் விசேஷம் இல்லையா”, என்று கேட்பதுபோல், “என்ன உம்மவ இன்னும் வயசுக்கு வரலியா...?”, என கேட்டார்கள்.

கேட்பவர்கள் சாதாரணமாக கேட்கிறார்களா...? துக்கம் விசாரிக்கிறார்களா...? புரணி பேசுகிறார்களா என்றே தெரியாமல் குழம்பிப் போனார்கள்.

“இந்த சாமிக்கு வேண்டிக்கோங்க...”,

“இந்த சாமியாரைப் போய்ப் பாருங்க...”,

“ஆஸ்பத்திரிக்கு போய்ப் பாத்தீங்களா....? என்ன சொன்னாங்க...?”, இப்படியான விசாரிப்புகள், அறிவுரைகள் அவர்களைத் தொடர்ந்தது.

இதில் எதுவுமே பாதிக்காதவனாக இருந்தான் சரவணன். அவனது நேசத்திலோ, அவள்மேல் இருக்கும் அக்கறையிலோ எந்தவிதமான வேறுபாடும் வரவில்லை.

குழந்தையில் அவள்மேல் இனம் புரியாத பாசம் இருந்தது. பள்ளி வயதில் சிறு அக்கறையும் கலந்திருந்தது. மேல்நிலைப் பள்ளி பயிலும்போது..., விடலைப்பருவ ஈர்ப்பும், உரிமை உணர்வும் கலந்திருந்தது.

கல்லூரி செல்லும்போது..., தேவியின்மேல் அன்பு, நேசம், அக்கறை, உரிமை, காதல்..., என அனைத்தும் கிளர்ந்தெழுந்தது. தேவி மலராமல் இருந்தாலும்..., பதினைந்து வயது மங்கைக்குரிய வளர்ச்சி அவளிடம் அபரிமிதமாக இருந்தது.

தோளில் சுமந்த அவளது மாமா..., சைக்கிளில் ஊர்சுற்றிக் காட்டிய அவளது மாமா...., அவளது தேவை எதுவாக இருந்தாலும், கேட்பதற்கு முன்பே வாங்கிக் கொடுக்கும் மாமா..., என சரவணனைச் சுற்றியே தேவியின் உலகம் சுழன்றது.

தேவி இப்பொழுது பத்தாம் வகுப்பு ஆகையால்..., பள்ளியில் மாலை ஆறு மணிவரைக்கும் வகுப்புகள் நடைபெற...., ஐந்து மணிக்கே வீட்டுக்கு வந்துவிடும் சரவணன்..., அவளை அழைத்துச் செல்ல பள்ளிக்கே வந்துவிடுவான்.

“தேவி உன் மாமாடி....”, உடன் பயிலும் மாணவிகள் கேலி செய்யும்பொழுது, அந்தக் கேலியில் சிறிதும் பாதிக்கப் பட்டதில்லை அவள்.

“ஆமா என் மாமாதான்…”, ஒருவித கர்வத்தில் சொல்லிச் செல்லும் அவளைக் காண்கையில்…, தங்களுக்கு இப்படி ஒரு மாமா இல்லையே என்று அவர்களின் வயிறு எரியும்.

இவ்வளவுக்கும் சரவணன் பெரிதாக ஒன்றும் செய்து விடுவது இல்லைதான். ஆனால் அவன் எங்கே சென்றாலும், தேவிக்காக என்று ஏதாவது ஒன்றை வாங்காமல் வர மாட்டான்.

அது சிறிய ரப்பர் பேண்டாக இருக்கலாம்…., சின்ன ஹெயர் பின்னாக இருக்கலாம்…., கண்ணாடி வலையலாகக் கூட இருக்கலாம். ஏதாவது ஒன்று அவன் கையில் இருக்கும்.

பள்ளிக்கு கலர் கலராக வளையலும், ரப்பர் பேண்டும், ஹெயர் பின்னும், வைத்துக் கொண்டுவரும் தேவியின் வருகையில், சன்னமான பொறாமை உணர்வு எழும் அவர்களுக்கு.

“எதுக்கு மாமா இதெல்லாம்….”, செல்லமாகச் சிணுங்கி கோபித்துக் கொள்வாள். ஆனாலும் தனக்காக அவன் வாங்கிவரும் பொருட்களால் அவள் மனம் சந்தோசத்தில் மிதக்கவே செய்யும்.

“ஏன் வேண்டாமா…?”, வம்பிழுக்க என்றே அவன் கேட்கும் கேள்வியில், “நான் வேண்டாம்ன்னு சொன்னேனா…?”, செல்லமாக கோபித்துக் கொள்வாள்.

அவர்கள் வீட்டில் எப்பொழுதுமே பலகாரங்கள் செய்யும் வழக்கம் கிடையாது. அப்படியே செய்வதாக இருந்தாலும் தீபாவளிக்கு மட்டுமே செய்வார்கள்.

ஆனால் அன்று பள்ளியில் ஒருத்தி பணியாரம் கொண்டு வந்திருக்க, அதன் சுவை தேவியை மிகவும் கவர்ந்தது. வீட்டுக்கு வந்தவுடன் முதல் வேலையாக தாயிடம் அதை செய்து தரச் சொல்லவே,

“என்னதாயி திடீர்ன்னு கேட்டால் வெல்லத்துக்கு எங்கே போவேன்..., ரெண்டு நாளில் செய்து தாறேன்...”, மகளை சமாதானப் படுத்தினார்.

தேவிக்குத்தான் அந்த சமாதானத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. “ஆத்தா வெல்லம் போடாமல்.., காரப் பணியாரமாவது செஞ்சு தா ஆத்தா....”, வழக்காடினாள்.

“வர வர உனக்கு ரோமப் பிடிவாதம் ஆயிடுச்சு. அதான் ரெண்டு நாளில் செஞ்சுத் தாரேன்னு சொல்லுதமில்லா...”, வீட்டில் வயிற்றுப் பாட்டுக்கே பாடுபடும் பொழுது, வாய்க்கு ருசியாக பலகாரம் கேட்கும் மகளை, தன் இயலாமையை மறைக்க கடிந்து கொண்டார்.

தன்னை கொஞ்ச மட்டுமே செய்யும் தாய், அன்று கடிந்துகொள்ளவே, கோபத்தில் சென்று படுத்துக் கொண்டாள்.

மாலையில் அவளைத் தேடி சரவணன் வரவே, முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு அவனிடம் சென்றாள்.

“என்னாச்சு..., உன் சித்தி யாராவது ஏதாவது சொன்னாங்களா...?”, பொதுவாக அவளை, அவளது சித்திமார் மட்டுமே ஜாடை பேசுவார்கள். எனவேதான் அப்படிக் கேட்டான்.

“அதெல்லாமில்ல..., என் ஆத்தாதான் வஞ்சுது...”, முகத்தை தூக்கி வைத்துக் கொண்டே பதில் சொன்னாள்.

“என்னது...., ஐத்த வஞ்சாங்களா....? நீ என்ன செஞ்சவ...?”,

“நா ஒண்ணுஞ் செய்யல..., பணியாரம்தான் கேட்டேன்...”, ரோசமாக பதில் சொன்னாள்.

சரவணனுக்கு என்ன நடந்திருக்கும் என்பது தெளிவாகப் புரிந்து போனது. “நீ எதுக்கு ஐத்தய தொல்ல பண்ணுத..., எதுன்னாலும் என்கிட்டே தானே கேக்க சொல்லி இருக்கேன்...”, அவளை கடிந்து கொண்டான்.

“பள்ளிக்கூடம் விட்டு வரும்போது உங்கள காங்கலையே..., அதான் ஆத்தாட்ட கேட்டேன்...”.

“சரி விடு..., நான் இப்போ வாரேன்...”, சொல்லிச் சென்றவன்..., அடுத்த ஒரு மணி நேரத்தில் கை நிறைய சூடான பணியாரங்களோடு அவளிடம் வந்தான்.

அவற்றை ஆசையாக வாங்கிச் சாப்பிடும் அவளை விழி அகற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நேரம் அங்கே வந்த அவளது நாலாவது சித்தியோ...., “போகாத ஊருக்கே இந்தப் பாடா...”, மோவாயை தோளில் இடித்துவிட்டுச் சென்றுவிட்டாள்.

தேவிக்குத்தான் பணியாரம் தொண்டையில் சிக்கிக் கொண்டது. மற்றவர்கள் கேலி செய்யும்பொழுது கூட, கண்டுகொள்ளாமல் சென்றுவிட முடிந்தது.

ஆனால் சொந்தச் சித்தியே தன்னை ஜாடை பேசுவதை அவளால் தாங்க முடியவில்லை. அதுவும் தன் மாமாவின் முன்பே அவளை, அவமதிப்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தாள். வாய்க்குள் சென்ற பணியாரம், தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது. அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

சரவணனுமே அவரது பேச்சில் கோபம் கொண்டான். எதுவும் சொல்ல முடியாத நிலையில் அமைதியாகி விட்டான். ஆனால் அவனால் தேவி கண் கலங்குவதை தாங்க முடியவில்லை.

“இப்போ என்னாச்சுன்னு கண்ணு கலங்குறவ...., பேசாமல் சாப்பிடு. எல்லாம் நான் பாத்துக்கறேன்...”, சிறு கண்டிப்புடன் அவளைத் தேற்ற முயன்றான்.

தேவி ஒன்றும் கைக்குழந்தை இல்லையே, சமாதானம் சொன்னவுடன் சரியாக. அவளால் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியவில்லை. தன்னிரக்கம் தொண்டையை அடைக்க, என்ன சொல்கிறோம் என்றே தெரியாமல்..., “உங்களுக்கு நான் வேண்டாம் மாமா...”,

அதைச் சொல்லும் முன்னர் கண்ணீர் கன்னங்களில் வழிந்தது.

சரவணன் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் சட்டென அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டான். ஏற்கனவே அவனது சின்னத்தை பேசியதில் கோபமாக இருந்தவன், தேவியின் பேச்சில் இன்னும் கோபம் கொண்டான்.

‘சும்மா வாய மூடுடி..., எனக்கு நீ வேண்டாம்னு முடிவு பண்ண நீ யாரு...., எனக்கு எது நல்லதுன்னு எனக்குத் தெரியும். அடிச்சு பல்லு கில்லெல்லாம் கழட்டிடுவேன்....’, இப்படியாக அவளிடம் கத்திவிட அவனுக்கும் ஆத்திரம் தான்.

இதுவரை தேவியிடம் கடிந்தோ, முகம் கறுத்தோ ஒரு வார்த்தை பேசியது கிடையாது. இப்பொழுதும் அவளை காயப்படுத்தும் தைரியம் இல்லாமல்தான், தன் கோபத்தை அடக்கியவாறு அங்கிருந்து நகர்ந்துவிட்டான்.

சரவணன் விலகிச் செல்லவே..., இன்னும் துடித்துப் போனாள் தேவி. அவனும் தன்னை ஒதுக்கி விட்டானா...? இந்த நினைவே அவளைக் கொன்று போட்டது.

தான் பேசியது தவறென்று அவளுக்குப் புரிந்ததுதான். ஆனால் அவளுக்கு வேறு வழி தெரிந்திருக்கவில்லை. வகுப்பில் இருக்கும் இருபது மாணவிகளில் அனைவரும் வயதுக்கு வந்துவிட்டார்கள். அந்த ஊரில் இருக்கும் அவள் வயது பிள்ளைகள் அனைவருமே வந்து விட்டார்கள்.

அப்படியிருக்கையில் தான் பூப்படையவே மாட்டோமா என்ற கவலை அவளை மிகவும் அலைக்கழித்தது. அப்படியிருக்கும் போது..., இன்று சரவணனும் எதுவுமே சொல்லாமல் விலகிச் சென்றுவிட, அவரும் இதைத்தான் விரும்பினாரா?

என்னை விட்டு என்று செல்லலாம் என்றுதான் காத்துக் கொண்டிருந்தாரா? அந்தக் கன்னி மனம் தவித்தது. இரண்டும்கெட்டான் பருவத்தில் இருந்ததால்,

சரவணனின் உண்மை நேசத்தை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இரவு உணவையும் உண்ண மறுத்துவிட்டு படுக்கையில் சுருண்டுகொண்டாள்.

“ஏன் தாயி...., இப்படிச் சாப்பிடாமல் வெறும் வயித்தோட இருக்கலாமா...? வளர்ற புள்ள...., எழுந்து சாப்பிடு...”, மாரி தன் பேத்தியின் பட்டினி பொறுக்க முடியாமல் சொன்னார்.

“ஆயா....”, கதறியவள், யாரிடம் தன் மனதில் இருப்பதைக் கொட்டவென்று தெரியாமல் கதறித் தீர்த்தாள். அவள் அவ்வாறு அழவே, அவள் தாய், தந்தை, தாத்தா என அனைவருமே கூடி விட்டார்கள்.

“ஏந்தாயி இப்படி அழுவுற...., யாரு என்ன சொன்னா எஞ் சாமிய..., சொல்லத்தா....”, தன் உழைத்துக் காய்ந்தக் கரங்களால் தன் பேத்தியின் தலை வருடினார்.

பதில் சொல்ல முடியாமல் அழுதே கரைந்தாள். அனைவரும் ஆளாளுக்கு ஒன்றைக் கேட்க, எதற்குமே அசையவில்லை அவள்.

“நீங்கல்லாம் போங்க..., நான் கேட்டுக்கறேன்....”, பேத்தியின் அழுகையில் இருந்த வித்தியாசம் அந்த மூதாட்டிக்குச் சரியாகப் புரிந்தது.

இத்தனை வருடம் எடுத்து வளர்த்த பேத்தியாயிற்றே..., அவள் அழுது ஓயுமட்டும், அவள் தலை கோதியவாறு அமைதியாக இருந்தவர், அவள் ஒரு நிலைக்கு வரவே, “சரவணன் ஏதாவது சொன்னானா தாயி....”, மென்மையாகக் கேட்டார்.

தன் ஆயாவின் மடியில் இருந்து விருட்டென தலை நிமிர்த்து பார்த்தவள், “மாமா என்கிட்டே பேசாமல் போய்ட்டாங்க...”, அழுகையில் உதடு துடிக்கச் சொன்னாள்.

“ஆரு..., சரவணனா....? அவன்தான் உம்மேல உசுரையே வச்சு இருக்கானே. அவன் எப்படி பேசாமல் இருப்பான்..? இரு அவன நான் என்னன்னு கேக்கேன்..., இதுக்கா அழுவுறவ.... அட கூறுகெட்டவளே, சும்மா உன்கிட்டே விளையாண்டு இருப்பான்.

“எழுந்து மூஞ்ச கழுவிட்டு வா..., நாம சோறு சாப்பிடலாம்...”, பேரன் மேலும், அவன் தேவியின்மேல் வைத்திருக்கும் காதல் மேலும் அபார நம்பிக்கை இருப்பதால் அவ்வாறு சொன்னார்.

“மாமா எம்மேல கோபமாத்தான் இருக்காங்க... எனக்குத் தெரியும்”, அழுகை முட்டியது.

“அப்போ நீதான் அவன் கோபப் படுற மாதிரி ஏதாச்சும் சொன்னியா....?”, அவளையே கூர்மையாகப் பார்த்துக் கேட்டார்.

தலை கவிழ்ந்தாள் தேவி. “அடியாத்தி..., அப்படி என்னாத்தா சொன்ன எம் பேரன் கோச்சுக்குற மாதிரி....? அந்த மவராசன் உன் கண்ணுல ஒரு சொட்டு கண்ணீர் வந்தா தாங்க மாட்டான். அவனப் போயி..., சரி என்னதான் சொன்ன...?”, சின்னப் பிள்ளை என்பதை நிரூபிக்கிறாளே என்று அலுப்பாகக் கேட்டார்.

“அது..., நானு..., மாமனுக்கு நான் வேண்டாம்னு சொன்னேன்...”,

“மாரியாத்தா....., என்ன வார்த்த சொல்லிப்புட்ட..., அவன் உனக்காகவே இருக்கவன். ஆறு வயசில் இருந்து உன்ன அவன் மனசுல சுமக்கான். நாங்க சொன்ன ஒத்த வார்த்தைக்காக உன்மேல் என்ன கருசனையா இருக்கான்...

அவனைப் பாத்து இப்படி சொல்லிப் போட்டியே. அவன் எப்படித் தாங்குவான். இப்பதான் உனக்கு நல்லது கெட்டது தெரியுது. ஆனால் அவன்..., அந்த வயசிலேயே உன்னை நெஞ்சுல சுமந்துட்டு இருக்கான்.

“பொசுக்குன்னு உன்னை விட்டுட்டு போன்னா அவன் மனசு என்ன பாடுபடும். பாவம் புள்ள..., கோவத்துல உன்னை எதுவும் சொல்லிடக் கூடாதே..., அப்படிச் சொன்னால் நீ தாங்க மாட்டியேன்னு, மனசை மறச்சுட்டு போயிருக்கான்.

“நீ எதுக்கு அப்படிச் சொன்ன...? உனக்கு மாமனைப் பிடிக்கலையா?”, தன் பேத்திக்குப் புரிய வைக்க முயன்றார்.

“எம்மாமன் நல்லா இருக்கணும்னுதான் ஆயா அப்படிச் சொன்னேன். மாமனும் பாவம் இன்னும் எத்தன நாளுதான் எனக்காக காத்துட்டு இருக்கும். எல்லாம் கேலி பண்ணுதாவ....”, உதடு அப்படிச் சொன்னாலும், அவள் உள்மனம் துடிப்பது அவளுக்கு மட்டுமல்ல, அவள் ஆயாவுக்கும் புரிந்தது.

“இப்போ என்ன ஆயிப்போச்சு..., பதினெட்டு, இருவது வயசுல கூட பெரிய மனுசி ஆவாங்க..., அப்படியே இருந்தாலும்..., உன் மாமன், உன்னைத் தவிர வேற பொண்ணை கண்ணெடுத்து பாப்பானா? அப்படியேப் பாத்தாலும், அவன் மனசு உன்னைத்தான் சுத்தி வரும்.

“இதப் புரிஞ்சுக்காமல்..., எடுத்தோம் கவுத்தோம்னு பேசி வைக்காத. நாளைக்கு உன் மாமன் கிட்டே பேசு. பாவம் அவன்..., சோறு கூட திங்காம கிடப்பான். நாளைக்கு ஞாயித்துக் கிழமை தான. காலையிலேயே அவன் தோட்டத்துக்குப் போவான்..., அவனைப் போய் பாரு.

“இனிமேல் இப்படி கோட்டி மாதிரி பேசக் கூடாது. இந்த செம்மத்துல அவந்தான் உன் புருஷன். இத மனசுல நல்லா ஏத்திக்க... இப்போ எந்திரிச்சு வா..., நீ சோறு திங்கலன்னா இங்க யாரும் திங்க மாட்டாங்க....”, அவளை வருந்தி அழைத்துச் சென்றார்.

பெற்றோருக்காகச் சாப்பாட்டை சிறிது கொறித்தவள், மாமனின் நினைவோடு படுக்கையில் விழுந்துவிட்டாள்.

எப்படியாவது அவனைச் சமாதானம் செய்யவேண்டும் என்று முடிவெடுத்தாள். அவள் ஆயா சொன்ன, இந்த செம்மத்தில் அவன்தான் உன் புருஷன் என்ற வாசகம் அவள் மனதில் அழுந்தப் பதிந்து போனது.

அந்த இனிய நினைவோடே கண் மூடினாள். இங்கே சரவணனோ, யாரிடமும் எதுவும் பேசாமல், அவர்கள் தோட்டத்து குடிசையிலேயே தங்கிக் கொள்வதாகச் சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

மனம் முழுவதும் எரிந்தது. ;எப்படிச் சொல்லிவிட்டாள்..., அவள் எனக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டாளே...., அப்படியென்றால் அவளுக்கு நானும் வேண்டாமா? அவள் மனதில் என் எண்ணமே இல்லையா?

‘நான்தான் அவள்மேல் உயிரையே வைத்து இருக்கிறேனா? அவளுக்கு நான் யாருமே இல்லையா...? இன்னும் சின்னப்பிள்ளையாகவா இருக்கிறாள்..? என் நேசம் அவளுக்குப் புரியவே இல்லையா..?

‘அவள்தான் எனக்கு எல்லாம் என்று நான் நினைக்க, ரொம்பச் சுலபமா வேண்டாம் என்று சொல்லிவிட்டாளே...’, அவன் அந்த நேரம் ஒன்றை மறந்துவிட்டான்..., அவள் அவனுக்குத் தான் வேண்டாம் என்று சொன்னதிலேயே..., அவளது நேசம் ஒளிந்திருக்கிறது என்பதைத்தான்.

அத்தோடு அவள் சின்னப் பெண்..., வாழ்க்கையின் முடிவுகளை எடுக்கும் வயதோ, முதிர்ச்சியோ அவளுக்கு இல்லை என்பதையும் மறந்தான். அதை மட்டுமா..., ஒரு நாள் அவனைக் காணவில்லை என்றாலும், ஏதாவது சாக்குச் சொல்லி, இரவிலாவது அவன் முகத்தைக் காணாமல் அவள் இருந்ததில்லை என்பதையும் சேர்த்து மறந்துவிட்டான்.

இப்பொழுது அவனது எண்ணமெல்லாம்..., அவள் தன்னை வேண்டாம் என்று சொல்லிவிட்டாளே

என்பதையே சுற்றி வந்தது. எவ்வளவு முயன்றும் அவனால் தூங்க முடியவில்லை.

தன்னை அறியாமலேயே விடியலில் உறங்கினான். இங்கே காலையில் கண்விழித்த தேவியோ..., “ஆத்தா நான் கம்மால இருந்து தண்ணி எடுத்தாறேன்...”, குரல் கொடுத்தவள், குடத்தோடு சிட்டாகப் பறந்துவிட்டாள்.

அங்கே துவங்கிய அவளது ஓட்டம் சென்று நின்றது சரவணனின் தோட்டத்தில் தான். முன்பு அவர்கள் குத்தகைக்கு வாங்கியிருந்த நிலத்தை, பண்ணையார் அவர்களுக்கே விலைக்குக் கொடுத்து விட்டார்.

எனவே அங்கே ஒரு ஓரத்தில் அவர்களுக்கென்று சிறிய குடிசை அமைத்திருந்தான். அவனுக்கு இருந்தது ஒரே எண்ணம் தான்..., தங்கள் திருமணத்துக்கு முன்பு, அங்கே சிறிய வீட்டைக் கட்டிவிட வேண்டும் என்பதுதான்.

அந்தக் காலை வேளையிலேயே வாழைக்கு நீர் கோரிக் கொண்டிருந்தான் சரவணன். மூச்சுவாங்க ஓடி வந்தவள், அவனைக் கண்டவுடன் கால்கள் துவள, இதயம் படபடக்க, என்னவோ இன்றுதான் அவனைப் புதிதாகக் காண்பவள்போல் உணர்ந்தாள்.

ஏதோ ஒரு உணர்வில் திரும்பிப் பார்த்தவன், அங்கே தேவியைக் கண்டு, ஒரு நொடி மலர்ந்தவன், அவள் நேற்று பேசிய பேச்சு நினைவிலாட, முகத்தை திருப்பிக் கொண்டு வேலையில் முனைந்தான்.

அவன் தன்னிடம் பேசுவான் என்று அவள் எதிர்பார்க்க, அவனது மௌனம் அவளைச் சோர்ந்து போகச் செய்தது. ஆனாலும் ஆயா சொன்னது மனதில் எழ, அவனை நெருங்கியவள், “மாமா....”, என அழைத்தாள்.

அவளது உயிரை உருக்கும் குரலா..., அழைப்பா..., அல்லது இவ்வளவு காலையில் அவளை எதிர் பார்க்காததால் வந்த பூரிப்பா ஏதோ ஒன்று சரவணனை வெகுவாகக் கவர்ந்தது.

அப்படியே அவன் அசையாமல் நிற்க, “பேச மாட்டீங்களா மாமா...? நேத்து தெரியாம பேசிட்டேன் மாமா....”, தவிப்பாகச் சொன்னாள்.

“இப்போ மட்டும் எப்படித் தெரிஞ்சுதாம்...?”, ஒரு இறுக்கம், அவன் குரலில்.

“ஆயா சொல்லிச்சு...”, சின்னக் குரலில் சொன்னாள்.

“அப்போ நான் உன்மேல ஆசை வச்சிருக்கதை யாராவது உனக்குச் சொன்னால்தான் தெரியுமா...? உனக்காத் தெரியாதா...? அப்போ அவங்க சொல்லலன்னா உனக்கு நான் வேண்டாம்னு போயிருப்பியா...?”, கோபத்தை அவளிடம் வெளிப்படுத்தாமல் இருக்கப் பாடு பட்டான்.

“எனக்கு நீங்க வேண்டாம்னு நான் எப்போ சொன்னேன்...?”, இதைக் கேட்கும்போதே அவள் குரல் நடுங்கியது.

“அப்போ நீ சொன்னதுக்கு என்னதான் அர்த்தம்....?”, பார்வை அவளைத் துளைத்தது.

“உங்களுக்கு நான் வேண்டாம்னுதான் சொன்னேன். எனக்கு நீங்க வேண்டாம்னு சொல்லலை...”, அவனைத் தவிர்க்க முடியாத தவிப்பும், அவனை விட்டு இருக்கவே முடியாது என்ற வலியும் தெரிந்தது அவள் பேச்சில்.

“ஓஹோ..., ரெண்டுக்கும் ரொம்ப பெரிய வித்தியாசமோ...?”, நக்கல் வழிந்தது அவன் குரலில்.

“ஆமா இல்லையா பின்ன...?”, கொஞ்சம் அழுகையாகச் சொன்னாள்.

“எங்கே அந்த வித்தியாசத்தைக் கொஞ்சம் எனக்கும்தான் சொல்லேன் தெரிஞ்சுக்கறேன்...”, அதே கோபத்தோடு அவளை நெருங்கினான்.

“பின்ன..., வயசுக்கு வராத என்னைக் கட்டிக்க முடியுமா? அப்படியேக் கட்டிகிட்டலும் என்ன சொகத்தைக்

கண்டுடுவீங்க...? எம் மாமனுக்கு எப்பவும் எந்தக் குறையும் இருக்கக் கூடாதுன்னுதான் அப்படிச் சொன்னேன்.

“நான் இப்படி இருக்குறது என் தலையெழுத்து..., உங்களுக்கு என்ன? நீங்க நல்லா இருக்கணும் மாமா....”, நேற்று அவள் சொன்ன வார்த்தையை, இவ்வளவு அர்த்தங்கள் அறிந்துதான் சொன்னாளா என்றால் நிச்சயமாக இல்லை.

ஆனால் இரவு முழுவதும் யோசித்து அவளுக்கு, தான் பேசிய பேச்சுக்கு, இந்த அர்த்தம் என்பது புரிந்ததால் தான், இவ்வளவுக் காலையிலேயே அவனைத் தேடி தைரியமாக வந்தாள். எப்படியோ.., தன் மனதில் இருந்ததை சொல்லியும் விட்டாள்.

அவள் சொல்லி முடிக்கவே..., சரவணனின் கண்களில் இதுவரை அவள் கண்டிராத ஒரு பார்வை வந்தது.

“நீ என்கிட்டே...., என் பொண்டாட்டியா இருக்குறதே பெரிய சுகம்தான். இதில் எனக்கு வேற என்ன சுகம் வேணும்...?”, அவள் கண்களுக்குள் ஊடுருவி நிதானமாக அவன் கேட்க, மொத்த தேகமும் சிலிர்த்தது அவளுக்கு.

“மாமா...”, அவன் பார்வையின் வீச்சா..., அவனது பேச்சா....? நீண்ட மாதங்களுக்குப் பிறகு உணர்ந்த அவனது நெருக்கமா..? ஏதோ ஒன்று அவள் அடிவயிற்றில் ஒரு குறுகுறுப்பை மூட்டியது.

“சொல்லு...., என்னை விட்டுட்டு நீ இருந்துடுவியா...?”, மூச்சுக்காற்று அவள் முகத்தில் விழும் நெருக்கத்தில் நெருங்கினான்.

கையில் பிடித்திருந்த குடத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். இதுவரை சரவணன் அவளிடம் இப்படி ஒரு பார்வையையோ, பேச்சையோ, நெருக்கத்தையோ உணர்த்தியது இல்லை.

தேவியால் இந்த உணர்வைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. முகத்தில் சூடாகப் பதியும் அவன் மூச்சுக் காற்றின் வெம்மையில் உருகியது அவள் தேகம். இவ்வளவு நெருக்கத்திலும் அவன் நுனி விரல் கூட அவளைத் தீண்டவில்லை.

அவளை அவ்வளவு நெருக்கத்தில் பார்த்த அவனது ஆண்மை முறுக்கேறியது. அவளது அந்தத் தவிப்பில், அவன் எதையோ உணர்ந்தான். அப்படியே அவளை அணைத்துக் கொள்ள அவன் கைகள் இரண்டும் துடித்தது.

அதைச் செயல்படுத்த முனைகையில், தேவி தனக்குள் நிகழ்ந்த மாற்றத்தை உணர்ந்தாள். சட்டென அவனிடமிருந்து விலகினாள். “வேணாம் மாமா…, நான் உடனே வீட்டுக்குப் போகணும்…”, இவ்வளவு நேரம் தன் நெருக்கத்தில் உருகியவளின் மாற்றம் அவனுக்குப் புரியவே இல்லை.

# பகுதி – 10.

நேசமதை நெஞ்சில் சுமந்து

நெருங்கிவர முயல்கையில்

நெருஞ்சியாய்த் தைத்தது

நமக்குள் பிரிவு……….

யுவராஜ் கார்மெண்ட்ஸ் என்ற பெயர்ப்பலகைத் தாங்கிய கட்டிடத்தின் முன்னர் நின்ற வானதி, அந்தக் கட்டிடத்தை கலக்கமாகவேப் பார்த்தாள். மூன்று மாடிக் கட்டிடம்…, அளவாக, அடக்கமாக இருந்தது.

சொல்லப்போனால் குடியிருப்புகளுக்கு மத்தியில் இருந்தது. நுழைவாயிலிலேயே அனைவரின் வாகனங்களும் என்ட்ரி போட்டு அனுப்பப்பட, வாசலிலேயே ஒரு பெண்மணி நின்று, வேலைக்கு வரும் மகளிரின் கைகளில் இருந்து ஒரு அட்டையை வாங்கி, என்ட்ரி போட்டுக் கொண்டிருந்தார்.

‘என் மிச்ச வாழ்வின் ஆதாரம்…’, அவளை அறியாமல் இந்த யோசனைதான் அவளைச் சுழன்றது.

அவளை அதிகம் யோசிக்க விடாமல், வீணு அவளை கிட்டத்தட்ட உள்ளே இழுத்துச் சென்றாள்.

“குட் மோர்னிங் அமுதக்கா….”, காலை வணக்கத்தை அவளுக்கு உதிர்த்தவள், “இனிமேல் உங்க வேலையைப் பாக்கத்தான் இவ வந்திருக்கா…., எல்லாம் ஒண்ணு விடாமல் சொல்லிக் கொடுங்க சரியா…”, வானதியை அவரிடம் ஒப்படைத்தவள் உள்ளே நுழைந்தாள்.

போகும் முன்னர் வானதியைப் பார்த்தவள், “எல்லாம் அமுதக்கா சொல்லுவாங்க. கவனமா கேட்டுக்கோ…, நான் டீ டைம், உன்னைப் பாக்க வாரேன்”, பளிச் புன்னகையுடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

வீணு தன்னை விட்டுச் செல்வது கலக்கமாக இருந்தாலும், எதற்கு எடுத்தாலும் அவள் நிழலில் ஒடுங்க முயலக்கூடாது என்பதால், கொஞ்சம் சிரித்த முகமாகவே அவளுக்கு விடை கொடுத்தாள்.

“உன் பேர் என்னமா…?”, அமுதா வினவவே, அவரிடம் தன் கவனத்தைச் செலுத்தினாள்.

“வானதி….”, குரலே வெளியே எழும்பாமல் பதில் கொடுத்தாள்.

“இப்படி ஊமையா இருந்தால் எல்லாம் இங்கே வேலைக்கு ஆகாது. சும்மா சவுண்டு விட்டு வேலை வாங்கணும். பிறகு ப்ரொடெக்ஷன் காட்டலன்னா நம்மளைத் தானே கேப்பாங்க…”, வந்த உடனேயே, அவள் வேலையை அவளுக்கு உணர்த்த முயன்றார்.

அவர் குரல் உயர்த்திச் சொல்லவே, மலைப்பாக அவரைப் பார்த்தாள். ‘என்னால் முடியுமா….?’, என்றக் கேள்வியும் சேர்ந்தே எழுந்தது.

அதை உணர்ந்தவள் போன்று, "இதுக்கெல்லாம் பயப்பட்டா எப்படிம்மா...? நான்தான் ஒருவாரம் உன்னோடவே இருந்து எல்லாம் சொல்லித் தந்துட்டுதான் போவேன். முதல்ல இங்கே என்ட்ரி போட்டு எல்லோரையும் உள்ளாடி அனுப்புறதுதான் முதல் வேலை.

"சரியா ஒன்பதரைக்கு உள்ளே போய், வேலை எல்லாம் துடங்கிட்டாங்களான்னு பாக்கணும். அதே மாதிரி பேசாமல், சரியா வேலை செய்யிறாங்களான்னு கவனிக்கணும் அதுதான் அடுத்த வேலை", சொன்னவரின் கரங்களோ, என்ட்ரி போடுவதை நிறுத்தவில்லை.

அவரது சுறுசுறுப்பை விழியகலாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது..., "என்ன அமுதக்கா....? துணைக்கு ஆள் பிடிச்சுட்டீங்க போல...?", கம்பீரமான ஒரு குரல் அவளது பக்கவாட்டில் கேட்கவே, விதிர்த்து நிமிர்ந்தாள் வானதி.

அவனது பார்வையோ வானதியிடம் இருந்தது. அவனது பார்வையை உணர்ந்தவளுக்கு, முள்ளின்மேல் நிற்கும் உணர்வு.

"குட் மோர்னிங் கபில் சார்..., துணைக்கெல்லாம் இல்லை. எனக்கு பதிலா ஆள் பிடிச்சிருக்கேன். நான்தான் என் மகனோடவே போய்டப் போறேனே..., அதான்....

"இவ வானதி..., வானதி, இது நம்ம மேனேஜர். சார்..., வானதி வேற யாரும் இல்லை..., வீணாம்மா சேர்த்துவிட்ட ஆளுதான். உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே...?", கேள்வியாக நிறுத்தினாள்.

"அட..., வீணு சொன்ன வானதி நீங்க தானா...? வெல்கம்..., கொஞ்ச நேரம் கழிச்சு என்னை வந்துப் பாருங்க", சொல்லிவிட்டு ஒரு தலையசைப்புடன் அங்கிருந்து நகர்ந்துவிட்டான்.

“நல்ல புள்ளம்மா….”, அமுதாவின் வார்த்தையில் நிம்மதியாக உணர்ந்தாள் வானதி.

அதன் பிறகு மேலும் பத்து நிமிடம் அங்கே செலவழித்தவர்கள், உள்ளே சென்றார்கள். அமுதா பம்பரமாகச் சுழன்று வேலை செய்வதை, கவனமாகப் பார்த்துக் கொண்டாள்.

புது இடம், புது சூழல்…., அவளது மன வலியைக் குறைக்க, கொஞ்சம் ஒத்தி வைக்க ஏதுவாக இருந்தது.

கபில் தன் கேபினுக்குச் சென்ற சில நிமிடங்களிலேயே…, வீணுவின் டேபிள் மேலிருந்த தொலைப்பேசி அலறி அதன் இருப்பை அவளுக்கு அறிவுறுத்தியது.

வீணுவின் இதழ்களில் மெல்லிய புன்னகையும், சிறு அலுப்பும் தோன்றி மறைந்தது. ‘அவன்தான்…, அவன்தான் கூப்பிடுறான்..’, தொலைப்பேசியை எடுக்க மனமில்லை என்றாலும், அதை எடுக்கவில்லை என்றால், தொல்லை நேரிலேயே கிளம்பி வந்துவிடும் அபாயம் இருந்ததால், வேகமாக அதை எடுத்தாள்.

“கேபினுக்கு வா….”, அவளது ஹல்லோ என்ற அழைப்பிற்குக் கூடக் காத்திருக்காமல் மொழிந்துவிட்டு, அதே வேகத்தில் அது வைக்கப்பட்டும் இருந்தது.

‘ம்ச்…’, மனதுக்குள் அலுத்தாலும், அழைப்பவன் மேனேஜர் என்பதால், சென்றே ஆகவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானாள் வீணு.

அவள் கையில் சில பைல்களை எடுத்தவள், முகத்தை கடுமையாக மாற்றிக் கொண்டு, பக்கத்துக் கதவை ஒற்றை விரலால் தட்டி ஒலி எழுப்பினாள்.

“வா வீணு….”, கபிலின் உற்சாகக் குரல் அவளை வரவேற்றது.

‘இவன் என்னதான் நினைச்சுட்டு இருக்கான்…? என்னமோ கட்டுன பொண்டாட்டியைக் கூப்பிடுற மாதிரி கூப்பிடுறான். இப்போ வேற யாராவதா இருந்தால் என்னதான் செய்வான்..?’, யோசனையோடு, கோபமாகக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றாள்.

தன் கையில் இருந்த பைலை பொத்தென அவன் முன் இருந்த டேபிளில் வைத்தாள். அவளது கோபம் கண்டு, மனதுக்குள் சிரித்துக் கொண்டான் கபில்.

“கோபமா இருக்கியா வீணு….?”, அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான்.

அவன் முன்பாகவே பல்லைக் கடித்தவள், “சார், நீங்க எதுக்குக் கூப்ட்டீங்கன்னு சொன்னால் பரவாயில்லை. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு…”, சார் என்ற சொல்லில் அழுத்தம் கொடுத்து கேட்டாள்.

“என்னது சாரா…?”, அவன் முகம் கூம்ப கேட்டவன், “சரி புதுசா ஏதாவது டிசைன் பண்ணுனீங்களா…?”, அவனும் வேலைக்குத் தாவினான்.

அவனது கோபம் தன்னை சிறிதும் பாதிக்காதவாறு பார்த்துக் கொண்டவள், அன்று தான் வரைந்த டிசைன்களைக் காட்டினாள். அவற்றைக் கவனமாகப் பார்த்தவன், “ரொம்ப அழகா இருக்கு…”, பார்வை அவளையே வருட, சிலாகித்துச் சொன்னான்.

அவன் சொல்லும் அழகிலேயே, அவன் எதைச் சொல்கிறான் என்பது அவளுக்குப் புரிந்து போனது. பல்லைக் கடித்தவாறே அவனை முறைத்துப் பார்த்தாள்.

“பாராட்டினால் அதை ஏத்துக்காமல் முறைச்சுப் பாக்குறதை இன்னைக்குத்தான் பாக்குறேன்…”, போலியாக அலுத்துக் கொண்டான்.

“நீங்க என் வேலையையாப் பாராட்டுனீங்க…?”, அவனிடம் நேரடியாகக் கேட்டாள்.

“வேற எதைப் பாராட்டினேன்னு நீ நினைக்கிற...?”, ஒற்றைப் புருவம் உயர்த்தி அவன் வினவ, தன் வாயாலேயே தான் சிக்கிக் கொண்டது அவளுக்குப் புரிந்தது.

ஆனாலும் அதை அவனிடம் வெளிப்படுத்தாமல், “அது சொன்ன உங்களுக்குத்தான் தெரியணும்.”, குரலில் எதையுமே வெளிக்காட்டாமல் சொன்னவள், “என்னை கொஞ்சம் மரியாதையாக் கூப்பிட்டால் நல்லா இருக்கும் சார்...

“இது நாம வேலை செய்யும் இடம். இங்கே என்னை நீங்க ஒருமையில் அழைப்பதை நான் விரும்பலை”, குரலில் கடுமையைக் காட்டிச் சொன்னாள்.

அவள் இவ்வளவு உறுதியாகச் சொல்லவே கபிலின் முகம் வேதனையைப் பிரதிபலித்தது. “ஏன் வீணு..., நமக்குள் எதுவுமே இல்லன்னா சொல்லுற....”, மென்மையாகவும், தவிப்பாகவும் கேட்டான்.

அவனது இந்தத் தவிப்பில், வீணுவின் நா உலர்ந்து போனது. ஆனால் இப்பொழுது தனது மௌனம் சரியான ஒன்றாக இருக்கப் போவதில்லை என்பது புரிய, “கண்டிப்பா இருக்கு சார்...., ஆனால் அது ஒரு மேனேஜருக்கும், ஒரு ஸ்டாப்புக்கும் இருக்கும் ரிலேஷன் தான்”, சொன்னவள் அங்கே நொடியும் தாமதிக்காமல் வெளியேறினாள்.

அவளது முதல் பாதிப் பேச்சில் விண்ணில் மிதந்தவன், அடுத்த பாதிப் பேச்சில் கோபம் கொண்டான். ‘அவளுக்கு நான், அவளுக்கு மேலே இருக்கும் ஒரு உயர் அதிகாரி மட்டும் தானா...? வேறு எதுவுமே இல்லையா...’,

‘அதானே எப்பவும் நான் மட்டும்தானே என் நேசத்தைச் சொல்லி அவள் பின்னாடியே சுத்துறேன். எப்போவாவது அவ தன் விருப்பத்தைச் சொல்லி இருக்காளா? அவ எப்பவும் தெளிவாத்தான் இருக்கா. நான்தான் லூசு

மாதிரி அவ பின்னாடியே சுத்துறேன்’, அவள்மேல் கோபம் கிளறவே, அந்த யோசனையை அப்படியே விட்டுவிட்டு வேலையைப் பார்க்கச் சென்றான்.

இங்கே அவனது அறையை விட்டு வெளியேறிய வீணுவோ..., இதுவரை பிடித்து வைத்திருந்த மூச்சை வெளியேற்றினாள். துவளத் துவங்கிய மனதை, எதைப் பற்றியும் யோசிக்க விடாமல், அவனது நினைவை அவன் கதவோடு விட்டுவிட்டு விலகினாள்.

இருவருமே தங்கள் யோசனையை உதற முயன்றாலும், நினைவுகள் அவர்களையே சுற்றி வந்தது.

இங்கே அஷ்மிதாவுடன் அலுவலகத்துக்கு வந்த யுவாவோ, அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், அவள் வழிகாட்டிய இடத்திலேயே நடந்தவன், எம்டி-யுவா, பிஈ., எம்பிஏ., என்று பெயரிடப்பட்ட அறைக்குள் அவள் நுழைவதைப் பார்த்தவன், அவளுடனே சென்றான்.

“நம்ம முதலாளி வந்துட்டார் போல....”.

“கூடவே அஷ்மிதா அம்மாவும் வந்து இருக்காங்க...”.

“அப்போ அவங்களுக்குள் இருந்த சண்டை எல்லாம் முடிஞ்சுடுச்சா?”.

“அவங்க கட்டிகிட்டா நல்லாத்தான் இருக்கும்...”.

“நல்ல ஜோடிப் பொருத்தம்...”, அந்த யூனிட்டே சலசலத்தது.

அமுதாவுமே யுவா வந்ததால் தன் கவனத்தைச் சிதற விட்டவள், யூனிட் முழுவதும் பேச்சுச் சத்தம் ஒலிக்கவே, “நீங்க உங்க வேலையைப் பாருங்க....”, அதட்டலாகச் சொல்லவே, சலசலப்பு நின்று மெஷின்கள் ஓடும் ஓசை நிறைந்தது.

வானதி பார்க்கும்பொழுது, யுவாவின் முதுகுப் புறம் மட்டுமே தெரிந்தது. அவளால் அவன் முகத்தைக் காண

முடியவில்லை. ‘இது நமக்குத் தேவையில்லாதது’, என்று மூளை உணர்த்த, வேலையில் ஈடுபட்டாள்.

அறைக்குள் நுழைந்த யுவாவோ, அந்த அறையைப் புதிதாய்ப் பார்ப்பவன் போன்று பார்த்தான். அங்கிருந்த ஆடம்பர மேசை, சுழல் நாற்காலி, முதுகின் பின்னால் சிரித்துக் கொண்டிருந்த அவனது மிகப் பெரிய புகைப்படம், அனைத்தும் புதிதாகத் தோன்றியது.

“உக்காருங்க யுவா....”, அவனது இருக்கையைக் காட்டிச் சொல்ல, தனக்கு விருப்பமில்லை என்றாலும், அந்த இருக்கையில் அமர்ந்தான். அவனது எதிரில் அஷ்மிதா அமர்ந்து கொண்டாள்.

யுவாவின் கண்கள் அலை மோதியது...., “யுவா ஆர் யூ ஓகே....”, அவனது நிலையில்லாத் தன்மையை உணர்ந்ததால் கேட்டாள்.

அவள் அப்படிக் கேட்கவே, “எனக்கு எல்லாமே புதுசா இருக்கு....”, தன் மனதில் இருப்பதை யாரிடமாவது பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற வேகம் உந்தவே, மனதை மறைக்காமல் அவளிடம் சொன்னான்.

அவனைக் கனிவாகப் பார்த்தவள், “கூல் யுவா..., நான் உங்களோடவே தானே இருக்கப் போறேன். முன்னாடி நானும் நீங்களும் சேர்ந்துதானே பாத்துட்டு இருந்தோம் இப்போ மட்டும் என்ன? ரிலாக்ஸ்...”, அவனை அமைதிப் படுத்த முயன்றாள்.

‘ஏன் எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லை....? நான் நார்மலாதான் இருக்கேனா...?’, வழக்கமான குழப்பம் அவனைத் தாக்க, அதை சம்மாளிக்க முடியாமல் தடுமாறினான்.

‘என் குழப்பங்களை யாரிடம் நான் பகிர்ந்து கொள்ள..? என் கேள்விக்கெல்லாம் யாரிடம் விடை கிடைக்கும்...?’, அந்த குஷன் இருக்கை, முள் இருக்கையாக அவனுக்கு நெருடியது.

வீட்டுக்குள்ளே இருக்கும்பொழுதே கேள்விகள் மரவண்டாக மனத்தைக் குடையும். இன்று தனக்கு கொஞ்சம் கூட ஒட்டாத ஒரு இடத்தில் சிக்கிக் கொண்ட உணர்வு. தொண்டையில் குத்திய முள்ளாக நெருடியது வாழ்க்கை.

இந்த உணர்வுகளில் இருந்து தப்பிக்க எங்கேயாவது ஓடிவிட மாட்டோமா என்று இருந்தது.

அஷ்மிதா இருக்கும் உணர்வே இல்லாமல், தன்னுணர்வுக்குள் மூழ்கிவிட்டான். ‘இங்கே நான் என்ன செய்யப் போகிறேன்...?’, நம்பிக்கையின்மை போட்டி போட்டது.

அஷ்மிதா துணைக்கிருக்கிறேன் என்று சொன்னது சுத்தமாக மறந்து போனது. தலையைக் கைகளில் தாங்கியவன் மேசையில் கையூன்றி அதில் கவிழ்ந்துகொண்டான்.

அவனது தவிப்பு, குழப்பம், வேதனையும், கலக்கமும் பிரதிபலிக்கும் அவன் முகத்தையே இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள் அஷ்மிதா.

“என்னாச்சு யுவா...? எதுக்கு இவ்வளவு டென்ஷன்...? உங்களால் முடியும்னா உங்க மனசில் என்ன இருக்குன்னு சொல்லுங்களேன்..?”, அவன் தவிப்பது தாங்க முடியாமல் கேட்டாள்.

அவளது பேச்சைக் கேட்டவன் நிதானமாக நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவனது கண்கள் சிவந்து, இமைகள் தடித்து இருந்தது. அவனது இந்தக் கோலத்தை, அஷ்மியால் நம்பவே முடியவில்லை.

‘யுவா கலங்குறானா....?’, அதிர்ந்துதான் போனாள். நொடியும் தாமதிக்காமல், அவன் கரங்களின் மேல் தன் கரத்தை வைத்து அழுத்தினாள். சட்டென அனிச்சையாகவே அவள் கரங்களில் இருந்து தன் கரங்களை உருவிக் கொண்டான்.

அவனது உச்ச குழப்ப நிலையிலும், தனது தொடுகையை வெறுக்கும் அவனது செய்கையில், உள்ளம் கலங்கியது அஷ்மிதாவிற்கு. எப்படியும் இப்பொழுது அவனைச் சரி செய்வது ஒன்றே முக்கியம் என்பதால் அதைத் தவிர்த்தவள்,

“யுவா..., பேசினால் தீர்க்க முடியாத பிரச்சனை எதுவுமே கிடையாது. அப்படி இருக்கும்போது..., நீங்க மனசுக்குள்ளேயே போட்டு குழப்பிகிட்டால் என்னதான் செய்யிறது. ஒரு நல்ல தோழியா என்னை நினைச்சுட்டு சொல்லுங்களேன்...”, அவள் பார்வை, அவனிடம் கெஞ்சியது.

அவளது தோழி என்ற சொல் அவனுக்குக் கொஞ்சம் நம்பிக்கையை விதைத்தது. தன் மனக் குழப்பங்களை யாரிடமாவது சொல்லியே ஆக வேண்டும். இப்படியே இருந்தால், தனக்கு பயித்தியமே பிடித்துவிடும் என்று அவன் அஞ்சினான்.

எனவே வேறு வழி இல்லாமல் தன் மனதை அவளிடம் திறக்க முயன்றான். “அஷ்மிதா, உனக்கு எவ்வளவு நாளா என்னைத் தெரியும்...?”, அவனது இந்தக் கேள்வியே அவளது உச்சந்தலையில் இடியென இறங்க, அதை அப்படியே புதைத்தவள்,

“கிட்டத்தட்ட இருபது வருஷமாத் தெரியும்..., ஆனால் ஒரு ரெண்டு வருஷமா ரொம்ப நெருக்கமாத் தெரியும்”, அவன் கண்களை ஊடுருவியவாறு சொன்னாள்.

அவளது பதிலே அவனுக்குத் தேவையான பதிலை உணர்த்த, “நான் முன்னே மாதிரிதான் இருக்கேனா....? அதாவது...., நான் நானாத்தான் இருக்கேனா...? உனக்கு ஏதாவது வித்தியாசம் தெரியுதா...?”, அவள் சொல்ல வருவதை விடுத்து, தன் நிலையைத் தெரிந்து கொள்வதிலேயே ஆர்வம் காட்டினான்.

அதை உணர்ந்தவள்...., “எனக்கு பெருசா எந்த வித்தியாசமும் தெரியலை. சில நேரம் உங்களுக்கு நடந்த பெரிய விபத்தால்..., சில நினைவுகள் உங்களுக்கு மறந்து போயிருக்கலாம்...”, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல், அவனிடம் தெரிந்த அப்பட்டமான மாற்றங்களை மறைத்துச் சொன்னாள்.

அவளை நம்பாத பார்வை பார்த்தான் யுவா. “நீ பொய் சொல்ற சுஷ்மி...”, அவளையே பார்த்தவாறு சொன்னான்.

அதே நேரம் தன்னை யாரோ உற்றுப் பார்க்கும் உணர்வு எழுந்தது அவனுக்கு. இது என்ன உணர்வு...? பரபரவென அவன் கண்கள் சுழன்றுத் தேடியது. சட்டென அவன் நடத்தையில் ஒரு பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

சுஷ்மியின் பேச்சைக் கேட்காமல், இருக்கையை தள்ளிக் கொண்டு எழுந்தவன், வாசல் கதவை அடைந்து, அதை வேகமாகத் திறந்துகொண்டு வெளியேறினான்.

அவன் பார்வை நாலா பக்கமும் விரிந்தது. அவன் வலது பக்க வராண்டாவில், யாரோ போவதுபோல் தோன்றவே..., அந்தப் பக்கம் பாய்ந்து ஓடினான்.

ஓடியவன் சென்றவளை அழைக்கும் பொறுமை கூட இல்லாமல், அவள் தோளைப் பற்றித் திருப்பினான். அவள் முகத்தைப் பார்த்தவன் அதிர்ந்தே போனான்....

## பகுதி – 11.

பார்வையில் பூ மலருமா...?

உன் பார்வையில் மலர்ந்தேன் நான்.

தேவி தன்னை வீட்டில் கொண்டுபோய் விடுமாறுச் சொல்லவே, அவளது குரலில் இருந்த பரிதவிப்பிலும், அவள் தேகத்தில் ஓடிய நடுக்கத்தையும்

உணர்ந்தவன், மறு பேச்சின்றி அவளை அனுப்ப முயன்றான்.

அவளைத் தனியாக அனுப்ப மனமில்லாமல், “இரு நானும் கூடவே வாரேன்..”, வேலையை விட்டுவிட்டுக் கிளம்பினான்.

“இல்ல வேணாம் மாமா..., நானே போய்க்கிறேன்...”, வேகமாகப் பின்னடைந்தாள்.

“இப்போ எதுக்கு என்னை வர வேணாம்னு சொல்லுற நீ...?”, சட்டென கோபம் எட்டிப் பார்த்தது.

அவன் கோபத்தை உணர்ந்தவள், அமைதியாகி விட்டாள். தான் மலர்ந்துவிட்டோம் என்ற நினைப்பே, எதையோ சாதித்துவிட்ட உணர்வைக் கொடுத்தது. ஓரக் கண்ணால் சரவணனைப் பார்த்தாள். புதிதாக வெட்கம் குமிழியிட்டது.

தான் மலர்ந்ததை அவனிடம் தெரிவிக்க, அவளது நாணம் தடுத்தது. எப்படியும் இன்னும் சில நாட்களுக்கு அவனைக் காண விட மாட்டார்கள் என்ற நினைவே, அவனுடன் இருக்கும் நேரத்தை ரசிக்க வைத்தது.

அவர்களது தோட்டத்தில் இருந்து வீடுவரை இருக்கும் தூரம் இன்னும் நீளாதா என்று மனம் ஏங்கியது. அதே நேரம்..., இந்த நேரத்தில், ஆண் முகம் பார்க்கக் கூடாது என்று சொல்வார்களே, தான், தன் மாமனின் அருகில் இருப்பதால், ஏதாவது நேரமோ என்று பயமாகவும் இருந்தது.

எது எப்படி இருந்தாலும், தன் மாமனுக்கு ஏற்றவளாக மாறிவிட்டோம், என்ற எண்ணமே, தன்னை, அவன் மனைவியாகக் கற்பனை செய்யத் துவங்கினாள்.

அவள் தன் மாமனுடன், நினைவில் குடித்தனம் நடத்த, சரவணனோ குழம்பிப் போயிருந்தான்.

தன்னை இவ்வளவு காலையிலேயே தேடி வந்தவள், பேசிய ஐந்தே நிமிடத்தில் வீட்டுக்குப் போகவேண்டும் என்று சொல்வது ஏன்? எனக் குழம்பிப் போனான்.

ஆனாலும் அவள் பேசிய, ‘என்ன கட்டிக்கிட்டு என்ன சொகத்தக் கண்டுடுவீங்க..?’, என்ற அவள் கேள்வியும், அதில் பொதிந்திருந்த, தன் மேலான அவளது நேசமும், அந்த குழப்பத்தின் அளவைக் குறைகவே செய்தது.

எனவே அவனும் அமைதியாகவே வந்தான். வீட்டின் அருகில் நெருங்கியதும், அவனை நிமிர்ந்து பார்க்கவும் வெட்கப்பட்டவளாய், சட்டென வீட்டுக்குள் ஓடி மறைந்தாள்.

“ஏய்..., இந்தா..., இங்கே பாரு...”, அவனது அழைப்புக்கள் காற்றில் கரைந்தன.

சரவணன் அங்கே நிற்கும் பொழுதே, வடிவு..., “ஆத்தி..., நான் என்ன செய்வேன்..., கையும் ஓடல காலும் ஓடலையே...., நீ இங்கன இரு நான் வாறே....”, குரலைத் தொடர்ந்து, வடிவு பரபரப்பாக வெளியே ஓடி வந்தாள்.

“அத்த என்ன ஆச்சு...? தேவிக்கு என்ன..? நாம் பாக்கேன்...”, வீட்டுக்குள் செல்லப் போன அவனைத் தடுத்தாள்.

“மருமவனே.., இன்னும் பத்து நாளைக்கு அவளைப் பாக்கணுங்க எண்ணத்த விட்டுப் புடுங்க...., வீட்டுக்குப் போய்.., உங்க ஆத்தாவ உடனே வரச் சொல்லுங்க....”, சொன்னவள், அவன்மேல் நம்பிக்கை இல்லாமல். கதவை அழுந்த சாத்திவிட்டுச் சென்றார்.

“என்ன சொல்லுதிய...?”, அவன் குரலைக் கேட்க அவர் அங்கு இல்லை.

சென்ற வடிவு உடனடியாக அருகில் இருப்பவர்களிடம் சொல்ல, அந்த இடமே தீப்பற்றிக்கொண்ட உணர்வில் அல்லோகலப் பட்டது. சரவணனுக்கு அதன் அர்த்தம் புரியவே இல்லை.

அவனை வீட்டிற்குள்ளே அனுமதிக்கவும் இல்லை. அவனது கேள்விக்கு யாரும் பதில் சொல்லவும் இல்லை. வீட்டிற்குள் சென்றவர்கள் குலவைப் போடும் சத்தம் மட்டுமே கேட்டது.

அந்தச் சத்தத்தில் ருக்குவும் அங்கே வந்து சேர்ந்தாள். அவளுக்கு நொடியில் விஷயம் இன்னதென்று விளங்கியது. சந்தோசமாக, நடையை எட்டி நடக்க, அங்கே சரவணனைப் பார்த்தாள்.

“எலேய்...., நீ இங்கன என்ன செய்யிறவ....? வூட்டுக்கு போ...”, அவனை விரட்டினாள்.

“ஆத்தா..., இங்க என்ன நடக்குது...? தேவியையும் காங்கல...., நீங்க வேற என்னை விரட்டுதிய. ஆளுவ எல்லாம் கூடுதாவ...., எனக்கு பயம்மா இருக்காத்தா...., என்னன்னு சொல்லுங்க...”, அவன் கண்கள் அலை பாய, தவிப்பாகச் சொன்னான்.

“அட ராசா..., எல்லாம் நல்ல சேதிதான்...., கண்ணாலத்த எப்போ வச்சுக்கலாம்னு உன்ற மாமங்கிட்டே கேளுவே....”, அவன் கன்னம் வழித்து, நெட்டி முறித்துவிட்டு சொல்லிச் சென்றார்.

சரவணனுக்கு ஒரு நிமிடம் எதுவும் புரியவில்லை. புரிந்த பொழுது.., அவனால் தான் எப்படி உணர்கிறோம் என்றே கணிக்க முடியவில்லை. தேவி பெரியவள் ஆகிவிட்டாள்...., இந்த நினைப்பே அடி நாக்கில் தித்தித்தது.

எப்படியாவது அவளைக் கண்டுவிட வேண்டும் என்று தவித்தான். ஆனால் அவனது தவிப்பிற்கு அங்கே மதிப்பிருக்கவில்லை.

“இன்னும் செத்த நாளு பொறுத்துக்கவே....”.

“இப்போ அவளைப் பாத்தால் ஆகாதுவே....”.

விதம் விதமான சமாதானம் மட்டுமே அவனைத் தொடர்ந்தது. வெறுத்துப் போனான் சரவணன்.

மாமன் முறையில் அவளுக்கு குச்சில் கட்டும் அதிகாரம் அவனுக்கு இருக்கவே, தன் தோட்டத்தில் இருந்து தென்னை ஓலை வெட்டி வந்து, அவளுக்குத் தானே ஓலை பின்னி, இரண்டடுக்கில் விஸ்தாரமாகவே குச்சில் அமைத்தான்.

வீட்டில் இருந்து அந்தக் குச்சிலுக்கு வரும் முன்னர், அவளைக் கண்டு விடலாம் என அவன் காத்திருக்க, அவளைச் சேலை மறைவிலேயே அழைத்து வந்து அமர வைத்தார்கள்.

“தேவி..., உன்ற மாமன் கிடந்தது தவிக்கிறாருடி...., உன்னை எப்படியாவது கண்டுட மாட்டமான்னு கிடந்தது துடிக்குது....”, தேவியின் தோழி அவளிடம் சொல்ல, மற்றவர்கள் சிரிக்க, தேவி கவலை கொண்டாள்.

அவளுக்கும் அவனைக் காணவேண்டும் என்ற எண்ணம் மலையளவு இருந்தது தான். ஆனால் இருக்கும் சூழலில் எதுவுமே செய்ய முடியாத நிலையில் அவள் இருந்தாள். சேலை மறைவில் அவனை நிமிர்ந்து பார்க்கவே, வெட்கம் பிடுங்கித் தின்றது.

“ஏய்..., சும்மா இருங்கடி...”, தோழிகளை அடக்கியவள், தன் மாமன் அவளுக்காக அமைத்த வசந்த மாளிகையில் சென்று அமர்ந்து கொண்டாள். அங்கே இருந்துகொண்டு, ஓலையின் இடைவெளியில் அவள் பார்க்க, சரவணனின் கண்கள் தன்னைத் தேடுவதைக் கண்டாள்.

தேவி பிறந்தது முதல், அவனை ஒரு நாள் கூட பார்க்காமல் இருந்தது இல்லை. இந்தப் பிரிவு, இருவரையும் மிகவும் வாட்டியது. அதுவும் சரவணன், சாப்பாடு, தூக்கம் எதுவும் பிடிக்காமல், தேவியின் முகத்தைக் காணவேண்டும் என்று தவம் இருந்தான்.

கல்லூரிக்குச் செல்லக் கூட அவனுக்கு மனமில்லை. தேவியின் வீட்டையே சுற்றி வந்தான். பெரியவர்களின் கண்டிப்பு, கேலி, சிறியவர்களின் கிண்டல் எதையுமே அவன் கண்டுகொள்ளவில்லை.

சரவணனின் விஷயம் அனைத்தும், அவளது தோழிகள் மூலம் அவளுக்குத் தெரிய வந்தது. தன் மாமன், தன்மேல் கொண்டுள்ள நேசத்தில் குளிர் காய்ந்தது அவள் மனம்.

சரவணனோ..., இரவில அனைவரும் உறங்கியதும், அவளைச் சென்று பார்த்து விடுவோமா....? என்று கூட எண்ணினான். ஆனாலும் இரவில் அவளைப் பார்க்கச் செல்லும்பொழுது, அவள் பயந்துவிடுவாளோ என்று அந்த நினைவையே அழித்தான்.

இரவு முழுவதும் அவள் குச்சிலைப் பார்த்தவாறே, உறக்கம் வரும்வரை அமர்ந்திருப்பான். படுத்தாலும், கைகளை தலைமேல் அணை கொடுத்துவிட்டு, ஒருக்களித்துப் படுத்தவாறே, அவன் பார்வை தொடரும்.

அவனது செய்கைகளை உணர்ந்தவள், தன் தோழியிடம், “அண்ணே.., உங்களை வீட்டுக்குப் போகச் சொன்னா தேவி...., குளிச்சு, சாப்ட்டு தெம்பா இருப்பியளாம், அவ இன்னும் நாலு நாள்ல உங்களைப் பாக்க வந்துருவேன்னு சொல்லச் சொன்னா....”. சரவணனோ அதையெல்லாம் அசட்டை செய்தான்.

பெரியவர்களும் அதைக் கண்டுகொள்ளவில்லை. ஒரு நாள் அவனால் அவளது பிரிவைத் தாங்க முடியாமல், இரவில் அவள் குச்சில் அருகில் நெருங்கினான்.

பொதுவாக அவன் தேவியிடம் செல்ல எந்த முயற்சியும் எடுக்காததால், பெரியவர்களின் கண்காணிப்பு குறைவாகவே இருந்தது.

அவன் அவளது குச்சிலை நெருங்கியவுடன், “மாமா....”, என்ற தேவியின் அழைப்பு அவனை அசர வைத்தது.

அவள் அருகில் செல்லாமல், குச்சிலின் வெளியே அமர்ந்துகொண்டான்.

“புள்ள...., எப்படி இருக்க...?”, அவனது மொத்த ஏக்கத்தையும் வார்த்தையிலும், குரலிலும் வடிக்க முயன்றான்.

“எனக்கென்ன..., நல்லா முட்டையும், மாவும், நல்லெண்ணையும் சாப்ட்டு நல்லாத்தான் இருக்கேன். நீங்க ஏன் மாமா இங்கனயே கெடக்கீக...? ஆளே பாதி ஆயிட்டிய...., வீட்டுக்குப் போய் நல்லா சாப்ட்டு தெம்பா இருங்க மாமா.

“உங்கள இங்கன என்னால பாக்க முடியல....”, சொன்னவள் விசும்பும் ஒலி கேட்டது.

“தாயி..., இப்போ எதுக்கு அழுவுறவ...., எனக்கு உன்னக் காங்காம, சோறு உங்க(உண்ண) முடியலத்தா. எனக்கு உன்னப் பாக்கணும்..”, ஏக்கம் வழிந்தது அவன் குரலில்.

“மாமா....”, அவள் குச்சிலை விட்டு வெளியே வர முயல்கையில், அவன் அங்கிருந்து நகர்ந்து சென்றுவிட்டான். இந்த இரு இளம் இதயங்களும், ஒருவர்மேல் ஒருவர் உயிரையே வைத்திருந்தனர்.

அதிலும் சரவணனுக்கு எதற்காக அவள்மேல் இவ்வளவு உயிராக இருக்கிறோம் என்ற காரணம் புரியவே இல்லை. தன் மேல் இவ்வளவு உயிராக இருக்கும் சரவணனை, அதே அளவு நேசத்தோடு விரும்ப முயன்றாள் தேவி.

பிள்ளைப் பருவத்தில் சாதாரணமாக இருந்தவள், வயதுக்கு வந்த பிறகு, தன் மீதான சரவணனின் நேசம், தேவியைப் பாடாய்ப் படுத்தியது. அவனுடனே இருக்கவேண்டும், அவனுக்காக எதையும் செய்யவேண்டும் என்ற மனநிலைக்கு வந்திருந்தாள் தேவி.

சரவணனின் துடிக்கும் இதயம் கூட, தேவி தேவி என்றே துடித்தது. அவர்களின் நேசத்துக்கு அங்கே எந்த எதிர்ப்பும் இருக்கவில்லை. எனவே தடைகளற்று தங்கள் காதலை வளர்த்தனர்.

அடுத்து வந்த நான்கு நாட்களும் அவ்வாறே கழிந்தது. ஐந்தாம் நாள், அவளுக்கு நீராட்டுவிழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்று சரவணன் தேவியைக் காணப் போகும் ஆர்வத்தில் திளைத்திருந்தான்.

அவளுக்காக பட்டுச் சேலை முதல், அனைத்தையும் அவனே பார்த்து பார்த்து வாங்கினான். அவளுக்காக வெள்ளிக் கொலுசு, தங்கச் செயின் என அனைத்தையும், அவனது உழைப்பில் வாங்கினான்.

அந்த நாள் மிகவும் அழகாக விடிந்தது. தேவி நீராடி, அலங்காரம் செய்து, பட்டுச் சேலையில் இளம் குருத்தாக ஜொலித்தாள். மனையில் அவள் அமர்ந்த பொழுது, அவளது பார்வை சுழன்று தன் மாமனைத் தேடியது.

சரவணனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். அவனால் தன் பார்வையை, அவளை விட்டுத் திருப்ப முடியவில்லை. பாவாடைச் சட்டையில் பார்த்துப் பழகியவள், சேலையில்...., குமரியாக....,

முன்பு தெரியாத அவளது உயரமும், வனப்பும்...., இந்த பத்து நாளில் அதிகரித்திருப்பதாகத் தோன்றியது. தனக்கு ஏற்ற இணையாக, மஞ்சள் பூசிய முகம், கூந்தலில் சூடியிருந்த மல்லிகை, பட்டுச் சேலை..., அவளை மணப்பெண்ணாக அவனுக்குக் காட்டியது.

உரிமையுள்ள மனைவியைப் பார்ப்பவன்போல், அவளை பார்வையாலேயே பருகிக் கொண்டிருந்தான். இவள் என்னவள், என் உயிரானவள்...., மனம் அடித்துக் கொண்டது. அந்த நேரம் தேவியின் பார்வை அவனைச் சந்திக்க, பார்வைகள் இரண்டும் பின்னிக் கொண்டன.

முதலில் ஆர்வமாக அவனைப் பார்த்தவள், அவனது பார்வையின் வேகம் தாங்காமல், தாளாமல், அவள் பார்வை நிலம் நோக்கியது. இதயம் தடதடக்க, வெட்கம் குமிழியிட, அவன் பார்வை மனதைப் பிசைய, அவள் கரங்கள் சேலை நுனியை கசக்கியது.

தேவியின் வெட்கமும், முகச் சிவப்பும், அவளது தவிப்பையும் உணர்ந்தவன், ஒரு ஆண்மகனாக இருப்பதில் கர்வம் கொண்டான்.

அவன் கையில் மாலையைக் கொடுத்து, அவளுக்கு அணிவிக்கச் சொல்ல, மாலையுடன் அவளை நெருங்கினான். தேவியோ குனிந்த தலையை நிமிர்த்தவில்லை. இருக்கையில் இருந்து அவள் எழ, அவள் கழுத்தில் மாலையை அணிவித்தான்.

“தேவி..., கொல்ற....”, கிசுகிசுப்பாய் அவன் சொல்ல, அவன் அணிவித்த மாலையை, கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

“நிமுந்துதால் பாருபுள்ள..., மாமனைப் பாக்க மாட்டியா...?”, அவன் குரல் ஏக்கமாக ஒலிக்க, அவன் சொல்வதை செய்ய முடியாமல், வெட்கம் அவளைத் தடுத்தது.

அவனுக்கோ..., அவளது மாமா என்ற அழைப்பிற்காக மனம் ஏங்கியது. அவளது மௌனம் அவனை வதைக்க, அதற்குமேல் அவள் அருகில் நிற்க சுற்றத்தார் அனுமதிக்கவில்லை. எனவே மனம் சுணங்க, அங்கிருந்து நகர்ந்தான்.

வாட்டமாகச் செல்லும் அவன் முதுகைத் தொடர்ந்தது அவள் பார்வை. தொடர்ந்த சடங்குகளில், அவனைப் பற்றிய நினைவு பின்னுக்குச் சென்றது.

சரவணனோ மேலும் அங்கே இருக்காமல், பந்தியைக் கவனிக்கச் சென்றான். அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்தாலும், ஒருவாய் உணவுகூட உண்ணவில்லை.

அவன் சாப்பிடாததை உணர்ந்த ருக்கு, “சரவணா..., ஒரு வாய் சாப்ட்டுட்டு வேலையைப் பாருப்பா...”, கரிசனையாகச் சொன்னார்.

“தேவி சாப்பிட்டாளா ஆத்தா...?”, தலையைக் குனிந்தவாறே கேட்டான்.

“அவளுக்கு உள்ளாரவே சாப்பாடு போட்டாகப்பா..., நீ சாப்பிடு...”.

“இல்லத்தா...., நான் பொறவு சாப்பிடுதேன்...., பசிக்கலை...”, அங்கிருந்து நகர்ந்துவிட்டான்.

“ஏன் சரவணா முகமெல்லாம் வாடிக் கிடக்கு...? பசியில்லன்னு சொல்லுத...?”, மகன் மனதில் எதையோ நினைத்து கவலைப் படுவது அவருக்குத் தெரிந்தது. எனவே அவன் தலை கோதி, அக்கறையாகக் கேட்டார்.

“தேவி ஒத்த வார்த்த பேசலத்தா...”, பத்து நாள் பிரிவும், சந்திப்பும், அவனைக் கோழையாக்கி இருந்தது.

“அட கிறுக்குப் பயலே..., இதுக்கா இப்படி வெசனப் படுற..., அவ உம் போண்டாட்டிலே...., எங்க போய்டுவா...? அவளுக்கு வெக்கமா இருக்காதா....? போலே..., போய் சாப்பிடு...”, அவனை விரட்டினார்.

மனமில்லாமல் சென்றவன், சாப்பிட்டேன் என பேர் பண்ணிவிட்டு எழுந்துவிட்டான். தேவியை சந்திக்கவேண்டும், பேசவேண்டும் என்ற அவனது எண்ணம் இரவு வரை ஈடேறவே இல்லை.

இரவு சொந்தங்கள் அனைத்தும் முற்றத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, மாரிதான் சரவணனைப் பார்த்தவர், “எலேய் சரவணா..., தாயி உள்ளாரதான் இருக்கா...., போய் பாரு...”, அவன் மனம் புரிந்து சொன்னார்.

அவன் அப்பொழுது இருந்த மனநிலையில் அவனது ஆயாவுக்கு ஒரு கோவிலே எழுப்பி இருப்பான். மேலே ஒரு நொடியும் அங்கே தாமதிக்காமல், குடிசைக்குள் சென்றான்.

தேவி, குடிசையின் ஓரத்தில் பாய் விரித்து, முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அதில் முகம் புதைத்து அமர்ந்திருந்தாள். ஒரு நிமிடம் அவள் இருந்த கோலத்தை ரசித்தவன்,

“தேவி....”, என அழைத்தான். அவனது அழைபிற்காகவே காத்திருந்தவள் போல், விசுக்கென முகம் நிமிர்த்தியவள், “மாமா...”, என்ற அழைப்புடன், தாவி வந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

அவளிடம் பேச வந்த வார்த்தைகள் அனைத்தும் மறந்து போக, அவளது அணைப்பில் கட்டுண்டவன், தானும் அவளை இறுக அணைத்துக் கொண்டான். பேச்சற்ற மௌனம்...., அந்த அணைப்பை ரசித்து, அதிலிருந்து விடுபட முயலாமல், அந்த நிலையை கலைக்க முடியாமல், திளைத்திருந்தனர்.

ஒரு துளி கூட காமம் கலக்காத அணைப்பாகவே அது இருந்தது. அந்த அணைப்பு ஒரு நிமிடமா, ஐந்து நிமிடமா அவர்களுக்கே தெரியாது.

அவளிடமிருந்து வந்த மஞ்சள் கலந்த வாசனையும், அவள் சூடி இருந்த மல்லிகைப் பூவின் மணமும் சரவணனின் நாசியைத் தீண்ட, அவன், தான் ஒரு ஆண்மகன் என்பதையும், அணைத்திருப்பவள், தனக்கு மனைவியாகப் போகிறவள் என்பதையும் உணர்ந்த நொடி,

அவளது மேனியின் மென்மையையும், அவள் அணைப்பையும் ரசிக்கத் துவங்கினான். அதே நேரம் அவனது அணைப்பு இன்னும் இறுகவே, தேவிக்கு

அப்பொழுதுதான், தான் அவன் அணைப்பில் இருக்கிறோம் என்பதே புரிந்தது.

வெட்கமும், தயக்கமும், தான் செய்த செயலின் வீரியமும் புரிய, அவனிடமிருந்து விலக முயன்றாள். அதற்கு மாறாக அவனது அணைப்பு இறுக, “மாமா…”, என்று அழைக்க, அந்த அழைப்பே வினையாகிப் போனது.

அவளது மாமா என்ற அழைப்பு அவனை கிறங்கவைக்க, தன்னிடமிருந்து அவளை விலகியவன், அதே வேகத்தில், தன் இதழ்களை, அவள் இதழ்களில் புதைத்தான். தன் உடலில் மின்சாரம் தாக்கிய உணர்வில் விறைத்துப் போனாள் தேவி.

“மா..மா….”, அவளது அதிர்ந்த அழைப்பில், தன்னை மீட்டுக் கொண்டான் சரவணன். தான் செய்த பிழை அப்பொழுதுதான் அவனுக்கு உறைத்தது.

‘டேய் அவ சின்னப் பொண்ணுடா…’, மனசாட்சி ஓங்கி குரல் கொடுக்க, தோய்ந்து தன் கரங்களில் சரிந்த அவளை, கைகளில் ஏந்தியவன், படுக்கையில் அவளைக் கிடத்திவிட்டு, ஓடிச் சென்று சொம்பில் நீர் எடுத்துவந்து, அவள் முகத்தில் தெளித்து, அவள் மயக்கத்தைத் தெளிய வைத்தான்.

மயக்கம் தெளிந்து மலங்க விழித்த அவளை, கையாலாகதத் தனத்துடன் பார்த்தான்.

“மாமா….”, அவன் செய்த செயலை அவளால் நம்பவே முடியவில்லை. அவளது அழைப்பு அதிர்ச்சியும், நம்ப முடியாத தன்மையுடனும், கலவையான உணர்வுடன் வெளிவந்தது.

“தேவிம்மா…, மாமா ஏதோ தெரியாமல்…, இது ஒண்ணும் இல்லடா…, மாமா இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் சரியா…? இந்த மாமாவை மன்னிச்சுடு….., இது கெட்டக் கனவா நினைச்சு மறந்துடுத்தா….”, அவளை எப்படிச் சமாதானம் செய்யவென்று அவனுக்குத் தெரியவில்லை.

# பகுதி – 12.

நானே நானில்லாத பொழுது

உன் நினைவுகள் மட்டும்

என்னைத் தொடரும்......

யுவா யாரையோத் தேடி, அலைந்தவன், வராண்டாவில் சென்று மறைந்த அவள் கைப் பிடித்து தடுத்து நிறுத்தினான். வீணா அதிர்ந்து திரும்ப, அவளது அதிர்ச்சிக்குக் குறையாத அதிர்ச்சியை வெளிப்படுத்தினான் யுவா.

சட்டென அவள் கையை விடுவித்தவன், “மன்னிச்சுக்கோங்க..., நான் வேற யாரோன்னு.., நீங்கதான் இப்போ என் ரூமுக்கு வந்தீங்களா..?”, ஆர்வமும், ஏமாற்றமும் போட்டி போட்டது அவன் குரலில்.

“ஆமா சார்...”, ஒற்றை வார்த்தையில், குழப்பமாகப் பதில் சொன்னாள்.

“சரி நீங்க யார்...? நீங்க ஏன் என் ரூமுக்கு வந்தீங்க...? வந்துட்டு பிறகு ஏன் என்னைப் பாக்காமலே போயிட்டீங்க...?”, கேள்விகளை அடுக்கினான்.

அவனது நீங்க யார் என்ற கேள்வியே அவளுக்கு வித்தியாசமாகத் தோன்றியது. எனவே, “சார்..., நான்தான் இங்கே இருக்கும் சீப் காஸ்டியூம் டிசைனர். உங்ககிட்டே புதுசா வேலைக்குச் சேர்ந்திருப்பவங்களைப் பற்றிய விவரம் சொல்ல வந்தேன்.

“மேனேஜர் சார் தான் சொல்லச் சொன்னாங்க. அதான் வந்தேன். நீங்க பிசியா இருப்பதைப் பார்த்தேன், அதான்.. பிறகு வரலாம்னு...”, திரும்ப வந்துவிட்டேன் என்பதைச் சொன்னாள்.

“இல்ல..., அது இல்ல...., நீங்க மட்டும்தான் வந்தீங்களா...?”, அவனிடம் பரபரப்பு. அத்தோடு ஐயோ என்று இருந்தது.

எதையோ எதிர்பார்த்து ஏமாந்த உணர்வு.

அவனது பரபரப்பைக் கண்டு கொள்ளாமல்..., “நான் மட்டும்தான் வந்தேன் சார்...”, அழுத்திச் சொன்னாள்.

அவள் சொன்ன பதிலை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவளை நம்பிக்கை இல்லாப் பார்வை பார்த்தான்.

அவனது அந்தப் பார்வையே..., தான், தன்னுடன் வந்த வானதியைப் பற்றி சொல்லாதது சரியே என்ற முடிவை அவளை எடுக்க வைத்தது. ஏற்கனவே வானதி மனதுடைந்து இருக்கிறாள். இதில் இவரும் இப்படி கேள்வி கேட்டால், அவள் தாங்க மாட்டாள்.

தன் செயலுக்குத் தானே மனதுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டாள்.

“என்ன ஆச்சு யுவா...? எதுக்கு இவ்வளவு அவசரமா வந்தீங்க...? வீணா..., என்ன...? நீங்க போங்க...”, யுவாவிடமும், வீணாவிடமும் கேட்டவள், எதுவோ சரியில்லை என்பது தோன்ற, வீணாவை அங்கிருந்து அகற்ற முயன்றாள்.

“மேடம் சார்...”, வீணா துவங்க, அஷ்மிதாவின் அழுத்தமான பார்வை அவளது பேச்சைத் தடுத்தது.

“அஷ்மி..., இவங்க பொய் சொல்லுறாங்க..., எனக்குத் தெரியும்..., நீயே கேளு..., அவங்களோட யார் வந்தாங்கன்னு கேளு...”, அஷ்மிதாவிடம் படபடத்தான்.

“யுவா...”, அவனிடமும் அதே அழுத்தத்தைக் கையாண்டவள், “நீங்க போங்க வீணா..., நாம பிறகு பேசலாம்...”, அவளை அனுப்பினாள்.

வீணாவும் அங்கிருந்து விட்டால் போதுமென்று, நகர்ந்துவிட்டாள். “அஷ்மி..., அவங்களை ஏன் அனுப்பின...? யாரோ என்னை உத்துப் பாத்த மாதிரி

இருந்துது. அந்தப் பார்வை எனக்கு ரொம்பவே பரிச்சயமா இருந்த மாதிரி இருந்தது…”, நெற்றியை அழுத்த பற்றிக் கொண்டான்.

“கொஞ்சம் கன்ட்ரோல்ல இருங்க யுவா…., வீணா.. இங்கே மூணு வருஷமா வேலை பாக்குறா. உங்களோட அவளுக்கு நல்ல பழக்கம் உண்டு. அப்படியிருக்கும்போது…, அவங்கதான் வந்தாங்கன்னா ஏன் அதை ஒத்துக்க மாட்டேன்னு அடம் பண்ணுறீங்க…”, ஆற்றாமையாகக் கேட்டாள்.

“ஹையோ அஷ்மி…, இது தெரிஞ்சவங்களைப் பாக்குற பார்வை இல்லை. என் அடி மனசை அசைச்சுது…., இதுக்கு மேல என்ன சொல்லன்னு தெரியலை…”, குழம்பிப் போய் பதில் கொடுத்தான்.

அவனது இந்த பதில்…, அஷ்மியைக் கலக்கியது. அதை மறைத்தவள், முகத்தை சாதாரணமாகவே வைத்துக் கொண்டாள்.

அதற்குள்ளாகவே…, வேலை செய்பவர்கள் அனைவரின் பார்வையும் இவர்களை மொய்க்கவே, “யுவா…, எதுவா இருந்தாலும் ரூமுக்குள்ளே போய் பேசலாம் வாங்க…”, சாதாரணமாக அழைப்பதுபோல் அழைத்தாள்.

“நான் என் குழப்பத்தை சொல்லிக்கிட்டு இருக்கேன்…, நீங்க என்னன்னா ரூமுக்குள்ளே போய் பேசலாம்னு சொல்லுறீங்க…, என் குழப்பம் உங்களுக்கு ஒண்ணுமே இல்லையா…?”, ஆற்றாமையால் வெடித்தான் அவளிடம்.

“யுவா…”, அடிக் குரலில் உருமியவள், அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அறைக்குச் சென்றாள்.

அவளது செய்கை பிடிக்காமல்…, “ஏன் இப்படி செய்யிற…? என்னை விடு…?”, அறைக்குள் வந்து அவளை உதறினான்.

அவனது கோபத்தை உணர்ந்தவள், “இந்த உலகம் இன்னையோட அழியப் போகுதா…? ரொம்ப நாளைக்குப்

பிறகு, நீங்க இன்னைக்குதான் ஆபீஸ் வந்து இருக்கீங்க.

“வந்த முதல் நாளே இப்படியெல்லாம் நடந்துகிட்டா...., தொழிலாளர்கள் மத்தியில் உங்க மதிப்பு என்னவாகும்னு உங்களுக்குத் தோணலையா....? கொஞ்சம் கட்டுப் பாட்டோட இருங்களேன்.

“எல்லாம் நிதானமா பாத்துக்கலாம்... நீங்க இப்படி அவசரப் பட்டாலே, எல்லா காரியமும் சிதறித்தான் போகும்...”, கண்டிப்பு கலந்து அவனை அமைதிப் படுத்த முயன்றாள்.

“மனுஷன் இங்கே உயிரோட இருக்கவா வேண்டாமான்னு அவஸ்த்தை பட்டுட்டு இருக்கான். இப்போ மதிப்பு, மரியாதை இதெல்லாம் ரொம்ப முக்கியம். அவங்க கிட்டே கேட்டிருந்தால் ஏதாவது விஷயம் தெரிஞ்சிருக்கும்...”, தன்னைக் கொல்லும் இந்த உணர்வில் இருந்து விடுபட முடியாத கோபம் அவனுக்கு.

அஷ்மிதாவிற்கே அவனது நிலை, கண்களில் கண்ணீரை வர வைத்தது. சமுதாய அந்தஸ்த்துக்கு அவ்வளவு மதிப்புக் கொடுப்பவன், இன்று தன் நிலை கீழிறங்குவதைக் கூட, பெரிதாக நினைக்காமல் புலம்புகிறானே, என எண்ணினாள்.

அவனோ இன்னுமே அந்தத் தாக்கத்தில் இருந்து வெளி வராதவனாக, பார்வையை வாசலுக்கு வெளியிலேயே நிலைக்க விட்டான்.

‘யாரது...? என் இதயக் குளத்தில்

கல்லெறிந்து போனது...?

முகம் காட்டாமல்,

என்னைத் தீண்டிச் சென்றது...? ’,

அவன் மனம் கேள்வி கேட்டது.

கேள்விக்கு விடைதான் அவனிடம் இல்லை. அதன் பிறகு அஷ்மி அந்த கார்மெண்ட்ஸ் பற்றிய விவரங்கள், செயல்பாடுகள் என அனைத்தையும் விளக்க, அவள் ஏதோ புரியாத பாஷை பேசுவதைப் போல வெறித்துப் பார்த்தான்.

அவள் சொல்லும் குவாலிட்டி, குவாண்டிட்டி, ப்ரொடெக்ஷன், எக்ஸ்போர்ட், சர்க்குலேஷன் என எதுவுமே அவனுக்குப் புரியவில்லை. உலகம் தட்டாமலை சுற்றியது. தலை விண் விண்ணென்று தெறிக்கத் துவங்கியது.

அவனது கவனம் இங்கே இல்லை என்பதும், அவனது குழப்பமும் அவள் பார்வையில் விழுந்தாலும், எப்படியும் அவனுக்கு விளங்க வைக்கவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவளிடம் எஞ்சியது. எனவே அவனது குழப்பங்களைக் கண்டு கொள்ளாமல் தொடர்ந்தாள்.

அவனோ..., “அஷ்மி..., இது எப்போ முடியும்...?”, பரிதாபமாகக் கேட்டான்.

உள்ளுக்குள் உருகிற்று அவளுக்கு. “யுவா..., நான் சூடா டீ சொல்லவா...?”, அக்கறையாகக் கேட்டாள்.

“கட்டங்காப்பி..., கருப்பட்டி போட்டு கிடைக்குமா...?”, தலையைக் கைகளில் தாங்கி, தன்போக்கில் அவன் வினவ, திகைத்தாள் அஷ்மி.

“யுவா...”, அதிர்ச்சியில் கத்திவிட்டாள்.

அவளது குரலில், தன்னுலகத்தில் இருந்து கலைந்தவன், “என்னாச்சு அஷ்மி...?”, புரியாமல் கேட்டான்.

“இல்ல இப்போ என்னவோ கேட்டீங்களே...?”, அவளால் அந்தத் தாக்கத்தில் இருந்து வெளிவர முடியவில்லை.

“என்ன கேட்டேன்...?”, தான் கேட்டது சுத்தமாக அவனுக்கு நினைவுக்கு வரவில்லை.

“அதான் இப்போ… என்னமோ…”, துவங்கியவள் அவன் மலங்க விழிப்பதைப் பார்த்து அப்படியே நிறுத்தினாள்.

“நான் ஏதாவது சொன்னேனா…? என்ன சொன்னேன்…? தப்பா ஏதாவது…?”, அப்படி இருக்குமோ என்ற பதட்டம் அவனிடம்.

“ம்ச்…, அப்படியெல்லாம் எதுவும் இல்லை…, டீ தான் கேட்டீங்க…, சரி வாங்க…, கொஞ்சம் வெளியே போய்ட்டு வரலாம்…”, அவனை அழைத்துக்கொண்டு வெளியேறினாள்.

“அப்போ நான் டீ கேட்டதுக்கா இவ்வளவு அதிர்ச்சியான…?”, அவன் பார்வையில் சந்தேகம் இருந்தது.

‘ஹையோ…, இப்போ என்ன சொல்லி சம்மாளிக்க…?’, மனதுக்குள் புலம்பினாள்.

“இல்ல.., முந்தியெல்லாம் வேலை நேரத்தில் டீ குடிக்கிறீங்களான்னு கேட்டால், இங்கே வேலை செய்யத்தான் வந்திருக்கோம், டீ குடிக்க இல்லன்னு சொல்லுவீங்க. ஆனால் இன்னைக்கு உடனே சம்மதிச்சுட்டீங்களா…, அந்த ஷாக் தான் வேற ஒண்ணும் இல்லை..”, கோர்வையாகச் சொல்ல நம்பிவிட்டான்.

“ஓ….”, ஒற்றை வார்த்தையில் கேட்டவன், அவள் பின் சென்றான்.

அவள் முன்னால் செல்ல, அவளது அடிச்சுவட்டை பின்பற்றுபவன் போன்று, அவளையே சார்ந்திருந்தான். முன்னர் இருந்த யுவாவோ, என்னை நெருங்காதே, எட்டியே இரு என்பதுபோல் நடந்துகொள்ள, இந்த யுவா தன்னைச் சார்ந்திருப்பது அவளுக்கு ஒரு விதத்தில் பிடித்திருந்தது.

அவன் ஒரு விதத்தில் தன்னை நெருங்கினாலும், மனதளவில் ஒதுக்கம் இருப்பதை அவள் உணர்ந்தே

இருந்தாள். முன்னரும் சரி, இப்பொழுதும் சரி..., யுவாவிற்கு தன்னை மனைவி என்ற ஸ்தானத்தில் ஏற்க முடியவில்லை, என்ற உண்மையை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அதற்காக, அவனை விட்டு விலகிச் செல்ல முடியாத நிலையில் அவள் இருந்தாள். அவளது மூளையோ, அவனை நெருங்காதே, எட்டியே இரு என எச்சரிக்க, அவளது மனமோ, அவனது அருகாமையை ரசிக்கவே செய்தது.

தன் மனமும், மூளையும் தனக்கெதிராக செயல்படுவதை, வேதனையோடு உள் வாங்கினாள். அவளது மௌனம் அவனைத் தாக்க,

“என்ன யோசிச்சுட்டு இருக்க சுஷ்மி...., என்னைப் பற்றியா...?”, தன்னைப் பற்றிய மர்மத்தை, அவளிடம் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும் என எண்ணினான். எனவே அவளிடம் பேச விழைந்தான்.

“ஹங்...”, தன் யோசனை கலைந்தவள், அவனைப் பார்த்து மென்மையாகச் சிரித்தாள். அவளது சிரிப்பை அவன் பிரதிபலித்தான்.

இருவருமே பேசியவாறு கேன்டீன் வந்துவிட்டிருந்தனர். அங்கே வீணாவுடன் வானதியும், கபிலும் இருந்தார்கள். கபில் வீணாவுடன் பேச முயல, அவளோ அவனைத் தவிர்ப்பதில் முனைப்பாக இருந்தாள்.

வானதி அவர்களின் விளையாட்டை கவனிக்கும் மனநிலையில் இல்லை. அவள் தன் கவலையிலேயே மூழ்கி இருந்தாள்.

கேன்டீனுக்கு சுஷ்மியும், யுவாவும் வர, அங்கே கும்பலாக பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு இடையே, மெல்லிய பரபரப்பு தொற்றிக் கொண்டது.

அங்கே வேலை செய்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள் என்பதால், தங்கள் முதலாளி திரும்ப வந்திருப்பதைப் பற்றி தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அதே நேரம், முதலாளியே அங்கே வந்துவிட்டதால், வேகமாக தாங்கள் வந்த வேலையை முடித்துவிட்டு, கலைந்து செல்ல முயன்றார்கள்.

யுவா வந்தவுடன் ஏற்பட்ட பரபரப்பால், தன் நினைப்பில் மூழ்கியிருந்த வானதி நிமிர்ந்து பார்த்தாள்.

அவளது பார்வை சுற்றிலும் அலைந்து, யுவா, சுஷ்மியிடம் நிலைத்தது. இருவரும் நெருக்கமாக பேசிக்கொண்டு வந்ததைப் பார்த்தவளின் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

‘நானும் இப்படித்தானே இருந்தேன்.....’, நினைவு நெஞ்சறுக்க, குடிக்கும் காஃபி விஷமாக இறங்கியது. அவள் பார்வையோ, அவர்களை விட்டு அகலாமல், துக்கமும், துயரமும் போட்டி போட, அங்கே இருக்க முடியாமல், கண்களில் கண்ணீர் வழிந்தது.

அவள் கண்ணீரைக் கண்ட வீணாவோ..., “வானதி..., நீ வீட்டுக்குள்ளேயே இருந்தால் தான் அழுதுட்டே இருக்கன்னு இங்கே கூட்டி வந்தால்..., இங்கேயுமா...? முதல்ல கண்ணைத் துடை...”, அவள் கரங்களை ஆதரவாகப் பற்றி அழுத்தினாள்.

“பாத்தியா வீணு..., என் கதையைக் கேட்டு அவங்களுக்கு கண்ணீரே வந்துடுச்சு..., நீயும் இருக்கியே...”, குறும்பாகச் சொன்னான் கபில்.

“நேரங்காலம் தெரியாமல் இப்படி கழுத்தறுக்கக் கூடாது...”, அவனிடம் அடிக்குரலில் உறுமியவள், வானதியைத் தேற்ற முயன்றாள்.

ஆனால் வானதியின் பார்வையோ யுவாவையேத் தொடர்ந்தது. அவள் பார்வை செல்லும் இடத்தைக் கண்டவள், “அதுதான் நம்ம முதலாளி…., கூட இருக்குறது அவர் கட்டிக்கப் போற பொண்ணு…”, வானதிக்கு விளக்கம் கொடுத்தாள்.

“அவங்க நல்லா இருக்கணும்…”, வானதியின் வாய் முணுமுணுத்தது. அவள் சொல்வதில் இருந்த உள்ளர்த்தம் புரிய, வீணாவின் மனம் கலங்கியது. என்ன சொல்லி அவளைத் தேற்றுவது..? எதுவும் அவளுக்குப் புரியவில்லை. அமைதியாக இருந்தாள்.

இங்கே யுவாவோ…, அஷ்மியிடம் பேசிக் கொண்டிருந்தவன், அவளிடம் பேசுவதை நிறுத்திவிட்டு சிலையாகிவிட்டான். அவன் புலன்கள் அனைத்தும் அவன் கட்டுப் பாட்டில் இருக்கவில்லை. அஷ்மியிடம் அவன் பார்வை இருந்தாலும், அவள் பிம்பம் அங்கே மாயமாக…, வேறு ஒரு பெண் தன்னை உற்றுப் பார்ப்பதை உணர்ந்தான்.

அவன் வாய் திடீரென சொன்னது…., “அவ இங்கேதான் இருக்கா…, என்னையே பாக்குறா….”, அரைக் கண் மூடி அவன் சொல்ல, எதிரில் இருந்த அஷ்மிஉறைந்தாள்.

## பகுதி – 13.

நீயிங்கே என்னில் சரிப்பாதி

நீயின்றி நானிங்கே தூசி

நீயாக நான் மாறுவதெப்போது

உயிரே உனக்காக...........

தொடர்ந்த நாட்கள் அழகாகவும் அருமையாகவும், காதலாகவும், நெருக்கமாகவும் கடந்தது அவர்களுக்கு. தான் இன்னும் சின்னப்பெண் இல்லை என்பதை தேவி உணர்ந்துகொண்டாள். அவள் உணர்ந்து

கொண்டாள் என்பதை, சரவணனும் உணர்ந்து கொண்டான்.

முன்னர் குழந்தையாகத் தெரிந்த அவனது மாமன் மகள், இப்பொழுது தன் மனைவியாகவே அவனுக்குத் தெரிந்தாள். அவள் பள்ளிப் படிப்பை முடிக்க எடுத்துக் கொண்ட மேலும் இரண்டு வருடங்கள் மட்டுமே அமைதியாக இருந்தான்.

அப்படியும் ரொம்பவே அமைதியாக இருந்தான் என்று சொல்ல முடியாது. அவனது ஒவ்வொரு செயலிலும், பார்வையிலும் அவள்மீதான, தன் உரிமையை நிலை நிறுத்த மறக்கவில்லை.

பார்க்கும் பார்வையிலேயே அவளை வெட்கம் கொண்டு சிவக்க வைத்தான். நெருங்கிச் சென்றாலும், அவளைத் தீண்டாமலே, மலர வைத்தான். சில வேளை, நெருங்கிச் சென்றாலோ, அவளைத் தொடாமலே துவள வைத்தான்.

அவளது மாமா என்ற அழைப்பில், மாணாளனாகவே மாறினான். அவள் பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை, அன்று நடந்த தவறு திரும்பவும் நடந்துவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தான்.

அன்று முதல் முறையாக அவளை முத்தமிட்டு, அவள் அதைத் தாங்க முடியாமல் மயங்கியதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவன் ஆண்மகனாக இருக்க, அவளோ சிறுமியாக இருந்தாள்.

எனவே அவளுக்குப் பக்குவம் வரும்வரை, அவளைத் தொல்லை செய்யக் கூடாது என்று, அன்றே முடிவெடுத்தான். அன்று அவளது மாமா என்ற அழைப்பில் இருந்த நடுக்கம், அவனை சில்லு சில்லாக உடைத்துதான் போட்டது.

நடந்துவிட்டத் தவறை எப்படியும் சரி செய்தே ஆகவேண்டும், அவள் மனதில் இதனால் எந்தவிதமான

எண்ணத்துக்கும் வழி வகுத்துவிடக் கூடாது என்று தோன்றவே,

‘மாமா ஏதோ தெரியாமல்..., இது ஒண்ணும் இல்லடா..., மாமா இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் சரியா...? இந்த மாமாவை மன்னிச்சுடு....., இது கெட்டக் கனவா நினைச்சு மறந்துடு’, எனச் சமாதானம் செய்தான்.

ஆனால் அவனது சமாதானம் அவளை, அவள் நடுக்கத்தில் இருந்து கொஞ்சம் கூட வெளிவர உதவவில்லை. அவளுக்கு விவரம் தெரிவதற்கு முன்னால், அவளைத் தூக்கிக் கொண்டு அந்த ஊரையே சுற்றி வந்திருக்கிறான்.

அவளுக்கு விவரம் தெரிந்த பிறகு, அவள் கை கோர்த்து நடந்திருக்கிறான், அவ்வளவுதான். அதற்குமேல் ஒரு தவறான பார்வை கூட பார்த்தது இல்லை. அப்படி இருக்கையில்..., அதிரடியாக அவன் அளித்த முத்தம், அவளை ஏதேதோ செய்தது.

‘என் மாமாவா இப்படி’, என அதிர்ந்திருந்தவளை, அவனது சமாதான வார்த்தைகள் எட்டவே இல்லை. அவள் உடல் நடுங்குவதும் நிற்கவில்லை.

அவள் நடுக்கத்தை உணர்ந்தவன், “தேவிம்மா..., மாமாவுக்கு உன்னை ரொம்ப புடிக்கும்த்தா...., அதனால் என்னை அறியாமலே இப்படி நடந்துட்டேன்...., என்னைப் பாத்து நீ இப்படி நடுங்குறதை இந்த மாமனால் தாங்க முடியல...”, கவலையில் தோய்த்து வந்து விழுந்தன வார்த்தைகள்.

அவனது சமாதானம் செய்யாத மாயத்தை, அவனது தன்விளக்கம் செய்தது. ‘தன் மாமனுக்கு தன்னைப் பிடித்திருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் இந்த முத்தம் என்பதை மட்டும் உணர்ந்து கொண்டாள்.

இதை உணர்ந்த பிறகு, அவளது நடுக்கம் அவளை விட்டு அகன்றது. தன் மாமனுக்கு பிடித்தவளாக இருப்பது,

சந்தோசத்தை அளித்தது. அந்த சந்தோசம் வெட்கமாக வெளிப்பட்டது.

“பரவாயில்லை மாமா..., நான் ஒண்ணும் நினைக்கலை, நீங்க வெசனப் படாதீங்க....”, அவனுக்கு ஆறுதல் அளிக்கவும் வைத்தது.

“இது..., இந்த வார்த்தை போதும் புள்ள...”, அவள் தன்னைப் புரிந்து கொண்டதில் நிம்மதியாக மூச்சு விட்டான்.

அந்த சம்பவம், இருவரின் வாழ்விலும் ஒரு பெரிய மாற்றத்தையே விதைத்தது. அவள் சின்னப் பெண், விலகியிருக்க வேண்டும் என்று அவனையும், மாமனுக்கு ஏற்றவளாக, பொறுப்பானவளாக, அவன் நேசத்தை புரிந்தவளாக, அவன் மனம் புரிந்து நடப்பவளாக அவளையும் மாற்றியது.

தேவி பன்னிரண்டாம் வகுப்பு முடித்த உடனேயே..., அவளுக்கும் சரவணனுக்கும் திருமணத்தை முடித்து விடுவோம், என்று பெரியவர்கள் பேசினார்கள்.

அந்தத் திருமணப் பேச்சின் பொழுது சரவணனும் உடனிருக்கவே, அவன் தேவியை நிமிர்ந்து பார்த்தான். அவள் பார்வையில், திருமணம் பற்றிய எதிர்பார்ப்பு இருந்தாலும், சிறு கலக்கம் வந்து போனது.

அதைக் கண்டு கொண்டவன், “நான் தனியா வீடு போட்ட பிறகு கல்யாணத்தை வச்சுக்கலாம்...”, அவன் குரல் உறுதியாக ஒலித்தது.

“எலேய்..., உனக்கு இப்போவே இருவத்தினாலு முடியப் போகுது. இப்போ செய்யாமல் எப்போ செய்யப் போற...?”, மாரிதான் கடிந்து கொண்டார்.

“ஆயா..., எப்போ இருந்தாலும் தேவிதான் என் பொண்டாட்டி. எனக்கு இருக்கது ஒரே ஒரு ஆசை தான். எம் பொண்டாட்டியை, குடிசையில் இல்லாமல்..., ஒரு ஓட்டு

வீட்டில் குடி வைக்கணும். எனக்கு இன்னும் ஒரு ரெண்டே வருஷம் டைம் கொடுங்க.

“என் தோட்டத்தில் வரும் வருமானத்தை கொஞ்சம் சேர்த்து வச்சு இருக்கேன். இன்னும் கொஞ்சம் சேத்துட்டு..., வீடு போட்டுடுவேன். அது என்னைக்கு முடியுதோ..., அன்னைக்கே வச்சுக்கலாம்...”, பிடிவாதமாகச் சொன்னான்.

“ரெண்டு வருஷம் அவளை இப்படியே வீட்டுக்குள்ளே வச்சுருக்க முடியுமா...?”, வேலப்பன் தன் கவலையைச் சொன்னார்.

அவர்கள் ஊரில் பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்த அடுத்த சில மாதங்களிலேயே, சொந்தத்துக்குள் திருமணம் செய்து அனுப்பி விடுவார்கள். பெண் பிள்ளையின் பொறுப்பை, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இறக்கி வைக்கவே அவர்கள் முயன்றார்கள்.

“அவ மேலே படிக்கட்டும்...”,

“என்னது...., படிக்கவா...? நம்ம ஊருக்குள்ளே அதிகமா படிச்ச பொட்டப் புள்ளைங்க ரெண்டு பேர். ஒண்ணு நம்ம பண்ணையார் மவ, இன்னொன்னு இவ...., இதுக்கே ஊருக்குள்ளே ஆயிரம் பேச்சு.

“இதில் மேல படிக்குறதுன்னா அது நடக்குற காரியமா...? ஏதோ வாயக் கட்டி, வவுத்தைக் கட்டி, ஒரு பத்து பவுன் சேத்து வச்சிருக்கேன். இன்னும் இவளை மேல படிக்க வைக்க என்கிட்டே பணம் இல்ல....

“பெரிய படிப்பெல்லாம் எம் மவளுக்கு வேண்டாம்...”, வடிவும் மறுத்தார்.

“அவள நான் படிக்க வைக்கேன்..., நீங்க எதுவும் செய்ய வேண்டாம்...”, ரோசமாகச் சொன்னான்.

“ஊருல இல்லாத சேதியாவுல்ல இருக்கு…”, தேவியின் சித்தி நொடிக்க,

“அவ தொள்ளாயிரம் மார்க் வாங்கி இருக்கா…, இந்த மார்க்குக்கு சும்மாவே சீட்டு குடுப்பாங்க. பக்கத்து டவுன்ல இருக்க காலேஜில் பிஎஸ்சி போகட்டும். அத்தோட ஸ்க்காலர்ஷிப்பும் கிடைக்கும். செலவெல்லாம் அவ்வளவு ஆகாது…”, தன் சின்ன அத்தையை முறைத்தவாறே பதில் சொன்னான் சரவணன்.

அனைத்திலும் தேவி பார்வையாளராக மட்டுமே இருந்தாள். அவளுக்கு மேலே படிக்க ஆசை இருந்தாலும், வீட்டு சூழல் அவளுக்குத் தெரியுமாகையால்…, அந்த ஆசையை அவள் வரவோ, வளரவோ விட்டதில்லை.

இன்று சரவணன் தனக்காகப் போராடுவதைப் பார்த்து, அவன்மேல் நேசம் அவளுக்கு அதிகரித்தது. அது அவள் பார்வையிலும் வெளிப்படவே, சரவணனை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதன் பிறகு சிலபல விவாதங்களுக்குப் பிறகும் சரவணன் அவனது பிடியிலேயே இருக்க, வேறு வழியில்லாமல் அனைவரும் அமைதியானார்கள். பெண்களின் ஒப்பாரியோ, ஆண்களின் மிரட்டலோ, கெஞ்சலோ எதுவும் அவனை மாற்றவில்லை.

அந்த சம்பவத்தால், பெரியவர்கள் அனைவருக்கும் அவன்மேல் பெரிய மனத்தாங்கல் எழுந்தது. மாரி, வடிவு இருவரும் அவனிடம் முகம் கொடுத்து பேசவே மறுத்தார்கள். வேலப்பனோ சரவணன்மேல் அதிக கோபம் கொண்டு, அவனை கோபத்துடனே பார்க்கத் துவங்கினார்.

ஆனாலும் அவளுக்காக அவன் ஒவ்வொரு விஷயமும் பார்த்து பார்த்து செய்வதால், அனைத்தும் சரியாகவே நடக்கும் என்று தங்களுக்குத் தாங்களே சமாதானம்

செய்து கொண்டார்கள். இந்த நினைப்பு பொய்த்துப் போனால்.....?

தேவியின் படிப்பில் யாருமே அக்கறை காட்டவில்லை. எனவே சரவணனே அவளுக்கு பார்ம் வாங்கி வந்து, கல்லூரியில் சேர்த்துவிட்டு வந்தான்.

“ஏம்மாமா இப்படி செஞ்சீங்க...?”, தேவி தயங்கித் தயங்கி கேட்க,

“உனக்கு படிக்க விருப்பம் இல்லையா...?”, அவனது இந்த கேள்வியே, அவளை ஊமையாக்கியது.

இயல்பாகவே தேவி படிப்பில் கெட்டி என்பதால், கல்லூரிப் பாடங்கள் அவளுக்கு கஷ்டமாக இருக்கவில்லை. தேவி கல்லூரிக்குச் சென்ற பிறகு, சரவணனின் அடாவடி அதிகரித்தது.

எப்பொழுதுமே வார விடுமுறை நாட்களில் தேவி சரவணனின் தோட்டத்துக்கு வேலை செய்ய வருவது வழக்கம். அவள் அப்படி வந்தாலும் அவளை வேலை செய்ய அவன் அனுமதிக்க மாட்டான். ஆனால் பிடிவாதமாக அவனது வாழைகளுக்கு நீர் இறைப்பாள்.

“நீ வேலை செய்வதைப் பாக்கவா நான் இருக்கேன்...?”, அவன் கோபம் கொள்வான்.

அவனது கோபம் தன்மேல் கொண்ட அளவுகடந்த காதலால் தான் என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும்..., “என் மாமன் கூட அவர் செய்யும் எல்லாத்திலும் நான் துணை இருக்கணும்.... நான் செய்வேன்..”, அவளது பிடிவாதமான பேச்சு, அவனை ரசிக்க வைக்கும்.

அவள் நீர் இறைக்கும் பொழுது, அவள் ஆடை விலகுவது தெரியாமல் வேலை செய்தால், சரவணனின் பார்வை அவளை மொய்க்கும். சரவணனின் மடை திறந்த பேச்சுத் தடைபடும்.

சரவணனின் பேச்சு எப்பொழுதுமே அவளை பாதித்தது இல்லை. ஆனால் அவனது மௌனம் அவளை வெகுவாகப் பாதிக்கும். அவன் வேலை செய்யும்பொழுது மௌனமாகி விட்டாலே, அவன் தன்னை ரசிக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்து போகும்.

அன்றும் அவள் வாழைக்கு நீர் இறைக்க, அவள் குடம் தூக்கும் அழகையும், தன் தோட்டத்தில் அவள் வேலை செய்யும் அழகையும் ரசித்துக் கொண்டிருந்தான். அவன் கைகள் வாழையைக் கிளைத்துக் கொண்டிருந்தாலும், பார்வைகள் அவளையே தொடர்ந்தது.

சிறிது நேரம் தாக்குப் பிடித்தவள், ஒரு கட்டத்தில் முடியாமல், “ஏம் மாமா....?”, வெட்கத்தில் சிணுங்கினாள்.

தன் கேள்விக்கு அவனிடம் பதிலின்றிப் போகவே, அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் பார்வை, அவளது விலகியிருந்த தாவணியில் நிலைத்திருக்க, அனிச்சையாகவே அவள் கைகள் எழுந்து தன் ஆடையை சரி செய்தது.

அதைப் பார்த்தவன், “ஏண்டி...”, முதல் முறையாக அவளிடம் கோபம் கொண்டான்.

இதுவரை தன்னிடம் அவன் இப்படி நேரடியாகப் பேசியதில்லை என்பதால், திகைத்துப் போனாள். அதை நொடியில் ஒதுக்கியவள், “என்னவோ கட்டுன பொண்டாட்டியைப் பாக்குற மாதிரி பாத்தா...? என் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டுங்க...., பொறவு யாரு உங்களை என்ன சொல்லப் போறா...?”, அவர்களுக்கிடையில் நடந்த முதல் நெருக்கமான பேச்சு.

“இப்போ நீ யாராம்....?”, கண்களில் மயக்கம் குறையாமலே கேட்டான்.

மறுத்துச் சொல்ல மனமில்லாமல் அமைதியானாள். “ம்..., பாதி பொண்டாட்டி...”, இடக்காக பதில் கொடுத்தாள்.

“அப்போ சரி…”, சொன்னவன் அவளை நெருங்க…, அவசரமாகப் பின்னடைந்தாள்.

“அது….ல்…ல….”, அவள் பேச்சு தந்தியடிக்க…, கால்கள் பின்னோக்கி நகர, வாழைக் கன்று தடுக்கி விழப் பார்த்தாள்.

அவள் விழாமல் சட்டென தன்பக்கம் இழுத்து அணைத்தவனின் கரங்களோ அவள் வெற்றிடையில் இருந்தது. கையில் வைத்திருந்த குடம் கை தவறிக் கீழே விழ, “மாமா…”, கண்கள் அதிர்ச்சியில் விரிய, கைகளோ அவன் போட்டிருந்த பனியனை கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

அவளது அதிர்ச்சியை கண்டுகொள்ளாமல்…, “நீதான பாதி பொண்டாட்டின்னு சொன்னவ…”, சொன்னவனின் இதழ்கள் அழுத்தமாக அவள் கன்னத்தில் பதிந்தது.

அவனது முத்தத்தில் இமை மூடி கட்டுண்டு இருந்தவள், நொடியில் தெளிந்து, “நான் இத சொல்லல…”, அவனை விட்டு விலகினாள்.

அன்று துவங்கியது இருவரின் போராட்டம்…., அவன் அவளை உரிமையாய் நெருங்க நெருங்க, அவர்களின் மெல்லிய இடைவெளியைத் தக்கவைக்கப் போராடினாள் தேவி. இந்த விலகலகளுக்காகப் பிறகு தான் வருந்தப் போகிறோம் என்று தெரிந்திருந்தால்…, விலகியிருக்க மாட்டாளோ….?

விதியின் கணக்கை யாரறிவார்…..?

தினமும் கல்லூரிக்கு அவளைத் தன் சைக்கிளில் வைத்து கூட்டிச் செல்பவன், மாலையில் அவளை அழைத்து வரவும் செல்வான்.

அவர்கள் கல்லூரிக்குச் செல்லும் அந்த வேளையும், அந்த சைக்கிளும், காதல் நேரமாகவும், காதல் வாகனமாகவும் மாறிப் போகும். அவர்களிடையே பேச்சு குறைவாக

இருந்தாலும், ஒருவருடன் ஒருவர் தனித்திருப்பதே போதுமானதாக இருந்தது.

கல்லூரியை நெருங்கும் வேளை, இருக்கும் பத்தடி தூரத்தை, சைக்கிளில் இருந்து இறங்கி நடந்து கடக்க, அவர்களுக்கு பத்து நிமிடங்களுக்கு மேல் தேவைப்படும். கல்லூரி வாசலை அடைந்த பிறகு, புத்தகப் பையை அவளிடம் கொடுக்கும் சாக்கில், அவள் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொள்வான்.

அவன் இப்படித்தான் செய்வான் என்று அவளுக்குத் தெரிந்தே இருந்தாலும், ஒரு நாள் கூட, புத்தகப் பையை நானே வைத்துக் கொள்கிறேன் என்று அவள் சொன்னதில்லை. காதல் விளையாட்டுக்களை, ரசிக்கவே செய்தது அந்த பேதை மனம்.

அவள் கல்லூரிக்குச் செல்வதால், விதம் விதமான பாவாடை தாவணியோடு, சுடிதாரும் வாங்கிக் கொடுத்தான். அந்த உடைக்கும் பலமான எதிர்ப்பு கிளம்பினாலும், யாராலும் சரவணனின் பிடிவாதத்திற்கு முன்னால் நிற்க முடியவில்லை.

இறுதியில், அவன்தான் கட்டிகொள்ளப் போகிறவன், அவனது விருப்பப்படியே அவர்கள் இருந்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டார்கள். இறுதியில் அவன் கேட்டிருந்த இரண்டு வருட அவதி காலாவதியாக, சரவணன், தேவியின் நிச்சயத்தை முடித்துவிடலாம் என எண்ணினார்கள்.

# பகுதி – 14.

கைக்கெட்டும் தூரத்தில்

நிழலுருவம்........

தீண்டவா....? தவிர்க்கவா....?

எதைச் செய்தாலும்....

நிழலோடு சாத்தியமா....?

யுவா சொன்னதைக் கேட்ட அஷ்மிதாவின் மனம் தவித்தது. ‘கண்முன்னால் நிற்கும் என்னை விடுத்து..., கனவில் சஞ்சரிக்கிறானே...’, அவள் மனம் ஊமையாக அழுதது. ஆனாலும் எதார்த்தத்தை ஏற்றுக் கொண்டுதானே ஆக வேண்டும்.

விழி மூடிச் சொன்ன அவனை, கரம் பிடித்து உலுக்கினாள். “யுவா...”, அவள் அழைப்பு அவனைக் கலைத்தாலும், அவன் பிடிவாதம் கலையவில்லை.

விழிகள் தன்னைச் சுற்றி இருந்தவர்களை ஆராய்ந்தது. அவனது ஆராய்ச்சியை உணர்ந்த வீணா..., சட்டென வானதியைத் தன் பின்னால் மறைத்தாள். அவள் ஏன் அப்படிச் செய்தாள் என்று கேட்டால் அவளிடம் விடையில்லை.

அவன் பார்வை வீணாவிடம் நிலைக்க..., கோபம் கொண்டாள் அஷ்மிதா. அவளை நோக்கிச் செல்லப் போன அவனைத் தடுத்தவள், “யுவா..., இது கேன்டீன்..., நாம இங்கே டீ சாப்பிடத்தான் வந்திருக்கோம்...”, அழுத்திச் சொல்லி அவனைத் தேக்கினாள்.

“உனக்கு இப்போ டீ வேணும் அவ்வளவு தானே....”, சொன்னவன், அவள் பதிலுக்காகக் காத்திருக்காமல், அவனாகவே சென்று இரண்டு கப் காஃபி வாங்கிவந்து, ஒன்றை அவள் கையில் கொடுத்தான். மற்றதை அவன் குடித்தான்.

அவனது இந்தச் செய்கையில் திகைத்தது அஷ்மிதா மட்டுமல்ல..., சுற்றியிருந்த அனைவரும்தான். பொதுவாக யுவா அங்கே வருவது கேன்டீன் எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பார்க்க மட்டுமே.

அங்கிருக்கும் உணவு வகைகளை ருசி பார்க்கக் கூட அவன் விரும்ப மாட்டன். அஷ்மிதா அங்கே காஃபி அருந்தினாலோ, ஏதாவது உணவு வகைகளை

உண்டாலோ..., அவளை அருவருப்பாக ஒரு பார்வை பார்ப்பான்.

அவனது இந்தப் பார்வை அஷ்மிதாவிற்குப் பிடிக்காது. “தொழிலாளர்களோடு, தொழிலாளர்களா நாம இருக்கணும்..., அப்போதான் அவங்க நமக்காக உழைக்கத் தயங்க மாட்டாங்க...”, அவள் வலியுறுத்துவாள்.

“எவன் தயவும் எனக்குத் தேவையில்லை..., அவங்களுக்குத்தான் என் தயவு வேணும்...”, ஆணவமாகப் பதில் சொல்வான்.

அப்படிப்பட்டவன்..., இன்று அவனாகவே சென்று காஃபி வாங்கி வந்ததோடு மட்டுமல்லாமல், அதை அருந்தவும் செய்தால்..., வியக்காமல் என்ன செய்வார்கள்.

அவன் காஃபி வாங்க எடுத்துக் கொண்ட நேரத்தில், வீணா வானதியை அங்கிருந்து போகச் சொல்லிவிட்டாள். வானதியும் ஏனென்று கேட்காமல் அங்கிருந்து சென்றாள்.

அவனது நடவடிக்கையில் வித்தியாசத்தை உணர்ந்தது அஷ்மிதா மட்டுமல்ல..., வீணாவும் தான். எனவேதான் வானதியை அவள் மறைக்க முயன்றாள்.

முன்பெல்லாம் வீணாவை ஒரு பொருட்டாகக் கூட அவன் மதித்தது கிடையாது. அவளது டிசைன்களைப் பார்க்க..., என்றாலும் கூட, தன் அறைக்கு வரச் சொல்பவன், அவளை அமரக் கூடச் சொல்ல மாட்டான்.

அப்படி இருக்கையில்..., அவனாகவே தன்னிடம் வந்து பேசுவதை அவளால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

அந்த ஒரு கப் காஃபி குடிக்கும் வரை அஷ்மிதாவோடு இருந்தவன், “நீங்க இருங்க..., நான் இப்போ வரேன்...”, அவளது காலி கப்பையும் வாங்கி, குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, வீணாவை நோக்கிச் சென்றான்.

அவன் தங்களை நோக்கி வருவதைக் கண்ட வீணா..., சட்டென கபிலின் கரத்தைப் பற்றிக் கொண்டாள். அவளது இந்த செய்கையில்.., கபில் நிமிர்ந்து அவளைப் பார்க்க, அவள் கவனம் தன்னிடம் இல்லை என்பதை உணர்ந்தவன், ஏமாற்றமாக உணர்ந்தான்.

அவர்களை நெருங்கிய யுவாவோ..., என்ன கேட்பது என்று தெரியாமல் தயங்கி நின்றான். அதிலும்..., கோர்த்திருந்த அவர்களின் கரங்களைப் பார்த்தவன், அவர்கள் இருவரையும் மாற்றி மாற்றிப் பார்த்தான்.

பின்னர் எதுவும் சொல்லத் தோன்றாமல், வந்த வழியிலேயே திரும்பினான். திரும்பியவன் இமைகளை மூடி..., அவர்கள் பார்வை தன்னைத் தொடர்வதை ஆராய்ந்தான். அந்த ஆராய்ச்சியில்..., அவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அவர்களைத் திரும்பியும் பாராமல்..., அஷ்மிதாவின் அருகில் சென்றான். அவன் வந்ததையும், சென்றதையும் கண்ட கமல்..., “என்ன சார் வந்துட்டு எதுவுமே சொல்லாமல் போய்ட்டார்..?”, அவளிடம் கேட்டான்.

“அது எனக்கெப்படித் தெரியும்...”, அவனிடம் எரிந்து விழுந்துவிட்டு அங்கிருந்து அகன்றாள்.

வீணாவின் பிடிவாதம் தெரிந்தவன் என்பதால்.., கமல் மேற்கொண்டு அவளைத் தொடர்ந்து எதுவும் கேட்கவில்லை.

யுவாவோ தன் தோல்வியை ஏற்க முடியாதவனாய்..., துவண்டு போய் திரும்பினான். ஏமாற்றத்தால் கூம்பிப் போன அவனது முகத்தை அஷ்மியால் பார்க்கவே முடியவில்லை.

அவள் அருகில் வந்தவன்..., அவளிடம் ஒரு வார்த்தையும் பேசாமல்..., தன் அறைக்கு விரைந்தான்.

‘என் இதயத்தை அசைப்பவள் அவள் இல்லையென்றால்..., அவளுக்குப் பின்னால் இருக்கும் அவள் யார்...? அது அவள்தான் என்பதை..., அதாவது பெண்தான் என்பதை என் மனம் அடித்துச் சொல்கிறதே....

‘அப்படியென்றால் வீணா ஏன் அவளை மறைக்க முயல்கிறாள்...? அப்படியென்றால் என்னைப் பற்றிய உண்மை அவளுக்கு ஏதாவது தெரியுமா...? நான் எந்த உண்மையைப் பற்றி எண்ணுகிறேன்...?’, அவன் சிந்திக்கச் சிந்திக்க..., தலைக்குள் யாரோ அமர்ந்துகொண்டு, சுத்தியலால் அடிக்கும் வலியை உணர்ந்தான்.

தாங்க முடியாமல் அவன் மயக்கத்துக்குச் செல்ல, செய்வதறியாமல் திகைத்தாள் அஷ்மி.

தன்னை ஒருவன் தொடர முயல்வதையோ..., தன் ஒற்றைப் பார்வை அவன் அடிமனதுவரைத் தீண்டி..., அவன் நிம்மதியைக் குலைக்கிறது என்ற உண்மையையோ உணராமல்..., அவள் தன் உலகில் திளைத்திருந்தாள்.

அந்த தளம் முழுவதும் அவள் உடல் சுற்றி வந்தாலும்..., மனமோ அவள் கட்டுப்பாட்டில் இல்லாமல் ரணமாக வலித்தது. உடுத்தும் உடை முதல், நெற்றியில் வைக்கும் பொட்டு, எடுத்து வைக்கும் அடி..., என அனைத்திலும் அவன் நினைவே சுழன்றது.

“வானதி..., கவனத்தை எங்கே வச்சு இருக்க...?”, அமுதா இரண்டு மூன்று முறை அவளை நடப்புக்கு கொண்டுவர முயன்றாள்.

விடை என்னவோ பூஜ்யம் மட்டுமே. ‘இந்தப் பொண்ணு இந்த வேலைக்கு சரிப்பட மாட்டா....?’, ஒரே நாளில் அவளை கணித்துவிட்டாள்.

வானதியின் மௌனமும், கவலை அப்பிய முகமும், பிடிப்பில்லாத நடத்தையும் அவளை அந்த முடிவிற்கே

தள்ளியது. வானதி எவ்வளவு முயன்றும்..., அவளால் நிகழ் காலத்தில் அடியெடுத்து வைக்க முடியவில்லை.

அவள் சிந்தை முழுவதும் இறந்த காலத்திலேயே நிலைத்தது. நிகழ் காலத்திற்கே வர முடியாத அவளால்...., எதிர் காலத்தைப் பற்றி எப்படி சிந்திக்க முடியும்....?

இந்த வேலைக்கு வந்திருப்பதே.., நெஞ்சறுக்கும் இந்த வலியில்...., தான் உருகிவிடக் கூடாது என்பதற்காகத்தான். ஆனால் அவளது புத்திக்குத் தெரிந்த விஷயம்..., அவள் மனதிற்கு கொஞ்சம் கூட புரியவில்லை.

மதியம் வரை மட்டுமே அவளால் தாக்குப் பிடிக்க முடிந்தது. அதற்குமேல் அங்கே இருந்தால்...., இருக்கும் இடத்தை மறந்து, வாய்விட்டுக் கதறி விடுவோமோ என்று பயந்தாள்.

அமுதாவின் கண்டனக் குரல் அவளை ஒரு பக்கம் சோர்ந்து போக வைத்தது. “அக்கா..., நான் வீணாக்காவை பாக்கப் போகணும்...?”, என்னவோ முதல்நாள், தாயைப் பிரிந்து, பள்ளிக்கு வந்த சிறுமிபோல்.., முகத்தை வைத்துக் கொண்டு அவள் கேட்க, அமுதாவிற்கே பாவமாகப் போய் விட்டது.

பொதுவாக அங்கே அமுதாவிற்கு இரும்பு மனுஷி என்று பெயர். எந்த சாக்கு சொல்லியும் அவளை கனிய வைக்கவே முடியாது. வேலைக்கு வந்துவிட்ட பிறகு...., உடல்நிலை சரியில்லை, கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்கிறேன் என்று கேட்டால் கூட...,

“இது வீட்டில் இருக்கும்பொழுதே தெரியாதா...? சம்பளம் வேண்டுமென்றால் வேலை செய்...”, என இரக்கமே இல்லாமல் சொல்லி விடுவாள்.

இதில் அவளைச் சொல்லியும் குற்றமில்லை. ஒருநாள் ஒருத்தருக்காகப் பார்த்தால்..., அடுத்தநாள் அதே காரணத்தைச் சொல்லி மூன்று பேர் மட்டம் போட்டு விடுவார்கள்.

அந்த கார்மெண்ட்ஸ் மொத்த ஆடர் பிடித்து, அதை முழு மூச்சாக குறித்த நாளுக்கு முன்பாகவே டெலிவரி கொடுக்கும் திறமை வாய்ந்தது. அங்கே ஐநூறு மெஷின் இருக்க, அதில் இருக்கும் பெண்கள் ஒரு முழு உடையை தைப்பது இல்லை.

மாறாக..., சட்டை என்றால்...., அதன் காலர் ஒருவர் தைக்க, அதன் முன்பகுதி மற்றவர், பின் பகுதி வேறொருத்தி, கை இணைப்பவள் இன்னொருத்தி, காசா போட ஒருத்தி, பட்டன் தைக்க ஒருத்தி என..., முழு சட்டை உருவாக மொத்தம் ஐந்து ஆறுபேர் வேண்டும்.

அப்படி செய்வதன் காரணமும்..., தைக்கும் துணி ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதாலேயே. ஒருத்தி வேகமாகவும், மற்றவள் வேகம் குறைவாகவும் செயல்பட்டால்..., மொத்த குவாண்டிட்டியில் தடை ஏற்படும்.

எனவேதான்..., வேலை செய்பவர்களின் வேகத்தையும்..., அவர்கள் தைத்துப் போடும் துணியின் தரத்தையும்..., கண்ணில் விளக்கெண்ணையை விட்டுவிட்டு பார்ப்பதுபோல் பார்க்க வேண்டும்.

அப்படி அவர்கள் செய்யவில்லை என்றால்..., மேலே இருப்பவர்களுக்கு அவர்கள்தான் பதில் சொல்லவேண்டி இருக்கும். அப்படியிருக்கையில்..., அந்த பொறுப்பான இடத்தில் இருக்கும் நபர், தொழில் தர்மத்தை மட்டுமே பார்க்க வேண்டும்.

மாறாக சொந்த விருப்பு, வெறுப்புக்கு இடம் கொடுத்தால், மொத்த உற்பத்தியும் பாதிக்கும். எனவேதான் அமுதா அவ்வளவு கண்டிப்பாக இருப்பாள்.

முதல் நாள் வேலைக்கு வந்த வானதி இப்படிக் கேட்கவே..., அவள் முகத்தில் இருந்த எல்லையில்லாக் கவலையைக் கண்டவள்..., உடனடியாக அனுமதித்தாள்.

ஆனால் வானதி செல்லும் முன்பு..., “கவலைப் படுவதால் மட்டும் நம்மளால் எதையுமே சாதிக்க முடியாது பாப்பா.

அந்தக் கவலையை விட்டு வெளியே வந்தால் மட்டுமே நம்மளால் சாதிக்க முடியும்..., இத மட்டும் மனசுலே வச்சுக்கோ...", அவள் துயரம் கண்டு சகிக்க முடியாமல் சொன்னாள்.

அவளையே விழி விரியப் பார்த்தவள்...., 'என்னால் முடியலையே...', என்ற பார்வையைச் செலுத்த,

"எல்லாத்துக்கும் நம்ம மனசுதான் பாப்பா காரணம்..., மன தைரியம்தான் வேணும்...", அவள் பார்வையைப் படித்தவளாக பதில் கொடுத்தாள்.

அவள் பேச்சைக் கேட்டவளோ..., "அந்த மனசுதான் என்கிட்டே இல்லையே..., அது செத்துப் போச்சு....", இதைச் சொல்லும் முன்பே..., கண்ணீர் அவள் கன்னத்தில் உருண்டது.

அவள் கண்ணீரைக் கண்ட அமுதா..., அவளிடம் மேலே எதுவும் சொல்லாமல் வீணாவின் அறைக்கு அனுப்பினாள்.

தன் அறைக்குள் தயங்கித் தயங்கி நுழையும் வானதியைப் பார்த்து, மலர்ந்து சிரித்தாள் வீணா. அவளது சிரிப்பு வானதியைத் தொற்றிக் கொள்ளவில்லை என்றாலும், மனதை இவ்வளவு நேரம் அழுத்திய பாரம் குறைவதுபோல் உணர்ந்தாள்.

"அடடே..., வா வானதி..., வந்து உக்காரு. என்ன நாம பாத்து முழுசா மூணு மணிநேரம் முடியலை..., அதுக்குள்ள என்னைத் தேடி வந்திருக்க..., என்ன விஷயம்...?", நேரடியாக விஷயத்துக்கே வந்தாள்.

"அக்கா..., நான் வீட்டுக்குக் கிளம்பட்டுமா...?", தலை கவிழ்ந்து, அவள் முகம் பாராமல் சின்னக் குரலில் வினவினாள்.

"ஓ..., தாராளமா கிளம்பலாம்..., ஆனால் இப்போ இல்ல. சாயங்காலம் அஞ்சு மணிக்கு", இப்பொழுது முடியாது

என்பதை மறைமுகமாகச் சொல்லிவிட்டாள்.

“என்னால் இங்கே இருக்க முடியலக்கா…”, தன் இயலாமையை நொந்து, வெந்தவாறே சொன்னாள்.

“ஏன் வேலை ரொம்ப கஷ்டமா இருக்கா…? அதெல்லாம் ஒரு வாரத்தில் சரியாப் போய்டும்…”, அவள் சொல்ல வருவது புரிந்தாலும், வலுக்கட்டாயமாக அதை மறைத்துவிட்டு, சாதாரணமாகவே பதில் கொடுத்தாள்.

“தூங்குறவங்களை எழுப்பலாம்…, ஆனால் தூங்குற மாதிரி நடிக்கிறவங்களை எழுப்பவே முடியாதுக்கா…”, விம்மலை அடக்கியவாறு அவள் சொல்ல,

“இதையேதான் நானும் சொல்லுறேன் வானதி…, துக்கத்தை மறக்கணும்னு நினைத்தால் பரவாயில்லை. ஆனால் வலுக்கட்டாயமாக அதை பிடித்து வச்சுருக்கவங்களை நாம எதுவுமே செய்ய முடியாது…”, சூடாகச் சொன்னாள்.

“அக்கா…”, திணறினாள்.

“வானதி…, மறுபடியும் சொல்லுறேன்…, நடந்ததை மறக்க வேண்டாம். ஆனால்…, அதோட வாழப் பழகிக்கோன்னுதான் சொல்லுறேன். இப்போ உன்னை நம்பி ஒரு பெரிய பொறுப்பை கொடுத்திருக்கேன்.

“அந்த பொறுப்பில் உன் கவனத்தைச் செலுத்து. உன்னோட சிதறும் கவனத்தை, வேலையில் ஒருமுகப் படுத்து. உன்னால் நிச்சயம் முடியும். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு…, இப்போ போ”, அவளை அனுப்பினாள்.

வானதிக்கு தன்மேல் நம்பிக்கையில்லை என்றாலும், வீணாவின் பேச்சும், அவள் தன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையையாவது காப்பாற்றுவோம் என்ற எண்ணமும் எழவே, அங்கிருந்து கிளம்பினாள்.

வீணாவைப் பார்க்கச் செல்லும்பொழுது இருந்த மன நிலைக்கும், திரும்பியபொழுது இருந்த மன நிலைக்கும் அதிக வேறுபாடு இருந்தது.

முன்பு முழு தோல்வியைத் தழுவிச் சென்றவள், வரும்பொழுது சிறு நம்பிக்கை ஒளியைப் பெற்றுக் கொண்டு வெளியேறினாள்.

மதிய உணவைப் பெயருக்கு உண்டவள், அதன் பிறகு, அமுதா செய்வதை முயன்று கவனித்தாள். அமுதாவும் அவளைக் கையோடு பிடித்துக் கொண்டே ஒவ்வொரு விஷயத்தையும் செய்தாள். எனவே வேலையில் இருக்கும் பொறுப்பை உணர்ந்து கொண்டாள்.

உணர்ந்த பிறகோ..., எவ்வளவு பெரிய பொறுப்பு என்று மலைப்பாகவும், இதைத் தன்னால் செய்ய முடியுமா என்று கலக்கமாகவும் இருந்தது.

அமுதாவும் வானதியிடம் இருந்த சிறு மாற்றத்தை உணர்ந்து கொண்டாள். இன்னும் ஒரு மாதத்தில் கண்டிப்பாக அவள் மாறிவிடுவாள் என்ற நம்பிக்கை அவளுக்கும் பிறந்தது.

வெளியே தெரியும் மாற்றம் அவள் மனதுக்குள்ளும் நிகழுமா...?

# பகுதி – 15.

உன் சுவாசத்தின்

சுவடைக் கூட

உணர்வேன் நான்......

உயிரே உனக்காக...........

நாட்கள் நரகமாகக் கடந்தது வானதிக்கும், யுவாவுக்கும். வானதியும், யுவாவும் எவ்வளவு முயன்றும், அந்தச் சூழலில் தங்களைப் பொருத்திக் கொள்ள முடியாமல்

தடுமாறினார்கள். அதிலும் யுவாவின் தடுமாற்றம் சொல்லொண்ணா அளவில் இருந்தது.

அன்று அலுவலகத்திலேயே மயங்கிய அவனை, முகத்தில் நீர் தெளித்து, மயக்கம் தெளிய வைத்தாள் அஷ்மிதா. மயக்கம் தெளிந்த அவனோ, மேற்கொண்டு அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசத் தயாராக இருக்கவில்லை.

அவள் எவ்வளவோ கேட்டுப் பார்த்தும், அவன் இறுதியாகச் சொன்னது ஒன்றுதான். “என்னால் இங்கே இனிமேல் எந்த பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை. வீணா நீ முயற்சி செய்யாதே”, அழுத்திச் சொல்லி முடித்துவிட்டான்.

அஷ்மிதாவோ..., “என்ன யுவா இப்படி சொல்லிட்டீங்க....? உங்களால் முடியும், நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். ஒரு மாதம் கொஞ்சம் முயற்சி செய்தீங்கன்ன..., பழைய யுவாவா நீங்க மாறிடுவீங்க”, அவனுக்கு நம்பிக்கை அளிக்க முயன்றாள்.

“பழைய யுவாவா...”, அவன் கண்களில் அப்பட்டமான வலியைப் பிரதிபலித்தான்.

அவனது கேள்வியே அவளை ஊமையாக்க, அவன் கண்களில் தெரிந்த வலியில், ‘ஏன் இப்படி...?’, என்ற அதிர்வு தெரிந்தது.

அவளது மௌனம் அவனையும் தொற்றிக்கொள்ள, மனமோ..., ‘நான் யுவா தானா என்றே எனக்குக் சந்தேகம் இருக்கும்பொழுது, பழைய யுவாவைத் தேடுறியே...’, அவன் பார்வையால் அதை அவளுக்கு உணர்த்த முயன்றான்.

இப்பொழுது அவனது பார்வையின் பொருள் அவளுக்குப் புரியவில்லை. “என்ன ஆச்சு..., ஏதாவது பேசுங்க...”, கிட்டத்தட்ட கெஞ்சினாள்.

அவளது விவாதத்துக்கு இருக்கும் மதிப்பை விட, அவளது கெஞ்சலுக்கு அதிக மதிப்பிருந்தது. “அஷ்மி…, உங்களுக்கு உண்மையாகவே எனக்கு உதவி செய்ய விருப்பமா…?”, அவள் கண்களை நேராகப் பார்த்துக் கேட்டான்.

“இப்போ இந்தகேள்வி எதுக்கு…? நான் இங்கே வந்திருப்பதே உங்களுக்கு உதவி செய்யத்தான்”, அழுத்திச் சொன்னாள்.

“அப்படின்னா…, இனிமேல் என்னை இங்கே எந்த வேலையையும் செய்யச் சொல்லாதீங்க. எனக்கு வராது. அப்படியே நீங்க உதவி செய்துதான் ஆகவேண்டும் என்றால்…., நீங்களே எல்லாவற்றையும் பாத்துக்கோங்க”, விரக்த்தியில் தோய்ந்து வந்து விழுந்தன வார்த்தைகள்.

“ஏன் யுவா…?”, இப்பொழுது அஷ்மிதாவால் தன் அதிர்ச்சியை மறைக்க முடியவில்லை.

“ஏன்….? இந்த கேள்விக்கு விடை என்னிடம் இருந்திருந்தால்.., நான் இப்படி பேசியிருக்க மாட்டேன் சுஷ்மி. இந்த ஒரு மாதமாக இந்த கேள்வியை எனக்கு நானே…, ஒவ்வொரு நிமிஷமும் கேட்டுட்டு இருக்கேன்.

“ஆனால் விடை பூஜ்யம் மட்டும்தான். இப்போ எனக்கு விடை தெரியவே தெரியாத கேள்விக்கு…, என்கிட்டே நீங்க பதிலை எதிர் பார்க்குறீங்க”, அவன் குரலில் அப்பொழுதும் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

“யுவா…., எதையுமே முயற்சி செய்து பார்க்காமல் முடிவெடுக்க முடியாது. உங்க பக்கத் துணையா நான் இருக்கும்போது…, நீங்க ஏன் இவ்வளவு வெக்ஸ் ஆகுறீங்க…?”, எப்படியாவது அவனை மாற்றிவிட மாட்டோமா என்ற ஆசை அவளிடம்.

“முயற்சி….”, விரக்தியாகச் சிரித்தவன், “ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி…, பக்கம் பக்கமா ஏதோ இங்கிலீஷில் பேசுனீங்களே…, அதில் ஒரு வார்த்தை கூட

புரியலை. நீங்க இப்போ சொன்னீங்களே இந்த வெக்ஸ்...., இதுக்கே அர்த்தம் தெரியாமல் இருக்கும் என்னிடம்....,

“வெளிநாட்டு ஆர்டர்...., தாஜ்ல மீட்டிங்.., ஃபையில் நிறைய ஆங்கிலம்..., இதை படிக்கவே எனக்கு ஒரு வரம் தேவைப்படும். அதைவிடப் பெரிய கொடுமை..., என்னோட கையொப்பம் போடச் சொன்னீங்களே...,

“அந்த கையொப்பம் எப்படிப் போடணும்னு எனக்கு சுத்தமாத் தெரியலன்னு சொன்னால் என்ன செய்யப் போறீங்க...? கப்பலில் போகும் என்னிடம், கடலில் குதிக்கச் சொன்னால்....

“எனக்கு நீச்சல் தெரியாதுன்னு நான் சொல்லுறேன்..., இல்ல கடலில் குதிச்சால் தானா தெரிஞ்சுடும்னு நீங்க சொல்லுறீங்க. உங்க வாக்கை நம்பி நான் அதைச் செய்தால் செத்துடுவேன் சுஷ்மி”, அவன் வாயில் இருந்து வந்த ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்பதைப் புரிந்துகொண்டாள்.

மேலே அவனிடம் உடனடியாக விவாதிக்க அவள் தயாராக இருக்கவில்லை. அவனை விட்டுப் பிடிக்கலாம் என்ற உணர்வுடன், “சரி யுவா.., இன்னைக்கு இவ்வளவு போதும். நாம வீட்டுக்குக் கிளம்பலாம்”, உடனடியாக அவனை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டாள்.

கிளம்பி அவர்கள் செல்லும் வேளையில், ஏதோ ஒரு உள்ளுணர்வுத் தாக்க, வேகமாக வீணாவின் அறைக்குச் சென்றான். வழக்கமில்லாத வழக்கமாக அவன் தன்னறைக்கு வரவே, இருக்கையில் இருந்து எழுந்தாள் வீணா.

“சார்...”, அவள் கேள்வியாக இழுக்க, அவளது கேள்வியைக் கண்டுகொள்ளாமல், அந்த அறைக்குள், யாரோ ஒருவரின் எண்ண அலையை உணர்பவன்போல் நின்று கொண்டிருந்தான். அவன் பின்னால் வந்த அஷ்மி,

அவனது நடத்தையை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

“நீங்க இப்போ அழுதீங்களா....?”, அவனது கேள்வி அவளை தூக்கிப் போட்டது.

அதற்குக் காரணம்..., அப்பொழுதுதான் வானதி அழுதுவிட்டு அங்கிருந்துச் சென்றிருந்தாள்.

“நான் அழவேண்டிய அவசியம் கிடையாது சார்...”, அழுத்திச் சொன்னாள்.

“வீணா..., நீங்க எதையோ மறைக்கப் பாக்குறீங்க. அதைத்தான் நான் தேடிட்டு இருக்கேன்...”, தான் ஏன் அப்படிச் சொன்னோம் என்பதை அவன் உணரவே இல்லை.

அவனது பேச்சைக் கேட்ட இரு பெண்களுமே திகைத்தார்கள். அவனோ அவர்களின் அதிர்ச்சியைக் கண்டுகொள்ளாமல், அங்கிருந்து வெளியேறியிருந்தான்.

அன்றுமுதல் இன்னும் அதிகமாக வீணா வானதியைப் பாதுகாத்தாள். பழைய யுவாவாக அவன் இருந்திருந்தால் அவள் கவலைப் பட்டிருக்கவே போவதில்லை. ஆனால் இன்று இருப்பதோ புதிய யுவா.

அவன் பார்வையில் இருக்கும் அலைப்புறுதலும், தீவிரமும், தேடுதலும் அவளுக்குள் சிறு குளிரை விதைத்தது. தங்களிடம் அடைக்கலமாகியிருக்கும் அவளுக்கு எந்தவிதமான ஆபத்தோ, மனதுக்கு கஷ்டம் தரும் விஷயம் நடப்பதையோ அவள் விரும்பவில்லை.

எனவே குஞ்சைப் பாதுகாக்கும் தாய்ப்பறவையாக வானதியைக் காக்க முயன்றாள்.

அஷ்மிதாவுடன் வீட்டிற்கு வந்த அவனோ..., அறைக்குக் கூடச் செல்லாமல், வேகமாக ஷூ, கோட், டை என

அனைத்தையும் கழற்றினான். அதே வேகத்தில், தாயை அழைத்தான். அவனது அழைப்பில் ஓடி வந்தார் கங்கா.

“வா ராஜா..”, வாய் நிறைய அழைத்தார். அவரைக் கைபிடித்து கூட்டி வந்தவன், ஹால் சோபாவில் அவரை அமர்த்திவிட்டு, அவர் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டான்.

அவனது செய்கையில் நெகிழ்ந்த அவர், அவன் தலையை வாஞ்சையாகக் கோதினார். ‘என் மகன் எனக்குத் திரும்பக் கிடைக்க இவ்வளவு பெரிய விபத்து நடந்திருக்க வேண்டாம்....’, அவர் மனம் ஊமையாக அழுதது.

அஷ்மிதா அவனது ஒவ்வொரு நடவடிக்கையையும் ஒரு பார்வையாளராக பார்த்து, மனதில் இருத்திக் கொண்டிருந்தாள். கங்கா அவளை பார்வையாலேயே அருகில் அழைக்க, ‘வேணாம்..., நீங்க அவரைப் பாருங்க’, அவளும் பார்வையாலேயே அவருக்கு பதில் கொடுத்தாள்.

இவர்கள் வந்துவிட்டதை அறிந்த ஈஸ்வர், அறையில் இருந்து வேகமாக வந்தார். வந்தவர் மகனது செய்கையைப் பார்த்தவரின் மனமும் கனிந்தாலும், அவன் விரைப்பான ஆண்மகனாக இருப்பதைத்தான் அவர் விரும்பினார்.

அவனது இந்த நடவடிக்கைகள் அவருக்கு எரிச்சலையே அளித்தது. அவர் சுஷ்மியைப் பார்த்துவிட்டு, தோட்டத்துப் பக்கம் சென்றார்.

அவரது அழைப்பைப் புரிந்துகொண்ட சுஷ்மி, அவர் பின்னால் சென்றாள். “என்னமா எல்லாம் சரியாப் போகுதா...?”, பேச்சைத் துவங்கினார்.

“எல்லாமே சரியா.., தப்பான வழியில் போயிட்டு இருக்கு அங்கிள்”, அவள் மறைக்க விரும்பவில்லை.

“ம்...”, அவர் இதை எதிர்பார்த்திருந்தார் என்பது, அவரது ஆமோதிப்பிலேயே தெரிந்தது.

“ஏன் அங்கிள்..., பேசாமல் யுவாவை நாம ஏதாவது சைக்கேட்ரிஸ்ட் கிட்டே கூட்டிப் போனால் என்ன...? எனக்கு என்னவோ அதுதான் சரியா இருக்கும்னு தோணுது...”, தன் கருத்தைச் சொன்னாள்.

“என்னமா...., அவனுக்கு மூளை குழம்பிடுச்சுன்னு சொல்ல வாறியா...?”, அவர் குரலில், கோபம் எட்டிப் பார்த்தது.

“நான் சொல்ல வரதை நீங்க சரியா புரிஞ்சுக்கலை அங்கிள். யுவாவின் குழப்பத்துக்கும், நம்மளோட குழப்பத்துக்கெல்லாம் விடை கிடைக்கும்னு, நான் நினைக்கிறேன்...”, தன் கருத்தைச் சொன்னாள்.

“இல்லம்மா..., அது சரி வராது. நான் இவ்வளவு பிடிவாதமா அவனை கார்மென்ஸ்க்கு அவனை அனுப்பக் காரணமே, அவன் அறைக்குள்ளே முடங்கிக் கிடந்தால் சரிவராது என்பதால் தான். அவனுக்குத் துணையா அங்கே நீ இருப்பதால் அவன் சீக்கிரம் சரியாயிடுவான்”, அவர் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள முயலவில்லை.

இதில் அவரைச் சொல்லியும் குற்றமில்லை. அவரது அந்தஸ்த்து அவரை இப்படிப் பேச வைத்தது. அவரிடம் பேசி எந்தவிதமான பலனும் இல்லை என்பதைப் புரிந்துகொண்டாள் சுஷ்மி. இதற்கு வேறு எதாவதுதான் செய்தாக வேண்டும்.

அவள் முடிவெடுத்துவிட்டு அங்கிருந்து கிளம்பினாள். மறுநாள் யுவா கார்மென்ஸ்க்கு வர மாட்டன் என்ற அவளது நினைப்பைப் பொய்யாக்கிவிட்டு, அவளுக்காகக் காத்திருந்தான்.

வந்தவன் ஒரு சதவீதம் கூட வேலையைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. மாறாக, அவன் தனக்குள் நடக்கும் மாற்றத்துக்கு விடை கண்டுபிடிக்க முயன்றான்.

முயன்ற அளவு அவனது முயற்சியைத் தேக்கினாள் அஷ்மிதா. அவன் எங்கு சென்றாலும் அவனது நிழலாக உடனிருந்தாள். அவனது கவனம் முழுவதும் வீணாவின் நடவடிக்கை, அவளுடன் பேசுபவர்கள், அவள் அறைக்குச் செல்பவர்கள் என அதிலேயே நிலைத்தது.

அவனது நோக்கம் புரிந்ததால், வானதியை அலுவலகத்தில் தன்னை நெருங்கக் கூடாது என கண்டிப்புடன் சொல்லிவிட்டாள். வீணாவின் கண்டிப்பு வானதியை அப்படியே செயல்பட வைத்தது.

நாட்கள் இவ்வாறே நகர, தொடர்ந்த நாட்களில் வானதியும், யுவாவும் ஒரு புதுவித உணர்வால் பிணைக்கப் பட்டார்கள். இரவுகளில் நிகழ்ந்தது இந்த மாற்றம்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் வானதி, அன்று தன்னை யாரோ அழைக்கும் உணர்வில் கண் விழித்தாள். விழித்த அவள் முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள்.

அந்த அழைப்பால் அவள் பயம் கொள்ளவில்லை மாறாக.., தன்னவன் அழைத்த உணர்வில்..., இதயம் படபடப்பதை உணர்ந்தாள். அதே நேரம் யுவாவும் கனவில் இருந்து விழிப்பவன்போல், திடுக்கிட்டு விழித்தான்.

‘நான் இப்பொழுது யாரையோ அழைத்தேனே..., யார் அது...? இப்பொழுது யோசித்தால் அந்தப் பெயர் கூட நினைவிற்கு வரவில்லையே ஏன்...?’, தலையைத் திருப்பி நேரம் பார்க்க, அது நள்ளிரவைக் காட்டியது.

வானதி அந்த உணர்வை ரசிக்க, அதைக் கொடுத்தவனோ குழப்பத்தின் பிடியில் சிக்கிக் கொண்டு தவித்தான்.

## பகுதி – 16.

ஓலைக் குடிசைக்குள்

ஓராயிரம் கனவுகள்

வண்ணம் சேருமா...

வாடிப் போகுமா....?

சரவணனின் கனவு இல்லம் நனவாகத் துவங்கிய நாள் அன்றே, அவர்களது நிச்சயத்தையும் வைத்துவிட எண்ணினார்கள். சரவணனும் அதற்கு சம்மதித்துவிட்டான். நீண்ட வருடக் கனவு நனவாகப் போகும் பரபரப்பு அவனிடம்.

அதையும் மீறி.., தேவியின் மேல், கோபமும் இருந்தது.

என்று அவர்கள் நிச்சயம் பற்றி பேசினார்களோ, அதன் பிறகு தேவியைக் காண்பதே அரிதாகிப் போனது அவனுக்கு. அப்பொழுது கல்லூரி இரண்டாம் வருட, செமெஸ்டர் விடுமுறை என்பதால், அவள் வீட்டிற்கு வெளியே செல்வதையே தடை செய்தார்கள்.

அவள் உடன் வளர்ந்தவள், உரிமையுள்ளவள் என்றாலும், கிராமத்துக்கே உரிய கட்டுப் பெட்டித்தனம் அதிகமாகவே இருந்தது. தேவிக்கும் அவனைக் காண முடியாத நாட்கள் நரகமாக இருந்தாலும், அதில் ஒரு சுகம் இருப்பதை உணர்ந்தாள்.

மாரி வயோதிகம் காரணமாக வேலைக்குச் செல்ல முடியாமல், வீட்டோடு தங்கி விட்டார். எனவே, பகல் வேளையில் தேவியைச் சந்திக்க, மாரியை அவன் கடந்தாக வேண்டும்.

அப்படியே சென்றாலும், அவரது கேள்விகள் அவனை அந்தப் பக்கமே போக விடாமல் செய்துவிடும். மாரி, சரவணின் காதலுக்கு முழு சம்மதம் கொடுப்பவர்தான். ஆனால் அவரது அனுபவம், சிறியவர்களை கண்காணிக்கச் செய்தது.

தேவி அதை உணர்ந்துகொள்ள, சரவணன்.. அதை ஒத்துக்கொள்ள முடியாமல் தவித்தான். அன்று அவள் கொல்லைப் புறம் அமர்ந்து, பாத்திரங்களை கழுவிக்

கொண்டிருக்க, வேலியைத் தாண்டிக் குதித்து அவளைக் காண வந்தான் சரவணன்.

அவனை அங்கே கண்டவளின் கண்கள் சந்தோசத்தை பிரதிபலித்து, நொடியில் பயத்தைக் காட்டியது.

“ஐயோ மாமா இங்கே என்ன செய்யிறீங்க…? ஆயா உள்ளாரதான் இருக்காங்க. நீங்க போங்க…”, அவனை விரட்டினாள்.

“ஏய்.., வாயத் தொறந்த…, என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. வூட்டுக்கும் வரல…, தோட்டத்துக்கும் வரல…, பொறவு உன்னை நான் எங்குட்டுதான் பாக்குறது…”, மெலிதாக கோபித்துக் கொண்டான்.

“அதான் நாலு நாள்ல நிச்சயம் வச்சுருக்காங்க இல்ல. அப்போ பாத்துக்குறது…”, கண்கள் குடிசை வாயிலையே பார்க்க, அவளும் மெதுவாகப் பேசினாள்.

“நீயென்ன…, நாலு நாளுன்னு சொல்லிபுட்ட…, அது நா…..லு நாளுன்னு எனக்கு மட்டுந்தானே தெரியும். பெருசுங்களுக்கு நம்ம அவஸ்த்தை எங்கே புரியுது. உன்ன வீட்டுக்குள்ளேயே பூட்டி வச்சுக்கிடுதாக.

“அதான்…, இன்னைக்கு எப்படியும் உன்னைப் பாக்காம போறதுல்லன்னு அங்ஙனயே காவல் இருந்தேன்”, ஏக்கமாகச் சொன்னான்.

ஒருவாரப் பிரிவிற்கே அவன் இவ்வளவு தவித்துப் போகிறானே என்று அவளுக்குத்தான் பாவமாக இருந்தது. ஆனாலும் அவளும்தான் என்ன செய்ய முடியும்…? பெரியவர்களின் பேச்சுக்கு கட்டுப்படுவதைத் தவிர…….

அவள் பேசாமல் இருக்கவே…, “என்ன நான் சொல்லிகிட்டே இருக்கேன். நீ பேசாமலே இருக்கவ…”, அவளிடம் புலம்பினான்.

“ஏ... ஆத்தா..., நாலு பாத்திரம் வெளக்க இம்புட்டு நேரமா...? வெரசா வாத்தா...”, மாரியின் குரல் கேட்கவே,

“என்ன செய்வியோ தெரியாது..., சாயங்காலம் கம்மாக் கரைக்கு வாற அம்புட்டுதான்...”, அவசரமாகச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

அவளது பதிலைக் கேட்க அவன் அங்கே இருக்கவில்லை. அவன் வேலியைத் தாண்டிய மறு நிமிடம், மாரி தேவியின் அருகில் இருந்தார்.

“மாமங்காரன்தானே வந்துட்டுப் போறான்..., அவசரத்துக்குப் பொறந்த பய..., கல்யாணம் கட்டிக்கன்னு சொன்னப்ப, வீராப்பா இருந்துட்டு, இப்போ குட்டிபோட்ட பூனை மாதிரி வீட்டையே சுத்தி வாரான்.

“சரி சரி..., நீ உள்ளார போ..., மீதிய நான் விளக்குறேன்”, அவள் கையில் இருந்து பாத்திரத்தை வாங்கினார்.

“நீ போ ஆயா..., இதோ முடிச்சுட்டேன்...”.

“இந்த நாலு பாத்திரம் விளக்க முடியாமத்தான் உன்ன வேலை ஏவுனனா...? காலையில இருந்து இங்கனயே நிக்கானேன்னுதான் உன்ன அனுப்புனேன். என்ன புள்ளையோ போ..., இப்படி உம்மேல பயித்தியமா இருக்கானே.

“கண்ணாலம் கட்டுற வரைக்கும் பாத்து பதமா நடந்துக்கத்தா...., ஆயா சொல்லுறது விளங்குதா....?”, பேரனின் காதலையும், தனது கண்டுணர்வையும் சொன்னவர், பேத்தியிடம் நாசூக்காக கண்டிக்கவும் மறக்கவில்லை.

இதுதான் மாரி..., சிறியவர்களின் ஆசையை எவ்வளவு புரிந்து கொண்டாரோ, அதே அளவு அவர்களின் வயதிற்குரிய ஆசைகளையும் புரிந்திருந்தார்.

மாரி இவ்வாறு சொல்லவே..., மாலையில் கம்மாக்கரையில் காத்திருப்பதாகச் சொன்னதுதான் நினைவுக்கு வந்தது. அதை எண்ணியவாறே வீட்டுக்குள் சென்று மறைந்தாள்.

மாலை நெருங்க நெருங்க, அவளை பரபரப்பு தொற்றிக் கொண்டது. காலையில் ஆயா சொன்னதைக் கேட்ட பிறகு, அதையும் மீறி அவளால் செல்ல முடியவில்லை.

சரவணனோ.., அவள் எப்படியும் வந்துவிடுவாள் என காத்துக் கொண்டிருந்தான். மாலையில் துவங்கிய அவனது காத்திருப்பு, இரவு கவிழும் வேளையில்தான் முடிவுக்கு வந்தது.

அவள் வரவில்லை என்பதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவளுக்குத் தன்மேல் ஆசையில்லை..., அப்படி இருந்திருந்தால் வந்திருப்பாளே.., என எண்ணி எண்ணி மாய்ந்து போனான்.

தான் அவளிடம் சொன்ன ஒரு வார்த்தைக்காகவாவது, ஒரு எட்டு வந்திருக்கலாம் என்பதே அவனது எண்ணமாக இருந்தது. தேவியின் வீட்டு சூழலை அவன் நினைக்கவே இல்லை. மாரிதான் பேத்தியை கண்கொத்திப் பாம்பாக கண்காணித்துக் கொண்டிருந்தாரே....

அதன் பிறகு, அவளுக்கு பட்டுப் புடவை, வாங்கியதைக் கூட, தாயின் கைகளிலேயே கொடுத்து அனுப்பினான்.

“மாமா எங்கத்த...?”, தேவி கேட்க,

“அவன் வேலையா இருக்கான்தாயி”, இந்த பதில்தான் அவளுக்குக் கிடைத்தது.

நிச்சயத்தன்று காலையே ஏக பரபரப்பாக இருந்தது அவர்கள் வீடு. அவர்கள் குடும்பமே பெரியது..., இதில் உறவுக் காரர்கள், ஊர்க் காரர்கள் என, கூட்டம் நிரம்பி வழிந்தது.

சிறுவர்களின் ஆட்டம் பாட்டம், பெரியவர்களின் நலம் விசாரிப்பு, என களை கட்டியது.

பணம் குறைவாக இருந்தாலும், அங்கே பாசத்துக்கோ, விருந்து உபசாரங்களுக்கோ குறைவில்லை. சரவணன் வாங்கியிருந்த தோட்டத்தில் தான், அவர்களின் நிச்சயம் நடப்பதாக இருந்தது. பெரிய பந்தல் போட்டு, அவன் வீடு வைக்க இருந்த இடத்தில் தறி நட்டார்கள்.

அந்த தறிநடவு முடிந்த பிறகு, பந்தலில், வெற்றிலை பாக்கு, பழம் என வைத்து, திருமணம் இந்த தேதியில் வைப்பது என குறிக்கப்பட்டு, தேவி, சரவணனின் பெற்றோர் தட்டு மாற்றிக் கொண்டார்கள்.

அதன் பிறகு விருந்து பரிமாறப்பட, பந்தி களை கட்டியது. இவ்வளவு நிகழ்விலும், சரவணன் தேவியின் அருகிலேயே இருந்தும், அவள் முகம் காண மறுத்தான்.

தேவிக்கும் அவன் கோபம் புரியாமல் இல்லை. ஆனால் சுற்றிலும் இவ்வளவு உறவுகளை வைத்துக் கொண்டு, அவர்களின் கேலி, கிண்டலில் திணறிக் கொண்டிருக்கையில் அவளும் என்னதான் செய்வாள்?

அதிலும் செம்புராஜின் அடாவடிதான் அதிகமாக இருந்தது. “ஆத்தா.., என் மவளுக்கே கண்ணாலம் ஆவப் போவுது..., ஆனா என்னைய மட்டும் கண்டுக்காமலே இருக்கியே...”, மாரியிடம் அவன் குறைபட,

“இம்புட்டு பெரிய பொண்ணு இருக்க கிழவனுக்கு எவம்லே பொண்ணு கொடுப்பான்...”, கூட்டத்தில் ஒருத்தி குரல் கொடுக்க, அங்கே சிரிப்பலை எழுந்தது.

“அது எவண்டா என்னை கிழவன்னு சொன்னது..., அய்த்தே நீதான..., இரு உன் மவளையே கட்டிக் காட்டுதேன்...”, செம்பு சவால் விட,

“ஐயோ ராசா..., நீ கேட்டு நான் என் பொண்ணை இல்லன்னு சொல்லிடுவனா...”, அவரும் விடவில்லை.

“ஆத்தாடி..., சந்தடி சாக்குல..., அந்த குந்தாணியை என் தலையில் கட்டலாம்னு பாக்குறியா...? நான் இல்ல....”, வெற்றிகரமாகப் பின் வாங்கினான்.

இந்த கலகலப்பு எதுவும் சிறியவர்களை தொற்றிக் கொள்ளவில்லை. சரவணன் வீம்புக்காக தன் கோபத்தை பிடித்து வைத்துக் கொண்டிருக்க, தேவியோ அவனிடம் பேசும் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தாள்.

அது அப்பொழுதே அவளுக்குக் கிடைத்தது. “ஆத்தா... புள்ளைங்களை சாப்பிட கூட்டியா....”, வேலப்பன் குரல் கொடுக்க, அவர்களைப் பந்தியில் அமர்த்தினார்கள்.

பந்தியில் பரிமாறப் பட்டவைகளை என்னவென்றே ருசி அறியாமல் உண்டு கொண்டிருந்தான் சரவணன். தேவியோ அதை அளைந்து கொண்டிருந்தாள்.

“மாமா..., பேசு மாமா...”, சாப்பாட்டை வெறித்தவாறே, அவனிடம் கெஞ்சினாள்.

அவளுக்குத் தெரியும்..., அவளது மாமா என்ற அழைப்பே அவனை கனிய வைத்துவிடும் என்று. அப்படியிருக்கையில்.., அவள் கெஞ்சலில் அவன் உருகாமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

“உங்கிட்ட பேசாமல் யார்ட்ட பேசப் போறனாம்...”, அவனது கோபத்தை, அவனது காதல் வென்று விட்டது.

“மாமா...”, இந்த அழைப்பு..., அவளது ஒட்டுமொத்த சந்தோசத்தையும் காட்டியது.

“இருந்தாலும் நீ அன்னைக்கு என்னை ஏமாத்தி இருக்க வேண்டாம். உனக்கு எம்மேல ஆசையே இல்லையா புள்ள...”, தன் மனத்தாங்கலைக் கேட்டுவிட்டான்.

உணவை உண்ணப் போனவளின் கரங்கள் அப்படியே நிலைக்க.., “என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா

மாமா…?”, அவன் கேட்ட கேள்வியைத் தாங்க முடியாமல், கண்களில் கண்ணீர் குளம் கட்டியது.

அவள் முகம் வாடினாலே தாங்காதவன், அவள் கண்களில் கண்ணீரைக் கண்டதும் துடித்துவிட்டான். “உன் கண்ணுல இருந்து அந்த கண்ணீர் வழிஞ்சுதுன்னா…., நான் இருக்கமாட்டேன் புள்ள..”, அவள் கண்ணீருக்குக் காரணமாகிவிட்டோமே என்று தவித்தான்.

அவனது கேள்வியால் அவள் அடைந்த மன வலியை விட, பலமடங்கு வலியுடன் அவன் சொல்ல, பெருகத் துவங்கிய கண்ணீரை அடக்க அவள் பெரும் பாடுபட்டாள்.

ஆனாலும் அவன் சொன்ன வார்த்தையின் வீரியமும், அவன் காதலும் புரிய, முயன்று தன்னை அடக்கினாள். அவள் முயற்சி புரிய, “மாமா ஏதோ கோபத்தில் கேட்டுட்டேன்…, சாப்பிடு..”, ஆதரவாகச் சொன்னான்.

“நீங்களும் சாப்புடுங்க மாமா…, இன்னைக்காவது ருசியறிஞ்சு சாப்பிடுங்க…”, அவள் காதலாகச் சொன்னாள்.

இருவரின் பார்வையும் சந்தித்துக் கொள்ள, முதல் முறையாகத் தன் காதலை கண்களில் தேக்கி அவனைப் பார்த்தாள். அவள் பார்வை செய்யும் மாய வலையில் சுகமாய் சிக்கிக் கொண்டான் சரவணன்.

அதன்பிறகு தொடர்ந்த நாட்கள், அவர்கள் மனப் பெட்டகத்தில் சேகரிக்கும் சுகமான நிகழ்வுகளை அவர்களுக்கு அளித்தது. தேவியின் காதலின் ஆழத்தை அறிந்து கொண்டான் சரவணன்.

அதே நேரம் தேவியும் அவன் தன்மேல் வைத்திருக்கும் நேசத்தன் ஆழத்தை கண்டுகொண்டாள்.

அவர்கள் வாழப்போகும் வீட்டை, அங்குலம் அங்குலமாக அவனே கட்டினான். துணைக்கு ஒரு கொத்தனார் மட்டுமே. பெரியவர்கள் எவ்வளவோ சொல்லியும், அவன்

வேறு யாரையும் வேலைக்கு வைத்துக்கொள்ள சம்மதிக்கவில்லை.

அந்த கிராமம் முழுவதும் அதுஒரு பெரிய செய்தியாகவே பரவியது.

“எலேய் சரவணா..., இப்படி கஷ்டப் படணுமா...? ரெண்டு கொத்தனார் போட்டு வேலை செய்தால், ஒரு மாசத்தில் முடிஞ்சுடும். என்னமோ காலம் முழுக்க அந்த ஓட்டு வீட்டில் இருக்கப் போற மாதிரி எதுக்கு இப்படி....?”, பண்ணையாரின் மனைவி லஷ்மியம்மாதான் கேட்டுவிட்டார்.

“அம்மா..., நான் என் தேவியோட வாழப் போற வீடு..., அது நான் கட்டுனதா இருக்கணும்னு எனக்கு ஒரு சின்ன ஆசை அவ்வளவுதான்”, அவன் சாதாரணமாகச் சொல்ல, அவன் காதலின் ஆழம் பார்த்து வியந்தார்.

அவன் வீடு ஒன்றும் வசந்த மாளிகை இல்லை. மொத்தமே ஒற்றை அறை. சிறியதாக ஒரு திண்ணை. பின்னால் கொட்டகையில் அடுக்களை, இவ்வளவுதான் அந்த வீடு.

இருவரின் காதலின் ஆழம் எதுவரை இருந்தது என்றால்..., ஒருவர் மனதில் நினைப்பதை மற்றவர் உணரும் அளவு இருந்தது. தேவி, அவனைக் காணவேண்டும் என்று மனதுக்குள் நினைத்தாலே, அவள்முன் பிரசன்னமாகி விடுவான்.

அது எப்படி என்பது அவளுக்கே தெரியாது. ஒருநாள் அதை அவனிடம் கேட்டுவிட, அவன் மனது அசாத்திய அமைதியையும், பரவசத்தையும் உணர்ந்தால், அவளைக் காண வந்துவிடுவதாகச் சொன்னான்.

அதேபோல், அன்று காய் வெட்டும் வேளையில், அவள் கையை வெட்டிவிட, அடுத்த சில நிமிடங்களில் அவள் வீட்டில் இருந்தான். வந்தவன் கேட்ட முதல் கேள்வியே..., “தேவிக்கு என்ன ஆச்சு..?”, என்பதுதான்.

அவள் தனது வலதுகை பெருவிரலைக் காட்ட, “பாத்து காய் வெட்டக் கூடாது...”, என அவளைக் கடிந்துகொண்டான். அவனது இந்த செய்கைகளே, தேவியை அவன்மேல் தன் உயிரையே வைக்க வைத்தது.

சரவணன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தால் கூட, தேவி தன்னை சாதாரணமாகப் பார்ப்பதைக் கூட உணர்ந்துகொள்வான். அந்த அளவு அவளது பார்வைமுதல், உணர்வுகள் வரை அவனுக்கு புரிந்திருந்தது.

காலையில் துவங்கி இரவுவரை வீடுகட்டும் வேலை செய்வான். மாலையில் தோட்டத்தைக் கவனிக்கச் செல்வான்.... இப்படியாக சரவணன் கடினமாக உழைத்தான். மாலையில் தேவியும் அவன் உதவிக்கு வந்தாள்.

இருவரும் தனித்திருக்கும் வேளைகள் அதிகமாக இருந்தாலும், சரவணன் ஒருபொழுதும் தன் எல்லையை மீறியதே இல்லை. அதிகபட்சமாக அவள் எதிர்பாராத வேளையில் அவளை அணைப்பான் அவ்வளவுதான்.

அதற்கே அவள் வெலவெலத்துப் போவாள். எனவே அவளை அதிகம் கஷ்டப்படுத்த மாட்டான். அன்று தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கும் வேளையில், எதிர்பாராத விதமாக ஒரு பாம்பை மிதித்துவிட்டான்.

பொதுவாக கிராமப் புறங்களில், தோட்டத்தில் உலவும் பாம்புகளை அவர்கள் அடிக்க மாட்டார்கள். அதற்குக் காரணம், அவர்களின் விளைச்சலில், நஷ்டத்தை விளைவிக்கும் எலிகளை அவை பிடித்து சாப்பிட்டுவிடும் என்பதால் தான்.

அங்கே உலவும் பாம்புகளும், மனித சுவடு கண்டால் பதுங்கிக் கொள்ளும். சரவணன் வேலை முடித்து, இரவு

கவிழும் வேளையில் கிளம்பியதால், வரப்பிற்கு குறுக்காகக் கிடந்த பாம்பை அவன் கவனிக்கவில்லை.

அதை அவன் சாதாரணமாக எடுத்துக் கொண்டு, உடனடியாக காலின் கடிபட்ட இடத்துக்கு மேலாக துண்டால் கட்டுபோட்டுவிட்டு, கையில் இருந்த கத்தியால் பாம்பு கடித்த இடத்தை கீறி விட்டுவிட்டான்.

ஆனால் உடன் இருந்த தேவிதான் துடித்துப் போனாள். அப்பொழுது துவங்கிய அவளது அழுகை, வயித்தியன் வீட்டுக்குச் சென்று, பச்சிலை கட்டு போட்ட பிறகு கூட நிற்கவில்லை.

அவளை யாராலும் சமாதானம் செய்யவும் முடியவில்லை. அவள் அழுவதைப் பார்த்து, அவனுமே அழுதான். இதற்குமேலும் அவர்களின் திருமணத்தை தள்ளி வைக்க விரும்பாமல், அடுத்த மாதமே வைக்க முடிவெடுத்தார்கள். நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்.......

# பகுதி – 17.

காற்றில் கலந்த உன்னை

சுவாசித்து வாழ்கிறேன்

உயிரே உனக்காக.........

அன்றைய இரவுக்குப் பிறகு, தொடர்ந்த இரவுகளிலும், வானதி அதே உணர்வை அனுபவித்தாள். இப்பொழுது அந்த உணர்வு, வெறும் அழைப்போடு நிற்கவில்லை, மாறாக...., தன்னவன் தன்னுடனே இருக்கும் உணர்வை அடைந்தாள்.

அன்று இரவில் அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க, அவளை பெயர்சொல்லி அழைப்பது கேட்டு கண்விழிக்க முயல, அவளால் முடியவில்லை. ஒருமுறை, இரண்டுமுறை முயன்று பார்த்தவள், முடியாமல் போகவே, அந்த முயற்சியை விடுத்தாள்.

அந்த உணர்வை அனுபவிக்க முயன்றாள்....., அவள் படுக்கையில் யாரோ அமர்ந்து, அவள் பின்னங்கையில் முத்தமிடுவதை உணர்ந்தாள். அது அத்தோடு நில்லாமல்...., அந்த இதழ்கள் முன்னேறியது.

முன்னேறிய முகம், அவள் கழுத்தடியில் இளைப்பாற, மூச்சுக்காற்றின் வெம்மையை உணர்ந்து சிலிர்த்தது அவள் தேகம். அவளிடம் எதிர்ப்பு எதுவும் இருக்கவில்லை. அவள் உணரும் ஸ்பரிசம் அவளுக்குப் புதிதில்லை.

கனவில் தன்னவனுடன் வாழ்வதாக அவள் உணர்ந்தாள். அதைத் தடுக்கவும் அவள் விரும்பவில்லை. அவன் இதழ்கள் அவள் நெற்றி, கன்னம் என நகர்ந்து, இதழ்களில் அழுந்த புதைந்தபோழுது, எழுந்த அவள் உணர்வுகள் பொய்யில்லை.

அவள் மேனியில் அவன் கரங்களின் அழுத்தங்கள், இதழ் முத்தத்தில்..., சுவாசத்துக்காக அவள் திணற, அவன் விலகும் எண்ணமே இல்லாமல் அவளுக்குள் புதைய, அவனை விலக்கும் எண்ணமே இல்லாமல் அந்த முத்தத்தில் லயித்திருந்தாள்.

இன்னும் இன்னும் அவன் முன்னேற..., முழுதாக உணரும் அவன் மேனியின் வெம்மையையும், மூச்சுக்காற்றின் சூட்டையும், அவன் கரங்கள் கொடுக்கும் உணர்வையும், கிளர்ந்தெழும் தாபத்தையும் அப்பட்டமாக உணர்ந்தாள்.

அவள் மேனியில் முழுதாக அவன் ஆளுமையை உணர்ந்தும், அவனுக்கு உடன்படும் உணர்வில்தான் அவள் இருந்தாளே தவிர, ஒரு சதவீதம் கூட எதிர்க்கவில்லை.

அதே நேரம் யுவாவோ..., கனவில் தான் ஒரு பெண்ணுடன் நெருக்கமாக இருப்பதைக் கண்டுகொண்டான். அவன் தேகம் முழுவதும்..., ஒரு பெண்ணின் மென்மையையும், அவன் கரங்களும் அவனுக்கு உணர்த்தும் செய்தியையும் நம்ப முடியாமல் திணறினான்.

அவனால் அவளிடமிருந்து விலக முடியவில்லை. அவனது தாபம் கிளர்ந்து எழ, அவளுடன் ஐக்கியமாக இருந்த கடைசி நொடி, தன்னுணர்வுக்கு மீண்டு கண் விழித்தான். அவன் கண்விழித்த அடுத்த நொடி, வானதியின் விழிகள் திறந்துகொண்டன.

கண் விழித்தவள் திகைத்தாள். அவள் இருந்த கோலம் அவளை திகைக்க வைத்தது. லேசாக கலைந்திருந்த ஆடைகள் சொன்னது, அது கனவில்லைஎன்று. முத்தத்தின் ஈரத்தை அவள் முகம் முழுவதும், இப்பொழுதும் அவள் உணர்ந்தாள்.

அவள் தேகத்தில் கிளர்ந்திருந்த உணர்வுகள் அடங்கியிருக்கவில்லை. தன்னவனுடன் கனவில் கூட, கூட முடியவில்லையே என்று கண்கள் கலங்கியது.

அதே நேரம், இது என்ன உணர்வென்று திகைத்துப் போனாள். ‘என் தொடரும் இரவுகள் இப்படித்தான் கழியுமா...?’, கேள்வியே அவளைக் கொன்றது.

‘ஏன் என்னோட வாழாமலே போயிட்டீங்க....? இப்போ நான் உணர்ந்த உணர்வு பொய்யில்லை. அப்படியென்றால் என்னோடுதான் இருக்கீங்களா..? அப்படியென்றால் ஏன் என்னைவிட்டு விலகினாய்...?’, அழுகை வெடித்துக் கிளம்ப, கட்டிலில் குப்புற விழுந்து, குலுங்கி அழத் துவங்கினாள்.

யுவாவோ..., தன்னையே நம்ப முடியாமல் திகைத்திருந்தான். அவன் உடல் உணர்த்தியை செய்தியை ஒதுக்க முடியாமல் தவித்தான். உச்சத்தில் நின்ற தாபம் வடிய மாட்டேன் என்று அடம் பிடித்தது. அவள் இப்பொழுதே வேண்டும் என்று ஒவ்வொரு அணுவும் துடித்தது.

‘நான் ஒரு பெண்ணோடு இருந்தேன். அதுவும் நெருக்கமாக...., அவளிடம் கொஞ்சம் கூட எதிர்ப்பில்லை. அப்படியென்றால்...., அவள் என்னவளா...?

‘அவள் என்னவள் என்றால்..., எங்கே இருக்கிறாள்..? என்னைத் தேடி ஏன் வரவில்லை...? நடந்த விபத்தில் அனைத்தையும் மறந்ததுபோல்..., அவளையும் நான் மறந்துவிட்டேனா...?

‘அப்படியே இருந்தாலும் நான்தானே மறந்தேன்.., அவள் மறந்திருக்க மாட்டாள் தானே. அப்படியிருக்கையில்...., அவளும் இப்பொழுது இல்லையா...?’, இந்த நினைவே வெறுத்தது.

“இல்ல..., அவ இருக்கா..., எங்கேயோ இருக்கா..., இருக்கணும்...”, வாய்விட்டே சொன்னான்.

‘இப்பொழுது நான் உணர்ந்த உணர்வு எவ்வளவு உண்மையோ..., அவள் இருப்பதும் அவ்வளவு உண்மை...’, தனக்குத் தானே சமாதானம் செய்துகொண்டான்.

அவன் சமாதானம் செய்துகொண்டாலும்..., இதயம் துடிக்கும் வேகம் மட்டும் குறையவே இல்லை. என்னவோ இதயத்தைப் பிசையும் உணர்வு, மனம் உள்ளுக்குள்ளேயே ரத்தம் வடிப்பதை உணர்ந்தான்.

வானதியின் அழுகை அவனைத் தாக்கியது. அவள் அழுது ஓயும்வரை அவனால் தன் மனதை கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. அவள் உறங்கிய பிறகே சற்று ஆறுதல் அடைந்தான்.

அவனால் அதன் பிறகு உறக்கத்தைத் தொடர முடியவில்லை. எங்கே மீண்டும் அந்தக் கனவு வந்து, அவளை தொல்லை செய்துவிடுவோமோ என்று அஞ்சி விடியும்வரை விழித்திருந்தான்.

காலையில் அவனால் நிம்மதியாக உணவு கூட உண்ண முடியவில்லை. அவனுக்காக இல்லை என்றாலும், தான் உண்ணவேண்டும் எனக் காத்திருக்கும் தாய்க்காக, தன் மனக் கலக்கத்தை மறைத்துக்கொண்டு, சாப்பிட்டோம் என்று பெயர் பண்ணிவிட்டு எழுந்துவிட்டான்.

வானதியும் வழக்கத்தைவிட அதிகமாக சோகத்தில் இருப்பதைக் கண்டுகொண்டாள் வீணா. பத்மாவும் அதை உணர்ந்தவர், மிகுந்த வருத்தம் கொண்டார்.

உணவு வேண்டவே வேண்டாம் என்று பிடிவாதமாக அவள் மறுக்கவே, அவர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. கார்மெண்ட்ஸ்க்கு கிளம்பி, வெளியே சென்று நின்றுகொண்டாள்.

“என்னம்மா வானதி இப்படி இருக்கா…?”, அவளால் தாங்க முடியாமல் தாயிடம் புலம்பியே விட்டாள்.

பத்மாவுக்கும் வருத்தம்தான்…., மன வருத்தத்தில் இருந்து வெளியே வரவேண்டும் என்ற எண்ணமே இல்லாதவளை என்னதான் செய்ய முடியும்? அவர்களால் முடிந்த அளவு, அவளது வீட்டுச் சூழலை மாற்றினார்கள்.

மனதை மாற்றுவது அவள் கையில் மட்டுமே இருக்கும் விஷயம். அப்படியிருக்கையில் வெளியாள் என்ன செய்ய? வெறும் பார்வையாளராக மட்டுமே இருக்க முடிந்தது.

வீட்டிற்கு வந்தால், அறைக்குள் முடங்குபவள்…, உணவு உண்ணக் கூட, கூடத்துக்கு வர மறுத்தாள். அவளை வர வைக்க, உணவை அறைக்குக் கொண்டு செல்வதை மறுக்க, உணவு உண்ணாமலே உறங்கத் துவங்கினாள்.

அவளது பட்டினி தாங்க முடியாமல், மீண்டும் அறைக்கே வீணா உணவு கொண்டு செல்லத் துவங்கினாள். அத்தோடு கட்டாயப்படுத்தி உண்ணவும் வைத்தாள். இரவு உணவு உண்பதே, வீணாவின் கட்டாயத்துக்காக என்றாகிப் போனது.

யாரிடமும் மனம் விட்டு பேசுவது கிடையாது. பேச முயன்றால் தானே…, மனம் விட்டு பேச. வீணாவும் அவளை, அவள் கூட்டை விட்டு வெளியே கொண்டுவர, ஆனமட்டும் போராடினாள்.

வீணா என்ன பேசினாலும்..., அவளது பதில் மௌனம் மட்டுமே. இறுதியில் அவள்தான் தோல்வியைத் தழுவினாள். வானதி இங்கே வந்து இவ்வளவு மாதம் ஆன பிறகும், பெற்றோர், உற்றார், உறவினர் யாரிடமும் பேச மறுத்துவிட்டாள்.

அவர்களும் தங்கள் மகள் உயிரோடாவது எங்கேயாவது ஒரு மூலையில் இருந்தால், தங்களுக்கு அதுவே போதும் என்று விட்டுவிட்டார்கள். ஆனாலும் தினமும் வீணாவுக்கு போன் செய்து விசாரிக்க மறுக்கவில்லை.

என்றாவது ஒருநாள், தங்கள் மகள் அந்த சோகத்தில் இருந்து மீண்டுவிட்டாள் என்ற வார்த்தையைக் கேட்க மட்டுமே காத்திருந்தார்கள்.

தன்னுடன் பதுமைபோல் வரும் வானதியை, எதுவும் செய்யமுடியாத நிலையை நொந்தவாறே, அழைத்துச் சென்றாள் வீணா.

வானதிதான் இப்பொழுது தனியாக சூப்ரவைசிங் செய்கிறாள். அமுதாவின் அதட்டல் செய்யாத மாயத்தை, வானதியின் அமைதி சாதித்துக் கொடுத்தது.

வேலையின் நடுவில் அவர்கள் பேசினால், அதைக்கூட அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பாள். அவளது அந்தப் பார்வையே, வேலையைத் தொடரச் செய்யும்.

இன்றும் வருகைப் பதிவு அட்டையைச் சரிபார்த்து உள்ளே அனுப்பியவள், அறையைப் பார்வையிடத் துவங்கினாள். இரவு முழுவதும் தன்னவனின் ஆதிக்கத்தையும், தாக்கத்தையும் அதிகமாக உணர்பவள்,

பகல் வேளையில் குழப்பத்திலும், வேலை செய்யவேண்டிய கட்டாயத்திலும் அவன் நினைவுகளைக் கொஞ்சம் தள்ளி வைக்க முயல்வாள். எனவே அவனது தாக்கம் அதிகமாக அவளை அண்டுவதில்லை. அவள் சுற்றிவந்துகொண்டிருக்கும் வேளையில், யுவா நுழைந்தான்.

நுழைந்தவனின் மனதை ஏதோ ஒரு வெறுமை தாக்கியது. அதென்னவோ அங்கே நுழையும் வேளைகளில் எல்லாம் அப்படித்தான் உணர்வான்.

வழக்கமான உணர்வுதான் என்று அவனால் அசட்டை செய்ய முடியவில்லை. மாறாக..., மனதை பலமாக அழுத்தியது. எனவே அவனது நடை தேங்க..., அவனுடன் வந்த அஷ்மிதாவோ..., 'இப்பொழுது என்ன', என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

"நீங்க ரூமுக்குப் போங்க..., நான் அங்கே வந்து எதையும் செய்யப் போவதில்லையே..., இங்கேயே கொஞ்ச நேரம் இருக்கேன்", அவள் மறுத்துசொல்லிவிடக் கூடாது என்று அவன் பார்வை அவளிடம் கெஞ்சியது.

அவன் பார்வை உணர்த்திய கெஞ்சலில்..., யுவாவை அப்படிப் பார்க்க முடியாமல்..., அங்கிருந்து அகன்றாள்.

நிதானமாக அந்த அறையைச் சுற்றிவந்தான். இங்கே வந்த பிறகு.., இன்றுதான் உள்ளே நுழைகிறான். இதுவரை..., அவன் அறைக்குச் செல்ல அமைத்திருக்கும் வழியாக கடந்து செல்லும்பொழுது, ஒரு நோட்டம் பார்த்திருக்கிறான்.

இன்றோ தன் உள்ளுணர்வுக்கு விடை கிடைக்குமா என்ற தேடல் அவனிடம் அதிகமாக இருந்தது.

அந்த ஹாலை சிறு சிறு யூனிட்களாக பிரித்திருக்க, ஒவ்வொன்றாக கடந்தான். அந்த நேரம் வானதியோ கோடியில் இருந்த ஓவர்லாக் செக்ஷனில் நின்றிருந்தாள். அவனது வருகையை அவள் உணர்ந்துகொண்டாள்.

அவனை முதலாளி என்ற வரையில் அவளுக்குத் தெரியும். இதுவரை அவனை நேரடியாக சந்தித்ததோ பேசியதோ கிடையாது. முதல்நாள் தவறிய பிறகு, அவளை அஷ்மிதாதான் சந்தித்திருந்தாள்.

எனவே அவனிடம் பேசும் சந்தர்ப்பம் இதுவரை அவளுக்குக் கிடைத்தது இல்லை. அவன் நெருங்கி வர வர, அவனது மேனரிசத்தில் கலவரமானாள்.

இடக்கையால் மீசையின் நுனியைத் திருகியவறு, கண்களில் கூர்மையுடன், ஒவ்வொரு அடியையும் அவன் எடுத்து வைக்க...., கண்களை இருட்டிக் கொண்டு வந்தது அவளுக்கு.

இவள் அவனை ஆழ்ந்து நோக்க, யுவாவின் மனம் படபடக்கத் துவங்கியது. தன்னை யாரோ பார்ப்பது அவனுக்குப் புரிந்தது. உண்மை என்னவென்றால்..., அங்கிருந்த அனைவருமே அவனைப் பார்த்தார்கள்.

இதில் எந்தப் பார்வை தன் மனதை அசைக்கிறது என்பதைக் கண்டறிய முடியாமல் தடுமாறினான். ‘ஏன் என்னையே பாக்குறீங்க...? உங்க வேலையைப் பாருங்க...’, என்று வாய்விட்டுக் கத்த வேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

அதைச் செய்யவும் முடியாமல்..., தன்னைப் பார்க்கும் அனைவரின் கண்களையும் சந்திக்கவும் முடியாமல் தத்தளித்தான். ‘ஏன் ஆண்டவா எனக்குமட்டும் இப்படியெல்லாம் நடக்குது...?’, மனம் கடவுளிடம் கேள்வி கேட்டது.

வானதி இருக்கும் இடத்தை நெருங்க நெருங்க..., அவனது இதயம் தாறுமாறாகத் துடித்தது. அதை உணர்ந்துகொண்டவன், ‘இதோ இங்கதான் இருக்கா...’, நடையின் வேகத்தை துரிதப்படுத்த, இடதுதோள் கொஞ்சம் இறங்கியிருக்க, வலதுதோள் மேலேறி, அவன் நடக்கும் நடையில், முழுதாக ஓய்ந்து போனாள் வானதி.

அவன் சரியாக அவளைக் காணும் வேளையில், அவள் நடை தடுமாறி, அயன்செய்து மடித்து வைத்திருந்த துணிகளைத் தள்ளிவிட, சட்டென குனிந்து அதைப் பிடிக்க

முயன்று முடியாமல், அவை அனைத்தும் தரையில் விழுந்தது.

எனவே அதை கீழே அமர்ந்து ஒன்று ஒன்றாக அடுக்கத் துவங்கினாள். யுவாவோ...., அவள் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து, இரண்டு மெஷின் தள்ளிதான் கீழே அமர்ந்திருந்தாள். ஆனால் அவன் அவளைக் கவனிக்கவில்லை.

யுவாவோ அந்த அறையின் கடைகோடிவரை வந்த பிறகும், தனது தவிப்பிற்கு விடை கிடைக்காத ஏமாற்றத்தில், உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தான்.

தன் ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், அவன் கரங்கள் பினந்தலையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டான். அத்தோடு தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவர, பின் முடியை கோதினான்.

அவனது இந்த செய்கையும் வானதியைத் திகைக்க வைத்தது. ‘என்மேல் உனக்கு இரக்கமே இல்லையா இறைவா...? அவர் கொடுத்த நினைவுகளையே என்னால் அசைபோட்டு தீராத பொழுது..., இப்படி அவரைப் பிரதிபலிக்கும் ஒருவனை அறிமுகப் படுத்துகிறாயே....

‘உனக்கே இது நியாயமா...? என்னை அணுவணுவாக வதைக்கவா, அவரை அங்குலம் அங்குலமாக ரசிக்க வைத்தாய்...’, கண்ணீர் அவள் பார்வையை மறைத்தாலும், இமைக்க கூட மறந்து அவனையே வெறித்திருந்தாள் வானதி.

## பகுதி – 18.

காதலில் கசிந்துருகி

கானலாய் போகும்

காட்சிகளைக்.......

காலம் மாற்றுமா

வயித்தியரின் வீட்டில் இருந்து, சரவணனை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டார்கள். இரவு முழுவதும் அவனை உறங்கவிடக் கூடாது என்று சொல்லி அனுப்பினார்.

எனவே யாரும் உறங்கச் செல்லாமல், அவனைச் சுற்றி அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள். தேவி அவனை விட்டு அகலவில்லை. கடித்த பாம்பு ஒன்றும் அவ்வளவு விஷம் வாய்ந்தது இல்லைதான். ஆனாலும் அவளால் சமாதானம் ஆகவே முடியவில்லை.

சுற்றிலும் இருந்த உறவினர் கூட்டம், அவளை, அசைக்கவில்லை. சரவணனின் அருகிலேயே இருந்தவள், அவனைவிட்டு விலக மறுத்தாள். கண்கள் மட்டும் கலங்குவதையோ, கண்ணீர் வடிப்பதையோ நிறுத்தவில்லை.

“இப்போ என்ன ஆயிடுச்சுன்னு இப்படி அழுதுட்டே இருக்க...? அதான் ஒண்ணும் ஆகலையே. இதென்ன நம்ம ஊருக்கு புதுசா...?”, மெலிதாக அவளைக் கடிந்தான்.

“நீயென்ன சுளுவா சொல்லிட்ட..., எம்மனசு கிடந்தது தவிக்கது எனக்குத்தானே தெரியும். செத்துட்டேன் மாமா..... உனக்கு மட்டும் ஏதாவது ஒண்ணுன்னா என்னை யாரும் உசுரோடவே பாக்க முடியாது ஆமா...”, அவன் கரத்தை அழுத்தப் பற்றிக் கொண்டாள்.

என்னவோ அவனை இறுக கட்டிக்கொண்டு கதறவேண்டும்போல் இருந்தது. ஆனால் சுற்றிலும் இருந்த உறவினர் கூட்டம் அதை அனுமதிக்கவில்லை. முதல் முறையாக, தனக்கு இவ்வளவு உறவினர் இருப்பதை அறவே வெறுத்தாள்.

அவனை எதடமிருந்தோ காப்பதுபோல் இருந்தது அவள் நடவடிக்கை. அவளது பாசத்தில் நெகிழ்ந்தவன், அவள் பேச்சில் கோபம் கொண்டான்.

அதிலும் முதல் முறையாக அவனை ஒருமையில் அழைத்திருக்கிறாள். அந்த அழைப்பு அவனுக்குப் பிடித்தது. அந்த சந்தோசத்தை அனுபவிக்கவிடாமல், அவள் பேச்சு அவனைத் திகைக்க வைத்தது.

தான் இல்லையென்றால் அவளும் இருக்க மாட்டேன் என்று சொன்னதில், அவளது நேசத்தை உணர்ந்தவன், தன் அத்தை மகளை அப்படி அல்ப்பாயுழில் இந்த உலகை விட்டு அனுப்புவதில் விருப்பமில்லை. அது தனக்காகவே என்றாலும் கூட....

தேவியின்மேல் குடும்பத்தவர் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தவனாயிற்றே. எனவே, “இப்படி பேசுறதை நிப்பாட்டு..., எனக்கு எதுவும் ஆகாது. எனக்கு உன்னோட நூறு வருஷம் வாழணும்னு ஆசை.

“அது அந்த கடவுளுக்கும் தெரியும். அப்படியே...”, மேலே சொல்லப் போனவனை, வேகமாகத் தடுத்தாள்.

“எதுவும் அச்சாணியமா பேசிடாதீங்க மாமா..., அதைக் கேட்டால் இப்படியே என் உசுரு...”, இப்பொழுது அவளைத் தடுத்தான் அவன்.

ஒருவர் மீது ஒருவர் கொண்ட நேசத்தை, நெருக்கத்தை, ஆசையை மற்றவர் உணர்ந்துகொள்வதுபோல் அமைந்தது அந்த நிமிடங்கள். இருவருமே மேலே எதுவும் பேசாமல் அமைதி காத்தார்கள்.

ஆனாலும் துவங்கியப் பேச்சை முடிக்காமல் விட மனமில்லை அவனுக்கு. இந்த நேரம் கடவுள்தான் அவனைப் பேச வைத்தாரா...?

“இதோப்பாருபுள்ள..., எம்மேல ஆணை..., அங்குட்டு பாரு..., உன்ற அப்பாரு, அம்மா..., ஆயா..., ஐயா..., சித்தப்பாருங்க, எல்லாருமே உம்மேல எம்புட்டு பாசம் வச்சுருக்காங்கன்னு உனக்கே தெரியும். உன்னை நல்லா

பாத்துக்கணும்னே, அடுத்த புள்ளை பெத்துக்கலை உன்ற அப்பா.

“அப்படியிருக்கும்போது..., நீ அப்படிப் பேசுறது நியாயமே கிடையாது. நான் உன் கூடத்தான் இருப்பேன்...., எப்பவும்...”, அவளை விட்டுப் பிரிந்துவிடுவோம் என்பதை அறிந்தே அவன் அவளைத் தயார் படுத்தினானோ...

இல்லையென்றால்..., அவள் உயிரை மட்டும் தேக்கி வைக்கவேண்டும் என்று கடவுள் எண்ணியதால், அதற்கு முன்னறிவிப்பாக, சரவணனை அந்த பாம்பு கடித்ததோ...? கடவுளின் திட்டத்தை யாரறிவார்...?

அவன் தன்மேல் ஆணை வைத்துப் பேசியதால், அதைத் தாங்க முடியாமல், விருட்டென எழுந்து சென்றுவிட்டாள். சென்றவளோ, வீட்டினுள் சென்று குமுறி அழுதாள்.

அவன் இல்லாத வாழ்வையோ, வாழ்க்கையையோ அவளால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அப்படியிருக்கும்பொழுது, நான் இல்லையென்றாலும்..., நீ வாழவேண்டும் என்று சொன்னால் அவள் எப்படித் தாங்குவாள்.

வேகமாக மஞ்சள் துணியில் காசு முடிந்து வைத்தாள். அவள் இருந்த மனநிலையில் என்ன வேண்ட, என்பதுகூட அவளுக்குத் தெரிவில்லை.

சரவணன் அவள் பின்னால் செல்ல எண்ணியவன், தன் பேச்சின் தாகம் குறையட்டும் என்று விட்டுவிட்டான். அந்த இரவிலேயே பெரியவர்கள் அனைவரும், அவர்களது திருமணத்தை, அடுத்த மாதமே வைத்துவிடலாம் எனப் பேசி முடிவெடுத்தார்கள்.

பழைய சரவணனாக இருந்திருந்தால், தேவியின் படிப்பு முடியட்டும் என்று சொல்லியிருப்பான். ஆனால் இப்பொழுதோ, தேவியின் மனம் புரிந்து, திருமணத்தை விரைவில் முடித்துவிடவே எண்ணினான்.

தேவியிடம் தைரியமாகப் பேசிவிட்டாலும், அவனுக்குமே தேவியோடு வாழ முடியாமல் போய்விடுமோ என்று ஒரு நிமிடம் கலங்கியது என்னவோ உண்மை. எனவே அவர்களது பேச்சுக்கு அவன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

அடுத்த இரண்டு நாட்களில் சரவணன் பழையபடி ஆகிவிட்டான். வீட்டுவேலை, தோட்டவேலை என்று தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.

அத்தோடு, தேவியோடான தன் நெருக்கத்தையும் அதிகரித்தான். முன்பு அவளைத் தீண்டத் தயங்கியவன், இப்பொழுதோ கிடைக்கும் சின்ன இடைவெளியில் கூட, அவளை நொடியில் அணைத்து விலகுவான்.

எதையாவது கொடுக்கும் சாக்கிலோ, வாங்கும் சாக்கிலோ அவள் விரல்களைப் பின்னிக்கொண்டு வம்பு செய்வான். யார் பார்த்தால் எனக்கென்ன என்று அவன் தெனாவெட்டாக நினைக்க, யாராவது பார்த்துவிட்டால் என்னாவது என்று தேவி தவித்துப் போவாள்.

அவனது சீண்டல்களை அவளது வயது விரும்பினாலும், பெண்மையின் நாணமும், தயக்கமும், பயமும் அவளைக் கட்டிப் போட்டது.

அதிலும் அவள் வயதுக்கு வந்த நாள்முதல், விடாது புலம்பும் ஆயாவின் போதனை அவளை வரம்பு மீற விடவில்லை.

முன்பு சரவணனின் தோட்டத்துக்கும், வீட்டுக்கும் ஒற்றையில் சென்றவள், இப்பொழுது அவளது தம்பியின் துணையுடனே செல்லத் துவங்கினாள்.

அதில் மிகுந்த மனத் தாங்கல் சரவணனுக்கு. அவளைப் பார்த்து முகத்தை கடுப்பாக வைத்துக் கொள்வான். அவன் கோபம் உணர்ந்து, கிளுக்கிச் சிரிப்பாள் தேவி.

அன்றும் தம்பியோடு வந்த அவளைப் பார்த்து விறைப்பாகச் சென்றவன், சிறிது நேரம் ஆளையேக்

காணவில்லை. சரி வந்ததற்கு மாட்டுக்குப் புல் பறிப்போம் என்று அவள் வேலையில் இறங்க, சிறிது நேரத்தில், தன்னை யாரோ அலேக்காகத் தூக்கும் உணர்வில் விதிர்த்துப் போனாள்.

ஆனால் உணர்ந்தது, பழகிய அணைப்பாகையால், தன் தம்பி எங்கே என்று பார்வையைச் சுழட்டினாள். “ஐயோ மாமா...., தம்பி இருக்குறான். என்னை விடுங்க...”, வாய் முணுமுணுத்தது.

“அவன்ல்லாம் ஒரு ஆளுன்னு துணைக்கு கூட்டிட்டு சுத்துறியே. பயபுள்ள பத்து ரூவையைக் கண்டதும் சிட்டா பறந்துட்டான். இந்த சூத்திரம் தெரியாமல் பத்து நாளை வேஸ்ட் பண்ணிட்டனே..”, அவளைத் தரையில் இறக்காமல், கைகளுக்குள்ளேயே திருப்பி அணைத்துக் கொண்டான்.

அவனது உழைத்து முறுக்கேறிய உடம்பின் முன்னால், அவளது பூஞ்சை தேகம் எதிர்ப்பற்று இருந்தது. “ஏண்டி..., பத்து நாளா எனக்கு போக்கு காட்டிட்டு இருக்க..., இன்னைக்கு உன்னை விட்டேனா பார்”, அவளது பாதுகாப்பு வளையத்தை உடைத்துவிட்ட கர்வம் அவனிடம்.

அத்தோடு விடாமல்..., அவள் இடையில் கைகோர்த்து அணைத்து, தன்னோடு முழுவதுமாக இணைத்துக் கொண்டான். ஒரு நொடி, அணைத்து விலகினாலே விதிர்த்துப் போகும் தேவி, இன்று அவனது முழுமையான அணைப்பு அவளை சர்வாங்கமும் ஒடுங்கச் செய்தது.

சரவணனோ அவன் நிலையில் இருக்கவில்லை. தான் உணரும், தன்னவளில் மென்மையில் லயித்திருந்தான். மனமோ தாறுமாறாகச் சிந்தித்தது. இப்பொழுதே அவள் வேண்டும் என்று புலன்கள் அனைத்தும் போராட, அவளை விலக்க முடியாமல் தத்தளித்தான்.

இன்னும் இன்னும் அவளிடம் புதைத்துபோகச் சொல்லி அவன் தேகம் அவனைக் கெஞ்ச, அவனது கட்டுப்பாடுகள் தளர்வதைக் கண்ட தேவி துவண்டாள்.

“முதல்ல என்னை கீழே விடுங்க..., எனக்குப் பயம்மா இருக்கு”, அவனிடம் உடல்பலத்தையோ, எதிர்ப்பையோ காட்டும் சக்தி அவளுக்கு இல்லையென்று புரியவே, தன் மனவலிமையை ஒன்று திரட்டி, அவனிடம் கெஞ்சினாள்.

அவள் எதிர்ப்பைக் காட்டியிருந்தால்..., அவளை அடக்கும் வேகம் அவனுக்கு எழுந்திருக்குமோ என்னவோ..., ஆனால் அவள் கலங்கவே, தன் கரங்களில் இருந்து அவளை இறக்கினான்.

“ஏம்புள்ள..., நான் தொடக்கூடாதா...”, அவன் இறங்கிய குரலில் கேட்க,

பதில்சொல்ல முடியாமல் மௌனமானாள். அவள் மௌனம் அவனை வதைக்க, “சொல்லுபுள்ள...”.

அவனது கேள்வியும், கெஞ்சலும் அவளை உருக்கினாலும், “எனக்குத் தெரியலையே...”, தவிப்பாகச் சொன்னாள் தேவி.

அவளது தவிப்பைத் தாங்க முடியாமல், தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவந்தவன், “நீ வீட்டுக்குப் போ...”, என்றான்.

“கோபமா மாமா...?”, தலை கவிழ்ந்து அவள் கேட்க,

“ஆமா..., ஆனா என்மேல்தான்...”, சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

அவன் தவிப்பு புரிந்தாலும், எதுவும் செய்ய முடியாத தன் நிலையை அறவே வெறுத்தாள் தேவி. ஆனால் மனதுக்குள், ‘இன்னும் இருபது நாள்தான் மாமா...’, என்று தனக்குத் தானே சமாதானம் செய்துகொண்டாள்.

நடந்த அந்த சம்பவத்துக்குப் பிறகு, சரவணன் அவளிடமிருந்து விலகியிருக்க முயன்றாலும், அது அவனால் முடியவே இல்லை. அதுதான் இன்னும் இரண்டு வாரத்தில் திருமணம் முடியப் போகிறதே..., என்ற நினைப்பே, அவன் கட்டுப்பாட்டை மீறத் துடித்தது.

தேவியோ சரவணனைக் கண்டாலே ஒளிந்துகொள்ளத் துவங்கினாள். அவனது ஆளுமையின் முன்னால், தன் உடல்வலிமையும், மன வலிமையையும் சுக்குநூறாக உடைந்துபோவதை அவள் உணர்ந்திருந்தாள்.

சரவணன் தான் வேண்டும் என்று கேட்டால், மறுக்கும் வல்லமை இப்பொழுது அவளிடம் இல்லை. அதைவிட அவன் தன்னோடு வாழத் துடிப்பதையும், தவிப்பதையும் கண்டும் காணாமல் இருக்க அவளால் முடியவில்லை.

எங்கே தன்னையும் மீறி அவனுக்கு உடன்பட்டு விடுவோமோ என்று அஞ்சினாள். சரவணனும் அதைப் புரிந்துகொண்டான். ஆனாலும் ஆக்கப் பொறுத்தவன், ஆறப் பொறுக்க முடியாத மனநிலையில் இருந்தான்.

இருபதுவருடம் காத்திருக்க முடிந்த அவனால், இந்த பத்து நாட்களைக் கடத்துவது மிகுந்த சிரமமாகவே இருந்தது. அன்றோடு வீட்டைக் கட்டி முடித்துவிட்டான். இந்த பத்து நாட்களாக தேவி வீட்டுக்கு வரவில்லை.

எனவே அவளை அழைத்துவந்து வீட்டைக் காட்ட முடிவெடுத்தான். மிகுந்த தயக்கத்துக்கிடையில் அவனோடு சென்றாள். மனம் முழுவதும், எங்கே அவன் தன்னை நெருங்கிவிடுவானோ என்ற பயம் இருந்தாலும்,

அதையும் மீறி, தான் வாழப்போகும் வீட்டைப் பார்க்கும் ஆசை, அதைவிட அதிகம் இருந்ததால் சென்றாள். வீட்டின் திண்ணையில் ஏறியவுடன், தானும் அமர்ந்து, அவளையும் கைபிடித்து பக்கத்தில் அமர்த்திக் கொண்டான்.

“இங்கதான் நாம ரெண்டுபேரும் உக்காந்து, கதை கதையா பேசுவோம், உன் தலைமுடியெல்லாம் நரச்சு,

பல்லெல்லாம் கொட்டிப் போய் இருக்கும்போது கூட, நம்மளோட பாசமும் நேசமும் குறையவே குறையாது புள்ள.

“இப்போ நான் உன்னை பாத்துக்குற மாதிரி, அப்பவும் பாத்துப்பேன்...”, ஆசையாகச் சொன்னவன், அதை மனக்கண்முன் காண்பவன் போன்று சிறிது நேரம் அமைதியாய் இருந்தான்.

பின்னர் அவளைக் கைப்பிடித்து எழுப்பி வீட்டுக்குள் அழைத்துச் சென்றவன், அவள் கைகளை இறுக பற்றிக் கொண்டான். “இதுதான் புள்ள நாம வாழப்போற வீடு. உனக்கு புடிச்சிருக்கா...?”, அவளையே ஆர்வமாகப் பார்த்துக் கேட்டான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னால், அவன் பேசிய பேச்சின் தாக்கத்தில் இருந்தே வெளிவராதவள், அவன் இப்படிக் கேட்கவே, அவனைவிட அதிக ஆர்வமும், உற்சாகமும், சந்தோசமும் தொற்றிக்கொள்ள, “என்ன மாமா இப்படிக் கேட்டுட்டீங்க...., இந்த ஏழப்பட்ட ஜென்மத்துக்கு இம்புட்டு அதிஷ்டமான்னு நான் நம்ப முடியாம இருக்கேன்.....

“உசுரா பாத்துக்க நீங்க இருக்கும்போது..., குடிசையே எனக்கு கோபுரமா இருக்கும். ஆனா இப்போ இந்த ஓட்டு வீடு எனக்கு மாளிகைதான் மாமா. எனக்கு இதைவிட வேற என்ன மாமா வேணும்....”, கண்ணீர் துளிர்த்தது அவளுக்கு.

அவளைச் செல்லமாக அதட்டியவன், அந்த வீட்டில் மறைப்பில் இருந்த அடுக்களை, பின்னால் இருந்த கொட்டகை பாத்ரூம், டாய்லெட், என அனைத்தயும் காட்டினான். ஒவ்வொன்றையும் அவளிடம் காட்டும் பொழுதும்,

அங்கே அவள் எப்படி வேலை செய்வாள், அதைத் தான் எப்படி ரசிப்பேன் என அவன் சொல்வதைக் கேட்டவளுக்கு,

தன் உணர்வுகளை எப்படி வெளிப்படுத்தவென்று தெரியாமல் தடுமாறினாள்.

அதிலும், அந்த அறையில் இருந்த கயித்துக் கட்டிலை அவன் கண்ஜாடையில் காட்டிவிட்டு, அவளை ஆழ்ந்து நோக்கியபொழுது, தேகம் மொத்தமும் நடுங்க, அடிவயிற்றைப் பிசையும் உணர்வில் தடுமாறிப் போனாள்.

அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் அவளை நாணம் தடுக்க, அங்கிருந்து வெளியே செல்லக் கூட கால்களில் பலமில்லாமல், அந்த அறையில் இருந்த ஒற்றை ஜன்னலின் கம்பியை இறுகப் பற்றிக் கொண்டு, தன்னை நிலைநிறுத்தப் போராடினாள்.

அவளின் தடுமாற்றத்தை ரசித்தவனோ, ஒற்றை வார்த்தை கூட பேசாமல், அந்த நிமிடங்களில் உறைந்திருந்தான். தன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய கனவும், தன்னவள் அருகில் இருக்கும் உணர்வும், அவளின் நாணமும், தனிமையும் அவன் கட்டுப்பாடுகளை சில்லுசில்லாய் நொறுக்கியது.

அங்கிருந்து சென்றுவிடு என புத்தி உரைத்தாலும், மனமும், புலன்களும், தேவியையே நாடச் சொன்னது. இதற்குமேல் முடியாது என்று தோன்ற, முதுகைத் துளைக்கும் சரவணனின் பார்வையைத் தாங்க முடியாமல், அங்கிருந்து வெளியேற முயன்றாள்.

அவள் ஜன்னல் புறம் இருந்து திரும்பவும், சரவணன் அவளை நெருங்கி அணைக்கவும் சரியாக இருந்தது. அவளை அணைத்தவனோ, நொடியும் தாமதிக்காமல், அவள் இதழ்களோடு தன் இதழ்களைப் புதைத்துக் கொண்டான்.

இத்தனைநாள் கட்டுப்படுத்தி வைத்திருந்த உணர்வுகள் கட்டவிழ, அதை முழுவதுமாக அவள் இதழ்களில்

வெளிப்படுத்தினான். தேவியால் அவனைவிட்டு இம்மியளவும் அசையக் கூட முடியவில்லை.

அவனது அதிரடியில் மிரண்டாலும், அவனது முத்தத்தில், நெகிழ்ந்து, குழைந்து உருகிக் கொண்டிருந்தாள் தேவி. அவன் கரங்கள் அவள் மேனியில் இடம்மாற, பெண்மையின் தற்காப்பு உணர்வு தலை தூக்க, அவனைத் தடுத்தாள்.

ஆனால் அவன் உடும்பு பிடியாக முன்னேற, அவனைத் தடுக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள் தேவி. இறுதியில் மூச்சுக் காற்றுக்கு அவள் நுரையீரல் ஏங்க, அவனிடமிருந்து விலகவும் முடியாமல், உடன்படவும் முடியாமல், அவள் திணற, அது கண்ணீராய் வழிந்தது.

அவளது கண்ணீரின் உவர்ப்பு சுவையை, அவன் சுவைத்த பிறகுதான், தாங்கள் இருக்கும் நிலையை உணர்ந்தான். வேகமாக அவளிடமிருந்து விலகியவன்,

“இங்கே இருந்து போய்டுபுள்ள...., போய்டு....”, தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல், அவள் தோளைப் பற்றி திருப்பி, வெளியே தள்ளினான். அப்படியாவது அந்த சூழலில் இருந்து விடுபட முயன்றான்.

அவனைத் தனித்திருக்கவிட்டு அவள் செல்ல மறுத்து அங்கேயே நிற்கவே, அவளை விட்டு விலகி வெளியேறினான். வெளியேறியவன், கிணற்றடிக்குச் சென்று, போன வேகத்தில் கிணற்றில் குதித்துவிட்டான்.

அவன் மேலே ஏறி வரும்வரை அங்கேயே காத்திருந்தாள் தேவி. சற்று நேரத்தில் அவன் வரவே, இருவரும் வீட்டை நோக்கிச் சென்றார்கள். கனத்த மௌனம் அங்கே அரங்கேறியது.

வீட்டை நெருங்குகையில்..., “ஏம்மாமா இப்படியெல்லாம்..., எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு மாமா. நான் உங்களுக்குத்தான் சொந்தம், அது எனக்கு நல்லா தெரியுது. ஆனாலும் என்னால் உங்களோட...”, அவன்

தனக்காக ஏங்குவதும், அவளுக்கு ஆசை, உரிமை இருந்தும்,

திருமணம் என்ற பந்தத்தில் தாங்கள் இணையாததால், அவனுக்கு உடன்பட முடியாத தன் நிலையை அறவே வெறுத்துப் பேசினாள். அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், திரும்பி நடந்தான் அவன்.

# பகுதி – 19.

எனக்குள்ளே நீயிருக்க

உனக்குள்ளே நானிருக்க

என்னைவிட்டுச் சென்றதேன்

என்னுயிரே.........

இருவருமே தன்னுணர்வுக்கு மீள நீண்ட நேரமானது. எவ்வளவு நேரம் அப்படியே இருந்தார்களோ அவர்களுக்கே தெரியாது. கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு உணர்வு இருவரையும் அமைதிப் படுத்தியது.

“யுவா…”, அஷ்மிதாவின் மெதுவான…, அதே நேரம் அழுத்தமான அழைப்பு அவனை நடப்புக்குத் திருப்பியது.

அஷ்மிதாவின் பார்வை அவனை அழுத்தமாகப் பார்த்து, சுற்றிலும் பார்க்கவே…, அங்கிருக்கும் அனைவரின் பார்வையும் தன்மீது வித்தியாசமாகப் படிந்திருப்பதை உணர்ந்தான்.

அப்பொழுதுதான்…, தான் அசையாமல் அங்கேயே நின்றிருப்பதே அவனுக்கு உறைத்தது.

அஷ்மிதாவை அவன் சங்கடமாகப் பார்க்க, “அதான் நான் ஏற்கனவே சொன்னேனே யுவா…, சில மெஷின்கள் கொஞ்சம் அதிகமாத்தான் சத்தம் போடுது, அதை மாத்தணும்னு…, அதுக்கு இப்படியா…

“இங்கேயே வந்து நின்னு அதை சோதிச்சு பாப்பீங்க...? நீங்க கண்ணை மூடிட்டு அசையாமல் நின்னதில் உங்களுக்கு என்னமோ ஆயிடுச்சுன்னு எல்லோரும் பயந்துட்டாங்க...”, நிலைமையை அழகாகச் சம்மாளித்தாள் அஷ்மி.

அவளை நன்றியாக ஒரு பார்வை பார்த்தவன், நொடியில் அவ்விடம்விட்டு அகன்றான். நேராகச் சென்று தன் அறைக்குள் அமர்ந்துகொண்டான்.

விரைந்தோடிச் சென்ற அவனையே பார்த்தவள், “வானதி எங்கே...?”, அங்கிருந்தவர்களிடம் கேட்டாள்.

அவள் தன்னைத் தேடவே, அமர்ந்திருந்த இடத்தில் இருந்து எழுந்தாள் வானதி. அமைதியாக அவள் முன் வந்து நிற்கவே, அவளைப் பார்த்து சிநேகமாகச் சிரித்தவள், “இல்ல..., உன்னைக் காணோமேன்னு கேட்டேன்...”, சொல்லிவிட்டுச் சென்றாள்.

யுவாவின் செய்கையும், வானதியின் இருப்பிடமும் அஷ்மிதாவை கவலை கொள்ள வைத்தது.

அதிலும் யுவா இப்பொழுதெல்லாம் தன் உணர்வுகளை அவளிடம் வார்த்தையில் வடிக்க முயன்றிருந்தான். தன் மன குழப்பங்களையும், கனவுகளைப் பற்றியும் சொல்லி..., “இதற்கு என்ன அர்த்தம்...”, என்று கேட்டான்.

ஆனால் தான் ஒரு பெண்ணை கனவில் சந்திப்பதாகச் சொல்லியிருந்தாதே தவிர, அவளுடனான தன் நெருக்கத்தை அவளிடம் பகிர்ந்ததில்லை.

அவன் கனவில் ஒரு பெண்ணைக் காண்கிறேன்..., அவள் நேசத்தை உணர்கிறேன் என்று சொன்னதையே அவளால் தாங்க முடியாமல் இருக்க, அவளோடான நெருக்கத்தை சொல்லியிருந்தால், பாதி செத்திருப்பாள்.

முன்பு இருந்த யுவாவை அவள் வெறுத்தாள். அவனுக்கும் தனக்குமான உறவு, திருமண பந்தத்தில் இணைந்தால்,

ஒரு நாள் கூட நிம்மதியாக வாழ முடியாது என்பது புரிந்ததாலேயே, அவனைவிட்டு விலகுவது அவளுக்குச் சுலபமாக இருந்தது.

ஆனால் இன்று இருக்கும் யுவாவை அவள் மனதுக்குள் நேசித்தாள். அவனது இவ்வளவு மனக் குழப்பத்திலும் அவனது நிதானம்..., கோபத்திலும் அவனது பொறுமை..., தாயின் அருகில் குழந்தையாகக் குழையும் பாங்கு...

அலுவலகத்தில் அவள் சொல்லித் தருவதை புரிந்துகொள்ள முடியாமல் திணறும்போது கூட, தனக்கு வரவில்லை என்பதை ஏற்றுக் கொள்வது, அவள் வேலை செய்யும் விதத்தை, ஆங்கிலம் பேசும் பாங்கை வியந்து பார்ப்பது என அவனது குழந்தைத்தனமான செய்கைகளில் அவள் கவரப்பட்டாள்.

தான் ஒரு ஆண்மகன்..., தன்னால் முடியாததை இவள் செய்கிறாளே என்று ஒரு சதவீதம் கூட அவன் பொறாமைப் படவில்லை, கோபம் கொள்ளவில்லை.

அவன் தன்னால் இந்த வேலைகளை செய்ய முடியாது என்று ஈஸ்வரிடம் உறுதியாகச் சொல்லிவிடவே, முழுப் பொறுப்பையும் அஷ்மிதாவே ஏற்றுக் கொண்டாள். ஏற்கனவே பெற்றவர்கள் இருவரும் பார்ட்னர்ஸ் என்பதால் அது சுலபமாகவும் இருந்தது.

வானதிக்கும் அவனுக்கும் இடையில் நூலிழைபோல் ஏதோ ஒரு பந்தம் ஒட்டிக் கொண்டிருப்பதை முதல் நாளே உணர்ந்துகொண்டாள் அஷ்மிதா.

முதலில் அவனைப் பற்றி யாரும் தவறாகப் பேசிவிடக் கூடாது, அசம்பாவிதமாக எதுவும் நேர்ந்துவிடக் கூடாது என்று கவனமாக அவர்கள் சந்திப்பதைத் தவிர்த்தவள், அவன்மேல் நேசம் வேர்விடத் துவங்கியபொழுது அவனைத் தன்னோடு தேக்கிக் கொள்ளவே முயன்றாள்.

அவளுக்கு வானதியை வெளியே அனுப்பிவிட ஒரு நொடி போதும். ஆனால் வீணாவின் வாய்மொழியால் உணர்ந்த,

வானதியின் வாழ்க்கைச் சரித்திரம்..., அவளை அந்த கடினமான முடிவைச் செயல்படுத்த முடியாமல் கட்டிப் போட்டது.

செய்பவை அனைத்தும் ஒரு விதத்தில் தவறென்று புரிந்தாலும், காதலின் முன்னால் அனைத்தும் தூசியாகவே தெரிந்தது. தன்னை அறியாமல் ஒரு பெருமூச்சை வெளியேற்றியவள், அதன் பிறகு வேலையில் மூழ்கினாள்.

அதே நேரம் யுவா தன் உள்ளுணர்விலேயே லயித்திருந்தான். வானதி தன் கடந்தகால சுகமான நினைவில் மூழ்கியிருக்க, அந்த அவளது நினைப்பே அலையலையாகச் சென்று அவனை அமைதி படுத்தியது.

அந்த அமைதி அவனுக்கு நிலைக்கப்போவதில்லை என்பது அவனுக்கு அப்பொழுது தெரியவில்லை. தொடர்ந்த நாட்களில் இரவு உறங்கவே அஞ்சினான். உறக்கம் தழுவும் வேளையே..., அவன் கைகள் அவளை வளைத்திருக்கும்.

அப்படியே அவளுள் புதைந்துகொள்ளச் சொல்லி, அவன் உணர்வுகள் அவனை வதைக்கும். அவளோ அதற்கு உடன்படவே தயாராக இருந்தாளே தவிர, அவனைவிட்டு விலக இம்மியளவும் விரும்பவில்லை.

அவளது இந்த செய்கையே அவனை இன்னும் வதைத்தது. அவள் தன்னைவிட்டு விலகச்சொல்லி போராடினாலாவது அவளிடம் பேசி எதையாவது புரிந்துகொள்ள முடியும். ஆனால் அவளோ..., எப்பொழுது அவன் அணைப்பான் என காத்திருந்தவள்போல், அவனை வரவேற்றாள்.

அவனுக்குமே அவளைவிட அதிகமாக அவளை ஆளவேண்டும் என்ற வேட்கை இருந்ததுதான். ஆனால் இது எங்கேபோய் முடியும்..? எப்படி முடியும்...? இதற்கு முடிவுதான் என்ன...? கனவில் மட்டும் வாழ்வதில்லையே வாழ்க்கை.

நனவில் அவளோடு கூடவேண்டும். தன்னால் ஒரு பெண்...., அது காதலியாகவே இருந்தால் கூட பாதிக்கப்படுவதை அவன் விரும்பவில்லை.

இவன் இப்படி நினைக்க...., அவளோ அவனோடு கனவில் வாழ்வதே போதும் என்று நினைத்திருந்தாள். தன்னுடன் நனவில் வாழ முடியாமல் போனவன், கனவிலாவது தன்னை ஆளட்டும் என்று தவமிருந்தாள்.

அவனுக்காகத்தான் நான் பிறந்தேன், வளர்ந்தேன்..., அவனுக்குத்தான் தன் அனைத்தும் என்று எண்ணினாள். கனவில் வாழும் வாழ்க்கையை, ஆழ்ந்து அனுபவிக்கத் துவங்கினாள். முன்பு இமை மூடவே மனமற்று இருந்தவள், இப்பொழுது இரவு எப்பொழுது வரும் என்று ஏங்கினாள்.

படுக்கையில் படுத்து அவனைப் பற்றிய சுகமான நினைவுகளில் மூழ்குபவள், நொடியில் உறங்கிவிடுவாள். அதன்பிறகு நடப்பவற்றில்..., எப்படியும் அவன் தாபத்தையும், நெருக்கத்தையும் உணர்ந்துவிட வேண்டும், அவனோடு வாழ்ந்துவிட வேண்டும் என்பது மட்டுமே அவள் நினைப்பில் இருக்கும்.

தன்னை நெருங்குபவன் தன்னுடையன்தான் என்பதில் அவளுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அவன் உயிரோடு இருந்தபொழுது அவன் நெருங்கிய வேளைகளில் எல்லாம்..., அவனை விலக்கிய பாவத்துக்கு, இன்று அவன் ஆள்வதை தடுக்க முயலவில்லை.

இதில் அவளுக்கு கொஞ்சம் கூட வருத்தமில்லை. மாறாக நிம்மதியாகவே உணர்ந்தாள். நாளுக்குநாள் இருவரின் வேகமும் அதிகரிக்கவே, யுவா உறங்காமல் விழித்திருக்க முயன்றான்.

அவள் நெருக்கம் அவனை வதைக்க, அவனது விலகல் அவளை வதைக்கும். ஒவ்வொரு இரவும் தங்கள் உறவை அவன் தடுக்க முயன்று போராடிக் கொண்டிருந்தான்.

ஒரு இரவில் அவனது கட்டுப்பாடுகள் அனைத்தும் உடைபட, அவளுள் புதைந்துபோக இருந்த அந்த நொடி...., நிஜத்தில் ஒரு பெண்ணின் மேனியில் இருந்து, உச்ச தாபத்தில் விலகி எழுந்தவனைப் போல், படுக்கையில் இருந்து விலகி எழுந்தான்.

உடல் முழுவதும் வியர்வையில் குளித்திருக்க, இதற்குமேல் ஒரு இரவு கூட இதை தாங்கிக் கொள்ள முடியாது என்ற நிலையில் இருந்தான் அவன்.

தன்னையே யாரென்று அறிய முடியாத நிலையும்..., கிளர்ந்தெழுந்த உணர்வுகள் அடங்க மறுத்த நிலையும், அவளை யாரென்று அறிய முடியாத நிலையும் அவனை உன்மத்தம் கொள்ளச் செய்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு தன் கோபம் மொத்தமும் வெளிப்பட, அறையில் இருந்த அனைத்தையும் உடைக்கத் துவங்கினான்.

அவன் அறையில் பொருட்கள் உடையும் சத்தத்தில் கண்விழித்த கங்காவும் ஈஸ்வரும்..., நொடியில் அவன் அறையில் இருந்தார்கள்.

“ராஜா..., என்னப்பா ஆச்சு....?”, சில பல மாதங்களுக்குப் பிறகு மகனது நிலையைத் துவங்கிய அதே நிலையில் கண்டவர் துடித்துப் போனார்.

தன் நிலையை அடியோடு வெறுத்தவனாக..., தன்னிரக்கம் போட்டிபோட, தாயைத் தேடும் கன்றாக...,வாழ்க்கையைத் தேடி அவன் நின்ற கோலம்..., அவரை கொன்று கூறு போட்டது.

“என்னம்மா...?”, கனிவாக அழைத்து அவனை நெருங்க,

“அதுதாம்மா எனக்கே தெரியலை. நான் யார்...? நீங்கல்லாம் யார்...? எனக்கு என்னதான் ஆச்சு...? என்னைச் சுற்றி இத்தனைபேர் இருக்க, என் மனம் அவளையே தேடுதே அது ஏன்..?

“நான் யாரையாவது விரும்பினேனா…? உங்களுக்கு அது தெரியுமா..? தெரிந்தும் என்கிட்டே மறச்சுட்டீங்களா…? இல்ல உங்க வரட்டு கௌரவத்தால் அவளை விரட்டிட்டீங்களா…? இல்லனா எனக்கு நடந்த விபத்தில் அவளும்…”, மேலே கேட்க முடியாமல், அவன் தேகம் முழுவதும் நடுங்கியது.

அவன் கேட்கத் துவங்கிய கேள்விகளிலேயே திகைத்திருந்தவர்கள், அவன் முடித்தபொழுது…, அங்கே யாருக்கு அதிக அதிர்ச்சி என்பது தெரியாமலேயே போனது.

“ஐயோ ராஜா அப்படியெல்லாம் எதுவும் இல்லையே…”, புலம்பிய கங்காவால் சொல்ல முடியவில்லை.

விபத்துக்கு முன்னர் வரைக்கும் அவன் சிறந்த மகனாகவோ, மனிதனாகவோ நடந்துகொண்டதில்லை என்பதை. அவனை விரும்பிய அஷ்மிதாவைக் கூட, ஒரு பொருட்டாகக் கருதாமல்…, நான் பெரியவன் என்ற மமதையில் அலைந்தான் என்பதை.

“என்னங்க…, ஏன் இப்படி மரம் மாதிரி நிக்கறீங்க…, அதான் அப்போவே டாக்டர் சொன்னாரே…, அவனை வேற டாக்டர்ட்ட காட்ட சொல்லி. நீங்கதான் கேக்கவே இல்லை. இப்போ இவ்வளவு நாள் ஆன பிறகும், என்பிள்ளை இப்படித் துடிக்கிறானே.

“உங்க இந்த வரட்டு பிடிவாதத்தால்…, பாதிக்கப் படுவது நம்மளோட பையன்தான் என்பதை எப்போ நீங்க புரிஞ்சுக்கப் போறீங்க. இப்போகூட உங்களுக்கு உங்களோட பிடிவாதம்தான் பெருசா இருக்கு இல்ல…”, மகன் தவிப்பதைக் காண முடியாமல், கணவனிடம் வெடித்தார்.

மனைவியின் கண்ணீரும், மகனது நிலையும் ஈஸ்வருக்கு நன்றாகப் புரிந்ததுதான். முதலில் மகனை மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்ல அவர் தயங்கினார்

தான். அதற்குக் காரணம்..., தொழில் வட்டத்தில் தன் மகன் ஒரு அவப்பெயரை சந்திப்பதை அவர் விரும்பவில்லை.

ஆனால்..., இந்த ஆனாலில் தான் அனைத்துமே அடங்கி இருந்தது. இறுதியாக யுவாவைப் பரிசோதித்த மருத்துவர் சொன்ன வார்த்தைதான் அவரை மேற்கொண்டு எதையுமே செய்ய அனுமதிக்கவில்லை.

“ஈஸ்வர்..., நான் சொல்வதை கொஞ்சம் மனசைத் திடப் படுத்திட்டு கேளுங்க. உங்க மகன் இப்பொழுது அவனாக இல்லை. அவனுக்குள்ளே ஏதோ ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்திருக்கு. அதை வெளியே கொண்டுவந்தே ஆகவேண்டும்.

“இப்போதைய அவனது நடத்தை, பழக்கம் அனைத்தும் எனக்கு அந்த சந்தேகத்தைத்தான் தருது. அதனால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் ஒரு சைக்காட்ரிஸ்ட்டை பாருங்க”, யுவாவைப் பார்த்தவாறே அவர் சொன்னார்.

“என்னடா இப்படி சொல்லுற..., நீதானே சொன்ன..., அவனுக்கு விபத்தில் பழைய ஞாபகங்கள் எல்லாம் கொஞ்சம் மறந்துடுச்சு. நாள் ஆனால் எல்லாம் சரியாப் போய்டும்னு. இப்போ நீயே இப்படி சொல்லுற...”, அதிர்ந்துதான் போனார்.

“நானும் முதல்ல அப்படித்தான் நினைத்தேன் ஈஸ்வர். என்னதான் மறந்தாலும்..., ஒரு மனிதனின் அடிப்படை குணங்கள், பழக்க வழக்கங்கள் மாறவே செய்யாது. ஆனால் யுவா விஷயத்தில் அப்படியே இல்லை. அதுதான் என்னை இப்படி பேச வைக்குது”.

“அதெப்படி அவ்வளவு உறுதியா சொல்லுற....?”, நம்பிக்கையில்லாமல் கேட்டார்.

“அதாவது..., நம்மளோட கைப் பழக்கம், கத்துகிட்ட விஷயங்கள், மொழி, கார் ஓட்டுறது, இப்படி எல்லாமே

இயல்பா வந்துடும். ஆனால் யுவா விஷயத்தில் அப்படி எதுவுமே இல்லை.

“அவனோட மொழிப் புலமை, கையெழுத்து, கார் ஓட்டுவது இப்படி எதுவுமே அவனுக்கு வரலை. அதனால்தான் சொல்லுறேன்”, உறுதியாகச் சொன்னார்.

“நீ சொல்லுறமாதிரியே நான் செய்தால்..., எனக்கு என்னோட பழைய மகன் கிடைப்பானா...? இல்ல...”, அவரால் மேற் கொண்டு கேட்க முடியவில்லை.

“யுவாவின் குழப்பத்துக்கெல்லாம் விடை கிடைச்சுடும்...., அதே நேரம் நமக்கும் ஒரு தெளிவு பிறக்கும்..”.

“என்ன சொல்லுற ரவி..., என் மகன் எங்களை அன்னியராக ஒரு நொடி பார்ப்பதையே தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கையில்..., எங்களது ஒரே செல்வ மகனை எப்படி நாங்கள் இழப்பது. அவனை முழுதாக இழப்பதை என்னால் தாங்க முடியாது.

“அவன் இப்படியே எங்களுக்கு மகனாக மட்டும் இருந்துவிட்டுப் போகட்டும்...., இன்னும் கொஞ்ச நாள் போனால்..., அவன் இந்த சூழலுக்கு பழகிடுவான்...”, மகனை பிரியமுடியாத சோகம் அவரை சுயநலமாக யோசிக்க வைத்தது.

“அவனோட இந்த குழப்பம் அப்படியே இருந்தால்..., பின்னாடி ஏதாவது குழப்பம் வந்தால்...?”, ரவி இழுத்தார்.

“அதற்காக நான் என் மகனை முழுவதுமாக இழக்க முடியாதே ரவி...., அப்படி எதுவும் ஆகாமல், நிலைமை கைமீறாமல் நான் பாத்துக்கறேன். எங்களோட வேண்டுதல் எங்களைக் கைவிடாது”, ஈஸ்வர் துக்கமாகச் சொல்ல, நண்பனின் நிலையறிந்து அமைதியானார் ரவி.

அதை இப்பொழுது நினைத்துப் பார்த்தவர், மனைவியிடம் அதைச் சொல்ல முடியாமல்..., “எல்லாம் எனக்குத் தெரியும் நீ பேசாமல் இரு..., அவன் தூங்கி எழுந்தால்

எல்லாம் சரியாயிடும்....", தன் தடுமாற்றத்தை மறைக்க, மனைவியிடம் சாடினார்.

இந்த நிலையிலும் அவர் இவ்வாறு சொல்லவே, வெறுத்துப் போனது யுவாவிற்கு. 'என்னது..., தூங்கவா...? இந்த தூக்கத்தால் தானே இவ்வளவு குழப்பமும்...', மனதுக்குள் குமைந்தவன், தன் துக்கத்தை மறைக்க, இமை மூடி படுக்கையில் அமர்ந்தான்.

அப்பொழுதே அவன் முடிவெடுத்துவிட்டான்..., எப்படியாவது இதற்கு ஒரு தீர்வை கண்டுவிடுவது என்று. ஆனால் அவனுக்குத் தனியாக எதுவும் செய்யத் தெரியாது.

எனவே..., தாயிடம் மருத்துவர் என்ன சொன்னார் என்பதை சாதாரணமாகக் கேட்டு தெரிந்துகொண்டான். எப்படியும் அஷ்மியிடம் உதவி கேட்பது என்று நினைத்துக் கொண்டான்.

விடியும்வரை அவனது நிலையில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. கங்கா எவ்வளவோ கேட்டுக் கொண்டும்..., படுக்கையில் படுக்கக் கூட மறுத்துவிட்டான்.

விடிந்தபிறகு அலுவலகம் செல்லும்வரை அஷ்மிதாவிடம் எதைப் பற்றியும் பேசவில்லை. அலுவலகம் வந்தவனைத் தாக்கியது வெறுமை மட்டுமே. அன்று வானதி வந்திருக்கவில்லை.

# பகுதி – 20.

பிரிவது உடல் மட்டுமே

உயிரைப் பிரிய என்னால் தகுமோ

பிரிவின்றி இருப்பேன்.......

உன்னில் கலந்து.......

திருமணத்துக்கு இன்னும் ஏழே நாள் இருக்க, திருமணத்துக்குத் தேவையான ஜவுளி எடுப்பது, நகை எடுப்பது என இரு குடும்பத்தாரும் பரபரப்பாக இருந்தார்கள்.

சொந்தங்கள் அனைவருமே ஒரு வாரம் முன்பே தேவியின் வீட்டில் கூடி விட்டார்கள். இரண்டு தலைமுறைக்குப் பிறகு பிறந்த ஒரே பெண்குழந்தை, அவளது திருமணத்தை, தங்கள் சக்திக்கு மீறியே செய்ய முயன்றார்கள்.

அவளது ஏழு சித்தப்பாக்கள், தம்பிகள் என அனைவரும் சேர்ந்து அவளது திருமணத்தை நடத்த முன்வந்தார்கள். சரவணனுக்கோ எப்பொழுது தேவியைத் திருமணம் செய்து அழைத்துவருவோம் என இருந்தது.

திருமணத்துக்கு இரண்டுநாள் முன்பு, சரவணனின் வாழைத் தோட்டத்தில் இருந்த குலைகள் அனைத்தையும் விற்க முடிவெடுத்தான். அப்பொழுது வாழை சீஷன் என்பதால், முதலை எடுப்பதே பெரும் பாடாக இருந்தது.

அந்த நேரம், திருச்சியில் இருந்து வந்த ஒரு வியாபாரி, அவர்களே திருச்சிக்கு குலைகளைக் கொண்டு கொடுத்தால், அதிக லாபம் வருமென சொல்லவே, சரவணன் எதைப் பற்றியும் யோசிக்காமல், ஒரு டிம்போ பிடித்து, குலைகளை ஏற்றிவிட்டு, கிளம்பிவிட்டான்.

அவனுக்கு வேறு வழியும் இருக்கவில்லை. வீடு கட்டுவதில் ஏற்பட்ட கடன், தேவி ஆசைப்பட்டாள் என்பதற்காக, அவளுக்காக வாங்கிய, ரகசியப் பரிசால் ஏற்பட்ட கடன், திருமண செலவுகள் என அனைத்தும் அவன் கழுத்தை நெரிக்கவே, எதைப் பற்றியும் யோசிக்காமல் முடிவெடுத்துவிட்டான்.

அவன் செல்வதை அறிந்த தேவிக்கோ, மனம் ஏனென்று தெரியாமலே அடித்துக் கொண்டது. அத்தோடு அவளது இடது கண்ணும் துடித்தது.

இவற்றையெல்லாம் அவளால் சாதாரணமாக எடுக்க முடியவில்லை. "மாமா..., திருச்சிக்கு போய்த்தான் ஆகணுமா..?", அவளால் போகாதே என்று கூற முடியாமல் கேட்டாள்.

"போய்த்தான் ஆகணும் புள்ள...., என்னால் நஷ்டத்தை தாங்க முடியாது", அவளிடம் அடித்துப் பேசிவிட்டான்.

"நீங்க போகவேண்டாம் மாமா..., சித்தப்பா இல்ல..., மாமா யாரையாச்சும் போகச் சொல்லுங்களேன்...", தவிப்பாய் சொன்னாள்.

"அவங்களுக்கு வியாபாரத்தைப் பத்தி என்னபுள்ள தெரியும்...? இது வயக்காட்டு வேலை இல்லை..., வியாபாரம்.., நான் போனாத்தான் சரிவரும்..., காலைல போயிட்டு, சாயங்காலம் வந்துடுவேன்..., நமக்காக....", என்னைத் தடுக்காதே என அவன் இறைஞ்சவே அமைதியானாள்.

அவனுக்காக விட்டுக்கொடுத்த அவள் மனமோ, சமாதானம் ஆகவே இல்லை. அவன் பார்வையில் இருந்து மறையும்வரை பார்த்துக்கொண்டே இருந்தாள். மீண்டும் அவனைக் காணும்வரை அவளால் நிம்மதியாக இருக்க முடியாது என்று எண்ணினாள்.

மீண்டும் அவனைக் காணப் போவதில்லை என்பதால்தான் அவனைப் பார்வையில் நிறைத்துக்கொண்டாளோ...

அவனுடன் செம்புராஜும் சென்றான். வியாபாரம் சுமுகமாகப் படிந்து, மொத்தமாக லட்ச ரூபாய் அவன் கையில் கிடைத்தது. கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் ரூபாய் அவனுக்கு லாபம் கிடைத்தது.

முதலே கிடைக்காது என அவன் நினைத்திருக்க, கிடைத்த லாபத்தில் தலை சுற்றிப் போனான். அவனால் நம்பவே முடியவில்லை. இந்தப் பணத்தால் அவனது கடன்களில் முக்கால்வாசியை அவனால் மீட்டுவிட முடியும்.

திருமணம் முடிந்தவுடனே, இன்னும் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும், தேவியோடு நேரம் செலவழிக்க முடியாதோ என வருந்தியவனுக்கு, இந்தப் பணம், தனக்கு வாழ்வையே கொடுக்கவந்த லஷ்மியாகத் தெரிந்தது.

“எலேய் மாமோய்...., உன்ற பொண்ணை கட்டப்போற நேரம்...., எனக்கு மகாலஷ்மியே தேடி வந்துருக்கா டோய்...”, செம்புராஜை கட்டிக் கொண்டு குதித்தான்.

“என்னவே இது, சின்னப் புள்ளையாட்டம்..., எல்லாரும் பாக்குறாவ..”, செம்புராஜ், அவனை அடக்க முயன்றாலும், அவனுக்கும் சந்தோசமே.

“யாரு பாத்தா எனக்கென்னவே...., நான் எம்புட்டு சந்தோசமா இருக்கேன் தெரியுமா...? இப்போ உனக்கு என்ன வேணும்னு சொல்லு...., அதை அப்படியே வாங்கித் தாரேன்...”, பணத்தை எண்ணிச் செலவு செய்யும் சரவணன், என்ன வேண்டுமோ வாங்கித் தருகிறேன் என்று சொல்வதில் இருந்தே, அவனது மனநிலையைப் புரிந்துகொண்டான் செம்புராஜ்.

“எனக்கு ஒண்ணும் வேண்டாம்..., நாம முதல்ல ஊரு போய் சேருவோம். கிளம்பும்போதே ஆத்தா ஆயிரம் பத்திரம் சொல்லிச்சு. உங்க கண்ணாலம் முடியட்டும்..., எல்லாம் பொறவு கேக்கேன்...”, அவனை அடக்கினான்.

“போவே..., நீ வேணாம்னு சொன்னா வுட்டுடுவனா....., அன்னைக்கு ஏதோ சவரம் செய்ய க்ரீம் வேணும்னு கேட்டல்ல..., அத இப்போ வாங்கித் தாரேன் வா...”, தன்னுடன் வந்த அவனுக்கு எதையாவது செய்து, தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள முயன்றான்.

“அடப்பாவி...., ஏதோ பெருசா செய்யப் போறன்னு எதிர்பாத்தா..., கேவலம் அம்பது ரூவால முடிச்சுபுட பாக்குறியே. நானும் நினைச்சேன்..., என்னடா மாப்புள்ள திடீர்னு கர்ணப்பிரபுவா மாறிட்டாரேன்னு....,

“எனக்கு ஒண்ணும் வேண்டாம்..., நான் வழக்கம்போல நம்ம முத்தையாகிட்டேயே போய்க்கிறேன்...”, அவனிடம் பொய்யாக முறைத்துவிட்டு, வண்டியில் ஏறி அமர்ந்துகொண்டான்.

“ஏய் செம்பு..., அம்பது ரூவா உனக்கு சின்னக் காசாப்போச்சா..., சரி இரு..., வந்ததுக்கு ரெண்டு கலரக் குடிச்சுட்டு போவோம்...”, இருந்த உற்சாக மனநிலையில், தாங்கள் இருப்பது மெயின் ரோடு என்பதை அவன் மறந்துவிட்டான்.

ரோட்டின் இரு பக்கமும் பார்த்துதான் சாலையைக் கடக்கவேண்டும் என்பதையும் மறந்துவிட்டான். சட்டென ரோட்டின் குறுக்கே ஏறிச் செல்லவே, அதே நேரம் அந்த ரோட்டின் வளைவில் அசுர வேகத்தில் வந்த கார்,

தன் வேகத்தைக் குறைக்காமலேயே, தன்னை நோக்கி வருவதை உணர்ந்தவன், சுதாரித்து விலகும் முன்னர், வந்த வேகத்தில் அவனை இடித்து தூக்கி வீசிய கார், அதே வேகத்தில் சென்று, ரோட்டின் மத்தியில் விழுந்த அவன்மேல் ஏறி இறங்கியது.

அவன்மேல் ஏறி இறங்கிய காரோ, நிலை தடுமாறி, வந்த வேகத்திலேயே அவன்மேல் ஏறி இறங்கியதால், கார் அந்தரத்தில் பறந்து, இரண்டு மூன்று குட்டிக்கரணம் அடித்து, ரோட்டில் இழுத்துச் சென்று கவிழ்ந்தது.

அதே இடத்திலேயே, செம்புராஜின் கண் முன்னாலேயே சரவணன் துடித்து தன் ஆவியை விட்டான். செம்புராஜ் டிம்போவில் இருந்து, ஓடி வந்து தூக்கும் முன்பே, சரவணன் இந்த உலகை விட்டு சென்றிருந்தான்.

“ஏய்..., சரவணா..., சரவணாணா.....”, பதட்டத்தில் குரல் வெளியே வராமல், குரல் நடுங்க அவனை அழைத்தவன், அவனிடம் அசைவில்லை என்பதை உணர்ந்து, அந்த ஊரே அதிரும் அளவில் கத்தினான்.

அதே நேரம்..., வீட்டில் இருந்த தேவியும்...., “மாமா...”, எனக் கத்தினாள்.

சரவணனின் உடலை மடியில் வைத்துக் கொண்டு, பிரம்மை பிடித்தவன்போல் அமர்ந்திருந்தான் அவன். அவன் உறைந்து போனான். சரவணன் இந்த உலகில் இல்லை..., என்ற உண்மையைத் தங்கள் வீட்டில் இருப்பவரிடம் சொல்லும் தைரியம் அவனுக்கு இல்லை.

அடுத்து என்ன நடந்தது என்று கேட்டால் அவனுக்கே தெரியாது. டிம்போ டிரைவர் அவர்களுக்குத் தெரிந்தவன் என்பதால், ஆம்புலன்சை வர வைத்து, பாடியை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்.

அங்கிருந்தே பெரியவீட்டம்மாவுக்கு தகவல் கொடுக்க, அவர்கள் பக்குவமாகச் சொல்லி, வேலப்பனையும், அவர்கள் இரு தம்பிகளையும் அழைத்துக் கொண்டு திருச்சி சென்றார்.

அங்கு சென்று விஷயத்தை அறிந்தவர்கள், துடித்துப் போனார்கள். பெரியவீட்டையா, விபத்து ஏற்படுத்திய வாகனத்தைப் பற்றி கேட்க, அந்த காரில் வந்தவனும் இறந்துவிட்டான் என்ற தகவலே அவருக்குக் கிடைத்தது.

அதைப்பற்றி மேலும் விசாரிக்கப் போன அவரைத் தடுத்துவிட்டார் வேலப்பன். “என் மாப்பிள்ளையே போய்ட்டான்...., இன்னும் யாரைப் பத்தி விசாரிச்சு என்ன ஆகப் போகுது...”, விரக்தியாகப் பேசினார்.

அவர் எவ்வளவோ எடுத்து சொல்ல முயன்றும் மறுத்துவிட்டார். இங்கே தேவியோ..., மாமனைக் காணும்வரை பச்சை தண்ணி கூட குடிக்க மாட்டேன் என்று விரதமிருந்தாள்.

போஸ்ட்மார்ட்டம் முடித்து பாடி கிடைக்க, மறுநாள் மதியம் ஆகிவிட்டது. ஆம்புலன்சில், சரவணனின் உடலைக் கொண்டுவர, அதன் சைரன் சத்தத்திலேயே அடித்து பிடித்து எழுந்து ஓடினாள் தேவி.

சரவணனின் உடல், முற்றத்தில், ஓலைப் பாயில் கிடத்தப்பட, “ஐயோ மாமா...., என்னையும் கூட்டி போய்டு....”, என அவன்மேல் விழுந்து புரண்டு அழுதாள்.

“எங்கூட வாழணும்னு சொல்லிட்டு, வாழாமலே போயிட்டியே மாமா...., நான் வேணும்னு சொல்லுவியே..., என்னை எடுத்துக்காமலே போயிட்டியே...., இப்போ வா மாமா..., உன்னை நான் தடுக்கவே மாட்டேன்....,

“ஆத்தா மகமாயி...., உனக்கு காசு முடிஞ்சுவச்சு, அந்த காசுகூட செலுத்தலையே..., அதுக்கு முன்னாடி என் மாமாவ கூப்ட்டுகிட்டியே..., மாமா..., எந்திரிச்சு வந்துடு மாமா....

“நான் அழுதா நீ தாங்க மாட்டியே மாமா...., இப்போ இப்படி கதருதேன்.., கேக்காம படுத்து கிடக்கியே...., உன்ன மாமான்னு சொன்னா எனக்காக என்ன வேண்ணா செய்வியே மாமா....,

“இப்போ உன்னை இப்படி கூப்புடுதேன்..., உன் செவியில் விழவே இல்லையா...., நானும் உன்னோடவே வந்துடுதேன்.....”, அவன் இறப்பை ஜீரணிக்க முடியாமல் கதறித் துடித்தாள்.

பின்னர் நினைவு வந்தவளாக..., “மாமா..., இந்த ஜென்மத்தை உன்னோட வரக் கூடாதுன்னு என்கிட்டே சத்தியம் வாங்கிட்டியே..., என்ன உட்டுட்டுப் போய்டுவன்னு தெரிஞ்சுதான் என்கிட்டே சத்தியம் வாங்கிட்டியா....

“இது தெரிஞ்சிருந்தால் நான் உனக்கு முன்னயே போயிருப்பேனே..., இனிமேல் நான் யாருக்காக இருக்கணும்..., என்னையும் உன்னோட கூட்டி போய்டு.....”, நெஞ்சில் அடித்துக் கொண்டு, அவன்மேல் விழுந்து புரண்டு, அவனைக் கட்டிக் கொண்டு கதற, சுற்றி நின்ற ஊரே அழுதது.

அந்த ஊரிலேயே அவர்களின் காதலைப் பற்றி தெரியாதவர் யாரும் கிடையாது. அப்படியிருக்க, சென்றுவிட்ட அவனுக்காக அழுதார்களா..? வாழ்வைத் தொலைத்து நிற்கும் அவளுக்காக அழுதார்களா தெரியாது.

ஆனால்..., ஊரே அழுதது. வீட்டில் இருந்தவர்களோ, யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் கதறினார்கள். மாரி, ருக்கு, என அனைவரும், தலைவிரி கோலமாக ஒப்பாரி வைக்க, அந்த இடமே மயானமாக மாறியது.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்றே தெரியாமல், துக்கத்தில் துவண்டார்கள். திருமண வீடு, மரணவீடாக மாறியதில், கூடியிருந்த உறவினர்கள் அனைவரும் துக்கமானார்கள். ஏற்கனவே விபத்தில் உருக்குலைந்த உடலாகையால்...., இறுதிச் சடங்கை சீக்கிரம் முடிக்குமாறு பெரியவர்கள் அறிவுறுத்தினார்கள்.

சரவணனின் உடலை கொண்டுசெல்லவே அனுமதிக்க மாட்டேன் என்று தேவி அவன் உடலைக் கட்டிக்கொண்டு கதற, அவன் உடலை எடுக்க முடியாமல் தடுமாறினார்கள். இறுதியில் தேவி மயக்கமுறும்வரை அவன் உடலைக் கொண்டு செல்ல முடியவில்லை.

தேவி மயங்கிச் சரியவே, அவளைத் தாங்கிக் கொண்டார்கள். சரவணனின் இறுதிச் சடங்குகள் முடிந்து வீட்டுக்கு வந்த ஆண்களை வரவேற்றது தேவியின் கதறல்....., அத்தோடு, வீட்டுப் பெண்களின் குரல்களும் கேட்கவே வேகமாக வீட்டுக்குள் விரைந்தார்கள்.

அங்கே தேவி தலைவிரிக் கோலமாக அமர்ந்திருக்க, பெண்கள் அவளைச் சுற்றி அமர்ந்து, அவளைக் கட்டிக் கொண்டு அழுதுகொண்டிருந்தார்கள். அவர்களை அதட்டி உருட்டி, கஞ்சி வைக்கச் சொல்லி, அனுப்பினார்கள்.

கஞ்சியை வைக்க மட்டுமே அவர்களால் முடிந்தது, குடிக்க முடியவில்லை. வந்த சொந்தங்கள் மறுநாள்முதல் சொல்லாமல் கிளம்பிவிட, பதினாறாம்நாள் காரியமும் எளிமையாகவே நடந்து முடிந்தது.

தேவியின் வீடுமட்டும் துக்கத்தில் இருந்து வெளிவர முடியாமல் தவித்தார்கள். தேவியோ படுக்கையே ஆகிவிட்டாள். ஒரு கவளம் உணவுகூட உண்ண அவள் தயாராக இருக்கவில்லை. நான் பட்டினி கிடந்தே செத்துப் போகிறேன்', என்று அரை மயக்கத்தில் புலம்பும் அவளை, வடிகஞ்சியை வலுக்கட்டாயமாகப் புகட்டி, அவள் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருந்தார்கள்.

மாரி, வேலப்பன், வடிவு, ருக்கு என அனைவருக்குமே போய்விட்ட சரவணனை நினைத்து அடைந்த கவலையை விட, உயிரோடு இருந்து வதைபடும் தேவியைக் கண்கொண்டு காண முடியவில்லை.

தாங்கள் ஆசையாக வளர்த்த செல்வ மகளின் துயரம் காண முடியாமல் துவண்டார்கள். அத்தோடு எங்கே அவளும் தங்களை விட்டுப் போய்விடுவாளோ எனக் கவலை கொண்டார்கள்.

ஆனாலும் அவளை மாற்றும், தேற்றும் வழி அவர்களுக்குத் தெரியவில்லை. அந்த நேரம்தான்..., பெரியவீட்டம்மாவின் உறவினரான, பத்மாவும், வீணாவும் அவர்கள் குலதெய்வக் கோவிலுக்கு வந்திருந்தார்கள்.

அப்பொழுது பெரியவீட்டம்மா எதேச்சையாக தேவியைப் பற்றி சொல்லவே, அவள்மேல் எழுந்த பரிதாபம் கலந்த நேசத்தினால், அவள் வீட்டில் பேசி, அவளைத் தங்களோடு அழைத்துவந்துவிட்டர்கள்.

தேவியின் பெற்றோரும், உற்றார் அனைவரும், தங்கள் வீட்டுப் பிள்ளைக்கு மாறுதல் தேவை என்பதை உணர்ந்து, தங்கள் மனங்களை கல்லாக்கிக் கொண்டு, தங்கள் குலக் கொழுந்து, உயிரோடாவது இருக்கட்டும் என்ற

எண்ணத்தில், முகமறியா அவர்களுடன், அனுப்பி வைத்தார்கள்.

தன்னிலையை மறந்து, நடைபிணமாக, களிமண் பொம்மையாக, தன் பயணத்தை அவர்களோடு தொடர்ந்தாள்...., “வானதிதேவி”.

# பகுதி – 21.

அருகில் இருந்து அறியும் உன்னை

விலகி இருந்தாலும்

உணர்ந்துகொள்வேன் நான்..........

காலையில் எழுந்து, வீணா, அலுவலகம் கிளம்பி வந்த பிறகும், வானதி அவள் அறையை விட்டு வெளியே வந்திருக்கவில்லை. சிலநாள் அவள் செய்வதுதான்...., எனவே அவளைத் தேடி..., அவள் அறைக்கு விரைந்தாள்.

அங்கே வானதியோ காய்ச்சலில் அனத்திக்கொண்டிருந்தாள். வானதியால் இரவின் தாக்கத்தில் இருந்து வெளியே வந்திருக்க முடியவில்லை. மனக்குழப்பமும், தவிப்பும் அவளை காய்ச்சலில் தள்ளியிருந்தது.

வானதி அனத்துவதைக் கண்ட வீணா, வேகமாக அறைக்குள் நுழைத்து, அவள் நெற்றியில் கைவைத்துப் பார்க்க, அவள் நெற்றியோ நெருப்பாய் தகித்தது.

“வானதி...., வானதி....”, அவளை தோள் தொட்டு உலுக்க சோம்பலாகக் கண் விழித்தாள்.

“அக்கா..., கம்பெனிக்கு போக நேரமாச்சா...., செத்த இருங்க கிளம்பி வாரேன்...”, தன் உடல்நிலை சரியில்லை என்பதைக் கூட உணரும் நிலையிலோ, தெளிவிலோ அவள் இருக்கவில்லை.

“என்ன வானதி விளையாடுறியா...., உடம்பு நெருப்பா கொதிக்குது.., ஒரு வார்த்த சொல்லமாட்ட..., இன்னைக்கு எங்கேயும் போக வேண்டாம். முதல்ல முகம் கழுவிட்டு வா..., நாம ஹாஸ்பிடல் போகலாம்...”, அதட்டினாள்.

“அதெல்லாம் ஒண்ணும் வேணாக்கா..., இந்த ஜூரமெல்லாம் என்னை எதுவும் செய்யாது....”, தள்ளாடி நடந்து, குளியலறைக்குள் புகுந்துகொண்டாள்.

அவள் செல்லவே, வீணா தன் தாயைத் தேடிச் சென்று, வானதிக்கு உடல்நிலை சரியில்லை என்பதைச் சொல்லி அழைத்து வந்தாள். அவரும் வந்து அதட்டல் போட்டும் பலனின்றிப் போக, இறுதியில் ஒரு பேராசிட்டமால் கொடுத்து அவளைப் படுக்க வைத்தார்கள்.

பாரசிட்டமால் போட்டும் ஜூரம் இறங்கவே இல்லை. ஜூர வேகத்தில்  வானதி மீண்டும் அனத்தத் துவங்கவே, ஒரு ஆட்டோ வரவைத்து, அவளையும் அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தாள் வீணா.

இடையில் கார்மெண்டுக்கு ஃபோன் செய்து, விடுமுறையும் சொல்லிவிட்டாள். மருத்துவமனை நோக்கிச் செல்லும் வேளையில் ஒரு சிக்னலில் அவர்களின் ஆட்டோ நின்றது.

அலுவலகத்துக்கு வந்த யுவாவை வெறுமை தாக்க, இரவின் தாக்கமும், இன்றைய வெறுமையும் சேர்ந்து அவனை பித்தாக்கியது. எதிலிருந்தோ தப்பிக்க முயல்பவன்போல் அலுவலக அறைக்கு விரைந்தவன், கண்களை மூடி தன்னை கட்டுக்குள் வர முயன்றான்.

அஷ்மிதா அவனைத் தொடர்ந்தவள், அவன் தோளை ஆதரவாகப் பற்றினாள். வெறுமையாக அவளை நோக்கியவன், “எனக்கு ஒரு உதவி செய்வீங்களா...?”, தன் நிலையை அவளுக்கு எப்படி உணர்த்தவென்று தெரியாத குழப்பத்திலும், தனக்கு தெளிவு கிடைத்தே ஆகவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலும், நடுங்கியது அவன் குரல்.

வழக்கம்போல் அவன் குரலில் தவித்தவள், “இதென்ன கேள்வி யுவா..., நீங்க கேட்டு நான் செய்யாமல் இருப்பேனா...., தயங்காமல் சொல்லுங்க....”, அவனுக்கு நம்பிக்கை அளித்தாள்.

இவ்வளவு நாளும் மேலோட்டமாக விஷயத்தை சொல்பவன், முதல் முறையாக தன் மனதில் இருப்பவை அனைத்தையும் கொட்டினான். எப்படியும் தனக்கு தெளிவு கிடைத்தே ஆகவேண்டும், அதற்கு தன் விஷயத்தை யாரிடமாவது பகிர்ந்தால் மட்டுமே முடியும் என்று அவனுக்குத் தெரியும்.

எனவேதான் அனைத்தையும் அவளிடம் ஒப்பித்தான். அவன் சொல்லி முடிக்கவே, அந்த அறையில் கனமான அமைதி நிலவியது. யுவாவோ இதற்குமேல் நீதான் வழிகாட்டவேண்டும் என்று அமைதியாக இருக்க,

அவன் சொன்னவற்றைக் கேட்ட அஷ்மிதாவோ, அவன் மனதுக்குள் தனக்கு ஒரு சிறு இடம் கூட இல்லை என்பதை எண்ணி துடித்துக் கொண்டிருந்தாள். முன்பே அவனுக்கும் தனக்கும் ஒத்துவராது என்று பிரிந்து சென்றவள்தான்.

ஆனால் இன்றைய யுவாவை அவள் உயிராய் நேசித்தாள். தான் நேசிக்கும் ஒருவனின் மனதில் தான் ஒரு மூலையில் கூட இடம்பிடிக்கவில்லை என்ற உண்மை அவள் மனதை ரணமாக்கியது.

கலங்கத் துவங்கிய கண்களையும், துடிக்க மறுக்கும் இதயத்தையும் கட்டுக்குள் கொண்டுவர மிகுந்த சிரமப்பட்டாள். தன் வலியை அவனுக்குக் காட்டாமல், சாமர்த்தியமாக மறைத்தாள். தன் வலியை தனக்குள் மென்று புதைத்தவள், ஒரு முடிவுடன் அவனை ஏறிட்டாள்.

அவள் தன்னைப் பார்க்கவே, “நானெல்லாம் என்ன ஜென்மம்ன்னு யோசிக்கிறீங்களா....? உண்மையைச் சொல்லணும்னா...., கனவில் காணும் அவளை நான்

உயிரா நேசிக்கிறேன் அஷ்மிதா. அவளோட ஒவ்வொரு உணர்வும் என்னைத் தாக்குது.

“அவ அழுதால் என் மனம் பாரமாகிடுது. அவ சிரித்தால்..., அந்த சிரிப்பு என் மனசுக்குள் ஒரு நிம்மதியைக் கொடுக்குது. அவ சோகமா இருந்தால்..., என்னால் எதையுமே சிந்திக்க முடியலை. அவ என்னைப் பற்றி நினைக்கும்போது...., அவகிட்டே போக நான் துடிக்கிறேன்.

“அவ எனக்காகத் தவிக்கும்பொழுது....., வெட்கத்தை விட்டு சொல்வதாக இருந்தால்...., இப்படியே கனவில் அவளோட வாழ்ந்துவிடுவோமா என நான் துடிக்கிறேன் அஷ்மிதா....”, உணர்ச்சிக் குவியலாக அவன் சொன்ன ஒவ்வொரு வரியிலும், வார்த்தையிலும், அவன் காதலியோடு பின்னிப் பிணைந்திருக்கும் உணர்வுகளை விவரித்தான்.

அவனது விவரிப்பில், அவனது காதலின் ஆழத்தைப் புரிந்துகொண்டாள் அஷ்மி. அவனது காதல் ஜென்மபந்தம் என்று அவள் எண்ணினாள். அவளுக்கும் காதலின் வலி புரிந்ததால், எப்படியும் அவனது காதலை, காதலியை அவனோடு இணைக்க உதவிசெய்வது என்று முடிவெடுத்தாள்.

“என்னால் இந்த குழப்பத்தையும், வலியையும், தவிப்பையும் தாங்கிக்க முடியலை அஷ்மி. இப்படியே போனால்..., ஒருநாள் நான் தலை வெடித்தே இறந்து போவேன். இதுக்குமேல் ஒரு நாள் கூட என்னால் இப்படி இருக்க முடியாது.

“இதற்கெல்லாம் நான் ஒரு முடிவு கட்டியே ஆகணும். அவளோட நிழலைக் கூட என்னால் உணர முடியுது. அவ என் கிட்டேயே இருப்பதும், அவ இருக்கும் இடத்தையும் என்னால், அவளோட எண்ண அலைகள் என்னைத் தாக்குவதையும் என்னால் புரிஞ்சுக்க முடியுது.

“ஆனாலும்...., என்னால் அவளை நெருங்க முடியலை. நிழலாகத் தீண்டும் அவளை, நிஜத்தில் நான் உணர விரும்புறேன். அவ எனக்காகத் தவிப்பது தெரிந்தும், அவளிடம் போக முடியாத இந்த மனத் தடையை அடியோட நான் வெறுக்கிறேன்...”, தவித்து, துடித்துப் பேசினான் யுவா.

“எப்படியாவது இதை நான் தகர்த்தே ஆகணும்..., எனக்கு உதவிசெய்ய, உங்களைத் தவிர யாரும் இல்லை அஷ்மி. எனக்கு உதவி செய்ங்க ப்ளீஸ்.....”, அவள் கரத்தைப் பிடித்துக் கெஞ்சினான்.

அவனது செய்கையில்...., ‘உனக்கு நான் இருக்கிறேன் யுவா...’, என அவனைக் கட்டிக்கொண்டு கதறவேண்டும்போல் எழுந்த வேகத்தை, சட்டென அடக்கினாள்.

“நீங்க கிளம்புங்க யுவா..., நாம இப்போவே டாக்டரைப் போய் பாக்கலாம் வாங்க...”, அஷ்மி முடிவெடுத்துவிட்டாள். எப்படியும் யுவாவை அவன் மனக் குழப்பத்தில் இருந்து மீட்டே ஆகவேண்டும் என்று தீர்மானித்தாள்.

இருவரும் மருத்துவமனைக்குக் கிளம்பினார்கள். காரில் செல்லும்பொழுது, தன் மனதில் இருக்கும், தன்னவளின் எண்ணங்கள், அவளோடான தன் நேசம், நெருக்கம் இவையெல்லாம் பற்றி பேசிக் கொண்டே இருந்தான்.

அஷ்மி அமைதியாகக் கவனித்தாள். ஒரு கட்டத்தில் அவனது இதயம் அபார வேகத்தில் துடிக்கவே, பேச்சை நிறுத்தினான்.

“அஷ்மி...., அவ இங்கேதான் இருக்கா...., அவளுக்கு என்னமோ...., எனக்கு சொல்லத் தெரியலை..., அவ நார்மலா இல்லை என்பது மட்டும் எனக்குத் தெரியுது....”, இருக்கியின் நுனியில் அமர்ந்தவனின் பார்வையோ, ஓடும் காருக்கு வெளியே சுழன்றது.

“யுவா...., நடு ரோட்டில் இருக்கோம்..., அவ எப்படி இங்கே இருக்க முடியும்...?”, கேட்டவளின் கண்களும் சுழன்று தேடியது.

அந்த காலை நேரப் பரபரப்பில், சாலை முழுவதும் வாகன நெரிசல் நிரம்பி வழிய, கார் ஊர்ந்தே சென்றது. ஒரு சிக்னலில் கார் நிற்கவே, பார்வையை கூர்மையாக்கி துழாவினான்.

‘அவள் இங்கேதான் இருக்கிறாள்...’, அவன் உள்ளுணர்வு அடித்துச் சொன்னது.

சிக்னல் சிகப்பில் இருந்து மஞ்சளுக்கு மாறி, பச்சை விளக்கும் ஒளிரவே, அஷ்மி காரைக் கிளப்பினாள். அவளது கார் வானதி இருந்த ஆட்டோவுக்கு எதிர் திசையில் பயணப்பட, கடைசி நொடியில், வானதியின் உருவம் அவன் கண்களில் பதிய, “தே..., தே...., தே....விம்மா.....”, ஓடும் காரில் இருந்து, கதவைத் திறந்துகொண்டு குதித்து இறங்கினான் யுவா.

“ஐயோ யுவா என்ன செய்யிறீங்க...?”, அஷ்மிதாவால் நடு வழியில் காரை நிறுத்தவும் முடியாமல், கொஞ்சம் ஓரம்கட்டி நிறுத்த முயன்றாள்.

காரிலிருந்து குதித்த யுவாவோ..., பின்னால் வந்த வாகனங்களையும் கண்டுகொள்ளாமல், வானதிதேவி இருந்த ஆட்டோவை நோக்கி ஓடினான்.

அதைவிட பின்னால் வந்த வாகனங்களின் பிரேக் பிடிக்கும் ஓசை, அவர்களின் வசை எதுவுமே அவனை அசைக்கவில்லை. அவனது எண்ணமெல்லாம் வானதியிடம் செல்லவேண்டும் என்பதாக மட்டுமே இருந்தது.

ஓடியவன் நொடியில் அவள் வாகனத்தை அடைந்து, கைநீட்டி அவளை குண்டுகட்டாகத் தூக்கியவன், “தேவிம்மா...”, என்ற அழைப்போடு, அவளை இறுக அணைத்தான்.

அணைத்தவன் அத்தோடு நிறுத்தாமல், தேடிக் கிடைத்த புதையலைக் கண்டவன்போல், “தேவிம்மா...., வந்துட்டேண்டா..., உன் மாமன் வந்துட்டேன். இனிமேல் உன்னைத் தனியா தவிக்க விட மாட்டேன்.

“உன்னைக் காணாமல்தான், நான் ஏங்கிட்டு இருந்தேன்....., உன்னைப் பார்க்கும்வரை நான் நானாவே இல்லை தேவி...., உன்னைப் பார்த்த பிறகுதான் நான் நானாக மாறி இருக்கேன்..., உனக்காகத்தான் நான் ஆயிரம் தடைகளைத் தாண்டி வந்திருக்கேன்...”, அவனது ஒவ்வொரு பேச்சுக்கும், அவன் அணைப்பு இறுகியது.

“உன்னைக் கண்டுகொண்டேனே..., இதுவே எனக்குப் போதும். இந்த ஜென்மத்தின் பலனை நான் அடைந்துவிட்டேன். இனிமேல் உன்னையும் என்னையும் பிரிக்க, உலகத்தின் எந்த சக்தியாலும் முடியாது தேவி....”, சொன்னவனின் இதழ்களோ அவள் நெற்றியில் அழுந்தப் புதைந்தது.

தேவியின் நிலையோ உச்ச அதிர்ச்சியில் இருந்தது. அவளுக்குக் குறையாத அதிர்வை வெளிப்படுத்தினாள் வீணா. தேவியின் அதிர்வுக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று..., தன் முதலாளி தன்னிடம் இப்படி நடந்துகொள்கிறானே என்று இருந்தது.

இரண்டாவது..., அவன் அணைப்பில் தெரிந்த இறுக்கம்..., அது அவள் குழந்தை முதல் பழகிய அணைப்பாக இருந்தது. அதில் இருந்த இறுக்கம், ஸ்பரிசம், அணைத்த விதம்..., என அனைத்துமே அவள் அறிந்ததே.

அவனது அணைப்பை ஏற்கவும் முடியாமல், அதைத் தடுக்கவும் முடியாமல் திண்டாடினாள்.

“சார்...”, திக்கித் திணறி அவள் அழைக்க,

“என்னது சாரா...., தேவி...., நான்தான் சரவணன்..., உன் மாமன்... என்னைத் தெரியலையா...?”, அவன் ஏற்படுத்திய அதிர்ச்சியிலும், நடு ரோட்டில் தனக்கு ஏற்பட்ட

அனுபவத்திலும், காய்ச்சலின் வீரியத்திலும் அவளால் தன் எதிர்ப்பை வெளிப்படுத்த முடியவில்லை.

வீணாவோ..., யுவாவிடம் சண்டை போடலாம் என எண்ணுகையில், வானதியின் மௌனமும், அவளது எதிர்ப்பில்லாத நிலையும் அவளை ஊமையாக்கியது. அதே நேரம் அங்கு வந்த அஷ்மிதாவோ, யுவாவும், வானதியும் இருந்த நிலையைப் பார்த்தவள், திடுக்கிட்டாள்.

அத்தோடு அவனது பேச்சையும் கேட்ட இரு பெண்களின் நிலையும் உச்ச திகைப்பில் இருந்தது. அவன் சொல்வதை நம்பவும் முடியாமல், நம்பாமல் இருக்கவும் முடியாமல் திண்டாடினார்கள்.

‘இதை தான்... என்றோ எதிர்பார்த்த ஒன்றுதான்’, என்பதை உணர்ந்தவள்போல் அமைதியாக நின்றிருந்தாள் அஷ்மி. அவன் தன் காதலியைக் கண்டுகொண்டான் என்பதில் சந்தோசப்படுவதா..., அவன் தனக்கு இல்லவே இல்லை என்பதை நினைத்து துக்கப்படுவதா... என்று தெரியாமல், திணறினாள்.

வானதிக்கோ காய்ச்சலின் தாக்கமும், அவன் பேச்சு விளைவித்த தாக்கமும், அவன் உணர்த்தும் நெருக்கத்தை ஏற்க முடியாமலும், மயங்கிச் சரிந்தாள். அவள் மயங்கவே, அவளைக் கைகளில் ஏந்தியவன், சுற்றிலும் வேடிக்கைப் பார்க்கும் மனிதர்களைப் பொருட்படுத்தாமல், அவள் வந்த ஆட்டோவிலேயே அவளைப் படுக்க வைத்தான்.

அவளைப் படுக்க வைத்தவன், “வீணா..., நீங்க உள்ளே ஏறுங்க. நாம ஹாஸ்பிட்டல் போகலாம்....”, அவளிடம் சொன்னவன், ஆட்டோ டிரைவரின் அருகில் அமர முயன்றான்.

“யுவா என்ன செய்யிறீங்க....? வாங்க நாம கார்ல போகலாம்”, அவனைத் தடுக்க முயன்றாள்.

“இல்ல அஷ்மி..., அது சரிவராது...., எனக்கு அந்த மூடிய காருக்குள் மூச்சடைக்குது. எனக்கு இந்த ஆட்டோதான் செட்டாகும். நீங்க போங்க.., நான் ஹாஸ்பிட்டல் போறேன். எனக்கு என் உசுரு திரும்பக் கிடைத்ததே போதும்...”, சட்டையை உதறுவதுபோல், அவன் நிலையை உதறிச் செல்வதைப் பார்வையாளராகப் பார்த்துக் கொண்டிருந்தாள் அஷ்மி.

இதற்குமேல் அந்தப் பொது இடத்தில் அவனிடம் விவாதிக்க, அவள் தயாராக இருக்கவில்லை. ஏற்கனவே ஆட்டோ டிரைவர் அவர்களை வித்தியாசமாகப் பார்க்கத் துவங்கியிருந்தான். அத்தோடு போக்குவரத்து நெரிசலும் ஏற்படவே, அவள் நகர்ந்துவிட்டாள்.

## பகுதி – 22.

மருத்துவமனைக்கு விரைந்த யுவா தேவியை அங்கே சேர்த்துவிட்டு, அவளுடனே தவிப்பாய் காத்திருந்தான். அவன் சிந்தையில் அப்பொழுது நிறைந்திருந்தவள் தேவி மட்டுமே. அதைத்தவிர வேறு சிந்தையில்லை.

மருத்துவர் தேவி இருந்த அறைக்கு விரைந்து, அவனை வெளியே செல்லச் சொல்லும்வரை அவன் அந்த இடத்தை விட்டு நகரவில்லை.

ஆனால் வீணாவோ, அவர்களைப் பின்தொடர்ந்த அஷ்மிதாவோ அப்படி இருக்கவில்லை. வீணா உடனடியாக பெரியவீட்டம்மாவுக்கு ஃபோன் செய்து விஷயத்தைத் தெரிவிக்க, அஷ்மி, ஈஸ்வருக்கு ஃபோன் செய்தாள்.

யுவாவோ அமைதியின்றி தவித்துக் கொண்டிருந்தான். இருக்கையில் கூட அமராமல், தேவியைக் கண்டால் மட்டுமே நிம்மதி என்பதுபோல் நடந்துகொண்டான். மூடியிருந்த கதவையே வெறித்தவன், வராண்டாவில் பொறுமையின்றி உலாத்தினான்.

அடுத்த அரைமணி நேரத்தில் கங்காவும் ஈஸ்வரும், தங்கள் மருத்துவர் ரவியுடன் அங்கே ஆஜராயினர். அவர்களைக் கண்ட பிறகே இருக்கையில் சென்று அமர்ந்தான்.

அவர்கள் வரவே, அஷ்மிதாவும், வீணாவும் அவர்கள் அருகில் வந்தார்கள்.

“என்னப்பா ராஜா...., என்ன ஆச்சு...? எதுக்கு ஹாஸ்பிட்டல் வந்துருக்க..? மறுபடியும் தலை வலிக்குதா? அதான் ஹாஸ்பிடல் வந்தியா...?”, கங்கா, விஷயம் தெரியாமல் படபடத்தார்.

ஈஸ்வரோ இறுகிப்போய் இருந்தார். மகன் அருகில் சென்றவர், “வாப்பா வீட்டுக்கு போகலாம்...”, இறுக்கம் குறையாமலே அழைத்தார்.

“என்னங்க நீங்க..., இந்த நேரத்துல கூட இப்படி இருக்கீங்க..? புள்ளைக்கு என்ன ஆச்சுன்னு கேக்குறதை விட்டு..., வீட்டுக்குப் போகலாம்னு சொல்லுறீங்களே. உங்களுக்கு அவன்மேல் கொஞ்சமாவது அக்கறை இருக்கா...?”, அவரிடம் பொரிந்தார்.

“எனக்கு புரிஞ்சுதான் அவனை வீட்டுக்கு கூப்பிடுறேன். நீதான் இன்னும் விஷயம் புரியாமலே இருக்க. முதல்ல அவனை வீட்டுக்கு வரச்சொல்..., மத்ததெல்லாம் பிறகு பாத்துக்கலாம்...”, இளகத் துவங்கிய குரலை, மறைத்தவாறே சொன்னார்.

“என்னங்க சொல்லுறீங்க...”, புரியாமலே கேட்டார்.

“எவடி இவ..., டேய்... நீயே சொல்லுடா...”, சூழ்நிலையின் வீரியம் புரியாமல் நடந்துகொள்கிறாரே என்று இருந்தது அவருக்கு. எனவே நண்பனிடம் சொல்லச் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

“என்னண்ணே சொல்லுறாங்க....?”, தவிப்பாய் கேட்டார்.

“நீ இரும்மா நான் யுவாகிட்டே பேசிட்டு வாரேன்…”, சொன்னவர், யுவாவிடம் சென்றார்.

“யுவா….”, அவர் அழைக்க, அவனிடம் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

அவன் தோளைத் தொட்டவர்…., “என்னப்பா முடிவு செஞ்சிருக்க…?”, ஆதரவாகக் கேட்டார்.

‘ஓஹோ…., அப்போ உங்களுக்கெல்லாம் எல்லா விஷயமும் தெரியும். தெரிந்தே இவ்வளவு நாள் என்னிடம் மறைச்சு இடுக்கீங்க…’, அவன் பார்வை அவரை குற்றம் சுமத்தியது.

ஒரு நிமிடம் விழி மூடி தன்னை கட்டுப்படுத்தியவன், “நான் என்னசார் முடிவெடுக்க…, எனக்கு என் தேவி கிடைச்சுட்டா.., அது போதும் எனக்கு. இதுக்குமேல என்ன வேணும்…

“ஆனா…, நீங்கல்லாம் எவ்வளவு முயற்சி செஞ்சும்…, எங்களோட காதல் எங்களை சேத்துடுச்சு பாத்தீங்களா…”, நெகிழ்ச்சியாக பூரிப்பாக, பரவகசமாகச் சொன்னான்.

“என்னது உன் தேவியா…? அது முடிஞ்சு போன கதை. இப்போ நீ என்னோட புள்ளை…, அது தெரியலையா உனக்கு…?”, ஈஸ்வர் கொந்தளித்துபோய் அவன் அருகில் வந்தார்.

“ஈஸ்வர் என்ன இது…? கொஞ்சம் பொறுமையா இரு..”, நண்பனை அடக்க முயன்றார் ரவி.

ஈஸ்வரை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்தவன், “என்னை என் தேவியோட வாழ விடாமல் தடுத்ததே உங்க பிள்ளைதான். அப்படியிருக்கும்போது…., நீங்க எப்படி இப்படிப் பேச முடியும்?

“அது முடிஞ்சு போன கதைன்னா…., உங்க பிள்ளையும் முடிஞ்சுபோன கதைதான். எதுக்காகவும்…, யாருக்காகவும்

நான் என் தேவியை இழக்கத் தயாராக இல்லை.

“சொல்லப் போனால் எங்களோட எல்லா துன்பங்களுக்கும் காரணமே உங்க பிள்ளைதான். அப்படியிருக்கையில் நான் ஏன் உங்களோட வரணும்…? நீங்க உங்க வழியைப் பாத்துக்கோங்க…, நான் என் வழியைப் பாத்துக்கறேன்…”, அலட்சியம் குறையாமலே சொன்னான்.

“என்ன சொன்ன…?”, “என்னப்பா சொல்லுற…?”, ஈஸ்வரின் கோபக் குரலும், கங்காவின் தவிப்பான குரலும் ஒரே நேரம் எழுந்தது.

ஈஸ்வரிடம் தன் கோபத்தைக் காட்ட முடிந்த அவனால், கங்காவிடம் காட்ட முடியவில்லை. அவன் தொண்டை கட்டிக் கொண்டது. அமைதியாக அவரை ஏறிட்டான்.

அதே நேரம் மேலும் பேசப் போன ஈஸ்வரை, கையை அழுத்தித் தடுத்தார் ரவி. அவர் கண்களை மூடித் திறந்து பொறுமையாக இருக்கும்படி சொல்லவே, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார் அவர்.

ஆனாலும் தன் பிள்ளையை…., உயிரோடு இருக்கும் வேளையில், இல்லையென்று சொல்ல அவர் மனம் இடம் கொடுக்கவில்லை.

அதிலும் யுவாவின் நடத்தைகளும், செருக்கும், ஆணவமும் முன்பு பிடிக்காமல் இருந்தாலும், தன் தொழிலை அவன் ஏற்று நடத்தி, தொழிலை விரிவாக்கம் செய்து, லாபம் கொழிக்க வைத்ததில் அவருக்கு அலாதி பெருமை.

அப்படியிருக்கையில், யுவாவின் சில மாறுதல்களையே அவரால் ஏற்க முடியாத பொழுது, முழுதாக அவன் தன் மகன் இல்லை என்பதை அவர் எப்படி ஏற்றுக் கொள்வார்? எனவேதான் அவனிடம் தன் ஆளுமையையும், உரிமையையும் நிலைநிறுத்தி கூட்டிச் செல்ல முயன்றார்.

யுவாவின் பேச்சைக் கேட்ட கங்கா..., வேகமாக அவனை நெருங்கினார். “என்னப்பா சொல்லுற...? எனக்கு என்னமோ பயம்மா இருக்கே. அப்பா என்ன சொன்னாலும் எனக்காக கொஞ்சம் பொறுத்துக்க ராஜா....

“உனக்கு இந்த அம்மா இருக்கேன்டா கண்ணு. நீ கம்பெனிக்குப் போக வேண்டாம், மீட்டிங் அட்டென்ட் பண்ண வேண்டாம்..., இந்த அம்மாவுக்குப் புள்ளையா..., வீட்டில், எங்கூட இருந்தால் போதும் ராஜா...”, அவன் தாடையைப் பிடித்து சமாதானம் செய்தார்.

“இவ என்ன..., அவன்கிட்டே சமரசம் பேசிட்டு இருக்கா...?”, சின்னக் குரலில் ஈஸ்வர் முணுமுணுக்க, ரவி அவரை அடக்கும் பார்வை பார்த்தார்.

ரவியின் பார்வை சொன்ன செய்தியில், தன் புலம்பலை நிறுத்தினார் ஈஸ்வர்.

“அம்மா..., அம்மா....”, அவரிடம் தான் அவர் பிள்ளை இல்லை, சரவணன் என்பதைச் சொல்ல முடியாமல் திணறினான்.

அவன் திணறுவதைக் கண்ட ஈஸ்வர் ரவியைப் பார்க்க, இருவரின் பார்வையும் ரகசியம் பேசிக் கொண்டது.

“அம்மா கேக்குறேன்..., வீட்டுக்கு வந்துடு ராஜா..., இந்த அம்மாவை விட்டு போய்டாதடா..., இந்த வயசான காலத்தில் எனக்கு புத்துர சோகத்தை தந்துடாதம்மா..., என்னால் அதைத் தாங்க முடியாது...”, அவரது கண்ணீர் அவனைக் கரைத்தது.

“அம்மா...., உங்ககிட்டே எப்படிச் சொல்லன்னு எனக்குத் தெரியலம்மா...”, திணறினான்.

“அம்மாதாண்டா ராஜா..., இந்த அம்மா சொல்லுறதை கேட்ப தானே....”, அவன் தாடையைத் தொட்டு வினவ, அவன் தலை தானாகவே ஆமென ஆடியது.

ஆனாலும் அதில் முழு சம்மதம் இருக்கவில்லை. அரைமனதாக சம்மதித்துவிட்டு அவன் அமைதியாகிவிட, கங்கா நிம்மதியாக அவன் தோளில் சாய்ந்துகொண்டார்.

அவரை அமைதியாக பார்த்தவனின் மனமோ..., 'இவரைவிட்டு எப்படிச் செல்லவென்று', சிந்தித்தது. அது தன்னால் முடியுமா...? அவரைத் தவிக்கவிட்டுச் செல்வது சரியா..? இவ்வாறாக குழம்பியது.

ஒரு நிமிடம் அனைத்தையும் ஒதுக்கியவன், தேவியின் அறையில் இருந்து வெளியேறிய மருத்துவரைக் கண்டவன், "ஒரு நிமிஷம்மா வந்துடுறேன்...", சொன்னவன் விரைந்தான்.

"யாருக்கு என்னப்பா...?", அவனைப் பின்தொடர்ந்தார்.

"சொல்றேம்மா...", தாயிடம் சொன்னவன், "டாக்டர்..., தேவிக்கு எப்படி இருக்கு...? மயக்கம் தெளிஞ்சுடுச்சா...? நான் அவளைப் பாக்கலாமா...? அவளுக்கு பயப்படுற மாதிரி எதுவும் இல்லையே...?", மூச்சுகூட விடாமல் கேள்விகளை அடுக்கினான்.

அவனது தவிப்பை வித்தியாசமாகப் பார்த்தார் கங்கா. அதை உணர்ந்தாலும் கண்டுகொள்ளாமல், மருத்துவரிடம் தன் கவனத்தைச் செலுத்தினான்.

"கூல் யங் மேன்...., அவங்களுக்கு சாதாரண ஜுர மயக்கம்தான். இன்னும் ரெண்டுமணி நேரத்தில் கண் முழிச்சுடுவாங்க. நீங்க தாராளமா வீட்டுக்கு கூட்டி போகலாம்...", அவன் தோளைத் தட்டி சொல்லிச் சென்றார்.

அதன் பிறகுதான் நிம்மதியாக உணர்ந்தான். அவரைத் தடுத்து நிறுத்தியவன்..., "நான் பாக்கலாமா டாக்டர்...", தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் கேட்டான்.

"தாராளமா பாருங்க..., ஆனால் டிஸ்டப் பண்ணாமல் வந்துடுங்க...", அனுமதி வழங்கிச் சென்றார்.

“வாங்கம்மா…”, தாயையும் கைபிடித்து அழைத்துச் சென்றான். குழப்பமான மனநிலையோடே அவன் பின்னால் சென்றார்.

இவ்வளவு விஷயத்திலும் வீணாவும் அஷ்மிதாவும் பார்வையாளர்களாக மட்டுமே இருந்தார்கள். பெண்கள் இருவரும் என்ன நடக்கிறது என்ற குழப்பத்தில் தவித்துக் கொண்டிருந்தனர்.

அறைக்குள் நுழைந்தவன், தேவியின் அருகில் சென்று, அவள் தலையை வாஞ்சையாக வருடினான். “தேவிம்மா…”, சன்னமாக முணுமுணுத்தான்.

அவன் கண்கள் கலங்கியது…, அவள் கையை தன் கையில் ஏந்தியவன், அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். படுக்கையில், வாடிய மலராகப் படுத்திருந்த அவளைப் பார்த்தவர், தன் மகனது செய்கைகளையும் திகைப்பு மாறாமலே பார்த்தார்.

‘இது யாருப்பா…?’, என அவர் கேட்க எண்ணுகையில், “இவதாம்மா…, இவதான்…, என் உயிர். இவ்வளவு நாளும் இவளைத்தான் நான் தேடிட்டு இருந்தேன். இவ இல்லாமல் நான் இல்லை. இந்த உயிரை நான் காப்பாற்றிக் கொண்டதே இவளுக்காகத்தான்.

“எல்லோரும் உயிரை கையில் பிடிச்சுட்டு அலைந்தேன்னு ஒரு பேச்சுக்கு சொல்லுவாங்க. ஆனால் நான் உண்மையாகவே அதைச் செய்தேன். இப்போதைக்கு இதுக்கு மேல உங்ககிட்டே என்ன சொல்லன்னு எனக்குத் தெரியலம்மா…”, தன் நிலையை அழுத்தமாகவும், அதே நேரம் கவலையாகவும் முடித்தான்.

அவனது குரலில் இருந்த அழுத்தத்திலேயே அவள்மேல் அவனுக்கு இருந்த அன்பைப் புரிந்துகொண்டவர், இறுதியில் அவன் சொல்ல வார்த்தையில் திகைத்தார்.

அவருக்கு நடப்பவை அனைத்தும் மர்மமாக இருந்தது. அதே நேரம் மருத்துவமனையில் வைத்து எதையும் கேட்க

அவர் தயாராக இல்லை. எனவே அமைதியாகவே இருந்தார்.

அங்கிருந்து வெளியேறும் முன்பு தேவியைத் தன் கண்களில் நிரப்பிக் கொண்டவன், மனமே இல்லாமல் அங்கிருந்து வெளியேறினான்.

வெளியேறிய அவனை எதிர்கொண்டார் வீணாவின் தாய். அவனைத் தாண்டிச் சென்றவர் வீணாவிடம், “என்ன வீணா..., என்னை எதுக்கு இப்போ அவசரமா வரச் சொன்ன..? என்னன்னு கேட்டதுக்கும் வாங்க சொல்லுறேன்னு சொல்லிட்ட. சரி..., வானதி எங்கே...? அவளுக்கு ரொம்ப முடியலையா என்ன..?

“நான் கேட்டுட்டே இருக்கேன்.., இப்படி அசையாமல் இருந்தால் என்னதான் அர்த்தம்..?”, அவளை உலுக்கினார்.

அவளுக்கே புரியாத விஷயத்தை அவள் என்னவென்று தாய்க்கு விளக்குவாள்? எனவே அமைதியாக யுவாவைப் பார்த்தாள்.

அவள் பார்வை சென்ற திக்கில் பார்த்தவர், “வீணா, இது உங்க முதலாளி தானே..., இவர் எதுக்கு இங்கே...? இப்போ என்னன்னு சொல்லப் போறியா இல்லையா...?”, அங்கிருந்த அசாதரணமான அமைதி அவரைக் கலவரமாக்கியது. எனவே படபடத்தார்.

“நீங்க கவலைப் படுற மாதிரி எதுவும் இல்லை. தேவி நல்லா இருக்கா...”, வீணாவின் அமைதியை உணர்ந்து அவனே பதில் சொன்னான்.

யுவா தன்னிடம் பேசவே, வீணாவின் தாய்க்கு ஆச்சரியமாக இருந்தது. இதற்கு முன் அவனை ஒரே ஒரு முறைதான் சந்தித்து இருக்கிறார். அந்த ஒற்றை சந்திப்பில் அவனது முகம் அவருக்கு இவ்வளவு பதியக் காரணமே, அன்று அவன் காட்டிய அலட்சியம் தான்.

அன்று வீணாவை அலுவலகத்தில் சந்திக்க அவர் சென்ற பொழுது, யுவா அங்கே வரவே, வீணா அவனை முதலாளி என்று அறிமுகப்படுத்தி வைக்க, அவனோ வணக்கம் தெரிவித்த அவருக்கு, ஒரு தலையசைப்பைக் கூட கொடுக்காமல் விலகிச் சென்றிருந்தான்.

அப்படியிருக்கையில் இன்று அவனாகவே உரையாடவே குழப்பமடைந்தார். அவசரமாக அவர் வீணாவைப் பார்க்க, அவள் பார்வையில் என்ன கண்டாரோ..., அவனிடம் திரும்பி, “ஓ..., அப்படியா தம்பி..., சரி நீங்க இங்கே...”, கேள்வியை அவனிடம் கேட்டவரின் பார்வையோ, அவன் பின்னால் நின்ற அவன் தாயையும், கோபமாக நின்றுகொண்டிருந்த அவன் தந்தையையும் சுற்றி வந்தது.

அதே நேரம் அவர்களை நெருங்கிய அஷ்மிதா, “யுவா நாம இருக்குறது ஹாஸ்பிட்டல். நம்மை சுத்தி நிறையபேர் இருக்காங்க. நீங்க எதைப் பேசுவதா இருந்தாலும், அந்த ரூம்ல போய் பேசுங்க”, அவள் பேச்சில் இருந்த நியாயம் புரியவே அனைவரும் அங்கே சென்றார்கள்.

அறைக்குச் சென்றவுடன், “என் தேவி கிட்டே நான் இருக்காமல் வேற எங்கே இருப்பேன்..?”, அவன் பேச்சைக் கேட்டவர் திகைத்துப்போய் வீணாவைப் பார்த்தார்.

“சார் என்ன இப்படிப் பேசுறீங்க...? நீங்க பேசுறதை எல்லாம் நாங்க கேட்டுட்டு இருப்போம்னு எதிர் பாக்காதீங்க. உங்க உதவிக்கு நன்றி. நீங்க இப்போ கிளம்புங்க...”, வீணா நிலைமையை எப்படிக் கையாள என்று தெரியாமல் அவனைக் கிளப்ப முயன்றாள்.

“என் தேவிகிட்டே இருந்து, என்னை யாரும் பிரிக்க முடியாது வீணா. என் மரணம் கூட...., அதுக்கு நானே சாட்சி. உங்க முன்னாடி நிற்கும் நான் யுவா கிடையாது, சரவணன். யுவா உருவத்தில் இருக்கும் சரவணன்.....”, கூச்சலிட்டு, கையை ஆட்டி, அவர்களை நோக்கி நீட்டி அவன் முழங்க, அந்த மருத்துவமனையே ஒரு நிமிடம் உறைந்தது.

# பகுதி – 23.

வந்துவிட்டேன் உன்னைத் தேடி

உயிரே உனக்காக.........

யுவா சொன்னதைக் கேட்ட அனைவருமே ஸ்தம்பித்தார்கள். கங்கா தன் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு இருக்கையில் தள்ளாடி அமர, ஈஸ்வர் அவர் அருகில் ஓடி வந்து அவரைத் தாங்கிக் கொண்டார்.

“என்னடா பேசுற நீ...? நீ பேசுறதுக்கெல்லாம் தலையாட்டுவோம்னு நினைக்கிறியா? கட்டித் தூக்கிட்டு போய்டுவேன் ஆமா...”, ருத்ரமூர்த்தியாக அவனிடம் கர்ஜித்தார்.

அவரது மிரட்டலுக்கெல்லாம் அசையும் நிலையில் அவன் இருக்கவில்லை. ‘உங்களால் முடிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள்’, எனச் சொல்லத்தான் அவனுக்கும் ஆசை. ஆனால் தாயின் கண்ணீர் மட்டுமே அதைச் சொல்ல முடியாமல் அணை போட்டது.

அதை அவரும் நன்கு புரிந்துகொள்ளவே, கங்காவை வைத்தே அவனை வீட்டுக்கு அழைத்துச் செல்ல முயன்றார். எனவே அவனைக் கோபப்படுத்தினார். தந்தையும் மகனும் வாய்ச்சண்டை புரியவே, கங்கா கண்ணீரில் குலுங்கினார்.

கண்ணீரினூடே..., “அவன் என்னங்க சொல்லுறான்...? என்னென்னவோ பேசுறானேங்க..., உங்களுக்கு ஏதாவது புரியுதா”, தனக்குப் புரிந்த விஷயம் நிஜம்தானா என்பதை அறிய, குரல் நடுங்கக் கேட்டார்.

“நீதானே உன்பிள்ளை பிள்ளைன்னு கொஞ்சுவ..., நீயே கேளு...”, அவரும் தொண்டை அடைக்கவே சொன்னார்.

“யுவா...., என்னப்பா என்னென்னவோ பேசுற. நீ என் பிள்ளைதான்..., உன்னை யாருக்கும் கொடுக்க மாட்டேன். உனக்கு அவதான் வேணும்னா அவளையும் கூட்டிட்டு

வீட்டுக்கு வா, நாம போகலாம். அதை விட்டுட்டு..., நீ வேற யாரோன்னு சொல்லாதப்பா. இந்த அம்மாவால் அதைத் தாங்க முடியாது", தடுமாறி எழுந்து அவன் அருகில் சென்று, அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்.

"கங்கா என்ன பேசுற நீ..., புரிஞ்சுதான் பேசுறியா...? யார் யாரை கூட்டி வாறது...", மனைவியை அடக்கினார்.

"நான் புரிஞ்சுதாங்க பேசுறேன். நீங்கதான் புரியாமல் பேசுறீங்க...", கணவனிடம் மன்றாடினார்.

இருதலைக்கொள்ளி எறும்பாகத் திண்டாடினான் யுவா. தந்தையின் பிடிவாதத்துக்காக அவர்களை விட்டு விலகவா..., தாயின் கண்ணீருக்காக அங்கேயே இருக்கவா? எப்படி இருந்தாலும் அவனால் தேவியை மட்டும் விட்டுவிட்டு இருக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.

அவளுக்காகத்தான் இந்த உயிரைக் கொண்டு அலைகிறோம். அவள் இல்லாமல், அவளுடன் வாழாமல், அவளை அடையாமல் அவனால் இருக்க முடியாது. அவளுக்காக மட்டுமே அவன்....., அப்படியிருக்கையில், மனம் ஒட்டாத இடத்தில் எப்படி அவனால் இருக்க முடியும்.

அவன் முடிவெடுக்க முடியாமல் திணறுவதைக் கண்ட வீணாவின் தாய், அவன் உதவிக்கு வந்தார். "தம்பி..., நீங்க இப்போ உங்க அம்மாவோட போங்க. வானதியோட அம்மா அப்பா வந்த பிறகு வந்து பேசுங்க.

"அதை விட்டு, நாமளே தன்னிச்சையா முடிவெடுக்கும் விஷயம் இல்லை இது. நீங்க சொல்வதை, எங்க யாராலும் நம்ப முடியலை. அப்படி இருக்கும்போது, வானதியை எப்படி நம்ப வைக்கப் போறீங்க. அவளோட முடிவு என்னன்னு தெரியாமல்...", அவர் இழுக்க...

"என் தேவி என்னை விட்டுக் கொடுக்க மாட்டா... அவளுக்கு என்னை உணர முடியும்", நம்பிக்கையாக

அழுத்திச் சொல்லி அவர் பேச்சில் இடையிட்டான்.

“நீங்க சொல்லுறது மாதிரியே இருக்கட்டும். இப்போதைக்கு இந்தப் பிரச்சனையை ஆறப் போட்டாதால் தான் சரிவரும். நீங்க அவங்களோட கிளம்புங்க…”, மன்றாடினார்.

“சரி நான் போறேன்…, ஆனா என் தேவியைப் பார்த்து, ஒரு வார்த்தை பேசாமல் இந்த இடத்தைவிட்டு நான் நகர மாட்டேன். அம்மா என்னை புரிஞ்சுக்கோங்கம்மா…., நான் உங்களோட வாரேன்…, ஆனா…, அதுக்கு முன்னாடி, எனக்கு அவகிட்டே பேசணும்”, தாயிடம் பரிதாபமாகக் கெஞ்சினான்.

யுவா வார்த்தைக்கு வார்த்தை வானதிதேவியை, என் தேவி என்று சொல்வதில் இருந்தே அவன் நேசத்தைப் புரிந்துகொண்டவர், “உன் விருப்பப்படியே செய் ராஜா…”, அவன் தன்னோடு வருவதற்கு சம்மதித்ததே அவருக்குப் போதுமானதாக இருந்தது. எனவே அனுமதி அளித்தார்.

“என்னடா இவ…”, ஈஸ்வர், ரவியிடம் எகிற, “நீதான் எதார்த்தத்தை புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பண்ணுற ஈஸ்வர். இப்போ நம்மோட பிடிவாதம் வேலை செய்யாது. மாறாக…, அவன் போக்கிலேயே போய்தான்.., நாம நம்ம பிள்ளையை மீட்கணும்.

“அதை விட்டு எடுத்தோம் கவிழ்த்தோம்னு எதையும் செய்ய முடியாது. இவ்வளவு பிரச்சனையிலும், அவன் யுவாவா…, சரவணனா…, இது எப்படி நேர்ந்ததுன்னு நாம கேக்கவே இல்லை. அந்த உண்மை வெளிவரும்போது…, அவன் யாரோட இருப்பான்…?

“எல்லாத்தையும் நாம யோசிக்கணும். அவங்க சொன்ன மாதிரி, இந்த பிரச்சனையை கொஞ்சம் ஆறவிடு. பிறகு பேசிக்கலாம்”, நண்பனை சமாதானம் செய்து அழைத்துச் சென்றார்.

அறையிலிருந்து வெளியேறிய யுவா, நேராகச் சென்று தேவியின் அருகில் அமர்ந்துகொண்டான். யாராலும் அவனைத் தடுக்க முடியவில்லை. அவனோ தேவியின் முகத்தையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒன்றிரண்டு முறை, கங்கா சென்று அவனைப் பார்த்ததைக் கூட உணரும் நிலையில் அவன் இருக்கவில்லை. இமைத்தால் தன் கண் பார்வையில் இருந்து மறைந்துவிடுவாளோ என்று அஞ்சியவன்போல், அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வீணாவுக்கும் அவள் தாய்க்கும், வானதிதேவியின் உறவினர்கள் வரும்வரைக் காத்திருப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. அதைவிட, அவர்கள் வந்து சேரும் முன்பு, மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குச் சென்று விட வேண்டும் என்று எண்ணினார்.

வீணாக மருத்துவமனையில் குழப்பம் விளைவிக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை. அதுவும் தங்கள் பொறுப்பில் அவள் இருக்கும் வரை, அவளுக்கு எந்தத் தீங்கும் நேராமல், அவளது பெற்றவரிடம் அவளை ஒப்படைக்கும் பொறுப்பு அவர்களுக்கு இருந்ததே.....

எனவே அவள் சீக்கிரம் கண்விழிக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு காத்திருந்தார்கள். அவர்களை நீண்ட நேரம் காத்திருக்க வைக்காமல், கண் விழித்தாள் தேவி.

கண் விழித்தவள் முதலில் பார்த்தது, தன் அருகில் அமர்ந்து, தன்னையே இமைக்க மாறந்து பார்த்துக் கொண்டிருந்த யுவாவைத்தான். அவள் கண்விழிப்பதை உணர்ந்து, இருக்கையில் இருந்து எழுந்து அவளை நெருங்கியவன், வாஞ்சையாக அவள் தலை கோதினான்.

அவள் அவசரமாக விலக முயலவே, “இந்த மாமாவைப் பாத்து பயப்படுறியா தேவி...?”, குரலில் வேதனையைச் சுமந்து அவன் கேட்க, அவள் கண்கள் நீரைச் சொரிந்தது.

அவனது உருவத்தை விலக்க முடிந்த அவளால், அவனது இந்த பேச்சைத் தவிர்க்கவோ விலக்கவோ முடியவில்லை. 'மாமா...', அவள் இதயம் துடிதுடித்தது. கண்ணீர் நிற்காமல் வழிந்தது. தன் மாமனை மட்டுமே நெருங்க அனுமதித்த அவள் மனம், எதிரில் இருப்பவனை நம்ப முடியாமல் தடுமாறியது.

அவளது கண்ணீரைக் கண்டவன் இன்னும் துடித்தான். "இன்னும் ஒருசொட்டு கண்ணீரை நீ விட்டா...., இந்த மாமன் இருக்குறதுக்கு அர்த்தமே இல்லாமல் போய்டும்..., எனக்காக....., அழாதே தேவி. என்னால் அதைத் தாங்க முடியாது...", அவள் முகத்தைக் கரங்களில் ஏந்தி, அவள் கண்களுக்குள் உற்று பார்த்து அவன் சொல்ல, அவன் வார்த்தையின் தாக்கம் அவளைத் தாக்க, இதயம் சில்லிட்டது அவளுக்கு.

"நீங்க...., யா... யா....", 'நீ யார்', என்று அவனிடம் கேட்க அவளால் முடியாமல் தடுமாறினாள். அவளுக்குத் தெரியாதா அவள் மாமனைப் பற்றி. அவனது அக்கறையும், கரிசனமும், வார்த்தைகளையும் பிரதிபலிக்கும் இவனை, தவிர்க்க முடியாமல் துடித்தாள்.

அவனோ, அவள் நீ யார், என்று கேட்டுவிடுவாளோ எனப் பயந்தவனாக, வேகமாக அவள் வாயை மூடினான்.

"உனக்கு என்னைத் தெரியலையா தாயி..., யாருன்னு....", தன்னவள் தன்னை அறியாமல், உணராமல் தடுமாறுகிறாளே எனத் துடித்தவன், வார்த்தையை முடிக்க முடியாமல் உடைந்து சிதறி அழுதான்.

அவன் அழுகையைத் தாங்க முடியாமல்..., "அழுவாதீங்க.... எனக்கு..., எப்படி....", அவனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைச் சொல்ல முடியாமல் அவளும் கலங்கினாள்.

அந்த நேரம் அங்கே வந்த கங்காவும், வீணாவின் தாயும், இருவரின் நிலையைப் பார்த்து கலங்கினார்கள். "தம்பி...,

அவளுக்கு கொஞ்சம் டைம் கொடுங்க..., எல்லாம் சரியாயிடும்...", அவனுக்கு நம்பிக்கை கொடுத்தார்.

அவர் பேச்சில் நிமிர்ந்தவன், "என் தேவிக்கு என்னைத் தெரியும். இந்த சரவணன் அவளுக்காகத்தான் இருக்கான்...., பாத்துக்கோங்க", கண்ணீரைச் சுண்டி எறிந்தவன், வேகமாக வாசல் அருகில் சென்றான்.

சென்றவன் அங்கிருந்து அவளைப் பார்த்து, "என்ன மாமான்னு சொல்ல மாட்ட இல்ல...", கழுத்து நரம்பு புடைக்க, துக்கத்தையும் வலியையும் தொண்டைக் குழியில் விழுங்கியவன், "வாரேன் புள்ள...", சொன்னவன் வெளியேற, அவன் பேச்சில், அவள் வெடித்து அழ, அவள் அழுகுரல் எட்ட முடியாத தூரத்துக்கு விரைந்தான் அவன்.

அவனைப் பின்தொடர்ந்த கங்காவுக்கு தன் மகனை எப்படி சமாதானம் செய்யவென்று தெரியவில்லை. அதைவிட அவன் நடந்துகொள்ளும் விதம், அவருக்கு கவலை அளித்தது. தாய் வந்த காரில் சென்று ஏறியவன், ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

தன்னைப் பற்றி நினைவு வந்தவனுக்கு, தன் சொந்தத் தாய் தந்தையை எதிர்கொள்ளும் தைரியம் இருக்கவில்லை. எனவேதான் அவர்களைப் பற்றி எண்ணாமல் அமைதியாக இருந்தான். அவர்கள் வந்துவிட்டால், தன்னால் கங்காவிடம் ஒட்டுதல் காட்ட முடியுமா என்று அஞ்சினான்.

அவர் காட்டும் நேசத்தில் அவன் கட்டுண்டிருந்தான் என்பதுதான் உண்மை. அப்படியிருக்கையில், தன் பெற்றவர்களை, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தாமதமாக சந்திக்கவே விரும்பினான்.

அதே நேரம் மற்றொரு மனமோ, தான் உயிரோடு திரும்ப வந்திருக்கும் சந்தோஷ விஷயத்தை அவர்களிடம் சொல்லி, அவர்களின் மன வருத்தத்தை துடைக்கச்சொல்லி துடித்தது.

ஆனால் சூழ்நிலைக் கைதியாகிவிட்ட தன் நிலையை எவ்வளவு வெறுத்தானோ, அதே அளவு தேவியைக் கண்டுகொண்டதில் நிம்மதியை உணர்ந்தான். வாழ்க்கையில் ஏதாவது ஒன்றை இழந்தால்தான், ஒன்றைப் பெறமுடியும் என்பதை வேதனையாய் உணர்ந்தான்.

தன் குழம்பிய மனநிலையிலும், தன்னுடனே இருந்து தன்னைத் தாங்கிய தாயையும், இப்பொழுதுகூட, தேவிதான் தன் உயிர் என்று சொன்ன பிறகும், அதற்கு எந்தவித எதிர்ப்பையும் வெளிப்படுத்தாமல், தன்னைப் புரிந்துகொண்டு, தனக்கு ஆதரவாக தன்னுடனே இருக்கும் அவரைத் திரும்பிப் பார்த்தான்.

மகன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தவர், ஆதரவாக அவனைப் பார்த்து புன்னகைத்தார். அவரது புன்னகைக்குள் ஒளிந்திருக்கும் வேதனையைக் கண்டுகொண்டான் அவன்.

எதுவும் சொல்லாமல், அவர் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டான். அவனது செய்கையில் நிம்மதியடைந்தது கங்கா மட்டுமல்ல, முன்னிருக்கையில் அமர்ந்திருந்த ஈஸ்வரும்தான். அவரது மனம் எல்லையில்லா நிம்மதியை உணர்ந்தது.

வீட்டிற்கு சென்ற பிறகு அன்றைய நாள் முழுவதுமே ஒருவித இறுக்கத்திலேயே கழிந்தது. கங்கா, மகனிடம் வெளிப்படையாக எதையும் கேட்கவில்லை என்றாலும், அவனை அடை காக்க முயன்றார்.

அவனுடன் இருக்கும் நேரத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என எண்ணினார். அவன் தன்னை விட்டுச் சென்றுவிடும் முடிவை எடுத்துவிடுவானோ என்று மனதளவில் மிகவும் பயந்தார்.

அதைவிட, தன்னுடன் இருப்பவன் மனதளவில் தன் மகன் இல்லை என்ற வித்தியாசமும், உண்மையும் சந்தேகமும்

அவருக்கு முன்பே இருந்தது. அந்த உண்மையை நேரடியாக சந்திக்கும் தைரியம்தான் அவருக்கு இல்லை.

இந்த யுவாவின்மேல் அவர் மிகுந்த பாசம் வைத்திருந்தார். வளர்ந்த குழந்தையென எதிலும் தன்னை நாடும் அவனது செய்கையை அவர் நீண்ட வருடங்களுக்குப் பிறகு அனுபவித்தார். எங்கே அந்த இதத்தோடு, மகனைத் தொலைத்துவிடுவோமோ, இழந்து விடுவோமோ என அஞ்சினார்.

அவரது மனதைப் புரிந்தவன்போல், தாயை அறையை விட்டு அனுப்பாமல், தன்னுடனே இருத்திக் கொண்டான். சிந்தை முழுவதும், ஊரிலிருந்து வரப்போகும் தன் உறவுகளைப் பற்றியே இருந்தது.

தன்னை நெருங்க மறுக்கும், தன்னை மாமா என அழைக்க மறுக்கும் தேவியை நினைக்கையில் வேதனை நெஞ்சை அறுத்தது. ஆனால் அவளை உயிராய் நேசிப்பதில் உறுதியாக இருந்தான்.

பெரியவர்களைப் பற்றி யோசிக்க யோசிக்க குழப்பமே மிஞ்சியது. படுக்கையில் விழுந்தவன், எதையும் யோசிக்க முடியாமல், கண்களை இறுக மூடிக் கொண்டான்.

மருத்துவமனையிலோ வானதிதேவி நம்பமுடியாத திகைப்பில் இருந்தாள். யுவாவைப் பார்த்தது முதலே, அவன் சரவணனின் மேனரிசங்களைப் பிரதிபலிப்பதைப் பார்த்ததில் இருந்தே குழப்பத்திலும், வேதனையிலும் இருந்தவள்,

இன்று அவன் அத்துமீறி தன்னை நெருங்கியதில் அவன்மேல் ஒரு நிமிடம் கோபம் வந்தாலும், அவனிடம் இருந்த சரவணனின் தாக்கம் அவளை அதிகமாகத் தாக்கியது. எனவேதான் அவளால் அவன் தன்னை நெருங்குவதைத் தடுக்க முடியவில்லை.

ஆனாலும் யுவாவின் உருவம் அவளை, நெருங்க அனுமதிக்கவில்லை. அவன் சரவணன் என்று சொன்ன

நிமிடத்தில் உறைந்துபோன அவளது பேச்சு, இன்னும் வரவில்லை.

அதிலும் அவன் செல்லும்பொழுது..., மாமா என்று அழைக்க மாட்டாயா என்ற அவனது கேள்வி..., அவனது வருத்தம், அவள் தயக்கத்தையும் மீறி அவளைத் தாக்கியது.

அவன் கிடைத்துவிட்டான் என்று சந்தோசப் படுவதா..., அவனை ஏற்க முடியாத தன் மனதை நினைத்து துக்கப் படுவதா என்று அவளுக்குப் புரியவில்லை. முன்பே தன் மாமன் தன்னுடனே இருக்கிறான் என்று உணர்ந்ததால் அதிர்ச்சியின் அளவு கொஞ்சம் குறைவாகவே இருந்தது.

ஒரு மனமோ துள்ளிக் குதிக்க எண்ணியது. மற்றொரு மனமோ அவன் சொல்வது பொய்யாக இருக்குமோ என வாதிட்டது. அப்படி எண்ணிய வேளையே, அவனது பரிவும் பாசமும், நெருக்கமும், பேச்சும் அவள் கண்முன் மின்னி மறைய, இதயத்தை இறுக்கிப் பிழியும் வலியை உணர்ந்தாள்.

அவன் அழக்கூடாது என்று சொல்லிச் சென்றதால், அழுவதற்கும் முடியாமல், துக்கத்தை தனக்குள் புதைக்க முயன்றாள்.

அவள் படும் துயரைக் கண்ட வீணாவோ, “அழணும்னு நினைச்சா அழுதுடு வானதி. துக்கத்தை உனக்குள் புதைக்காதே. நீ விடும் கடைசி கண்ணீர் இதுவாக இருக்கணும். அழுதுடு...”, ஆதரவாக அவளை அணைத்துக் கொண்டாள்.

“என்னால் முடியலையேக்கா...., இதுவரை என் மாமா பேச்சை நான் மீறியதே இல்லையே..., நான் என்ன செய்யட்டும்...”, தன்னிடம் துக்கத்தை அடக்கும் குழந்தையாகக் குமுறும் அவளை, தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

இதற்கு என்னதான் தீர்வு என்பது அவளுக்குப் புரியவில்லை. நாளை எப்படி விடியும்....?

# பகுதி – 24.

கண்ணால் காண்பதும்

காதால் கேட்பதும்

பொய்யென்றால்.........

உன்முன் நிற்கும் நான் யார்...........

வீணாவின் வீடே அமிழி துமிழி ஆகியது. வானதி தேவியின் உறவினர் கூட்டத்தால், வீடே நிரம்பி வழிந்தது. மகளைக் கண்ட உற்சாகமும், சரவணனைப் பற்றி அறிந்த உண்மையும் சேர்ந்து பூரித்துப் போயிருந்தனர்.

கேட்ட செய்தியை அவர்களால் நம்பவும் முடியவில்லை. அதே நேரம் தங்கள் சரவணன் உயிரோடு வந்துவிட்ட அதிசயம் நிகழ்ந்ததில் எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டனர்.

வந்த சொந்தங்கள் வானதியைக் கட்டிக்கொண்டு ஒரு பாட்டம் அழுது தீர்த்தனர். வீணாவும், அவள் தாயும் வந்து கடிந்துகொண்ட பின்னரே அவர்கள் அடங்கினார்கள்.

இவர்கள் அனைவரின் உற்சாகத்திலோ, மகிழ்ச்சியிலோ, துக்கத்திலோ, அழுகையிலோ எதிலும் பங்குகொள்ளாமல், இறுக்கமாகவே இருந்தாள் வானதி.

ஒரு பக்கம் யுவாவை எப்பொழுது காண்போம் என தவித்துக் கொண்டிருக்க, மற்றொரு மனமோ அவனை எப்படி எதிர்கொள்ள என்பதில் சிக்கித் தவித்தது.

நேற்று இரவுமுதல் அவள் மற்றுமொரு குழப்பத்தில் இருந்தாள். அது அஷ்மிதாவைப் பற்றியது. நேற்று மதியம் யுவா கிளம்பிச் சென்ற பிறகு, அவள் ஒரு பாட்டம் அழுது தீர்க்க,

அவள் அழுது களைத்த வேளையில் உள்ளே வந்த அஷ்மிதா, அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாவில்லை. அவளை ஆழமாகப் பார்த்தவள், சிறிய தலையசைப்பில் விடை பெற்றுச் சென்றாள். அப்படி அவள் விடைபெறும் வேளையில், அவள் கண்களில் வழிந்த சோகம்....

இப்பொழுது அதை நினைத்தாலும், இதயம் சில்லிட்டது. கார்மெண்ட்ஸ் முழுவதுமே..., யுவாவும், அஷ்மிதாவும் திருமணம் செய்துகொள்ளப் போவதாக உலவிய பேச்சு அவளுக்குத் தெரியுமே. அதை நினைத்தவள், தன்னைப்போல் அவளும் யுவாவை நேசித்து, அவனை இழக்க நேர்ந்தால்,

தான் பட்ட துன்பத்தையே அவளும் அனுபவிக்க வேண்டி வருமே என்று வருந்தினாள். காதலின் வலியை நன்கு உணர்ந்த நானே, அவளுக்கு அப்படி ஒரு வலியைக் கொடுக்கலாமா எனத் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

அப்படி ஒரு வலியை அவளுக்கு கண்டிப்பாக கொடுக்கக் கூடாது என்று எண்ணியவள்..., அப்படியென்றால் தன் மாமனைத் தான் மறுபடியும் இழக்கவேண்டுமா என எண்ணுகையில், கட்டுப்படுத்தி வைத்திருந்த கண்ணீர் மீண்டும் வழியட்டுமா என்று அவளை மிரட்டியது.

அதைவிட...., யுவாவைத் தான் தன் மாமனாக எண்ணத் துவங்கிவிட்டோம் என்ற உண்மை நெஞ்சை அறைய, அதற்கும் சேர்த்து கலங்கினாள்.

வானதிதேவி இந்த நேரத்தில் உணர்ந்தது முழுவதும், இதயத்தை இறுக்கிப் பிழியும் வலியை மட்டுமே. தாய் தந்தை, உற்றார், உறவினர் யாருடனும் ஒன்றவோ, உறவாடவோ அவளால் முடியவில்லை.

இப்படியே எங்கேயாவது சென்றுவிட மாட்டோமா என்று ஏங்கினாள். ஆனாலும் எங்கு சென்றாலும், தன் மாமனின் நினைவும், தன் காதலும், நேசமும் தன்னை

அணுவணுவாய் கொல்லும் என்பதில் அவளுக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை.

என்னதான் யுவா சரவணனைப் பிரதிபலித்தாலும், யுவாவின் உருவம் அவளுக்கு மிகப்பெரியத் தடையாகவே இருந்தது. யுவாவின் உருவத்தோடு, சரவணனை இணைத்துப் பார்க்க அவளால் முடியவில்லை.

அப்படியென்றால் அவனைவிட்டு விலகிவிடு என்று மனசாட்சி குரல்கொடுக்க, என்மாமனை நான் விட்டுக் கொடுப்பதா…, விலகுவதா… என்று அவள் பதில் கேள்வி கேட்க, அவளது மனசாட்சியே மிரண்டுபோனது.

அவளுக்குக் குறையாத தவிப்புடனும், பரபரப்புடனும் இருந்தான் யுவா. காலையில் எழுந்த உடனே அவன் நினைப்பிற்கு வந்தது…, அவனது உறவினர்கள் வந்து சேர்ந்திருப்பார்கள் என்ற நினைப்புதான்.

அவசரமாகக் கிளம்பியவன், அதே வேகத்தில் கீழே இறங்கி வந்தான். இறங்கிவந்த அவனது பாதையை மரித்தார் ஈஸ்வர்.

“ஐயா காலையிலேயே இவ்வளவு அவசரமா எங்கே கிளம்பிட்டீங்க..?”, எள்ளலாகக் கேட்டார்.

அவரது எள்ளலைப் புரிந்துகொண்டவன், அவருக்கு பதில் சொல்லாமல், அவரை உறுத்து விழித்தான்.

“என்னடா…., நீ இப்படி பாத்த உடனே, நான் பயந்துடுவேன்னு நினைச்சியா…? அதுக்கு நீ வேற ஆளைப் பாரு. முதல்ல நீ உன் ரூமுக்குப் போ…”, அவன் வழியை மறித்து சொன்னார்.

அவனை இப்பொழுது அனுப்பினால், அவன் திரும்பி வரமாட்டான் என்று உறுதியாக நம்பினார் எனவேதான், அவனை படிதாண்ட அனுமதிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

“என் ரூமா...”, அவரைவிட எகத்தாளமாகக் கேட்டவன், “ஆமா நீங்க யாரு...”, இடக்கையால் தாடையத் தடவியவாறு, புருவம் சுருக்கி, கூர்மையாக அவரைப் பார்த்து கேட்க, அவரது மொத்த தேகமும் நடுங்கியது.

அவனிடமிருந்து இப்படி ஒரு பேச்சைக் கேட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான், அவனைப் பொத்தி பாதுகாக்க நினைத்தவர், அவன் வாயால் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டவருக்கு, ஒரு நிமிடம், என்ன சொல்வது என்று தெரியவில்லை.

பின்னர் ஒரு முடிவுடன் இமைகளை மூடித் திறந்தவர், “நீ யாரா வேண்ணா இருந்துட்டு போ..., ஆனா இந்த உடம்பு என் பையனோடது. இதை என் அனுமதி இல்லாமல் நீ கொண்டு போக முடியாது.

“அப்படியே நீ போகணும்னு நினைத்தால்..., எப்படி அவன் உடம்புக்குள் வந்தாயோ..., அப்படியே திரும்பிப் போ..., நான் கேட்க மாட்டேன்...”, இதுவரை சிங்கக் கர்ஜனையாகச் சொன்னவர், இறுதி வார்த்தைகளைச் சொன்ன பொழுது, அவரது குரல் நடுங்கியது.

கங்கா இவர்களின் குரலைக் கேட்டு ஓடி வந்தவர், கணவனின் பேச்சைக் கேட்டு துடித்துப் போனார்.

“என்னங்க..., புரிஞ்சுதான் பேசுறீங்களா...?”, கண்ணீர் குரலில் கேட்டார்.

அவரது பேச்சை இருவருமே கண்டுகொள்ளவில்லை.

தந்தையின் பயமே அவரை இப்படிப் பேச வைக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட யுவா..., நிதானமாக அவரை நெருங்கினான். நெருங்கியவன் அவர் எதிர்பாராத வேளையில், அவர் காலடியில் சென்று மண்டியிட்டவன், “உங்க கையாலேயே என் உயிரை எடுத்துடுங்க...., எனக்கு எந்தவிதமான ஆட்சியபனையும் இல்லை.

“நன்றி மறப்பவன் நான் கிடையாது. என் வாழ்க்கையும் அன்னைக்கே முடிஞ்சு போயிருக்க வேண்டியதுதான். ஆனால் அப்படி ஆகாமல் தடுக்கக் காரணம், என்னோட காதல்....,

“என் தேவியை நான் சேரணும் என்ற என்னோட ஆசை. நான் இல்லாமல் அவ இருக்க மாட்டா என்ற என்னோட தவிப்பு. இது எல்லாம் சேர்ந்துதான் என்னை இந்த வாழ்க்கைக்கு மறுபடியும் இழுத்து வந்தது.

“நான் யார் வேதனைப் படக் கூடாது என்பதற்காக இந்த வாழ்க்கைக்கு திரும்ப வந்தேனோ..., அதை என்னால் தடுக்க முடியலை. இவ்வளவு நாள் நான் இல்லை என்ற நிலையில் என் தேவி எப்படி வாழ்ந்தாளோ... அப்படியே இனியும் வாழட்டும்.

“ஆனால் என்னால் இனிமேல் ஒரு நாள் கூட, அவ வேதனைப் படுவதைப் பாத்துட்டு பேசாமல் இருக்க முடியாது. அதே நேரம் உங்களையும் தாண்டிப் போக முடியாது. எங்களோட இந்தத் துன்பம் எல்லாம் ஒரு முடிவுக்கு வரணும்.

“நீங்க என் உயிரை எடுத்துடுங்க...., இன்னும் கொஞ்ச நாளில் என் தேவியே என்னைத் தேடி மேலோகம் வந்துடுவா. இவ்வளவு நாளும் அவ தன்னோட முடிவைத் தேடிக் கொள்ளாமல் இருந்ததன் காரணம்...

“எங்களது உடல்தான் பிரிந்து இருந்ததே தவிர, உணர்வுப் பூர்வமாக நாங்கள் சேர்ந்தேதான் இருந்தோம். எங்களோட இந்த பிரிவுக்கும், தவிப்புக்கும், உங்களால் ஒரு நல்ல முடிவு கிடைக்கிறது என்றால், அதை ஏன் தடுக்கணும்.

“ம்..., செய்ங்க...”, அவர் கைகளை எடுத்து கழுத்தில் வைத்துக் கொண்டு, அவரை ஊக்கினான்.

அவன் கைகளில் இருந்து தன் கையை உருவிக் கொண்டார். “ஐயோ ராஜா..., என்னப்பா இது எழுந்திரு... உனக்கு உயிர் கொடுத்த அவரிடமே, உன் உயிரை

எடுக்கச் சொல்கிறாயே..., உனக்கு எப்படி மனசு வந்துது.....

“இதையெல்லாம் பாக்கவா நான் உயிரோட இருக்கேன்...”, தன் நெஞ்சில் அறைந்துகொண்டு அழுதார்.

யுவா எழுந்து தாயின் கரங்களைப் பற்றிக் கொள்ள, ஈஸ்வர் அவன் பேச்சின் தாக்கம் குறைய, அங்கிருந்து நகர்ந்து சென்றார்.

“என்னம்மா இது...? நான் மட்டும் பிடிச்சா இப்படியெல்லாம் பேசுறேன். என் சூழ்நிலை என்னை இப்படிப் பேச வைக்குதுமா. என்னால்...., என்னால் என் தேவி இல்லாமல் வாழ முடியாதும்மா. அப்படியே வாழ்ந்தாலும்..., நான் பிணமா வாழ்வதர்க்குச் சமம் அது”, தாயாவது தன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமே என்று இருந்தது அவனுக்கு.

“எனக்கு புரியுது ராஜா..., நீ போன்னு என்னால் சொல்ல முடியாது. ஆனா எனக்கு என் பிள்ளையின் சந்தோசம்தான் முக்கியம். அதனால்...”, சொன்னவர் தன் முந்தானையால், கலங்கிய தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

“ரொம்ப நன்றிம்மா....”, அவர் கரங்களை ஏந்தி, நெற்றியில் வைத்துக் கொண்டவன், “நீங்களும் என்னோட வாறீங்களாம்மா..., உங்களையும் அவங்க எல்லோர் கிட்டேயும் அறிமுகப்படுத்தி வைக்கணுன்னு எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு”, ஏக்கமாகக் கேட்டான்.

“ஆமா..., அவன் உன் கண்ணு முன்னாடியே..., வேற ஒருத்தரை அம்மா அப்பான்னு சொல்லுவான்..., அதைக் காது குளிர கேட்டுட்டு வா... போ... போ...”, வருத்தத்திலும், ஆற்றாமையிலும் புலம்பினார்.

கங்கா அவரை கண்டிக்கும் பார்வை பார்த்தவர், மகனிடம் திரும்பி, “நீ கூப்பிட்டு நாங்க வராமல் இருப்போமா..., கண்டிப்பா வாரோம். ஆனால் அதுக்கு முன்னாடி ஒரு வாய்

சாப்பிடு ராஜா...", மகனை இறுதியாக கண்களுக்குள் நிறைப்பவர் போன்று, இமைக்க மறந்து பார்த்தவர், பாசமாக அவன் தலை கோதினார்.

அவரது அன்பில் நெகிழ்ந்தவன், அவர் கைகளில் முகம் புதைத்துக் கொண்டான். அவன் தேகம் அழுகையில் லேசாக குலுங்கியது. "இப்போ எதுக்கு நீ என்னையும் கூட்டு சேக்குற...., நான் எங்கேயும் வரலை, ஆமா....", ஈஸ்வர் முறுக்கிக் கொண்டார்.

அவரை அமைதியான பார்வை பார்த்தவன், தாயின் கோரிக்கைக்கு ஏற்ப, எழுந்து சாப்பிடச்சென்றான். பொதுவாக அங்கிருக்கும் பதார்த்தங்களில் பெரும்பாலானவற்றை ஒதுக்கி விடுபவன், அன்று தாய் கொடுத்த அனைத்தையும் மறுக்காமல் உண்டான்.

எந்த விதத்திலும் தாயை வருத்தப்படவோ, காயப்படுத்திவிடவோ கூடாது என்பதில் கவனமாக இருந்தான். அவர்கள் உண்டு முடித்தவுடன், டாக்டர் ரவி அங்கே வந்தார்.

ஈஸ்வர் அவரிடம் 'இதை எப்படித் தவிர்க்க', என்று கவலைப் பார்வை பார்க்க, நண்பனின் தோளை ஆதரவாகச் சென்று அழுத்தியவர்,

"இதுக்கு ஒரு முடிவு வேணும் ஈஸ்வர்...., புரிஞ்சுக்கோ...", இதுதான் எதார்த்தம் என்பதை ஒற்றை வரியில் புரியவைக்க, "அப்போ நான்தான் புரிஞ்சுக்காமல் நடக்குறேன்னு நீயும் சொல்லுறியா..", கலங்கிய குரலில் கேட்டார்.

பெற்ற மகனைப் பற்றிய பரிதவிப்பில் அவர் பேசுவது புரிய, அவரை சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றார்கள். காரை ரவியே ஓட்டினார். போகும் வழி முழுவதும், யுவா அமைதியின்றி காணப்பட்டான்.

ஒருவித ஆனந்த அவஸ்த்தையும், சங்கடமும், படபடப்பும், கலந்த கலவையாக இருந்தான். வீணாவின் வீட்டுக்குள்

கார் நுழையும் வேளை, அவன் இதயம் வழக்கத்துக்கு மாறாக, அதிவேகமாகத் துடிப்பதாக உணர்ந்தான்.

கார் வாசலில் நிற்கவே, வீட்டிற்குள் இருந்து வந்த உறவினர்களின் குரல்களை இனம் காண முயன்றான். ‘இது ஆயாகுரல், இது மாமன் குரல், இது செம்பு குரல், இது என் அம்மா குரல்...’, நீண்ட மாதங்களுக்குப் பிறகு, அவர்களின் குரல்களைக் கேட்கவே, கண்கள் நீர் கோர்த்துக் கொண்டன.

காரிலிருந்து இறங்கி ஓடிச் சென்று அவர்கள் அனைவரையும் கட்டிக்கொண்டு கதறவேண்டும்போல் இருந்தது. ஆனால் அதைச் செய்ய முடியாமல் தடுத்தது, கங்கா, ஈஸ்வரின் அருகாமை.

தன்னை அடக்கவே மிகுந்த சிரமப் பட்டான். காரிலிருந்து இறங்கவும் முடியாமல், அங்கே இருக்கவும் முடியாமல் அவஸ்த்தையாக உணர்ந்தான்.

“யுவா..., நீ முதல்ல உள்ளே போ...., நாங்க பின்னாடியே வாரோம்...”, அவன் நிலை புரிந்து சொன்னார்.

கங்காவும் ஈஸ்வரும் அவன் செல்வதைக் காண முடியாதவர்களாக, உள்ளுக்குள் உருகினார்கள். ஈஸ்வர் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள, கங்காவால் முடியாமல் அழுதுவிட்டார்.

“இப்போ அழுதா ஆச்சா...”, கண்டிப்பாக கேட்க முயன்றாலும் அவர் குரல் நடுங்கியே வந்தது.

ஈஸ்வரால் யுவாவைத் தாங்கள் முழுதாக இழப்பதை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. தங்களின் ஒரே வாரிசு, அவனை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? பங்குபோட்டுக் கொள்ளலாம் என்றால், அவன் என்ன கடைச்சரக்கா...., என்ற எண்ணம் எழுந்து அதைத் தடுத்தது.

எப்படியாவது அவனை தங்களோடு வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக, தன்னால் ஆனமட்டும் முயன்றார். இப்பொழுது நிலைமை கைமீறி சென்றுவிட்டதை உணர்ந்தார். எனவே அவன் இனிமேல் தங்களுக்கு இல்லை என்று தன்னைத் தானே சமாதானம் செய்துகொள்ள முயன்றார்.

தனக்குப் பிடித்த பொருளையே மற்றவருக்கு விட்டுக் கொடுக்க முடியாமல் தவிக்கும் மனம், தனக்கு உயிரான ஒற்றை பிள்ளையை அவ்வளவு சீக்கிரம் விட்டுக் கொடுக்குமா? அடிபட்ட குழந்தையாக, ஆறுதலுக்கு யாரும் இல்லாமல் ஊமையாய் கதறியது கங்காவின் மனம்.

டாக்டரின் அனுமதி கிடைத்தவுடன், பெற்றவர்களை திரும்பிக் கூட பார்க்க நில்லாமல், விருட்டென வீட்டுக்குள் சென்று மறைந்தான் யுவா. திரும்பிப் பார்த்தால், எங்கே அவர்கள் கண்ணீரைக் காண நேர்ந்துவிடுமோ என்று எண்ணியே அவ்வாறு நடந்துகொண்டான்.

திடீரென வீட்டுக்குள் நுழைந்த அந்நிய ஆடவனைக் கண்டதும், அங்கே பேரமைதி நிலவியது. ஏற்கனவே வந்ததுமுதல், யுவா எப்படி இருப்பான்...? என்ன நிறம்...? உயரம் எவ்வளவு..? என, அவனைப் பற்றி அக்குவேறு, ஆணிவேறாக துருவி விசாரித்துவிட்டதால், யுவாவை அடையாளம் காண்பது அவர்களுக்கு சிரமமாக இருக்கவில்லை.

அவனைக் கண்டவுடன் அனைவரும் ஆணியடித்தாற்போல் அவனையே வெறிக்க, யார் பேச்சைத் துவங்குவது என்பதில் பெரிய குழப்பமே நிலவியது. அங்கிருந்த மௌனத்தைக் கலைக்க யாரும் முன்வரவில்லை.

# பகுதி – 25.

கூடுவிட்டு கூடு பாயும் வித்தை

யோகிகளுக்கு மட்டுமே சொந்தமா

தங்கள் வீட்டுக்குள் வெள்ளைக்காரத் துரையைபோல், வெண்மையான நிறத்துடன் வந்து நின்ற யுவாவை, நம்பமுடியாத பார்வையோடு, அனைவரும் விழி விரித்துப் பார்த்தார்கள்.

வீணா ஏற்கனவே அவனைப்பற்றி சொல்லியிருந்தாள் தான். ஆனாலும் இவ்வளவு கலரை அவனிடம் எதிர்பார்க்கவில்லை என்பதை அவர்களின் முகமே சொன்னது.

தங்கள் ஊருக்குள்ளேயோ, சுற்றுவட்டாரத்திலேயோ, இப்படி ஒரு நவநாகரீகமான மனிதனை, அவர்கள் கண்டதே இல்லை. அப்படியிருக்கையில், தங்கள் சரவணன் இவன்தான் என்பதை அவர்களால் நம்பவே முடியவில்லை.

அவனது நடையும், மீசை முறுக்கும், தலை கோதலும் மட்டுமே, வெளிப்படையாக அவனிடம் தெரிந்த, உருவ ஒற்றுமையாக இருந்தது. மற்றபடி..., யுவாவுக்கும், சரவணனுக்கும் ஏணி இல்லை..., எலிகாப்டர் வைத்தால் கூட எட்டாது.

ஆனால் அவர்களுக்கு இருந்த தயக்கம், சரவணனாகிய யுவாவுக்கு கொஞ்சம் கூட இல்லை. நீண்டநாள் பிரிவிற்கு பிறகு அவர்களை சந்தித்ததால் ஏற்பட்ட ஆனந்த அதிர்வு மட்டுமே அவனிடம் இருந்தது.

அதுவும் நொடியில் மறைந்துவிட, ஓடிச் சென்றவன், “ஆயா..., ஐயா..., அம்மா..., மாமா..., எலேய் செம்பு....”, எனக் கத்திக்கொண்டு அனைவரையும் ஒரு சேர அணைத்துக் கொண்டான்.

ஒரு நிமிடம் அவனது அதிரடிக்கு எப்படி செயல்படுவது என்றே அவர்களுக்குப் புரியவில்லை. அதிலும், அவன் உருவத்தைப் பார்த்து தயங்கியவர்கள், அவனாகவே

தங்கள் முறையை சரியாக சொல்லி அழைத்ததில் திகைத்துப் போயினர்.

முதலில் சுதாரித்தது ஆயாவே. “என்னப் பெத்த ஐயா..., நீதானாய்யா....?”, கேட்டவர் அவனை தலைமுதல் கால்வரை ஆராய்ந்தார்.

“நான்தான் ஆயா சரவணன்...., என்னை நம்பு....”, தோல் சுருங்கிய அவர் கரங்களை அழுத்தப் பற்றிக் கொண்டான்.

“ஆயி மகமாயி...., எங்க புள்ளைக கண்ணீருக்கு பலன் கொடுத்துட்டியா...?”, ருக்குவும், வடிவும் ஒரே நேரம் இறைவனிடம் வேண்டினார்கள்.

“சரவணா....., சரவணா.....”, அனைவருமே அவன் பெயரை உச்சரித்தவாறு, அழுதார்கள். அவர்களின் உணர்ச்சிப் போராட்டங்களைப் பார்த்தவாறு நின்றிருந்தார்கள் வீணாவும், தாயும்.

தேவியும் அறைக்குள்ளிருந்து அவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். அவளுக்கு ஓடிச் சென்று அவனைக் காணும் ஆவல் எழத்தான் செய்தது. ஆனால் அந்த உருவத்தில் சரவணனைக் காணும் தைரியம் அற்றவளாய், அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

“ச... ச......ரவணா....”, செம்பு கதறி அழைக்க, அவன் நினைவுகளோ, ரத்த வெள்ளத்தில் சரவணனைக் கண்ட அந்த நாளுக்கு சென்றது. அவனது கதறலில், தன்னோடு அவனை இறுக்கியவன்,

“அதான் வந்துட்டேம்லல...., ஏன் ஒப்பாரி வைக்க.... அம்புட்டு சீக்கிரம் உங்களை எல்லாம் விட்டு போய்டுவனாலே.... அதெல்லாம் கெட்ட கனவா நினைச்சு மறந்துடு”, அவனை செல்லமாக அதட்டினான்.

‘என் மாமனோட பேச்சு....’, சரவணன் பேசப் பேச, வானதிதேவியின் உள்மனம் கூச்சலிட்டுக்

கொண்டிருந்தது.

அவன் தங்களை அடையாளம் கண்டுகொண்டதில் அவர்கள் சந்தோசமடைந்தாலும், அவன்தான் தங்கள் சரவணன் என்பதை எப்படி நம்பவென்ற சந்தேகம் அவர்களுக்கு எழுந்தது.

இப்படி தங்களை கட்டிக்கொண்டு, கதறும் அவனை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

யார் அவனிடம் கேட்பது என்று தயங்குகையில், “எலேய் மாப்ளே..., நீ எப்படிவே இப்படி சீமத்தொரையான...?”, கண்ணீரை புறங்கையால் துடைத்தெறிந்தவன், அவனால் நம்ப முடியாமல் கேட்டான்.

அப்பொழுதுதான் அவனுக்கு தான் யுவாவின் உருவத்தில், அவன் உடலுக்குள் இருப்பதே புரிந்தது. தன் தலையிலேயே கை வைத்தவன், கங்காவின் நினைவு வந்தவனாக, “நான் நொடியில் வாரேன்....”, சொன்னவன், வீட்டிலிருந்து வெளியேறி கங்காவிடம் சென்றான்.

அங்கே அவர்கள் தோட்டத்தில் இருக்க, அவர்களைத் தேடிச் சென்றான். “இங்க இருக்கீயளா..., நான் அங்கன தேடுனேன்...”, சொன்னவாறு அவர்களை நெருங்க, மற்ற மூவரின் பார்வையும், அவசரமாக ரகசியம் பேசிக் கொண்டது.

அதை உணராதவனாக, “வாங்க...”, தாயை கைபிடித்து அழைத்துச் சென்றான்.

வீட்டுக்குள் நுழைந்தவன், தாயை அங்கிருந்த சோபாவில் அமர வைத்து, தானும் அருகில் அமர்ந்து கொண்டான். மற்றவர்களையும் அமரச் சொல்ல, அனைவரும் தரையில் அமர்ந்து கொண்டார்கள்.

யுவா (சரவணன்) அவர்களது செய்கையை சாதாரணமாக எடுத்துக் கொள்ள, கங்கா சங்கடமாக உணர்ந்தார்.

அவரது வீட்டில், அவர் வீட்டில் வேலை செய்யும் வேலைக் காரர்கள் மட்டுமே தரையில் அமர்ந்து பார்த்திருக்கிறார்.

அப்படியிருக்கையில்...., எங்கே தன் மகனும் அவர்களோடு சென்று அமர்ந்துகொள்வானோ என்று ஒரு நிமிடம் கலங்கிப் போனார். அவன் அவ்வாறு செய்யாமல், தன் அருகிலேயே தேங்கவே, நிம்மதியாக உணர்ந்தார்.

நடுங்கும் கரங்களால், அவன் கரம் பற்ற, அவனும் அவர் கரத்தைப் பற்றிக் கொண்டான். “யாரிவாக...”, “என்ன....”, “எதுக்கு அவுக இம்புட்டு வெசனப்படுறாக...”, சரவணனின் சொந்தங்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அவர்களின் குரலுக்கு மாறாக, சரவணன் அமைதியாக இருந்தான். பின்னர் ஒரு முடிவுடன், “அம்மா...., நிஜமாவே நான் யாரு..., எப்படி இவனுக்குள் வந்தேன்....? நான் உண்மையாவே சரவணன் தானா...? இப்படி நிறைய கேள்வி உங்களுக்கு இருக்கும்”,

சிறிது இடைவெளி விட்டவன், “உங்க கண்ணுக்கு முன்னாடி இருக்க இந்த உருவம் யுவா..., உள்ளே இருக்கும் நான் சரவணன். இது எப்படி நடந்துச்சு அப்படின்னு கேட்டால் என்கிட்டே பதில் இல்லை. ஆனா..., எனக்குத் தெரிஞ்சது எல்லாம் ஒண்ணுதான். என் தேவி இல்லாமல் நான் எங்கேயும் போவதா இல்லை.

“அது உயிரோட இருந்தாலும் சரி, இல்லை என்றாலும் சரி. அதே நேரம் அவளை தனியா விடவும் நான் தயாரா இல்லை. அன்னைக்கு எனக்கு விபத்து நடந்து, என் உடம்பில் இருந்து ஆவி வெளியேறியது மட்டும்தான் எனக்குத் தெரியும்.

“என்னோட உடம்பை விட்டு வெளியே நின்ன அடுத்த நொடி எனக்கு ஞாபகத்துக்கு வந்தது தேவிதான். நான் இல்லாமல் அவ எப்படி இருப்பா....? இதுதான் என் மனசை அரித்த ஒரே விஷயம்.....

“எப்படியாவது நான் அவகிட்டே போகணும்...., அவளை அழ விடக் கூடாது..., அவளை பத்திரமா பாத்துக்கணும்...., அவ எந்தவிதமான தப்பான முடிவுக்கும் போய்டக் கூடாது...., ஏன்னா...., அவள உசுரா நினச்சது நான் மட்டும் கிடையாது.

“என் மாமா, ஐத்த, என் அம்மா, ஆயா..., அவ சித்தப்பனுங்க..., இவங்க எல்லோருக்கும் அவளை காப்பாத்திக் கொடுக்கணும் என்ற எண்ணமும் அதிகமா இருந்துது. அதைவிட....”, உணர்ச்சி பூர்வமாக சொல்லிக் கொண்டிருந்தவன் சொல்ல வந்ததைச் சொல்லாமல் விடுத்துவிட்டு,

“நான்மட்டும் தேவியை அவ்வளவு நேசிக்காமல் இருந்திருந்தால், உங்க முன்னாடி நான் இப்படி வந்திருக்கவே மாட்டேன். என்னோட வாழ்க்கையும் அந்த விபத்தோடவே முடிஞ்சிருக்கும்.....”, இமை மூடி சொன்னவன், அசையாமல் இருந்தான்.

அவன் சொன்னதை கேட்ட அனைவருக்குமே, அவன் காதலின் ஆழம் புரிந்தது. ஆனால் அவன் எப்படி யுவாவின் உடம்பிற்குள் வந்தான் என்ற கேள்விக்கு விடை கிடைக்காமல் போகவே,

“யுவா..., சாரி சரவணா..., நீ எப்படி யுவாவின் உடம்புக்குள் வந்தாய்...”, அங்கிருந்த அனைவரின் சிந்தையில் ஓடியதை, வாய்மொழியாகக் கேட்டார் டாக்டர் ரவி.

ஒரு நிமிடம் யோசித்தவன், “உண்மையை சொன்னால் எனக்கு தெரியல சார்..., இந்த மாயம் எப்படி நடந்ததுன்னு எனக்கு புரியலை. என் இடுப்பில் கார் ஏறி இறங்கியதுமே, என் இடுப்பு எலும்பு உடைந்து நான் இறந்துட்டேன்.

“நான் திரும்பி பார்க்கும்போது...., என்னால் மறுபடியும் அந்த உடம்புக்குள் போக முடியாது..., போனாலும் எந்த பலனும் இல்லை என்பது புரிந்தது. அப்போ என்மேல் காரை ஏற்றிவிட்டு, தாண்டிச் சென்று, விபத்தான

காருக்குள் இருந்த உடம்புக்குள் நான் போனேன்..., எனக்கு அவ்வளவுதான் ஞாபகம் இருக்கு.

“மத்தபடி ஹாஸ்பிட்டல்ல இருக்கும்போது...., எனக்கு எதுவுமே நினைவில் இல்லை. மனசு துடைச்சு வச்ச மாதிரி இருந்தது. ஆனாலும் அந்த முழு மயக்கத்திலும், என்னோட அடி மனசு..., ‘எனக்கு நீ வேணும்..., உனக்கு நான் இருக்கேன்’, இப்படியே புலம்பும். அது ஏன்னு எனக்கு புரியவே இல்லை.

“முழுவதும் மறந்த நிலையில்தான் இருந்தேன். உறக்கத்தில் ஏதோ நிழலாக உணரும் நான், விழிப்பு வரும்பொழுது..., குழப்பம் மட்டுமே மிஞ்சும். முதல் நாளில் எல்லாம் என்னோட அப்பா அம்மா கூட எனக்கு நினைவில் இல்லை...”, இதைச் சொல்லும்பொழுது சங்கடமாக கங்காவைப் பார்த்தான்.

பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான். “ஆனால் நான் தெளிவாக பேசவே எனக்கு நாள் ஆனதால், அதற்கு முன்பாகவே நான் சூழலைப்பழகிக் கொண்டேன். எவ்வளவுதான் பழகினாலும், கண்ணாடியைப் பார்க்கும்பொழுது துவங்கி,

“நான் இருந்த சூழல், சாப்பிட்ட சாப்பாடு, இருந்த இடம் இப்படி எதுவுமே ஒட்டவே இல்லை. அதன் பிறகு முதல் முறையாக கார்மெண்ட்ஸ் போன அன்று, இனம் புரியாத ஒரு உணர்வை உணர்ந்தேன்.

“என்னோட தேடல் அங்கேதான் இருப்பதா எனக்கு தோணிச்சு. சில நேரம் ரொம்பவே மனம் அமைதியா இருக்கும். சில நேரம் குழம்பித் தவிக்கும். அதிலும் வீணாவின் அருகில் செல்லும் பொழுதெல்லாம் அந்த தாக்கம் எனக்கு அதிகமா இருக்கும்.

“இதை எப்படி அவங்ககிட்டே சொல்லன்னு தெரியாமல், சுற்றி வளைத்து கேட்டிருக்கேன். ஆனா அவங்க பிடிகொடுத்து பேசவே இல்லை. அப்போவே அவங்க

கொஞ்சம் ஒத்துழைத்திருந்தால்..., தேவிம்மாவோட கஷ்டம் எப்பவோ இல்லாமல் போயிருக்கும்....”,

வீணாவை ஒரு நிமிடம் ஆழமாகப் பார்த்தவன், அவள் எதையோ சொல்லத் துவங்கவே..., “அவங்களைச் சொல்லியும் குற்றமில்லை. திடீர்ன்னு ஒருத்தன் வந்து....., நீங்க அழுதீங்களா..., இப்போ இங்கே யார் வந்தா...., நீங்க எதையோ மறைக்கிறீங்கன்னு சொன்னால்...,

“யாராக இருந்தாலும் பயம் வரத்தான் செய்யும். ஆனா கடந்த சில மாதங்களாக நாங்கள் பட்ட துன்பம்...., அதைவிட கடந்த சில நாட்கள்...., அனல்மேல் இருப்பதுபோல் தகிப்பாக இருந்தது. அந்த அவஸ்த்தையை நான் வார்த்தையால் விவரிக்கவே முடியாது. ஆனா இப்போ.....”,

கடந்த காலங்களின் கசப்புகளில் கசங்கிய அவன் முகம்..., இறுதியாக மிகப்பெரும் நிம்மதியை தத்தெடுத்தது. அதில் ஒரு நிமிடம் லயித்திருந்தவன்....., “எந்த நிமிஷம் என் தேவியைப் பார்த்தேனோ..., அந்த நொடி...., சூரியனை மறைத்திருந்த மேகக் கூட்டம் மாதிரி..., எல்லாம் விலகி தெளிவாயிடுச்சு.

“என் தேவியைப் பார்க்கும் அந்த நொடிதான்...., எனக்கு ஞாபகம் வரணும்னு இருந்திருக்கு. இப்போ..., உங்க எல்லோரையும் நான் பாத்துட்டேன். என் தேவியும் எனக்கு கிடைச்சுட்டா....”, பெரும் நிம்மதியோடு பேசிக் கொண்டிருந்தான்.

அவன் பேசி முடித்த அந்த நொடி..., அறைக்குள்ளிருந்து புயலென வெளிவந்தவள்...., “இல்ல...., இந்த தேவி, அந்த சரவணனுக்கு மட்டும்தான்...., உங்களுக்கு இல்லை. நீங்க சொல்லும் இந்தக் கதையை இவங்க வேண்ணா நம்பலாம். நான் நம்ப மாட்டேன்.

“இங்கே இருந்து போய்டுங்க...., என்னைக்கு என்ற மாமன் என்னை விட்டுப் போனாரோ.... அன்னைக்கே எல்லாம்

முடிஞ்சு போச்சு. இங்கே நிக்கிற நீங்க..., அதோ அவங்களுக்கு சொந்தமானவங்க...., போய்டுங்க....", யாரும் எதிர்பாராத நிமிடம் வெடித்தவள், வந்த வேகத்தில் தன் அறைக்குத் திரும்பினாள்.

அவள் சொன்னவற்றை அங்கிருந்த யாரும் எதிர்பார்க்கவில்லை என்பதை அவர்களது முகங்களே சொன்னது. யுவா அதிர்ந்து நின்றான். அவன் தோளை அழுத்திய கங்காவோ..., "அவளுக்கு இதையெல்லாம் ஏத்துக்க, கொஞ்சம் நேரம் வேணுமே ராஜா...", ஆதரவாக அவன் தோளை அழுத்திச் சொன்னார்.

சுற்றி இருந்த பெரியவர்களால் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அவர்களுக்கும் இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள நாள் ஆகும். அவர்களிடம் மௌனம் மட்டுமே பதிலாக இருந்தது. அப்படியிருக்கையில், சிறியவளாகிய தேவியை தேவியைச் சொல்லி என்ன செய்ய?

அவள் பேசியதை கண்டுகொள்ளாமல் விட்டவன், கங்காவிடம்..., "இந்த ஜென்மத்தில் எனக்கு திருமணம் என்ற ஒன்று நடந்தால் அது என் தேவியோடதான்...., எங்களது திருமணத்துக்கும் யாரோட சம்மதம் இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி..., கண்டிப்பா நடக்கும்.

"இதில் தலையிடும் உரிமை யாருக்கும் கிடையாது. அப்படியே நீங்க என்னை உங்க கைப்பிடிக்குள் வைக்கணும்னு நினைத்தால்...., உங்க கையை விட்டு விலகவும் நான் தயாராகத்தான் இருக்கிறேன்...", இவற்றை சொன்னபொழுது அவனது பார்வை ஈஸ்வரிடமே இருந்தது.

பின்னர் அனைவரையும் அமைதியாக ஒரு பார்வை பார்த்தவன், தன் தாயிடம் திரும்பி, "அவ நடிக்கிறாம்மா...., அவளை எப்படி சம்மதிக்க வைக்கன்னு எனக்குத் தெரியும்", சொன்னவன், கங்காவை விலக்கிவிட்டு, தேவி

சென்று மறைந்த அறைக்குச் சென்றான். அவனால் அதை இத்தோடு விடும் எண்ணம் இருக்கவில்லை.

இன்றோடு இதற்கு ஒரு முடிவு கட்டிவிடுவது என்ற எண்ணத்திலே அவ்வாறு செய்தான். தன் அறைக்கே அவன் வந்துவிடுவான் என்ற எண்ணம் இல்லாமல்..., கட்டிலில் விழுந்து குமுறி அழுதுகொண்டிருந்தாள் வானதி தேவி.

அவனைக் கண்டவுடன் அவசரமாக படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள். அவனையே திகைப்பாய் பார்க்க, நிதானமாக கதவை அடைத்தவன், தன் இடக்கையால் மீசையைத் திருகியவாறு, ஆழ்ந்த பார்வையாய் அவளைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தான்.

அவனது அந்த செய்கையில்...., அப்பட்டமாக சரவணனைக் கண்டுகொண்டாள் அவள்.

## பகுதி – 26.

யுவாவாகிய சரவணன் பேசிய அனைத்தையும் கேட்ட தேவிக்கு, அவன் தனக்காக மட்டுமே மறுபிறப்பெடுத்து வந்திருப்பது புரிந்தது. ஆனால் புரிந்துகொண்டதை ஏற்றுக்கொள்ளத்தான் முடியவில்லை. ஏற்க முடியவில்லையே என்ற வலி அதைவிட அதிகமாக வதைத்தது.

சரவணன் இல்லாத ஒரு வாழ்வை அவளால் நினைத்துகூட பார்க்க முடிந்ததில்லை. அப்படியிருக்கையில்..., அவன் இனிமேல் இல்லை என்ற உண்மையை ஏற்க முடியாமல் தவித்தவள்தான் அவள்.

ஒவ்வொரு இரவின் மடியிலும் அவள் உணர்ந்த அவனது ஸ்பரிசங்களே அதற்கு சாட்சி. அதே நேரம்..., யுவாவிடம் தெரியும் சரவணனின் சாயல்..., அவளை அலைகடலில் துரும்பென அவனை நோக்கி நகர்த்தியது.

அப்படி அவனை நோக்கி நகரும் வேளையில்..., அவனது உருவம் மட்டுமே அவளைத் தடுத்தது. ஆனால் இப்பொழுது அவளின் முன்னால்..., இமைக்க மறந்து அவன் பார்க்கும் பார்வை...., அவனிடமிருந்து, அவன் கண்களின் வீச்சில் இருந்து தன் பார்வையை விலக்க முடியாமல் தவித்தாள்.

அவளது தவிப்பை புரிந்துகொண்டான் அவன். அடிமேல் அடிவைத்து, அவளை நோக்கி நகர, அவனைவிட்டு விலகு என்று மூளை கட்டளையிட்டாலும், கால்கள் அசைய மறுத்து அடம் பிடித்தன. ஆர்வமும், எதிர்பார்ப்பும், அச்சமும், தவிப்பும் கலந்த பார்வை அவனைப் பார்க்க, அவனோ நிதான நடையுடன் அவளை நெருங்கினான்.

“ஏன் தேவி..., நான் சொன்னது கதைன்னா சொல்லுற..? எங்கே என் கண்ணைப் பாத்து சொல்லு..., நான் சரவணன் என்பதை நீ நம்பலன்னு....”, அழுத்தமாகக் கேட்டு, அவளை இன்னும் நெருங்க, அவனது அருகாமையிலும், நெருக்கத்திலும் அவள் கால்கள் தள்ளாடியது.

இதயம் படபடவென அடித்துக்கொள்ள, இதழ்கள் துடிக்க, கால்கள் துவள, இந்த நிலையை தாங்கிக் கொள்ள முடியாமல், அவனை பற்றிக்கொள்ள துடித்தவள், அஷ்மிதாவின் முகம் அந்த நிலையில் மின்னி மறைய, திடுக்கிட்டு பின்வாங்கினாள்.

அவள் முகத்தில் மின்னி மறைந்துகொண்டிருந்த உணர்வுகளையே ஆராய்ந்துகொண்டிருந்தவன், இறுதியாக அவள் முகத்தில் தெரிந்த அதிர்வைக் கண்டு குழம்பிப் போனான்.

“இன்னும் என்ன...?”, அவன் கொஞ்சம் கோபம் கலந்து கேட்க,

“இல்ல..., இல்ல..., இது... சரிவராது. நீங்க.... கங்காம்மாவுக்குதான் சொந்தம். நீங்க..... இப்போ....

அவங்க.... விருப்பப்படிதான்... நடக்கணும்”, குரல் அடைக்க, விம்மித் தணிந்து வார்த்தைகளை கோர்க்க முயன்றாள்.

“அவங்க விருப்பப்படிதான் நடக்கணும்னா...? புரியலையே”, அவன் குரலில் சூட்டில், அவள் உடல் உதறல் எடுத்தது.

ஆனாலும் தான் சொல்ல வருவதில் பின்வாங்காமல்...., “உங்களுக்கா புரியாது...., அதான் உங்களுக்குன்னு பொண்ணு பாத்து முடிவு பண்ணியிருக்காங்களே...”, அவன் முகம் பார்க்காமல் அவள் சொல்ல,

“என்னடி சொன்ன.....”, கோபத்தில் கண்கள் சிவக்க அவள் தாடையைப் பிடித்து நெரித்து அவள் கண்களோடு கண் ஊடுருவியவன், அவள் வலியில் முகம் சுழிக்கவே அவளை விட்டு கைகளை விலக்கினான்.

அவன் கைகளை விலக்கிக் கொள்ளவே, அவன் காலடியில் சரிந்து மடிந்து அமர்ந்தவள், முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

“அப்போ நீ என்னை சந்தேகப் படுறியா...?”, குரலில் வலியுடன் அவன் வினவ..., அவனது வலி அவளைத் தாக்கியது.

வெடுக்கென நிமிர்ந்து பார்த்தவள், ‘உங்களை நான் சந்தேகப்பட்டால்..., என்னையே சந்தேகப்படுவதுக்கு சமம்....’, என மனதுக்குள், எண்ணியவள், “நான் எப்போ அப்படிச் சொன்னேன்..., இந்தக் காதலோட வலி அவங்களுக்கு வேணாம்னுதான் சொல்லுதேன்...., அந்த வலி என் ஒருத்தியோட போகட்டும்.

“இந்த பாவப்பட்ட ஜென்மத்தால்...., இன்னொருத்தரும் இந்த வலியை அனுபவிக்க வேணாம்னுதான் சொல்லுதேன்....”, அவள் மனதில் இருப்பதைச் சொல்லி குமுறினாள்.

“என்னது...., காதலா....? யாருக்கு..? என்மேல் அஷ்மிதாவுக்கா...? வாய்ப்பே இல்லை. அதை இப்போ உனக்கு நிரூபிக்கிறேன் பார்...”, சொன்னவன்..., அவசரமாகத் தன் அலைபேசியில் இருந்து, அஷ்மிதாவிற்கு அழைத்தான்.

அவள் அழைப்பை எடுக்கவே...., ஸ்பீக்கரில் போட்டவன், “அஷ்மிதா..., எனக்கு உங்ககிட்டே ஒரு விஷயம் கேக்கணும்..., அதுக்குதான் ஃபோன் செய்தேன்...”, நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

“கேளுங்க யுவா...”, சோம்பலாக ஒலித்தது அவள் குரல். அவனைத் தடுக்க முயன்ற வானதிதேவியைக் கண்ணசைவில் தடுத்தவன், “நீங்க என்னை கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசப்பட்டீங்களா என்ன..?”, கிராமத்தான் வெளியே வர, வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பதுபோல் கேட்டான்.

“என்ன யுவா இது....? உங்க விபத்துக்கு முன்னாடியே நமக்குள் ஒத்துவராதுன்னு...., நாமளும் சரி, ரெண்டு வீட்டிலும் சரி பேசி முடிவெடுத்த விஷயமாச்சே இது. இப்போ என்ன திடீர்ன்னு...”, கலங்கிய தன் கண்களை, இமைமூடி, கட்டுப்படுத்தியவாறு, பிசிறில்லாமல் கேட்டாள்.

‘கேட்டுக் கொண்டாயா....?’, என்பதுபோல் வானதியைப் பார்த்தவன், “இல்ல இங்கே என் ஐத்த பொண்ணுக்கு ரொம்ப பெரிய குழப்பம் அதான்...., உங்க வாயாலேயே கேட்டுடுவோம்னு ஃபோனைப் போட்டேன்.

“அதேபோல் நீங்களும் ஒரு செக்கெண்டு கூட யோசிக்காமல்..., பட்டுன்னு உங்க பதிலை சொல்லிட்டீங்களே... எனக்கு இது போதும். வச்சுடுறேன்...”, சொன்னவன் வைத்துவிட்டான்.

அங்கே அஷ்மிதாவோ..., ‘நீங்க பழைய யுவாவா இருந்திருந்தால்..., இதை நினைத்து ஒரு சதவீதம் கூட

நான் வருத்தப் பட்டிருக்க மாட்டேன். ஆனால்....’, இந்த ஆனாலை இனிமேல் யோசிக்கவே கூடாது என அந்த நிமிடம் முடிவெடுத்தாள்.

வானதியின் கதையைக் கேட்டே கலங்கியிருந்தவள், அவளது காதலன்தான் தற்போதைய யுவா என்று அறிந்த பிறகு..., முயன்று தன் மனதை மாற்ற முயன்றாள். ஆனாலும் புதிதாகப் பூத்த காதலின் வலி..., அவளையும் கொஞ்சம் தாக்கியது.

அதிலிருந்து எப்படி விடுபட வேண்டும் என்பது அவளுக்கு நிச்சயம் தெரியும்.........

அஷ்மிதாவின் தெளிவான பேச்சில், ஒரு நிமிடம் துணுக்குற்றாள் வானதி. ஆனாலும் அவளது பேச்சில் இருந்த உறுதியில்...., அதை நம்பாமல் இருக்க முடியவில்லை அவளால்.

நம்பமுடியாமல் அவனைப் பார்க்க, அவள் விழி சொன்ன மொழியில் கட்டுண்டான் அவன். இனிமேல் அவளை அடைவதில் எந்தத் தடையுமில்லை என அவன் எண்ணிக்கொண்டு, அந்த சந்தோஷ மனநிலையில் அவளை நெருங்க...., சட்டென தோன்றிய ஒருவித பதட்டத்தில், அவனிடமிருந்து பின்வாங்கினாள் தேவி.

“இன்னும் என்ன....?”, உச்சக் கோபம், அவன் குரலில் எட்டிப் பார்த்தது.

“என்ன இருந்தாலும்...., உங்களை...., நீங்க...., என்னால் முடியாது....”, வாய் விட்டுக் கதறினாள்.

“உன்னால் முடியாது...., அப்போ இன்னும் நீ என்னை நம்பலை. நான்தான் சரவணன்னு நீ நம்பல இல்ல....”, எதையோ எதிர்பார்த்து, ஓடிவந்து..., ஏமாந்த உணர்வு அவனிடம்.

“வேண்டாம்...., நீ எதுவும் செய்யவேண்டாம். என்னை நம்பவேண்டாம்...., கட்டிக்கவேண்டாம்...., எதுவுமே செய்ய

வேண்டாம். ஒன்பது வயசில் உனக்காக..., காடு மேடெல்லாம் அலைஞ்சு ஒரு மிட்டாய் வாங்கி வந்தேனே....

“அப்போ என்னோட பாசத்தை நீ புரிஞ்சுக்காமல் போயிருந்தா வருத்தப் பட்டிருக்க மாட்டேன். பதினஞ்சு வயசில் உனக்காக முள்ளு வேலைக்குப் போனேனே..., அப்போ என்னோட நேசத்தைப் புரிஞ்சுக்காமல் போயிருந்தால் கூட வருத்தப் பட்டிருக்க மாட்டேன்.

“இருவது வயசில்...., உன்னை கூட்டிகிட்டு ஊரு முழுக்க சுத்தி வந்தேனே...., அப்போ என்னோட காதலை புரிஞ்சுக்காமல் போயிருந்தால் வருத்தப் பட்டிருக்க மாட்டேன். இருவத்தினாலு வயசில்..., உனக்காக ஆசை ஆசையா வீடு கட்டினேனே...,

“ஒவ்வொரு நாளும் உன்னை கிட்டே வச்சுகிட்டு..., விலகியிருக்க முடியாமல் தவிச்சேனே...., அப்போ என்னோட ஆசையைப் புரிஞ்சுக்காமல் போயிருந்தால் கூட வருத்தப் பட்டிருக்க மாட்டேன்.

“ஆனா....., இந்த உலகத்தைவிட்டு நான் போகவேண்டிய நிர்பந்தம் வந்தப்போ கூட...., இந்த உயிரை உனக்காக தக்கவச்சுகிட்டு...., உனக்காக ஓடி வந்திருக்கும் இந்த மாமனை...., மொத்தமா புரிஞ்சுக்காமல்..., இந்த உருவத்துக்காக மட்டும் ஒதுக்கி வைக்கிற இல்ல.....

“சரி...., உனக்கே நான் வேண்டாதப்போ...., இனிமேல் நான் யாருக்காக இருக்கணும்....? போய்டுறேன்.... மொத்தமா போய்டுறேன். முதல்ல சாகுறதுக்கு முன்னாடி..., உன்கிட்டே பேசாமல் போயிட்டோமேன்னு ரொம்ப வருத்தப்பட்டேன்....

“இப்போ அந்த வருத்தம் சுத்தமா இல்லை. உன்னைப் பாத்துட்டேன். பேசிட்டேன். எல்லாத்துக்கும் மேல...., உன்னை உன் குடும்பத்துக்கு காப்பாத்திக் கொடுத்துட்டேன். எனக்கு இது போதும்..., நான் போறேன்..., உனக்கு நான் வேண்டாம்ல்ல....”, தன்

உயிருக்கு உயிரான அத்தை மகள், தன்னை வேண்டாம் என்று சொல்வதைத் தாங்க முடியாமல், வெதும்பி நொறுங்கிப் போனான்.

அது அவனது வாய்மொழியில் வெளிப்படவே, தங்கள் சிறுவயது முதல், வாலிப வயதுவரை..., பிட்டுப் பிட்டு வைத்த அவனை, ஓடிச் சென்று கட்டிக் கொண்டாள்.

“மாமா...., ஏன் மாமா..., என்னைவிட்டு போய்டுவியா நீ....”, கேட்டவள், அவனை விடவே முடியாது என்பதுபோல் கட்டிக் கொண்டாள். அவளது கைப்பிடிக்குள் இருந்து விலகிச்செல்ல மனமில்லாமல் உறைந்து நின்றிருந்தான் அவன்.

அவளிடமிருந்து கிடைத்த முதல் அணைப்பு..., அதிலும் அவளாகவே அவனை அணைத்த தருணம்...., அணுவணுவாய் ரசித்தான். அவளோ..., அவன் சொன்ன விஷயங்களின் தாக்கம் குறையாதவளாய்..., அவனை, அவன் உருவத்தை ஏற்க முயன்றுகொண்டிருந்தாள்.

இங்கே வெளியில் இருந்த பெரியவர்களோ...., தங்கள் வாரிசு கிடைத்துவிட்டான் என்ற உண்மையை நம்பவும் முடியாமல், கங்காவின் முன்னால் அவனை உரிமை எடுத்து பேசவும் முடியாமல் ஒருவித குழப்பத்தில் இருந்தார்கள்.

ஆனாலும் யுவாவின் உறுதியான பேச்சு அவர்களை ஒரு விதத்தில் சங்கடப்படுத்தியது. அதே நேரம் மற்றொரு விதத்தில் சந்தோசப் படுத்தியது. அங்கே ஒருவருக்கொருவர் எதையும் பேசாமல், அமைதியே உருவாக இருந்துகொண்டிருந்தார்கள்.

அந்த அமைதியைக் கலைத்தார் ஈஸ்வர். “அவன் என்னென்னவோ சொல்லிட்டு போறானேடா...., அதையெல்லாம் கேட்டுட்டு நீயும் பேசாமல் இருக்க. இதெல்லாம் சாத்தியமா...? என்னால் நம்பவே

முடியலை....”, தலையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டார்.

“எனக்கும் என்ன சொல்லுறதுன்னு தெரியலை ஈஸ்வர். இந்த விஞ்ஞான உலகத்தில் இதையெல்லாம் சொன்னால்..., நம்மை பயித்தியக்காரன்னு சொல்லுவாங்க. ஆனா அதே நேரம்...., இமய மலையில் இருக்கும் சித்தர்கள், இப்போ கூட இந்த கூடுவிட்டு கூடுபாயும் வித்தையை செய்யிறாங்க.

“அதாவது ஒரு உடம்பில் இருந்து, மற்றொரு உடம்புக்கு தங்களோட ஆவியை மாற்றுவாங்க. ஆனா அதைச் செய்ய அவங்க ஏகப்பட்ட தவம்..., காலம் எல்லாம் எடுத்துப்பாங்க. ஆனால் சரவணனுக்கு அந்த சக்தியை அவனோட காதல் கொடுத்திருக்கு. அதுதான் உண்மை....

“அதாவது சரவணனின் ஆன்மா ஏதோ ஒரு காரணத்துக்காக..., அது அவனோட சொந்த உடம்பு விபத்தில் ரொம்ப சேதமடைந்த காரணமா இருக்கலாம், இல்லையா அவனோட உடம்புக்கு இந்த பூலோகத்தில் குறிக்கப்பட்ட காலம் முடிந்திருக்கலாம். அதனாலும்..., அவன் யுவாவின் உடம்புக்கு இடம் பெயர்ந்திருக்கான்.

“ஒரு மருத்துவரா இருந்துட்டு நான் இப்படியெல்லாம் சொல்லக் கூடாதுதான்..., ஆனால் நடந்திருக்கும் விஷயத்தை நம்பாமல் இருக்கவும் முடியலை. நம்மளோட பழைய யுவா அடியோட மாரியிருக்கான்...., அவனோட பழக்கம்..., ரசனை, உணவுமுறை, பேச்சு, இப்படி எல்லாம் சரவணனை ஒத்துப் போகுது...”,

ஆழ்ந்து ஒரு மூச்சை விட்டவர்..., “கெட்டதிலும் ஒரு நல்ல விஷயம்..., நமக்கு நம்ம யுவாவை கண்ணால் காணக் கொடுத்து வச்சிருக்கோம்..., அவங்க அவங்க பிள்ளையை உணரக் கொடுத்து வச்சிருக்காங்க.

“இரண்டுபக்கமும் இழப்பு எப்படி சரிபாதியோ..., அதேமாதிரி.. பலனும் சரி பாதி. ஆனால்..., சரவணன்

தான் யாராக இருக்கணும்..., எப்படி இருக்கணும்...., அவனோட வாழ்க்கை எப்படி அமையணும்னு அவன்தான் தீர்மானிக்கணும்.

“அதுக்கு நாம எல்லோருமே கட்டுப்படணும்...., நமக்கு வேற வழி இல்லை. நாம பிடிவாதம் பிடித்தால் இழப்பு நமக்குத்தான்...”, ஈஸ்வரை ஆழ்ந்து ஒரு பார்வை பார்த்து, சொல்லி நிறுத்தினார்.

அங்கே மீண்டும் ஒரு ஆழ்ந்த அமைதி நிலவியது. ஆனால் டாக்டர் ரவி சொன்னவற்றை ஏற்க முடியாமல்..., கண்கலங்கினார் கங்கா. ‘அப்படியென்றால்...., என்மகன் எனக்கு இல்லையா....? அவன் ஏற்கனவே தேவிதான் வேண்டுமென்று சொல்லிவிட்டான். அவளைத் திருமணம் செய்துகொண்டு..., கிராமத்துக்கே சென்றுவிடுவானா....

‘அவன் இல்லாமல் நான் எப்படி இருப்பேன்...., மனிதன் என்பவன் உணர்வுப்பூர்வமானவன்...., அப்படியிருக்கையில்...., அவனது உணர்வுகள் அனைத்தும் சரவணனுக்குச் சொந்தமானவை. அப்படியென்றால் அவன் சரவணனாகத்தானே இருப்பான்.

‘தாங்கள் எந்த உரிமையில், அவனைத் தங்களோடு வைத்துக்கொள்ள முடியும்..... அவன் இல்லாமல் எங்களுக்கு வாழ்வேது....’, ஒரு நிமிடத்தில் பலவற்றையும் நினைத்து குழம்பித் தவித்தார். ஈஸ்வரும் அதையே நினைத்து கலங்க, யாருக்கு யார் ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் தடுமாறினார்கள்.

அவரது அழுகையைக் கண்ணுற்ற சரவணனின் ஆயா மாரி..., தள்ளாடி நடந்து அவர் அருகில் வந்தார். “ஏனாத்தா....., எதுக்கு இப்படி அழுவுறவ...., உம்புள்ளையை நாங்க கூட்டி போய்டுவோம்னா கலங்குத....,

“ஒத்தபுள்ளைய இழக்க வலி எங்களுக்கும் தெரியுமாத்தா. என்னைக்கு இருந்தாலும் அவன் உம்புள்ள தான். சீமத்தொரையாட்டம் இருக்கவன்..., எங்க குடும்பத்துக்குள் வந்து நின்னா, ஒட்டாம தனிச்சிருப்பான்.

“அவன் உங்களோடவே இருக்கட்டும்..., ஆனா....”, இழுத்து நிறுத்தியவர், தங்கள் குடும்பத்தவரிடம் பார்வையால் விஷயத்தை தெரிவித்தவர், “என் பேத்தியை மட்டும் அவனோட சேத்து வச்சுடுங்கத்தா...., அவ இனிமேல் தனிச்சிருந்தா தாங்க மாட்டா..., இத மட்டும் எங்களுக்கு வேண்டி இல்ல...., அந்த சின்னஞ் சிறுசுங்களுக்கு வேண்டி செய்விய தான....”, மடிபிச்சை ஏந்தும் விதமாக, தன் முந்தியை விரிக்கப் போனார்.

அவரை அவசரமாகத் தடுத்த கங்கா..., அவர் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கதறிவிட்டார். “அம்மா....”, எனக் கதறிவிட்டார். பெற்ற பிள்ளையை விட்டுக் கொடுப்பது என்பது யாருக்கும் இயலாத ஒன்று அப்படியிருக்கையில், அவரது பேச்சு நம்பமுடியாத திகைப்பை அவருக்கு அளித்தது.

பெரியவர்கள் அனைவரும் அவனுக்கான முடிவை எடுக்க, தங்களுக்குள் சமாதானமாகி, புரிதலாகி, வெளிவந்த சரவணன் இதை அறிந்து வெகுண்டான்.

## பகுதி – 27.

சரவணனின் வாழ்வைப் பற்றிய முடிவை அவர்கள் எடுக்க, எப்படி அவர்கள் தன் வாழ்வை முடிவு செய்யலாம் என வெகுண்டான். ஆனாலும் தங்கள் சொந்தங்களின் வார்த்தைக்கு கட்டுப்பட்டே ஆனவன் என்பதால், அடங்கிப் போனான்.

அடுத்து வந்த முகூர்த்தத்திலேயே அவர்களது திருமணத்தை நடத்த முடிவெடுத்தார்கள். யுவா சந்தோஷத்தின் உச்சத்தில் இருந்தான். அவன் எவ்வளவு

சந்தோஷத்தில் இருந்தானோ, தேவி அவ்வளவு குழப்பத்தில் இருந்தாள்.

அவளால் சரவணன் இல்லாத வாழ்வை நினைத்துப் பார்க்க முடியவில்லைதான், ஆனால் யுவாவின் உருவம் அவளை வெகுவாய் தடுத்தது. யுவா அருகில் நெருங்கினாலே, அவனது உருவம் நெருடலாக அமைந்தது.

அதை யுவாவும் உணர்ந்துகொண்டான். தன்னால் முடிந்த அளவு அவளிடம் அனுசரணையாக, அன்பாக, பாதுகாப்பாக, அரவணைப்பாக இருக்க முயன்றான். அவனது முயற்சி புரிந்து, தன் தயக்கத்தை உதறிவிட்டு, அவன் கருணையில் கலக்க முயன்றாள்.

யுவாவின் ஆர்வமான பார்வைகளும், அழுத்தமான நெருக்கமும் அவளுக்குள் சிறு குளிரை விளைவித்தன. சரவணன் உருவத்தில் மட்டுமே மாறியிருந்ததால், மனதளவில் அவளை, அவனது தேவியாகவே அவளைக் கண்டான்.

பிரிந்து இருந்த நாட்களுக்கும் சேர்த்து, அவளோடான நெருக்கத்தை, அன்பை, காதலை அனுபவிக்க முயன்றான். ஆனால் தேவியின் மெல்லிய தயக்கமும், பதட்டமும் அவனுக்கு கவலையை அளித்தது. எப்படி இருந்தாலும் அவளை விட்டுக்கொடுக்க முடியாது என்பதில் அவன் உறுதியாக இருந்தான்.

எனவே அவளது தயக்கத்தைக் கண்டுகொள்ளாமல், ஆவலுடன் இயல்பாக பழக முயன்றான். இப்பொழுது அவனது நாட்கள் அவளுடன் பழகுவதற்காகவும், இழந்த நாட்களை மீட்டெடுப்பதற்காகவும் விடிவதாக உணர்ந்தான்.

என்னதான் ஆனாலும்...., அவனை வீணாவின் வீட்டிலேயே இருக்க யாரும் சம்மதிக்கவில்லை. அவன் கங்காவுடனே இருந்தான். அவரிடம் முதலில் எவ்வளவு

நெருக்கம் காட்டினானோ..., அதே அளவு நெருக்கத்தை அவரிடம் காட்டினான்.

திருமணம் முடியும்வரைக்கும் அவன் இங்கேயே இருப்பான் என்பதில் அவருக்கு அவ்வளவு சந்தோசம். ஆனால்..., திருமணம் முடிந்த பிறகு என்ன முடிவெடுப்பான் என்பதில், அவருக்கு எந்தவித நிச்சயமும் இருக்கவில்லை.

என்ன முடிவெடுப்பான் எனக் கேட்கவும் அவருக்கு மிகுந்த தயக்கமாக இருந்தது. எங்கே தேவையில்லாமல் நாமாகவே அவனைத் தூண்டிவிடுவோமோ என்ற அச்சமும் காரணமாக அமைந்தது.

திருமணத்துக்கு இன்னும் ஐந்தே நாட்கள் இருக்க, தேவியை ஒருவித பதட்டம் தொற்றிக் கொண்டது. தன்னைத் தானே எவ்வளவு சமாதானம் செய்ய முயன்றும் அவளால் முடியவில்லை. யுவாவைக் காணவேண்டும் என்ற வேகம் அன்று அதிகமாக இருந்தது.

தன்னைக் காண வந்த அவனை, அவன் வீட்டிற்குச் செல்லவே அனுமதிக்கவில்லை. என்னவென்று கேட்டதற்கு சரியான விளக்கமும் சொல்லவில்லை. ஆனால் அவளது பயத்தை சரியாக இனம் கண்டுகொண்டான் யுவா.

“என்ன மறுபடியும் உன்னை விட்டு போய்டுவேன்னு பயப்படுறியா...?”, கேட்டவன் அவளை ஆழமாகப் பார்க்க, அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள் அவள். இப்படியாக அவன்மேல் இருக்கும் நேசத்தையும் மாற்ற முடியாமல், அவனிடம் வெளிப்படையாக நேசத்தை காட்டவும் முடியாமல் தடுமாறினாள்.

இந்த நாட்களில் வீணா, யுவா, வானதி என யாருமே கார்மெண்ட்ஸ் செல்லவில்லை. எனவே வீணாவைக் காணாமல் தவித்த கபில் அவளைத் தேடி வீட்டிற்கே

வந்துவிட்டான். வந்தவன் தனியாகவும் வரவில்லை, அவனது தாயையும் அழைத்து வந்திருந்தான்.

வந்திருந்தவர்கள் கொஞ்சம் சங்கடமாகவே அமர்ந்திருந்தார்கள். வீணாவின் தாய் அவர்களை வரவேற்றுப் பேச, வீணாவோ அவர்களிடம் சம்ப்ரதாயமாகக் கூட பேசத் தயங்கியவளாய் அங்கிருந்து விலகினாள்.

வீணாவின் தாய் அதை கண்டிக்க, “தேவையில்லாமல் எந்த விதமான ஆசைகளையும் வளத்துக்காதீங்கமா. ஏற்கனவே நிச்சயம்வரைக்கும் வந்த இந்தத் திருமணம்...., நம்ம அப்பாவோட சேர்த்து, சொத்தும் போய்டுச்சுன்னு தெரிஞ்ச உடனே காணாமல் போய்டுச்சு.

“இப்பவும் அவங்க நினைப்பிலோ, ஆசையிலோ எந்தவிதமான மாற்றமும் வந்திருக்காவிட்டால் கஷ்டம் நமக்குதான். அதனால்....”, பொறுப்பான மகளாக தாயைத் தடுத்தாள்.

“உன் மனசில் கபில் இல்லன்னு ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லிடு. அவங்களை இப்பவே நான் எழுந்து போக சொல்லிடுறேன்”, தாய் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல, அவள் தலை தானாகக் கவிழ்ந்தது.

“உன்னால் சொல்ல முடியாது இல்ல...., பிறகு ஏன் இந்தப் பிடிவாதம், நீ எதுவும் பேசவேண்டாம் எல்லாம் நான் பாத்துக்கறேன்”, அவளைத் தடுத்துவிட்டுச் சென்றார்.

செல்லும் அவரையே வெறித்தவள், நீண்ட பெருமூச்சை வெளியேற்றிவிட்டு அவர் பின்னால் சென்றாள். அங்கே இவர்கள் பேச இடம் கொடுக்கவே இல்லை கபிலின் தாய்.

அவர் கேட்ட கேள்வி ஒன்றே ஒன்றுதான், அந்த கேள்வியிலேயே திகைத்தனர் இருவரும். நம்ப முடியாமல் அவரைப் பார்க்க, “என்ன அப்படிப் பாக்குறீங்க...? நம்ப முடியலை இல்ல. என்னடா பணம்தான் பெருசுன்னு போனவ..., எப்படி இப்போ வந்து கல்யாணத்தை எப்போ

வச்சுக்கலாம்னு கேக்குறான்னு ஆச்சரியமா இருக்கு இல்ல.

“என்னை மாற்றியது என் மகன்தான். அவனோட மௌனமும், அவனோட உறுதியான நேசமும்தான் என்னை என் முடிவில் இருந்து மாற வைத்தது. நானும் அவனுக்கு எவ்வளவோ பெண் பார்த்தேன்.

“ஆனால் அவன் சொன்னது ஒன்றே ஒன்றுதான். என்னைக்கா இருந்தாலும் என் மனைவி வீணாதான். அப்படியே அவளுக்கு வேற இடத்தில் திருமணம் முடிந்துவிட்டால்...., அவளோட நினைப்பு என் மனசில் வராது...., அப்படின்னு உறுதியா தெரிந்த பிறகு வேற கல்யாணம் செஞ்சுக்கறேன்னு..., பிடிவாதமா இருந்துட்டான்.

“அவன் சண்டை போட்டிருந்தாலோ, என்னை எதிர்த்திருந்தாலோ..., உன்னைத்தான் பதிவுத் திருமணம் செய்துகொள்வேன் என்று சொல்லியிருந்தாலோ...., நான் முழு மூச்சாக எதிர்த்திருப்பேன். ஆனால் என் மகனின் இந்த அணுகுமுறையே என்னை மாத்திடுச்சு.

“இந்த மூன்று வருடத்தில்..., நீயும் வேறு திருமணம் செய்துகொள்ளவில்லை. அதிலிருந்து உன்னோட மனசும் எனக்குப் புரிஞ்சுது. இப்படி நேசிக்கும் உங்களைப் பிரித்துவைத்து, உங்களது சந்தோசத்தைக் குழிதோண்டி புதைத்துவிட்டு நான் இருந்து என்ன செய்ய?

“அதனால்தான்..., இப்போவே பேசி திருமணத்தை முடிவு செய்துவிடலாம் என வந்தேன். உங்களுக்கு கண்டிப்பா என்மேல் கோபம் இருக்கும். நிச்சயம் வரைக்கும் வந்த திருமணத்தை, பணத்துக்காக தடுத்து நிறுத்திவிட்டேனே என்று.

“பெரியமனசு பண்ணி என்னை மன்னிச்சுடுங்க...., உங்களுக்கு இந்த கல்யாணத்தில் சம்மதம் தானே. உங்க பொண்ணுக்கு நீங்க செய்வதை செய்ங்க..., ஆனா

வீணாதான் என்வீட்டு மருமகள்ன்னு நான் முடிவே பண்ணிட்டேன்", தன் நிலையை விளக்கி, மன்னிப்பையும் வேண்டி..., தன் முடிவையும் சொன்னார்.

வீணா எதுவும் சொல்லும் முன்னர், வீணாவின் தாயே தன் சம்மதத்தைச் சொல்லிவிட்டார். அவர் இடத்தில் யாராக இருந்தாலும் அப்படித்தான் நடந்திருப்பார்கள் என்று சொல்லி, ஏற்கனவே அவர்கள் வீட்டில், வானதிதேவியின் திருமணம் நடைபெற இருப்பதால்,

அவர்கள் திருமணம் முடிந்த பிறகு, இவர்களது திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் எனச் சொன்னார். பெரியவர்களின் பேச்சில் இடையிடாமல் சிறியவர்கள் இருந்தாலும், கபிலின் பார்வையோ, நொடிகளைக் கூட வீணாக்காமல், இமைக்க மறந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

வானதியின் சொந்தங்கள் அனைவரும் கிராமத்தில் இருந்து வந்திருந்ததால், சென்னையை சுற்றிப் பார்க்க வெளியே சென்றிருந்தார்கள். எனவே இந்தப் பேச்சு நிகழும் வேளையில் அவர்கள் அங்கே இருக்கவில்லை.

சிறிதுநேரம் தனிமை கிடைத்த பொழுது, "பாத்தியா நான் கொடுத்த வாக்கை காப்பாத்திட்டேன். நீதான் என்மேல் நம்பிக்கையே இல்லாமல், என்னைவிட்டு விலகிப் போன....", குற்றம்சாட்டும் பாவனையில் அவளை உறுத்து விழித்தவன், அவளை நெருங்கி நின்றான்.

அவனையே அமைதியாகப் பார்த்தவள், "ஆமா..., நம்பிக்கையில்லாமல்தான் மூணுவருஷம் காத்திருந்தேனா, வேற என்ன சொன்னீங்க..., விலகிப் போனதா....", பார்வையை அவனிடமிருந்து திருப்பியவள், "நான் விலகிச் செல்லாமல் இருந்திருந்தால்..., நீங்க தள்ளி இருந்திருப்பீங்களா...? உங்களால் அது முடிந்திருக்குமா...?", அவள் சின்னக் குரலில் வினவ, அவளது கேள்வியில் இருந்த உண்மையில் திகைத்தான்.

அதைவிட அதை அவள் கூறிய விதம்...., அப்படியென்றால் தன்னை அவள் மனதுக்குள் வைத்துக் கொண்டுதான் தன்னைத் தவிர்த்திருக்கிறாள் என்பதை அறிந்தபொழுது, அவனுக்கு காதல் பெருகியது.

தன் காதலை கட்டுப்படுத்த முடியாமல், அவளை இறுக அணைத்துக் கொண்டான். மேலும் ஒரு நொடிகூட தாமதிக்காமல், அவள் இதழோடு இதழ் பதித்தான். அவனது அதிரடியை எதிர்பாராமல் திகைத்து, தடுமாறினாள்.

அவனைவிட்டு விலக முயல, அவனது பிடி உடும்பாக இறுகியது. இத்தனைவருட காத்திருப்பு, அவள் தன்னை விரும்புகிறாளா இல்லையா என்று தெரியாத தவிப்பு, அவளது விலகலுக்கு கிடைத்த விடை, என கலவையான அவனது உணர்வுகள், அவனை கிளர்ந்தெழச் செய்திருந்தது.

தனது சந்தோசம் முழுவதையும், அவள் இதழ்களில் வெளிப்படுத்தினான். மூச்சுக்காற்றுக்கு அவள் ஏங்க, தன் மூச்சுக்காற்றை அவளுக்கு பரிசளித்து, தனது முத்திரையைத் தொடர்ந்தான்.

இறுதியாக அவனது தாயின் அழைப்பே..., அவனது முத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. அவனைவிட்டு விலகிய வீணாவின் முகமோ, அந்திவானமாக சிவந்திருந்தது. அவன் முகம் காண முடியாமல் தலை கவிழ்ந்து விலகி நின்றாள்.

“வரரேன்....”, அவள் கரங்களை அழுத்தி, அவளிடமிருந்து விடை பெற்றான்.

அதன் பிறகு நாட்கள் நொடியென கடக்க, வானதிதேவி – யுவா (சரவணன்) திருமண நாளும் வந்தது. ஆனால் அதற்கு முன்பாகவே யுவா தாயிடம் தெளிவாகப் பேசிவிட்டான். தன்னால் இந்த சிட்டி வாழ்க்கையை

அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்ள முடியாது எனச் சொல்லிவிட்டான்.

திருமணத்திற்கு இரண்டு நாட்கள் இருக்கும் வேளையில், பெரியவர்கள் அனைவரையும் அழைத்தவன், “இப்போ உங்களை எல்லாம் எதுக்கு கூப்ட்டேன்னு குழப்பமா இருக்கலாம். இவ்வளவு நாள் உங்க யாரோட பேச்சையுமே நான் மறுத்தது கிடையாது.

“ஆனா இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நான் மறுக்கும் நிலையில்தான் இருக்கிறேன். எனக்கு இப்போ ரெண்டு அம்மா, ரெண்டு அப்பா என்பதில் நான் தெளிவா இருக்கேன். ஒருவனின் ஆன்மா இல்லாமல் அவன் எப்படி இருக்க முடியாதோ, அதே மாதிரி, அந்த ஆன்மா தங்குவதற்கு ஒரு இருப்பிடம் இல்லாமலும் இருக்க முடியாது.

“இப்போ நான் சொல்ல வந்தது அதைப் பற்றி இல்லை. எனக்கு இந்த வாழ்க்கை சரிவராது. என்னமோ இங்கே சும்மா உக்காந்து சாப்பிடுற மாதிரி நினைப்பா இருக்கு. உழைக்காமல் சாப்பிடுவது உடம்பில் ஓட்ட மாட்டேன்னு சொல்லுது.

“இது எல்லாத்தையும் விட, என் தேவிக்காக நான் கட்டிய வீடு நம்ம கிராமத்தில்தான் இருக்கு. என்னோட வாழ்க்கையை நான் அங்கே, எங்களோட வீட்டில்தான் வாழணும்னு நினைக்கிறேன். அதுக்காக, கங்காம்மாவை விட்டுட்டு போறேன்னு சொல்ல வரலை.

“அப்பப்போ வந்து அவங்களையும் பாத்துப்பேன். என்னோட வாழ்க்கை முறை அங்கேதான் சரிவரும். தயவுசெய்து என்னை யாரும் கட்டாயப் படுத்தாதீங்க”, நீளமாக சொல்லி முடித்தான்.

அவன் பேசியபிறகு, யாரும் மறுத்துப் பேசவில்லை. அவன் நிலையை அவன் தெளிவாக விளக்கியபிறகு,

அவனைக் கட்டாயப்படுத்துவதும் சரியாக இருக்காது என்றே எண்ணினார்கள்.

திருமண நாளும் வந்துவிடவே, யுவா சந்தோஷத்தின் உச்சியில் இருந்தான். தேவிக்கும் மகிழ்ச்சிதான், ஆனால் அதை வெளிக்காட்ட தயக்கம் தடுத்தது.

யுவா கார்மெண்ட்ஸ் ஒரு பெரிய நிலையில் இருந்ததால், யுவா, வானதியின் திருமண வரவேற்பை பெரிய அளவில் எடுக்க ஈஸ்வர் விரும்பினார். அவரது ஒரே பிள்ளையின் திருமணம்...., கண்குளிரக் காணவேண்டும்..., அதே நேரம், வெளி வட்டத்தில் எந்தவிதமான விமர்சனத்தையும் சந்திக்க அவர் தயாராக இல்லை.

திருமணத்திற்கு நாள் குறிக்கும் முன்னர், ஜோசியரிடம் சென்று, யுவா மற்றும் தேவியின் ஜாதகப் பொருத்தம் பார்க்க, ஜோசியரோ..., இறந்தவனின் ஜாதகத்தைக் கொண்டுவந்திருக்கின்றீர்களே..., என்னை சோதிக்கத்தான் இப்படிச் செய்கிறீர்களா..., என்று கோபப் படவே,

ஈஸ்வரும், கங்காவும் தவித்துப் போனார்கள். அதைவிட..., தங்கள் மகனது ஆயுள் முடிந்த ஒன்று என்பதை ஏற்கவும் முயன்றார்கள். அதன் பிறகு..., சரவணன், தேவியின் ஜாதகப் பொருத்தம் பார்க்க..., அமோகமாகப் பொருந்தியிருப்பதாகச் சொன்னார்.

அத்தோடு அவனது ஜாதகத்தின் தோஷம் நிவர்த்தியாக, சில பரிகார பூஜைகள் செய்யச் சொன்னார். அவை அனைத்தையும் தட்டாமல் செய்தார்கள் அவர்கள்.

அதன் பிறகு ஈஸ்வர், யுவாவின் திருமணத்தை வெகு விமரிசையாக நடத்தினார். ஈஸ்வர், கங்காவின் மனம் உணர்ந்து, அந்த உரிமையை அவர்கள் விட்டுக் கொடுத்தார்கள். அவர்களது இந்த செய்கையால்...., ஈஸ்வர் மிகுந்த உணர்ச்சிவசப் பட்டார்.

சரவணனின் பெற்றோரின் கைபிடித்து கண் கலங்கிவிட்டார். அவருக்கும் தெரியும்..., பெற்ற பிள்ளையை விட்டுக்கொடுக்கும் துயரம் எப்படி இருக்குமென்று. அதை அந்த கிராமத்து மனிதர்கள் இயல்பாய் ஏற்றுக்கொண்டதை, திகைப்பாய் உணர்ந்தார்.

அதன் பிறகே ஈஸ்வர் கொஞ்சம் மனம் மாறி..., சரவணனின் சொந்தங்களை ஏற்கத் துவங்கினார். சுமுகமாக உரையாடாவிட்டாலும், அவர்களிடம் முகம் திருப்பவில்லை. சரவணனின் ஊரில் இருந்து, தேவியின் திருமணத்தைக் காண, ஊரே திரண்டு வந்தது. அவர்களுக்கு எல்லாம்...., யுவா அவளை விரும்பிக் கேட்டதால், திருமணம செய்து கொடுக்கிறோம் என்றே சொல்லியிருந்தார்கள்.

அவர்களுக்கு தேவி அந்த திருமணத்திற்கு சம்மதித்தது மிகுந்த ஆச்சரியமே. எனவேதான்...., அவள் திருமணத்தைக் காண திரண்டு வந்தார்கள்.

வந்தவர்களோ...., தேவி அனைத்து விஷயத்திலும் கொடுத்து வைத்தவள் என்றே பாராட்டினார்கள். கிராமத்தில் சரவணன் அவள்மேல் உயிரையே வைத்திருந்தான் என்றால்...., பட்டணத்து யுவாவும், அவளை விரும்பி ஏற்றுக் கொண்டதை சிறு பொறாமையாய் உணர்ந்தார்கள்.

அதிலும் யுவா (சரவணன்) அவர்கள் அனைவரையும் சரியாக அடையாளம் கண்டு முறை சொல்லி அழைத்து பேசவே, அவர்களுக்கு ஆச்சரியம் பிடிபடவில்லை.

அரண்மனை போன்ற வீடு, கப்பல் போன்று கார்..., இவ்வளவு வசதியான வீட்டிலா அவள் வாழப் போகிறாள் என மூக்கின்மேல் விரல் வைத்தார்கள்.

சரவணனின் தாய் தந்தை முதல், தேவியின் உறவினர்கள் அனைவருமே, வானதிதேவியின் உறவினராகவே

நடந்துகொண்டார்களே தவிர, மறந்தும் யுவாவை உறவு கொண்டாடவில்லை.

அந்த உரிமை முழுவதையும் கங்கா, ஈஸ்வருக்கே கொடுத்தார்கள். இன்ட விஷயத்திலும் அவர்களது பெருந்தன்மையைக் கண்டு மலைத்தார்கள் கங்கா, ஈஸ்வர்.

திருமணம் முடிந்து, மாலையில் வரவேற்பிற்கு, யுவாவின் நண்பர்கள், உறவினர்கள் அனேகம்பேர் வர, சற்று தடுமாறிப் போனான் யுவா.

அவனது தடுமாற்றம் உணர்ந்து அவனுக்கு உதவிக்கு வந்தாள் அஷ்மிதா. அவனுடனே இருந்து, வருபவர்களைக் கண்டு, அவர்களோடு யுவா எப்படிப் பேசுவான், அவர்கள், அவனுக்கு என்ன முறை என்பதுவரை அனைத்தையும் சின்னக் குரலில் எடுத்துக் கூறி அவனுக்கு உதவி செய்தாள்.

பொதுவாக யுவாவின் குணம் அவனது வட்டத்தினருக்கு தெரியும் என்பதால், தேவியோடான அவனது திருமணம் அவ்வளவு பெரிய விமர்சனம் எதையும் சந்திக்கவில்லை.

மாறாக..., “அவனைப் பத்தி நமக்கு தெரியாதாப்பா....”, “இந்த மட்டுக்கு அவன் ஒரு பொண்ணை கல்யாணம் செஞ்சுக்கிறதே பெரிய விஷயம்...”, இப்படியாகத்தான் அவர்களது விமர்சனம் அமைந்தது.

அதிலும் அஷ்மிதாவிற்கு மிகுந்த வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் அந்த வருத்தத்தையும் மறைத்துக்கொண்டு, தன் மனதுக்கு இனியவனுக்காக தன்னால் முடிந்த உதவியைச் செய்தாள்.

கிளம்பிச் செல்லும் வேளையில், அவனைத் திரும்பிப்பார் என கட்டாயப்படுத்திய மனதை ஒருநிலைப் படுத்துவது மிகுந்த சிரமமாகவே இருந்தது.

ஆனாலும் இதை வளரவிடக் கூடாது என்பதில் அவள் உறுதியாக இருக்கவே, அங்கிருந்து அவள், கங்காவிடமும், ஈஸ்வரிடமும் சொல்லிவிட்டு, வானதியிடமும் தனிப்பட்ட முறையில் சொல்லிவிட்டே அங்கிருந்து அகன்றாள்.

அன்று இரவே, வலுக்கட்டாயமாக தன் கிராமத்துக்குக் கிளம்பிவிட்டான் யுவா.

## பகுதி – 28.

திருமணம் முடித்து, வரவேற்பும் முடிய இரவு பன்னிரண்டைக் கடந்திருந்தது. அந்த நேரத்தில் பெரியவர்கள் எவ்வளவு சொல்லியும், தங்கள் வீட்டில் தங்கிக் கொள்ள அவன் தயாராக இருக்கவில்லை.

திருமணம் முடித்த புதுமணத் தம்பதிகள், இரவுப் பயணம் மேற்கொள்ளக் கூடாது, காத்துக் கருப்பு, கங்காவின் கண்ணீர் என எதுவும் அவனை அப்பொழுது அசைக்கவில்லை.

இறுதியாக கங்காவின் கண்ணீர் மட்டுமே அவனை கட்டுப்படுத்தியது. அரைமனதாக தங்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். முதலிரவிற்கான எந்தவித ஆர்வத்தையும் அவன் காட்டவில்லை.

சம்ப்ரதாயமாக அனைத்தும் நிறைவேற, பெரியவர்கள் ஏற்பாடு செய்தார்கள். தேவிக்கு சற்று உதறலாகத்தான் இருந்தது. இந்த பத்து நாட்களில், அவனோடான தனிமையான தருணங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

அப்படியிருக்க இந்த இரவு ஒருவித பயத்தையும், தயக்கத்தையும் அளித்தது. எவ்வளவு முயன்றாலும், யுவாவின் உருவம், அவளை அலைக்கழித்தது உண்மை.

அவனைக் கண்களால் காணும்பொழுது, மனதில் பதியும் அவனது உருவம்...., சரவணனின் உருவத்தோடு ஒப்பிட்டு பார்த்து, மனக் கலக்கத்தைக் கொடுத்தது.

ஆனால் யுவாவிற்கு எந்த தயக்கமும் இருக்கவில்லை. எப்பொழுது அவளைத் தன்னவள் ஆக்கிக் கொள்வோம் என்பதில் மிகுந்த ஆர்வமாக இருந்தான். தனது இருபத்தைந்து வருட காத்திருப்பு, இடையில் ஏற்பட்ட தடை, இவையனைத்தையும் கடந்து, அவளை அடைந்துவிட்டோம் என்ற நினைப்பே..., அவனை வீறுகொண்டு எழச் செய்தது.

எது எப்படி இருந்தாலும், தேவியோடான தனது வாழ்வு தங்கள் கிராமத்து வீட்டில் மலரவேண்டுமென்று அவன் விரும்பினான். எனவே, அந்த இரவிற்கான நினைப்பை ஒத்தி வைக்க முயன்றான். அனைத்தும் தேவி அவன் அறைக்கு வரும்வரை மட்டுமே.

தேவி தயங்கித் தயங்கி அவன் அறைக்குள் நுழைய, அவள் தயக்கம் உணர்ந்து ஓடிச் சென்று அவளை எதிர்கொண்டான். அவளுக்கு இந்த மாளிகையே ஒருவித பயத்தைக் கொடுத்திருந்தது. ஒற்றை அறையையே வீடாகக் கொண்டு வளர்ந்த அவளுக்கு, பங்களா மாடல் வீடு, மாளிகையாகத் தெரிந்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

அப்படியிருக்க, அன்றே முதலிரவு என்னும்போது..., சிறு நடுக்கம் ஓடியது மனதுக்குள். அதிலும் அவனது ஆர்வத்தைப் பார்த்த பொழுது, சிறு குளிர் பிறந்தது. எப்படி அவனைத் தவிர்க்க என்று அவள் தவிக்கையில்,

அவளது தவிப்பை உணர்ந்தவன்போல், “எனக்கு நீ வேணும்தான்..., ஆனா இங்கே இல்லை...”, ஒற்றை வாக்கியத்தில் அவளது தவிப்பைத் துடைத்தெறிந்தான்.

அவனது பேச்சில் கொஞ்சம் இயல்புக்குத் திரும்பியவள், அவன் கைபிடித்து அழைத்துச் சென்ற பால்க்கனிக்கு

அவனோடு சென்றாள். அன்று முழுநிலவாகையால், அதை சுட்டிக் காட்டியவன், "இன்னைக்கு கிராமத்தில் நம்ம வீட்டில் நாம இருந்திருந்தால் எவ்வளவு நல்லா இருந்திருக்கும் இல்ல....,

"இங்கே இருக்கும் இந்த ஆடம்பரம், பட்டு மெத்தை, செயற்கை குளிர், விடிய விடிய எரியும் தெருவிளக்கு வெளிச்சம், அறைக்குள் இருக்கும் போலியான இந்த மணம்..., இப்படி எதுவுமே அங்கே இருக்காது.

"ஆனா...., நமக்குன்னு இருக்கும் அந்த ஒற்றை அறை, சுத்தி இருக்கும் தோட்டத்தில் இருந்து வரும் சில்வண்டின் சத்தம், மின்மினிப் பூச்சியின் சின்ன வெளிச்சம்..., அந்த மண்வாசனை..., அந்த ஒற்றைக் கட்டில்,

"அதில் ஏற்படும் நம் நெருக்கம்...., கண்டிப்பா அது இங்கே கிடைக்காது. என்னதான் இருந்தாலும்..., எனக்கு இங்கே இருப்பது, என்னமோ தங்கக் கூண்டுக்குள் சிறை இருக்க மாதிரிதான் இருக்கு. எப்போடா நம்ம வீட்டுக்குப் போவோம்னு ஏக்கமா இருக்கு...

"எனக்கு ஞாபகம் வந்த பிறகு கூட, ஒத்தையில் அந்த கிராமத்துக்கு போக எனக்கு ரொம்ப சங்கடமா இருந்தது. அதனால்தான் போகவே இல்லை. எனக்கு உன்னோடதான் மறுபடியும் அங்கே போகணும்னு ஆசை அதான் போகலை....", தன் மனதுக்குள் இருந்த ஏக்கங்களைச் சொல்லிக்கொண்டே இருந்தான்.

அதைக் கேட்டவளின் உள்ளமோ துடித்தது. கொஞ்சம் கொஞ்சமாக அவன் பேச்சில் தன்னை இழந்துகொண்டிருந்தாள் அவள். அவளது தயக்கங்கள் தளர்ந்துகொண்டிருந்தன.

தன்னை மறந்து பேசிக்கொண்டிருந்த அவன் அருகில் சற்று நெருங்கி நின்றாள். அவளது அருகாமையை உணர்ந்து, அவளை தோளோடு அணைத்தவன், "நாம

படுத்துக்கலாமா.., ரொம்ப நேரமாச்சு. நாளைக்கே நம்ம குலதெய்வ கோவிலுக்கு வேற போகணும்.

“கீழே போர்வையை விரிக்கட்டுமா..., இல்ல கட்டில்லையே படுத்துக்கலாமா....?”, அவளிடம் கேட்க, பேச்சற்றுபோய் அவனையே வெறித்தாள் வானதிதேவி.

“உங்களால மட்டும் எப்படி மாமா முடியுது? இந்த வசதியெல்லாம் உங்களைப் பாதிக்கவே இல்லையா...?”, அவளால் ஆச்சரியத்தை அடக்க முடியாமல் கேட்டாள்.

“இந்த மனசுக்கு நீ இருக்கும் இடம் எல்லாம் ரொம்ப பிடிக்கும். உன்னால் இங்கே இருக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். அதைவிட..., இதெல்லாம் நமக்கு ஒத்துவராது...”, சொன்னவனின் பார்வையில் தெரிந்த ஆர்வம்..., அவளை மௌனமாக்கியது.

படுத்துவிட்ட பிறகு, சற்று நேரத்தில்..., அவள் இடையோடு அணைத்தவாறு, அவள் முதுகின் பின்னால் ஒன்றிக் கொண்டான். தவிப்பாக பார்த்த அவளிடம்...., “தள்ளியிருந்தால் என்னால் தூங்க முடியாது....”, சூடான மூச்சுக்காற்று அவள் பின்னங்கழுத்தில் பதிய, அவன் சொல்ல, அவன் அருகாமையைத் தவிர்க்காமல், அமைதியாக உறங்க முயன்றாள்.

மறுநாள் காலையில் அவனது பிடிவாதத்துக்கு வணங்கி, ஒரு டிரைவரை அமர்த்திக் கொடுத்துவிட்டு, அவர்களை அனுப்பினார்கள். ஒரு பெரிய பஸ் பின்தொடர, அவர்களது கார் கிராமம் நோக்கி பயணித்தது.

முதலில் குலதெய்வ கோவிலுக்குச் சென்றவர்கள், சடங்குகள், பரிகாரங்கள் அனைத்தும் முடிந்ததும், அங்கே ஏற்பாடு செய்திருந்த சிறிய விருந்திலும் கலந்துகொண்டார்கள். யுவாவைக் காண்பதற்காகவே கூட்டம் கூடியது.

சீமத்தொரையாட்டம் மாப்பிள்ளை..., “என்ன ஒரு கலரு...”, சுண்டுனா ரத்தம் வரும் போலையே...”, “தேவி எப்பவுமே

சதிர்ஷ்டக்காரிதான்..”, “அவளுக்கு வந்த வாழ்வைப் பாரேன்…”, அதுக்குள்ள சரவணனை மறந்துட்டாளா….”,

“எப்படியோ அவ நல்லா இருந்தா சரிதான்….”, அவ குணத்துக்கு எல்லாம் நல்லபடியா நடக்கும்….”, எங்கே அவன் நினைப்பிலையே இருந்துடுவாளோன்னு நினச்சேன்….”, இப்படியாக விமர்சனங்கள் எழுந்து அடங்கியவண்ணம் இருந்தது.

அதிலும் யுவா அவர்களை அடையாளம் கண்டு பேசவே…, அனைவரும் வியப்பின் உச்சியில் நின்றார்கள். அவன் தங்களோடு பாரபட்ச்சமின்றி உரையாடுவதைக் கண்டு பெருமைப் பட்டார்கள். இப்படியாக நேரம் கடக்க, மாலை நெருங்கும் வேளையே…, ஊரடங்கத் துவங்கியது.

புதுமணமக்களை சரவணனின் வீட்டிற்கே அனுப்பி வைத்தார்கள். பெரியவர்கள் அனைவரின் காலில் விழுந்து ஆசி வாங்க…, அனைவரின் கண்களும் கலங்கியது.

சரவணனின் புது வீட்டிற்குச் செல்லும் பாதையில் நடக்கையில், தேவியின் கால்கள் பின்னிக் கொண்டன. சரவணனோ மிகுந்த ஆர்வத்தோடு இருந்தான். அவன் சுற்றிலும் வேலிபோட்டு பாதுகாத்த இடங்கள் அப்படியே இருக்கக் கண்டான்.

அவனது வீட்டைச் சுற்றிலும்…, இப்பொழுதும் வாழைத் தோட்டம் இருப்பதை ஆசையாகப் பார்த்தான். “இப்போ யாரு தோட்டத்தைப் பாத்துக்கறாங்க…”, காலையிலிருந்து அவர்களுக்கிடையில் இருந்த மௌனத்தை அவன் உடைக்க,

கொஞ்சம் தடுமாறியவள்…, “செம்புவும்…, மாமாவும் பாத்துக்கறாங்க…”, அவனுக்குத் தெரிந்த பதில்தான்…, ஆனாலும் அவளோடு உரையாட ஆர்வம் கொண்டான் அவன்.

“ஓ..., நானும் தோட்ட வேலையெல்லாம் செஞ்சு ரொம்ப நாள் ஆயிடுச்சு. உடம்பு வணங்குமான்னு தெரியலை...”, தன்போக்கில் சொன்னான்.

சொன்ன அவனைத் திரும்பிப் பார்த்தாள். சரவணனின் உருவத்துக்கும், யுவாவின் உருவத்துக்கும் இருந்த வேற்றுமையைக் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

சரவணன் காடு, மேட்டில், உழைக்கும் வண்ணம் கட்டுமஸ்த்தான உடம்புடன், முறுக்கேறிய கை கால்களோடு...., சற்று வெயிலுக்கு கருத்துபோய் இருப்பான்.

ஆனால் யுவாவோ..., பால், வெண்ணை தின்று வளர்ந்தவன்போல், வெண்மையாக, அறிவுக் களையோடு, மேல்தட்டு வர்க்கத்தோடு இணைசேரும் வண்ணம் இருந்தான்.

அவள் பார்ப்பதை உணர்ந்தவன், “என்னை வச்சகண்ணு வாங்காமல் அப்படி பாக்குற...., என்ன உனக்கு புடிச்ச மாதிரி இருக்கனா...?”, இயல்பாக அவன் கண்ணைச் சிமிட்டி கேட்க, வேகமாகத் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

அவள் பார்வையை விலக்கிய வேகத்தில்தான், தான் யுவாவின் உருவில் இருக்கிறோம் என்ற நினைப்பே அவனுக்கு வந்தது. அவனால் மறக்கப்படும் ஒரு விஷயம், அவள் விழியசைவில் மட்டுமே அவனுக்கு நினைவுக்கு வந்தது.

“நான் மறந்தே போயிட்டேன்...., என்னதான் மனசு மாறாமல் இருந்தாலும்..., இந்த உருவம் மாறியிருப்பது பெரிய விஷயம்தான் இல்ல..., என்னவோ எனக்குதான் அது மறந்தே போய்டுது. எங்கே..., உன் பக்கத்தில் இருந்தால்..., நம்மைத்தவிர எனக்கு வேறு எதுவுமே

ஞாபகம் இருக்க மாட்டேங்குது...”, கொஞ்சம் வேதனை கலந்து சொன்னான்.

அவன் வேதனை புரிய, தவித்துப் போனாள். ஏனோ மனதைப் பிசையும் உணர்வு. அவனது பேச்சா, அவர்களது இடம் வந்து சேர்ந்த உணர்வா..., ஏதோ ஒன்று அவளை உருக்கியது.

அவனுக்கு பதில் சொல்ல உள்ளம் விளைந்தாலும், முடியாமல் மௌனமாக அவனுடன் நடந்தாள். அவள் மௌனத்தை உணர்ந்து அவனும் எதுவும் சொல்லாமல், அமைதியும் தவிப்பும் கலந்த பார்வையை அவளை நோக்கி வீசினான்.

அவன் பார்வையை உணர்த்து, அவனைப் பார்ப்பதை இன்னும் தவிர்த்தாள். அவளது விலகலைக் கண்டுகொள்ளாமல், தன்போக்கில் பேசிக் கொண்டே வந்தான்.

வீட்டை நெருங்கியவன்..., அதன் திண்ணையில் அமர்ந்து கொண்டான். அமர்ந்தவனின் பார்வையோ அவளைக் கெஞ்சியது. அவன் எண்ணம் உணர்ந்து, மெதுவாக அவன் அருகில் அமர்ந்தாள்.

அவள் அருகில் அமரவே...., “அப்படியே உன் மடியில் தலை வச்சு படுத்துக்கணும்னு ரொம்ப ஆசையா இருக்கு தேவி. ஆனா...., இப்போ அதை செய்ய முடியாமல் ரொம்ப தடுமாற்றமா இருக்கு. அந்த கடவுளுக்கு நான் என்ன துரோகம் செய்தேன்...?

“என் வாழ்நாளிலேயே கடவுளிடம் கேட்டது ஒரே ஒரு வரம்தான். அது..., உன்னோட நான் சந்தோசமா நூறு வருஷம் வாழணும்னு. அது பொறுக்கலையா அந்த ஆண்டவனுக்கு....”, எவ்வளவு முயன்றும் அவன் குரலில் வழிந்த வலியை மறைக்க முடியவில்லை அவனால்.

நொடியில் அவள் முகம் வெளிறிவிட, அதைப் பார்த்தவன் தன்னை மீட்டுக் கொண்டான். அவளுக்கு அவன் மனம்

புரியாமல் இல்லை. ஆனாலும் ஏதோ ஒரு தயக்கம் அவளை ஆட்டிப் படைத்தது.

கண்ணுக்குப் புலப்படும் அவன் உருவத்தை மறக்கவே அவளும் முயல்கிறாள். ஆனால் அது முடியாமல்தான் தடுமாறிப் போகிறாள். எப்படி இருந்தாலும்..., அவனை விட்டு விலக முடியாமல் தான், அவனைத் திருமணம் செய்துகொண்டாள்.

திருமணத்திற்குரிய கடமைகள் என வரும்பொழுது..., மிகப்பெரிய கேள்வி அவள்முன் எழுந்தது. அவனுடன் கலக்கத்தான் அவளுக்கும் ஆசை. ஒவ்வொரு நிமிடமும் அந்தத் தருணம் வராத என்று ஒரு காலத்தில் ஏங்கித் தவித்தவள்தான்.

அந்த ஏக்கம் இப்பொழுதும் ஒரு மூலையில் கொழுந்துவிட்டு எரிகிறதுதான். ஆனால் அதை கிளர்ந்தெழச் செய்யும் வல்லமை அவன் கைகளில் மட்டுமே இருக்கிறது. அதை விட்டு..., தானாக அவள் கனிவாள் என்று அவன் எதிர்பார்ப்பது நிறைவேறுமா என்ன...

திண்ணையில் இருந்து ஒரு வழியாக எழுந்தவன், வீட்டிற்குள் சென்று..., ஒவ்வொரு இடமாக அவளுக்கு விளக்குகையில்..., அவனது ஞாபகங்களை அவளோடு பகிர்ந்து கொள்கையில்..., சிலிர்த்துப் போனாள்.

இறுதியாக அந்த வீட்டில்..., அவர்களுக்குள் நிகழ்ந்த முத்த சம்பவத்தை நினைவுகூர்கையில்...., அவன் குரலில் வழிந்த ஏக்கம், அவன் பார்வையில் உணர்ந்த வேகம்...., அவளைத் தடுமாறச் செய்தது.

இரவு உணவையும் அவர்கள் எடுத்துக்கொண்டே வந்துவிட்டதால்..., ஒருவருக்கொருவர் பரிமாறியவாறு உண்டு முடித்தார்கள். அதன் பிறகு திண்ணையில் காலாற அமர, தழுவிச் சென்ற தென்றலின் இதம், அந்த நேரத்து வெம்மையைத் தணிக்கவில்லை.

யுவாவின் உணர்வுகள் ஊசிமுனையாய் அவனைத் தாக்க, எந்தநேரம் தன் கட்டுப்பாட்டை இழப்போமோ என்று தடுமாறிப் போனான். தாள முடியாமல்..., அருகில் அமர்ந்திருந்த அவள் கைவிரலை மெதுவாக எடுத்து வருட, அவன் செய்கையில் தேகம் சிலிர்த்தது அவளுக்கு.

இருவருக்குமே என்ன பேசுவதென்று தெரியவில்லை. ஆனால் தேவி அந்த நேரம் முழுதாக நெகிழ்ந்திருந்தாள் என்பது மட்டும் உண்மை.

அவளோடு தனித்திருப்பதை அவன் விரும்பும் விதம், அந்த வீட்டில் அவள் தன்னோடு தனித்திருப்பதில் அவன் அடையும் சந்தோசம். அவள் பரிமாற, அவன் சோறுண்ட வேளையில் அவன் உணர்ந்த இதம்....,

இப்படியாக பேசிக் கொண்டிருந்தவனுக்கு, அவளது பதில் மௌனமாகவே இருக்க...., இறுதியாக..., “இந்த உயிரே உனக்காகத்தான் இருக்கு தேவி...., உனக்கு அது புரியவே இல்லையா...”, என்று அவன் கேட்டுவிட்டு உணவின் முன்னால் இருந்து அவன் எழுந்து சென்ற அந்த நொடி..., முழுதாக அவனுள் கரைந்தாள்.

அவனுக்காக எதையாவது செய்தே ஆகவேண்டும் என்று துடிதுடித்தாள்.

## பகுதி – 29.

தேவியின் மனநிலை புரிந்து, அவளைவிட்டு விலகியிருக்க வேண்டுமென்று அவன் எண்ணினாலும், அவளது அருகாமையும், அவர்களது தனிமையும், அவனை தடுமாற வைத்துக் கொண்டிருந்தன.

நேரம் செல்லச் செல்ல..., அவள் தனக்கு வேண்டும் என்ற மோகம் அதிகரித்தது. தன் மோகத்தை அவளிடம் வெளிப்படுத்த முடியாமல், அவளது தயக்கம் அவனைத் தடுத்தது.

எவ்வளவுநேரம் அவள் கைகளைக் கோர்த்தவாறே அமர்ந்திருந்தானோ தெரியாது. நிலவு உச்சிக்குச் செல்லும் வேளையில்...., “ரொம்ப நேரமாச்சு..., வா தூங்கப் போகலாம்...”, அவள் கையை விடுவிக்காமல் எழுப்பினான்.

வீட்டிற்குள் சென்றவன்..., அவளை கட்டிலில் விட்டுவிட்டு, விளக்கை அணைத்துவிட்டு, விடிவிளக்கை எரியவிட்டான். அவன் கட்டிலை நெருங்கும்வரை அசையாமலே அமர்ந்திருந்தாள்.

அவள் அருகில் சென்றவன் அவளை ஆழமாக ஒரு பார்வை பார்க்க, அவளோ அவனை மறந்தும் நிமிர்ந்து பார்க்கவில்லை. என்னமோ அவர்களுக்குள், மௌனமே அதிகம் பேசியது.

“படுத்துக்கோ....”, அவனுக்குக் கூட கேட்காத குரலில் அவன் சொல்ல, அவளோ தலைகவிழ்ந்து அசையாமல் அமர்ந்திருந்தாள். சற்று நேரம் அவள் அருகிலேயே நின்றவன், விடிவிளக்கின் ஒளியில் அவளை நிதானமாக ரசித்தான்.

அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூவின் மணம் அவனைக் கிறகடித்தது. அவளை அப்படியே தழுவிக் கொள்ள, கைகள் இரண்டும் துடிக்க, அதைச் செய்ய முடியாமல் அவன் சூழல் அவனைத் தடுத்தது.

எவ்வளவு நேரம் இதே நிலையே நீடித்ததோ...., “நீங்க முதல்ல படுத்துக்கோங்க...”, அவள் சொல்ல..., “இல்ல கொஞ்சம் புழுக்கமா இருக்கு. நான் ஜன்னலை திறந்து வச்சுட்டு வாரேன்...”, சொன்னவன்..., மேல்பாதி ஜன்னலைத் திறந்து வைத்தான்.

ஜன்னலைத் திறந்துவைக்கவே..., சில்லென்ற காற்று அறைக்குள் நுழைந்தது. சற்று நேரம் ஜன்னலின் அருகிலேயே நின்றவன், இதற்குமேல் தாங்காது என்பதுபோல் அவளை நெருங்கினான். அவன்

நெருங்குவது அவன் காலடி ஓசையில் புரிய, அப்பொழுதும் தலை நிமிராமல் அமர்ந்திருந்தாள்.

அவனது தவிப்பு அவளுக்குப் புரியாமல் இல்லை. என்ன செய்யவென்று அவளுக்குப் புரியவில்லை. அவன் தனக்காய்த் தவிப்பது புரிந்தது. படபடக்கும் மனதை அடக்கியவாறு அவள் அமர்ந்திருக்க, கட்டிலின் மறுபக்கம் சென்றவன், நிதானமாகப் படுத்துக் கொண்டான்.

அவள் இதயத்துடிப்பு இன்னும் அதிகரிக்க, அவள் தோளைத் தொட்டு படுக்க வைத்தான். அவனுக்கு முதுகுகாட்டி அவள் படுத்திருக்க, நேரம் கடந்தாலும் இருவரும் ஒரு பொட்டு கூட உறங்கவில்லை. அவள் அசையாமல் படுத்திருக்க, அவன் புரண்டுபடுத்தவாறே இருந்தான்.

அவளது கண்கள் உடைப்பெடுக்கவா என கேள்வி எழுப்ப, அந்த நேரம் அவனது அழுத்தமான கரங்கள் அவள் இடையில் பதிந்து அழுத்தியது. அவனது சூடான மூச்சுக் காற்றி முதுகைத் துளைக்க, அவனது அழுத்தத்தை அவள் முழுதாக உணர்ந்தாள்.

அவள் தேகம் முழுவதும், எதிர்பார்ப்பிலோ, அச்சத்திலோ சிலிர்த்து அடங்கியது. அதை அவனும் உணர்ந்து..., அவளை இன்னும் இறுக்கமாக, ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

இதழ்கள் சூடாக அவள் காதுமடலை உரச, கைகளோ அவளை தன்னோடு இறுக்கியது. தேவியால் அவள் உணரும் அணைப்பின் வெம்மையை தெளிவாக உணர முடிந்தது. அது இதற்கு முன்பு அவள் கனவில் உணர்ந்த அதே அணைப்பு.....

“மாமா....”, அவள் இதழ்கள் சன்னமாக முணுமுணுக்க..., “தேவிம்மா...”, அவளது மாமா என்ற அழைப்பில் வீறுகொண்டவன், அவளைத் தன்பக்கம் திருப்பி, இறுக அணைத்துக் கொண்டான்.

“உன் மாமன் தாண்டி....”, சொன்னவனின் இதழ்கள் அவள் இதழ்களை சுவைக்க, அவன் கரங்களோ அவள் மேனியை ஆக்கிரமித்தது. அவனது உரிமைகள் எல்லை மீற, அவன் கைகள் உணரும் அவள் மேனியின் மென்மையை...., அவள் தன் கைகளுக்குள், தன் அணைப்பில் இருக்கிறாள் என்பதை இன்னும் நம்ப முடியாமல்..., தடுமாறி தத்தளித்தான்.

அவன் கைகளில் ஆராய்ச்சி அவளை தடுமாறச் செய்ய..., “மாமா...”, என்ற அவளது தவிப்பான அழைப்புக்கள், அவன் இதழ்களுக்குள்ளேயே மறைந்து போயின.

அவளைவிட்டு விலகவே முடியாது என்பதுபோல் அவன் அவளை ஆக்கிரமிக்க, அவன் வேகத்தில் தடுமாறிப் போனாள் அவள். அவனைக் கட்டுப்படுத்த அவள் முயல...., அவனது ஆக்கிரமிப்பின் வேகம் அதிகரிக்க, அவனது வேகமும் தேவையும், தாபமும் புரிந்து, தன்னை அவனுக்கு ஏற்றவளாக மாற்ற முயன்றாள்.

அவனது உச்ச தவிப்பிலும், வேகத்திலும், தாபத்திலும்..., அவனை விலக்க அவள் முயலவே இல்லை. இந்த தவிப்பை, இன்னும் ஒரு நாள் கூட, அவளால் தாங்கிக்கொள்ள முடியாது. அவன் ஈர உதடுகள் அவள் மேனி முழுவதும் ஊர்வலம் போக, சிலிர்த்து அடங்கியது அவள் தேகம்.

அவன் அளவு இல்லை என்றாலும், அவளும் தன் நேசத்தை, காதலை, தேவையை சின்ன இதழ் ஒற்றலில், இறுகிய அணைப்பில், அவன் சிகைக்குள் அலையும் அவள் விரல்களின் ஸ்பரிசத்தில், அவனுக்கு உணர்த்தினாள்.

அவள் கொஞ்சம் எதிர்த்திருந்தாலும் அவளை ஆள முயன்றிருக்க மாட்டான். ஆனால் அவளது ஆதரவு அவனை, அவளைவிட்டு விலக அனுமதிக்கவில்லை. இன்னும் இன்னும் அவளோடு ஒன்ற முயன்றான்.

அந்த சங்கமத்தில் அவர்களது காதலும், தேவையும், நீண்டநாள் காத்திருப்பும் நிறைவேற..., இனிய தாம்பத்யம் மலர்ந்தது அங்கே. விடியல் வந்தபிறகும்..., ஒருவரை ஒருவர் விலகாமல் கட்டிக்கொண்டு கிடக்க, முதலில் கண்விழித்த யுவா..., தன் காதல் மனைவியை ஒரு ஆராய்ச்சிப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவின் வேகத்தில், தனிமையின் தவிப்பில், காத்திருப்பின் துடிப்பில் நேற்று உணராத அவளது தயக்கம், அவன் தேவை தீர்ந்த பொழுது, அவளை கட்டாயப்படுத்திவிட்டோமோ என்று கொஞ்சம் கலங்கிப் போனான்.

இமைக்காமல் அவளையே வெறிக்க, அவனது அசைவை உணர்ந்து கண்விழித்தவள், அவன் முகத்தை கொஞ்சம் தயக்கமாய் பார்க்க, அவன் கலங்கிய முகத்தைப் பார்த்தவள்..., “ஏன் மாமா..., என்ன ஆச்சு...? ஏன் உங்க முகம் கலங்கிப் போயிருக்கு...?”, தவிப்பாய் கேட்டு அவன் முகம் வருடினாள்.

அவளது மாமா என்ற அழைப்பும், அவளது தவிப்பும்..., கலங்கியிருந்த அவன் மனதை குளிர்வித்தது. காலையில் கண்விழித்து அவன் முகம் பார்த்தவள்..., ஒரு நொடியாவது திகைத்திருந்தால்..., அவன் சுக்குநூறாக உடைந்திருப்பான்.

ஆனால் அவனை முழுமனதாக ஏற்றுக்கொண்டாள் என்னும் விதமாக, மாமா என அவனை அழைத்து, அவன் முகம் பார்த்தே..., அவனது மனவாட்டத்தைப் புரிந்துகொள்ளவே..., நிம்மதியாக உணர்ந்தான்.

எதுவும் சொல்லாமல்..., அவளை அணைத்து, அவள் கழுத்துவளைவில் முகம் புதைத்துக்கொள்ள, அவன் தேகம் லேசாகக் குலுங்கியது. தன் கழுத்து வளைவில் ஈரத்தை உணர்ந்தவள், துடித்துப் போனாள்.

“மாமா…., ஏன் மாமா….? என்ன ஆச்சு…? நான் உசுரா நினைச்சது என் மாமனோட மனசைத்தான்…., என்னை உயிரா பாத்துக்குற அந்த அக்கறையைத்தான். அப்படியிருக்கும்போது…, எனக்காக இவ்வளவு துன்பப்பட்ட உங்களை தவிக்க விட்டுடுவேனா மாமா.

“நீங்களே இப்படி கலங்கினால் என்னால் தாங்க முடியாது மாமா. இந்த ஜென்மத்தில் நான் உங்களுக்குத்தான்…., அதே மாதிரி நீங்களும் எனக்குதான். அப்படியே சப்பாத்தி மாவு கலரில் இருக்கும் இந்த மாமனை எனக்கு பிடிக்காமல் போய்டுமா…?

“என் மாமன் எப்படி இருந்தாலும் எனக்குப் பிடிக்கும். நேத்து என்னோட முழு மனசோடதான் உங்களோட கூடினேன். என் அனுமதி இல்லாமல்…, உங்களால் என்னோடு கலந்திருக்க முடியாது மாமா.

“என் மாமனுக்கு என்மேல் எவ்வளவு ஆசை இருந்துதோ…, அதே அளவு அக்கறையும்…, பாசமும் இருக்குன்னு எனக்கு தெரியும் மாமா. நேத்துமட்டும் நீங்க என்னைத் தொடாமல் இருந்திருந்தால்…, நான் என்னவாகி இருப்பேன்னு எனக்கே தெரியல மாமா.

“என் மனசுக்குள் எவ்வளவு தவிப்பு இருந்ததோ…, அதே அளவு ஆசையும் இருந்தது. என்ன அதை உங்களோட இந்த முகத்தை நினைத்து நானே மறச்சுகிட்டேன். உங்களோட அழகுக்கு நான் இப்போ பொருத்தமா இல்லன்னு என்னை நானே ஏமாத்திக்க பாத்தேன்.

“ஆனால் என்னால் முடியலை. முன்னாடி ஒவ்வொரு நாள் இரவும் உங்களை உணர்ந்தேன். அதை நீங்களும் உணர்ந்து இருப்பீங்க. ஒரு நாள் கூட, உங்களைவிட்டு விலக நான் நினைத்ததே கிடையாது. என் மாமன் ஆசைப்பட்டதை கொடுத்தே ஆகணும் என்ற எண்ணம் மட்டும்தான் இருந்தது”, இதை அவள் சொன்னபொழுது…, அவனது உணர்வுகளும், எண்ணமும் தன்னவளை நினைத்து பூரிக்க, அவளை இறுக கட்டிக் கொண்டான்.

சிறிதுநேரம் பேச்சற்ற மௌனம் அங்கே குடிகொண்டது. “தேவி..., தேவி...”, என அவன் புலம்பினான்.

தனக்கு அவள் நினைவே இல்லை..., இரவில் தான் உணர்ந்த உணர்வுகள் கற்பனையோ என இவ்வளவுநாள் அவன் மருக..., அது பொய்யில்லை..., அவளும் அந்த உணர்வை அனுபவித்தாள்...., அவனுக்காகவே அவனை அனுமதித்தாள்...., அவனை மறுக்க முயலவே இல்லை..., என்பதை அறிந்த பிறகு, அவள் காதலை அடைய தான் கொடுத்து வைத்திருக்கவேண்டும் என எண்ணினான்.

“தேவிம்மா...., நம்மளோட எண்ண அலைகள் எந்த நேரத்திலும் அறுந்துபோகாமல் உயிர்ப்போடு இருந்ததால் தான், நான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன். உன் எண்ண அலைகள்தான்...., என் அடிமனசை தீண்டி...., எனக்கு உயிர்ப்பளித்து இருக்கு....”, சொன்னவன் அவளுக்குள்ளே புதைந்துபோக முயன்றான்.

அவன் பேச்சைக் கேட்டவள் மெய் சிலிர்த்தாள். “அப்படி சொல்லாதீங்க மாமா. என் மாமனுக்கு என்னைத் தவிர எந்த நினைப்பும் இல்லை..., மூணு வயசில் என்மேல் வச்ச அதே பாசத்தை..., என்னோட இந்த இருவத்திமூணு வயசுலயும் நீங்க வச்சுருக்கதைப் பாத்து மெய் மறந்து போறேன் மாமா.

“எனக்காகவே உயிராகி வந்திருக்கும் உங்களை எதுக்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டேன் மாமா....”, தன் உள்ளத்தின் உணர்வுகளை முதல் முறையாக அவனிடம் இறக்கி வைக்க முயன்றாள்.

அவளது விலகலுக்கான காரணத்தை அவள் வாயால் உணர்ந்த பிறகு, தன் தவிப்பை தூக்கி தூர எறிந்தான். அவனது ஆசையும், தாபமும் கிளர்ந்து எழ..., அதை அவனது கரங்கள் அவள் மேனியில் இடம்மாறி அவளுக்கு உணர்த்தியது.

அதை உணர்ந்தவள்...., “பொழுது விடிஞ்சிருச்சு மாமா...”, போலியாக அவள் இதழ்கள் முணுமுணுக்க, அவள் கரங்களோ அவனுக்கு ஆதரவு அளிப்பான போன்று அணைத்துக் கொண்டன. காதல் பாடம் முடிவின்றி அரங்கேறியது அங்கே.

சரியாக ஒரு வாரம்...., தங்களைச் சுற்றி யார் இருந்தார்கள்..., யார் இருக்கிறார்கள்.... யாராவது இருந்தார்களா....? எதுவுமே தெரியாமல்..., காதல் கிளிகளாக..., அவர்கள் தோட்டத்து வீட்டையே சுற்றி வலம் வந்தார்கள் இருவரும்.

கிராமத்து சொந்தங்களின் நினைவே இல்லாமல் இருந்த அவனுக்கு, பட்டணத்து கங்கா அம்மாவின் நினைவு மட்டும் அவ்வப்பொழுது தோன்றி மறையும். ஆனாலும் அவரைக் காண பட்டணம் செல்ல அவன் தயாராக இருக்கவில்லை.

அவனது வேர் அந்த கிராமத்தில்தான் என்பதில் அவன் உறுதியாக இருந்தான். கிராமத்திலோ..., பட்டணத்து மாப்பிள்ளை..., வீட்டோடு மாப்பிள்ளையாக வந்துவிட்டான் என்று பாட்டாகியது. அதை உணர்ந்தாலும்...., கண்டுகொள்ளும் நிலையில் அவன் இருக்கவில்லை.

ஒவ்வொருவரிடமும் சென்று..., தான் சரவணன்தான் என்ற உண்மையைச் சொல்லவோ..., அதை சொன்னாலும் புரிந்துகொள்ளும் நிலையிலோ அவர்கள் இருக்கவில்லை. அப்பொழுதும் ஊர் வேறுவிதமாகப் பேசும்.

அப்படியிருக்கையில் இந்தப் பேச்சே பரவாயில்லை என்று எண்ணிக் கொண்டான். சரியாக பத்து நாட்கள் கடந்த நிலையில்..., வயலில் இறங்கி வேலை செய்தான். வேலையில் அவன் ஏற்கனவே கெட்டிக்காரன் என்பதால்..., புதிதாக பழகியவன்போல் இல்லாமல், பழக்கப்பட்டவனாகவே வேலை செய்தான்.

அதையும் கிராமத்து மக்கள் அதிசயமாகவே பார்த்தார்கள். யுவா என்ன செய்தாலும் அங்கே பேசப்பட்டது. ஆனால் அவன் எதையும் கண்டுகொள்ளவில்லை. தன் வேலையை செய்தவன்..., காதல் கணவனாக..., தேவியின் முந்தானையைப் பிடித்துகொண்டு சுற்றவும் மறக்கவில்லை.

அவனது சொந்தங்களுக்கு..., அவனது இந்த செய்கையே சரவணனை நினைவூட்டியது. ருக்குவின் மடியில் தலைவைத்து படுத்துக் கொள்வான். தந்தையின் மடியில் கால் நீட்டிக் கொள்வான். செம்புவோடு வம்பிழுத்தான், தேவியின் சித்திமாரிடம் முறைத்துக் கொண்டான்.

இப்படியாக அவன் சரவணனாகவே வாழ்ந்தான். என்னதான் அவன் சரவணனாக வாழ முயன்றாலும்..., உடல் யுவாவினுடையதாயிற்றே. வயல்வேலையும், உடல் உழைப்பும், சேறும், சகதியும்..., யுவாவின் மனதுக்கு பிடித்த அளவு..., உடலுக்கு ஒத்துக் கொள்ளவில்லை.

கால் முழுவதும் சேற்றுப்புண்..., வியர்வையால் உடல் முழுவதும் சிகப்புத் தடிப்பு என..., உடல் உபாதைகள் துவங்கியது. அதை அவன் உணர்ந்தாலும் கண்டுகொள்ள மறுத்தான்.

“மாமா..., வயல்ல இறங்காதீங்க....”, தேவி கண்ணீர் குரலில் கெஞ்சுவாள்.

“இந்த வயல்தாண்டி என்னை வளத்துது...”, ஒற்றை வார்த்தையில் முடித்துவிட்டு..., வேலையைத் தொடர்வான். அவனிடம் அழுத்திச் சொல்லவும் சற்று தயங்கினாள். ஏனென்றால் அவனுக்கு உழைப்பது எவ்வளவு பிடிக்கும் என்பது அவளுக்குத் தெரியுமே.

பதினைந்து நாட்கள் கடந்த நிலையில்..., கங்காவின் கார் அந்த கிராமத்தில் நுழைந்தது. சரவணனின் சொந்தங்கள் ஊருக்குள் இருந்ததால் அவர்கள் வீட்டின் முன்பே கார்

செல்ல..., யுவாவைக் காண அவர்கள் தோட்டத்துக்கு செல்லவேண்டி இருந்தது.

ஈஸ்வருக்கு அங்கிருந்த சூழல் அவ்வளவாக பிடிக்கவில்லை. ஆனாலும் மனைவியின் பிடிவாதத்திற்காக என்று தன்னை ஏமாற்றிக் கொண்டு..., மகனைக் காண வந்திருந்தார்.

அவர்களுக்கு வழிகாட்ட செம்பு உடன் சென்றான். தூரத்திலேயே..., வாழைத் தோட்டத்தில், யுவா வேலை செய்வதைப் பார்த்த கங்காவின் கண்கள் கலங்கியது. அதை கட்டுப்படுத்தியவாறே அவனை நெருங்கியவர்...,

அருகில் அவனது உருவத்தைப் பார்த்து கதறிவிட்டார். “ஐயோ ராஜா..., நீயாப்பா இது. கையில் தூசி ஒட்டினால் கூட கையைக் கழுவிவியே..., இப்போ உடம்பு முழுக்க சேறா நிக்கிறியே.

“கோட் சூட் போட்டு கம்பெனிக்கு போயிட்டு வந்த நீ...., இப்போ ஒத்தை கைலியில் வேலை பாக்குறியே. இதையெல்லாம் பாக்கவா நான் உசுரோட இருக்கேன். ஐயோ..., இதென்னப்பா..., உடம்பு முழுக்க தடிப்பு....

“என்னங்க..., என்னை இங்கே இருந்து கூட்டி போய்டுங்க. என்னால் என் பிள்ளையை இப்படி பாக்க முடியலங்க. ராஜா மாதிரி வளந்த பிள்ளை..., இப்போ ஒரு வேலைக்காரன் மாதிரி...., நான் நெஞ்சு வெடிச்சு செத்துடுவேங்க....,

“என்னால் இதையெல்லாம் பாக்க முடியாதுங்க....”, தன் மகனை அரை நிர்வாண கோலத்தில் பார்த்தே துடித்தவர், அவன் உடல்நிலையைக் கண்டு துவண்டு போனார்.

வார்த்தையால் வடிக்க முடியாத வருத்தத்தை அவர் முகம் பிரதிபலிக்க, அங்கிருந்த அனைவரின் கண்களும் கலங்கியது. “அம்மா....”, அவன் அழைக்க....,

“அந்த நினைப்பு உனக்கு இருக்கா ராஜா..., இப்படி ஒரு அம்மாவும் அப்பாவும் உனக்காக தவமிருக்கோம்னு தெரியுமா? இங்கே..., உன் சொந்தத்தைப் பார்த்ததும்..., நாங்க வேண்டாதவங்க ஆயிட்டோம் இல்ல.

“ஏம்மா மருமகளே..., இந்த யுவா மட்டும் வேணும்..., இவனைக் கொடுத்த அப்பாவும் அம்மாவும் உனக்கு வேண்டாதவங்களா போயிட்டோமா...? உங்களை பிரிக்கக் கூடாதுன்னு நினைச்ச எங்களை பிரிச்சுட்டீங்களே...

“நீங்க நல்லா இருந்தால் போதும்..., நாங்க போறோம். என்னங்க வாங்க போகலாம்..., இனிமேல் நமக்கு இங்கே என்ன வேலை....”, கணவனை இழுத்துக்கொண்டு செல்ல முயன்றார்.

ஓடிச் சென்று கிணற்றடியில் கை கால் கழுவிவிட்டு வந்தவன், தாயின் கரங்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். “புள்ளையை பாக்க வந்துட்டு..., எதுக்கும்மா கோபப்பட்டுட்டு போறீங்க. உங்க நினைப்பு எனக்கு இல்லாமல் போகுமா.

“இந்த உடம்பில் உயிர் இருக்குற வரைக்கும்..., என்னால் அதை மறக்க முடியாதும்மா..., நீங்க முதல்ல வீட்டுக்குள் வாங்க...”, அவரை கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றவன். வீட்டின் திண்ணையில் அமர வைத்தான்.

“அம்மா..., தேவி இங்கே வந்த அன்னையில் இருந்து சொல்லிட்டுதான் இருக்கா. உங்களை வந்து பாக்கச் சொல்லி. ஆனா என்னால்தான் முடியலை. நான் இந்த கோணத்தில் யோசிக்கவே இல்லை.

“கம்பீரமா பார்த்த உங்க புள்ளையை..., இப்படிப் பார்க்குறது...., எவ்வளவு கஷ்டமா இருக்கும்னு எனக்கு புரியுது. ஆனா என்னோட இடத்தில் இருந்து பார்த்தால் உங்களுக்கு என் நிலைமை புரியும். எனக்கு விவசாயத்தைத் தவிர வேறு எதுவுமே தெரியாது.

“அப்படியிருக்கும்போது...., நம்ம கம்பெனியில் போய்..., டம்மியா உக்காரவும் எனக்கு மனசில்லை. நாம ஒரு இடத்தில் இருந்தால்.., அது அந்த இடத்துக்கு வளர்ச்சியை கொடுக்கணும். அதை விட்டு..., பேருக்கு போய் இருப்பது சரியே வராதும்மா. என்னையும் கொஞ்சம் புரிஞ்சுக்கோங்களேன்....”, அவர் கரத்தைப் பற்றிக் கொண்டு நிலைமையை விளக்கினான்.

அதே நேரம் தேவி மோர் கொண்டுவந்து கொடுக்க, அதை வாங்கி இருவருக்கும் கொடுத்தான். கங்கா கணவனையே பார்க்க, மனைவியின் பார்வையின் பொருள் புரிந்து..., “உனக்கு விவசாயம்தான் தெரியும்னா அதிலும் முதலாளியா இருந்துட்டு போ.

“இந்த ஊருக்குள் இருக்கும் எல்லா நிலத்தையும் உனக்காக வாங்கிப் போடுறேன். நீ கைகட்டி இருந்து வேலை வாங்கு. அரிசிமில்லு, அரிசி மண்டி..., கரும்பு மில்லு...., இப்படி எல்லாம் தொழிலா வச்சுத் தாரேன்.

“உனக்குத்தான் விவசாயம் பழக்கம் தானே..., அவங்ககிட்டே இருந்து நேரடியா கொள்முதல் செய். அவங்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கும் இல்ல...”, தன் தொழில் வன்மையை நொடியில் வெளிப்படுத்தி யோசனை சொன்னார்.

மறுத்து பேசப்போன அவனை கைபிடித்து தடுத்தாள். அவளை கேள்வியாகப் பார்க்க, அமைதியாக இருக்குமாறு செய்கை செய்தாள். அதன்பிறகு வேலை வெகு வேகமாக நடந்தேறியது.

தனிமையில் அவளிடம் அவன் என்னவென்று கேட்க, “அவங்க மனசை புரிஞ்சுக்கோங்க...”, எனச் சொல்லி பேச்சை முடித்துவிட்டாள்.

அவளையே ஆழமாக ஒரு பார்வை பார்த்தவன், “எப்படியோ என்னை வயல்ல இறங்க விடாமல் செஞ்சுட்ட. சந்தோசம் தானே...”, அவளிடம் அழுத்திச் சொல்ல, “எப்படி

இருந்தாலும் என் மாமன் எனக்கு முக்கியம். அவர் எந்த விதத்தில் கஷ்டப் பட்டாலும் என்னால் தாங்க முடியாது..”, அவன் தோள் சாய்ந்து சொல்ல, அவள் மனம் புரிந்து அணைத்துக் கொண்டான்.

அடுத்து வந்த மாதத்தில் வானதிதேவி வாந்தியெடுக்க, அவர்கள் வீடே அல்லோகலப் பட்டது. அவளது ஆயா, அம்மா, அப்பா, சரவணனின் பெற்றோர், சித்தப்பாமார்..., என அனைவருமே அவளைத் தரையில் விடாமல் தாங்கினார்கள். இப்பொழுது அவள் சரவணனின் தாயுடன் தங்கிக் கொண்டாள். கங்காவும் வந்துவிட்டார்...., அவளை நெற்றி முறித்து தன் மகிழ்வை வெளிப்படுத்தினார்.

கங்காவுக்கும் அவர்களோடு தங்கிக் கொள்ள ஆசைதான். ஆனால் அங்கிருக்கும் வசதியில், இரண்டுநாள் பொருந்திக் கொள்ளவே மிகுந்த சிரமப்பட்டார். மகன், மருமகள், பேரப்பிள்ளை என இருக்க ஆர்வம் கொண்டார்.

அது முடியாமல் கவலை அவரை வாட்டியது. தேவியின் மணிவயிறு மெல்ல வளர, யுவாவின் அரிசிமில், அரிசி மண்டி, கரும்பு ஆலை..., என அனைத்தும் வளர்ந்து வந்தது.

அவர்கள் கிராமத்துக்கு வெளியிலேயே பட்டணத்துக்கு அருகில், இரண்டு ஏக்கர் நிலத்தில்..., ஒரு அழகான வீட்டைக் கட்டினார் கங்கா. எது எப்படி இருந்தாலும், யுவா.... தாயோடு சென்று இருக்க விரும்பவில்லை.

கிராமத்து வீடே அவனுக்கு பிடித்தமானதாக இருந்தது. கங்காவோ, ஈஸ்வரோ அவனை தங்களோடு இருக்கச் சொல்லி கட்டாயப்படுத்தவில்லை. அவர்களின் வருத்தத்தை உணர்ந்து கொண்டாள் தேவி.

தேவிக்கு வளைகாப்பு வெகு விமரிசையாக நடந்தது. அவளுக்கு குழந்தை பிறக்கும்வரை, அவள் அருகிலேயே இருக்கவேண்டி, புதிதாக கட்டிய வீட்டுக்கே குடி வந்தார்கள்

கங்காவும் ஈஸ்வரும். சில நாள் அவளைத் தங்களோடு தங்கவைத்துக் கொள்வார்கள்.

அப்பொழுது யுவாவும் அவர்களோடு தங்குவான். தேவி இருக்கும் இடத்தில் யுவா பொருந்திக் கொள்வதை கங்கா உணர்ந்தார். அவருக்கு ஒரு யோசனை தோன்ற..., அதை தேவியிடம் வெளிப்படுத்தினார்.

முதலில் தயங்கினாலும்..., அவரது பிள்ளைப் பாசம் புரிய அதற்கு ஒத்துக் கொண்டாள். கங்காவின் வீட்டில் வைத்து, இரவு இரண்டு மணிக்கு அவளுக்கு பிரசவ வலி எடுக்க, துடித்துப் போனான் யுவா. என்ன செய்யவென்று தெரியாமல் தடுமாற, கங்கா தங்கள் காரை எடுக்கச்சொல்லி, உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றார்கள்.

இப்பொழுது யுவா கார் ஓட்ட கற்றுக் கொண்டிருந்தான். அவர்களை அதிக நேரம் தவிக்க விடாமல், யுவாவின் மகன் இந்த உலகுக்கு வந்தான்.

செவிலி மகனை அவன் கரங்களில் கொடுக்க, அவனை வாங்கி உச்சி முகர்ந்தவன்..., அவனை கங்காவின் கரத்தில் கொடுத்தான். அவனைக் கொடுத்துவிட்டு..., “இவன்தாம்மா உங்க பிள்ளை. உங்களுக்கு எப்படி விருப்பமோ அப்படி வளர்த்துக்கோங்க.

“இதைத் தவிர வேறு என்ன செய்யன்னு எனக்குத் தெரியலை. இவன் என் மகன் இல்லை. உங்க மகன்.... என்னால் செய்ய முடியாத அனைத்தையும் இவன் உங்களுக்குச் செய்வான். உங்க கார்மெண்ட்சை இவன் பாத்துப்பான்.

“உங்களுக்கு இவனை என்னவாக்க ஆசையோ அதை தாராளமா செய்ங்க. நானோ என் மனைவியோ இதில் தலையிடவே மாட்டோம்...”, மனதை கல்லாக்கிக் கொண்டு..., தன் மகனை அவர் கரத்தில் தூக்கிக் கொடுத்தான்.

கங்கா தன் பேரனை..., மகனின் மறு உருவமாகவே கண்டார். அவனை உச்சி முகர்ந்தவர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அதன் பிறகு பேரனை கீழே படுக்க வைக்கக் கூட அவர் அனுமதிக்கவில்லை.

பசியாற்ற மட்டுமே தேவியின் கரங்களில் கொடுத்தார். கங்காவின் செய்கையை அனைவரும் வித்தியாசமாக பார்க்க, யுவா மௌனம் சாதித்தான். தேவி மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு கிளம்பும் அன்று, கங்கா தங்கள் பேரனை அழைத்துக்கொண்டு, சென்னைக்கு செல்வதாகச் சொன்னார்.

அப்பொழுதுதான் தன் முடிவை தேவியிடமும் அவன் சொல்ல, வெகுண்டெழுந்தாள் அவள். எப்படி அவளைக் கேட்காமல் அவன் முடிவெடுக்க முடியும் என அவள் பொரிய, வேறு குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னான் அவன்.

தேவி கண்ணீர் விட்டு கதற..., இப்படி ஒரு சூழல் உருவாகும் என்று அவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை. அவனது எந்த சமாதானமும் அவளை மாற்றவில்லை.

இறுதியில் கங்காவோ..., “இங்கே பார் ராஜா..., என்னால் என் பிள்ளையும் இல்லாமல்..., பேரனும் இல்லாமல் இருக்க முடியாது. நான் வேண்ணா..., இங்கே இருக்கும் நம்ம வீட்டில் தங்கிக்கறேன். நீங்க அப்பப்போ வந்து பாத்துட்டு போங்க...”, கொஞ்சம் இறங்கி வந்தார்.

அப்பொழுது அவர் கரத்தில் இருந்த குட்டி யுவா பசியில் சிணுங்கத் துவங்கினான். தேவி அவனுக்கு பசியாற்றவேண்டி..., கரங்களை நீட்ட, “இனிமேல் அவன் புட்டி பாலுக்கு பழகித்தானே ஆகணும். அது இப்போவே பழகிக்கட்டும்...”, இளக்கமே இல்லாமல் அவர் சொல்ல,

“என் பிள்ளையை நான் யாருக்கும் கொடுக்க மாட்டேன். நான் அவனோடதான் இருப்பேன். என்னால் அவனை

விட்டு இருக்க முடியாது. நானும் உங்களோடவே இந்த வீட்டிலேயே தங்கிக்கறேன். ஆனால் சென்னை வர சம்மதிக்கவும் மாட்டேன். என் பிள்ளையை விடவும் மாட்டேன்.

“அவர் பிள்ளையை விட்டுட்டு அவர் இருப்பார்ன்னா அவர் இருக்கட்டும்...”, அவர் கைகளில் இருந்து குழந்தையை வாங்கியவள், வேகமாக அவனுக்கு பசியாற்றினாள்.

யுவாவின் தவிப்பை புரிந்துகொண்ட அவனது பெற்றோர், உற்றார் உறவினர் அனைவரும், “ஏன் தம்பி..., நீ அவங்களோட போய்ட்டா நாங்க வருத்தப்படுவோம்னு நினைக்கிறியா...? கண்டிப்பா இல்ல...., எங்களுக்கு எங்க பேரன் எங்கே இருந்தாலும் நல்லா இருக்கான், சந்தோசமா இருக்கான்னு தெரிஞ்சா போதுமப்பா....

“அவங்க ஒத்த புள்ளையை வச்சிருக்கவங்க..., ஆனா நாங்க அப்படியில்லை. இங்கே வீடு புல்லா புள்ளைங்கதான். உங்க அம்மாவுக்கு நீயோ, செம்புவோ வேற இல்லை. செம்பு இப்போ அவளோடதான் இருக்கான்.

“நீ அப்பப்போ எங்களை வந்து பாத்துகிட்டா போதும்ப்பா..., அவங்க மனசுவருத்தப்பட விடாதப்பா...., இந்த ஆயா சொல்லுறதை கேளுப்பா..., உன் ஒருத்தனுக்காக அவங்க எவ்வளவோ செய்யிறாங்க..., நீ இதை செய்யக் கூடாதா....”, அவன் ஆயா சொல்ல, இறுதியில் அவர்கள் முடிவிற்கு யுவா வளைந்து கொடுத்தான். தேவியோடு பட்டணத்து வீட்டில் அவன் வாழ்க்கை உதயமாகியது. கிராமத்தில் ஒரு இளம் முதலாளியாக அவனும் உணரப்பட்டான்.

கங்காவின் எண்ணமும் ஈடேறியது. அவரது மகனும், பேரனும், மருமகளும் அவரோடு இருந்தார்கள். தேவிக்காக தன் உடலையே மாற்றிக் கொண்டவன், தனது சூழலையா மாற்றிக் கொள்ள மாட்டான்...?

ஈஸ்வர் அவரது கார்மெண்ட்சை விடாமல்..., தனது பேரனுக்காக அதை காக்க முயன்றார். சென்னைக்கும் திருச்சிக்கும் அவர் அலைய, வயதான காலத்தில் அவரது கஷ்டத்தைப் பார்த்து, யுவா கவலை கொண்டான்.

அவரது கஷ்டத்தைப் போக்க தன்னால் எதுவும் செய்ய முடியவில்லையே என அவன் கவலை கொள்ள, அப்பொழுது அவனுக்கு கைகொடுத்தது வீணாதான்.

வீணாவின் திருமணத்திற்காக அவர்கள் சென்னை செல்ல, எதேச்சையாக தேவி ஈஸ்வரின் அலைச்சலைப் பற்றி உரைக்க, “நீயே ஏன் பொறுப்பேற்று செய்யக் கூடாது....?”, என்ற கேள்வியை வீணா கேட்க,

அவர்களது பேச்சை எதேச்சையாகக் கேட்ட யுவாவிற்கு அது சரியான யோசனையாகத் தோன்றியது. அதன்பிறகு ஒரு நாள் கூட தாமதிக்காமல்..., அவளது கல்லூரியின் இறுதி செமஸ்டர் படிப்பை முடிக்க வைத்தவன், அவளையும் அழைத்துக்கொண்டு ஈஸ்வரிடம் சென்றான்.

“அப்பா...., நம்ம கார்மெண்ட்சை இனிமேல் தேவி பாத்துப்பா. அவளுக்கு கொஞ்சநாள் எல்லாத்தையும் கத்துக்கொடுங்க..., அவ என்னை மாதிரி கிடையாது...., எல்லாத்தையும் கற்பூரம் மாதிரி பிடிச்சுப்பா. உங்களுக்கு ஓக்கேன்னா மட்டும் செய்யுங்க....”, கொஞ்சம் தயங்கியவாறே சொன்னான்.

முதல்முறையாக அவனது அப்பா என்ற அழைப்பில் கட்டுண்டு நின்றிருந்தார் ஈஸ்வர். குழந்தையாக அவன் இருந்தபொழுது அப்பா என்று அழைத்தபொழுது அடைந்த மகிழ்ச்சியை விட..., இப்பொழுது அதிகமாக மகிழ்ந்தார்.

“நீ சொல்லி நான் மறுப்பேனா...., நாளைக்கே அவ என்னோட வரட்டும்.........”, மறுநாளிலேயே தேவி சென்னை பயணப்பட, கங்கா வீட்டை பார்த்துக் கொள்ள, யுவா தொழிலை கவனித்துக்கொள்ள என அவர்களின் வாழ்க்கை ஒரு நிலைக்கு திரும்பியது.

எங்கு சுற்றினாலும் வார இறுதி நாட்களில் அவர்கள் ஒன்றுகூடினார்கள். சனிக்கிழமை கங்காவோடு கழிய, ஞாயிறு கிராமத்து சொந்தங்கள், கிராம பண்ணை வீடு என கழிந்தது. சில வாரம் தன் பேரனை அழைத்துக்கொண்டு, கங்காவும் உடன் செல்வார்.

அன்று கிராமத்து வீட்டில் தனிமையில், “என்னடி...., எப்படியோ கங்காம்மா நினைச்சதை சாதிக்க வச்சுட்ட. என்னை ரொம்ப ஆட்டி வைக்கிற நீ....”, சில மாதங்கள் கழித்து அவளிடம் அவன் கேட்க, வியப்பாய் விழி விரித்து அவனைப் பார்த்தாள்.

“என்ன அப்படி பாக்குற...? கங்காம்மா எப்படியும் நம்ம பிள்ளையை வாங்கிக்க மாட்டாங்கன்னு தெரிஞ்சுதான் நான் கொடுத்தேன். ஏன்னா அவங்களுக்கு இழப்பின் வலி நல்லாவே தெரியும்னு எனக்குத் தெரியும்.

“அப்படியிருக்கும்போது...., பேரனோட அவங்க ஊருக்கு போறேன்னு சொல்லுறதும்...., அதுக்கு உன் பிடிவாதமும்..., நாடகமும்..., எது எப்படியோ..., எல்லாம் நல்லபடியா முடிந்ததில் எனக்கு ரொம்ப சந்தோசம்.

“கடவுள் கொடுத்த இந்த வாழ்க்கையை..., நான் உன்னோட சந்தோஷமா வாழணும்னு நினைச்சேன். அதே மாதிரி யாருக்கும் கஷ்டம் இல்லாமல்..., வாரம் ஒருநாள் நம்ம பண்ணை வீட்டிலும் போய் இருக்கும் இந்த வாழ்க்கை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு.

“இந்த உயிர் மட்டும் இல்லை, வாழ்க்கையே உனக்காகத்தான்....”, தேவியை இறுக அணைத்துக் கொண்டான். தன் கணவன் தன்னையும் மற்றவரையும் புரிந்து நடந்துகொள்வதில் அவனுக்கு நிகர் அவனே என பெருமிதம் கொண்டாள்.

அவனது பேச்சைக் கேட்ட கங்காவும் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அவர்கள் வாழ்வு இனி எப்பொழுதும்

பூஞ்சோலையாக இருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

முற்றும்.